MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS SERIES No. 41.

சுந்தர பாண்டியம்

SUNDARA PĀṆḌIYAM

EDITED BY

T. CHANDRASEKHARAN, M.A., L.T.

Curator, Government Oriental Manuscripts Library, Madras

AND

THE STAFF OF THE LIBRARY

(*under the orders of the Government of Madras*)

PRINTED BY THE SUPERINTENDENT
GOVERNMENT PRESS
MADRAS
1955

INTRODUCTION

The City of Madurai was the capital of the Pāṇḍya Kings and even now it is the most famous cities of the Tamil Nad. Its greatness is well known both to the historians and to the Tamil Poets. Among the religious and literary centres, it occupies a unique place. It is also known as Ālavāy and Kūḍal. So many legends are current about this City. The saint Jñānasambandar is reputed to have cured the Pāṇḍyan King from an abnoxious disease which was not amenable to any other treatment. It was here that a collection of palm-leaf manuscript bearing on Śaivism floated upstream against the currents of the river Vaigai. The Lord Cokkanātha took part in the sixty-four divine sports in this City. The Goddess Thaḍāthaka and the Lord Muruga took their birth as Pāṇḍya Queen and King and ruled over the country. The presiding deity of the temple is known as Sōmasundara and the Goddess Mīnākṣi.

The Hālāsya Māhātmiya contains a detailed account of the sixty-four sports of Sōmasundara. Based on this, a number of other works have been written like the Parañjōtiyar Tiruviḷaiyāḍal, Tiruvālavāyuḍaiyar Tiruviḷaiyāḍal Purāṇam, Kaḍambavana Purāṇam. The present work Sundara Pāṇḍiyam is also a treatise on the same subject. It is a great Kāvya containing full of literary merits both of sound and inspiring devotion. There is slight difference between this and the other works of the same subject. Some incidents are elaborated while others are condensed in this work; there are a few incidents which are not mentioned in the others. It consists of four parts Uṟpattiyā Kāṇḍam, Digvijaya Kāṇḍam, Ugra Kāṇḍam and Līlā Kāṇḍam each containing several chapters. The present work abruptly ends in the middle of Śivarāttiri Carukkam of the fourth subdivision.

Only the following facts are known about the author known as Anatāriyappan. He was living in a place called Vāyaṟpati in Toṇḍaimaṇḍalam. He was a great poet endowed with divine powers.

The work is known by the name Sundara Pāṇḍiyam. The probable reason for such a name is that the work deals with the history of Pāṇḍiya Kings who were staunch devotees of the Lord Sōmasundara. A number of incidents in the life of these kings had some bearings on the divine sports of the presiding deity Sōmasundara.

The present edition is based on a single paper manuscript bearing R. No. 3041 which is a transcript made in the year 1951–52 from the palm-leaf manuscript belonging to Madurai Tamil Sangam. The original palm-leaf manuscript is very much injured and incomplete and full of scribal errors. As far as possible, the mistakes have been corrected and the available portion has now been published.

My thanks are due to the authorities of the Madurai Tamil Sangam especially to late T. C. Srinivasa Iyengar, former Member of the Madras Legislative Council and Vice-President of the Sangam for lending the original with them for making the transcript and for collation; and to the Tamil Pandits of this library Srimans V. S. Krishnan, M. Pasupathi and E. B. Venugopal for the preparation of press-copy and correction of proofs.

Government Oriental Manuscripts Library, Madras,
Dated 25-1-1955.

T. CHANDRASEKHARAN,
Curator.

முன்னுரை.

பாண்டிநாட்டுத் தலைநகரும் பழம்பெரும் பதியுமான மதுரைமாநகரம் தொன்றுதொட்டுப் பெரும்புகழ் வாய்ந்து விளங்குவது. சோமசுந்தரக் கடவுள் கோயில்கொண்டுள்ள பெருந்தலம் இதுவே. ஞானசம்பந்தப் பெருமான் பாண்டியன் வெப்புநோய் தீர்த்ததும், ஏடெதிர்ந்து வையையில் வந்ததும் இப்பதியிலேயாகும். ஆலவாய், மதுரை, கூடல் என்ற பெயர்களால் போற்றப்படுவதும் சொக்கநாதப் பெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் புரிந்ததும் இத்தலமே. இங்ஙனம் பல்வகையிலும் சிறந்து விளங்கும் இப்பதியில் தடாதகைப் பிராட்டியும் முருகக்கடவுளும் பாண்டியமரபில் தோன்றி அரசுபுரிந்துள்ளனர். இந்தத் தலத்தில் சோம சுந்தரப் பெருமான் புரிந்தருளிய திருவிளையாடல்களைப் பற்றிக்கூறும் நூல்களில், பரஞ்சோதி திருவிளையாடல், திருவாலவாயுடையார் திருவிளை யாடல் புராணம், கடம்பவன புராணம் என்பன சிறந்தனவாம். இவை யனைத்தும் "ஆலாசிய மான்மியம்" என்ற நூலை அடிப்படையாகக் கொண்டனவே. இப்பொழுது வெளிவரும் "சுந்தரபாண்டியம்" என்ற இந்நூலும் சுந்தரரின் திருவிளையாடல்களைப்பற்றிக் கூறுவதே. இது சொற் சுவை, பொருட்சுவை மலிந்த பெருங்காப்பியமாய்க் கற்பார்க்குப் பத்தியையும் இன்பத்தையும் விளைப்பதாய் விளங்குவது. மற்ற திருவிளை யாடல்களில் கூறப்பெறும் செய்திகளில் சிலவற்றைச் சுருக்கியும் சிலவற்றைப் பெருக்கியும் சிற்சில விடங்களில் அவற்றில் கூறாதனவற்றைக் கூறியும் இங்ஙனம் பல்வேறு சிறப்புக்களைக்கொண்டு விளங்குவது இந்நூல். இது "உற்பத்தியா காண்டம், திக்குவிசய காண்டம், உக்கிர காண்டம், லீலா காண்டம்" என நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுளது. ஒவ்வொரு காண்டமும் பல சருக்கங்களாகப் பகுக்கப்பெற்றுள்ளன. நான்காவது காண்டத்தில் "சிவராத்திரிச் சருக்கம்" என்ற வரையில் உள்ளது. அதுவும் முற்றுப்பெறவில்லை. செய்யுட்கள் சிறந்த நடையுடையன.

இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் அனதாரியப்பன் என்பது. அவர் தொண்டைநாட்டில் வாயற்பதி என்னுமிடத்தில் வாழ்ந்து வந்தவர் என்பதும் சிறந்த தமிழ்ப் பெரும்புலவர் என்பதும் தெய்வீக சக்திபெற்றவர் என்றும் இந்நூலால் நன்கு விளங்குகின்றது. இவரைப்பற்றி வேறு ஒன்றும் அறியக்கூடவில்லை.

சோமசுந்தரக் கடவுளையும் பாண்டியரையும் தொடர்புபடுத்திக் கூறு வதனால் இவ்வரிய நூலுக்குச் சுந்தரபாண்டியம் என்று பெயர் வந்தது போலும்.

இது, இந்நூல் நிலையத்தில் உள்ள R. 3041 ஆம் எண் காகிதக் கையெழுத்துப் பிரதியை ஆதாரமாகக்கொண்டு வெளியிடப்பெறுகின்றது. அப்பிரதி 1951-52 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து

வர்வழக்கப்பெற்ற ஓலைப்பிரதி யொன்றனைப் பார்த்துப் பிரதி செய்யப்பட்ட தாகும். மூலப் பிரதி பலவிடங்களில் சிதைந்திருந்தமையால் பாடல்களில் சிலவற்றிற்கு முழுவுருவமுங் கிடைக்கவில்லை. பிழைகளும் உள்ளன. இயன்றவரை திருத்தஞ் செய்துள்ளோம். நூல் முற்றுப்பெறவில்லை. கிடைத்தவரை வெளியிடப்பெறுகின்றது. இந் நூலை வெளியிடும்பொழுது ஒப்புநோக்கிப் பார்ப்பதற்காகத் தங்கள் மூலச் சுவடியைத்தந்துதவிய மதுரைத் தமிழ்ச் சங்க நிர்வாகிகட்கு நூல் நிலையத்தாரின் நன்றி என்றும் உரியது.

இதனை மூலப் பிரதியிலிருந்து பெயர்த்து எழுதி அச்சிடும்வகையில் அமைத்துக்கொடுத்த நூல் நிலையத் தமிழ்ப் பண்டிதர்கள் ஸ்ரீ. மு. பசுபதி, ஸ்ரீ. இ. பா. வேணுகோபால், ஸ்ரீ. வி. எஸ். கிருஷ்ணன் ஆகியோர்க்கும் என் நன்றி யுரித்தாம்.

சென்னை,
1955-ஆம் ஆண்டு ஜனவரிமீ 21உ. } தி. சந்திரசேகரன்.

பொருளடக்கம்.

வரிசை எண்.	பொருள்	பக்கம்.
1.	முகவுரை (ஆங்கிலம்)	i
2.	முகவுரை (தமிழ்)	iii
3.	உற்பத்தியா காண்டம்	1
(1)	வையைச் சருக்கம்	1
(2)	பாண்டிநாட்டுச் சருக்கம்	5
(3)	நகர்ச் சருக்கம்	9
(4)	தலவிசிட்டச் சருக்கம்	15
(5)	பொற்றாமரைச் சருக்கம்	19
(6)	சொக்கலிங்கச் சருக்கம்	23
(7)	திருவிமானச் சருக்கம்	27
(8)	குலசேகரச் சருக்கம்	31
(9)	தூதுச் சருக்கம்	39
(10)	திரிசிராமலைச் சருக்கம்	55
(11)	விசுவாவசுச் சருக்கம்	63
(12)	கடிமணச் சருக்கம்	73
(13)	விமானச் சருக்கம்	81
(14)	ஓரைச் சருக்கம்	87
(15)	நகர்புகு சருக்கம்	93
(16)	உபதேசச் சருக்கம்	99
(17)	மாதவச் சருக்கம்	103
(18)	திருவவதாரச் சருக்கம்	111
(19)	வித்தியாபதிச் சருக்கம்	121
(20)	நாரதச் சருக்கம்	129
4.	திக்குவிசய காண்டம்	139
(1)	மந்திரச் சருக்கம்	140
(2)	முடிசூட்டுச் சருக்கம்	151
(3)	குமாரச் சருக்கம்	161
(4)	தாருகன்வதைச் சருக்கம்	169
(5)	வனவேட்டைச் சருக்கம்	177
(6)	கலிங்கச் சருக்கம்	183
(7)	விசையச் சருக்கம்	191
(8)	இந்திரச் சருக்கம்	197
(9)	தேவிச் சருக்கம்	203
(10)	சையமணிச் சருக்கம்	207

வரிசை. எண்.	பொருள்.	பக்கம்.

(11) வருணச் சருக்கம் 211
(12) குபேரச் சருக்கம் 215
(13) காட்சிச் சருக்கம் 219
(14) நகரணிச் சருக்கம் 225
(15) திருக்கலியாணச் சருக்கம் 227

5. உக்கிர காண்டம் 235

(1) தாண்டவச் சருக்கம் 225
(2) குண்டோதரச் சருக்கம் 239
(3) எழுகடற் சருக்கம் 245
(4) உக்கிரனவதாரச் சருக்கம் 253
(5) அறம்படுச் சருக்கம் 257
(6) வேல்விடுத்த சருக்கம் 265
(7) வளைவிடுத்த சருக்கம் 269
(8) மேகம் தளைவிடுத்த சருக்கம் 275
(9) சோமவாரச் சருக்கம்.. 279
(10) கயல்பொறித்த சருக்கம் 283
(11) கண்ணுவாதியருபதேசச் சருக்கம் 285
(12) வீரபாண்டியச் சருக்கம் 287
(13) நான்மாடக்கூடல் சருக்கம் 293
(14) சித்தச் சருக்கம் 297
(15) கல்லானைச் சருக்கம் 301

6. லீலா காண்டம் 305

(1) அட்டாலைச் சருக்கம் 305
(2) கவுரிச் சருக்கம் 309
(3) மாறியாடுஞ் சருக்கம் 313
(4) சிவராத்திரிச் சருக்கம் 315

7. செய்யுள் முதற்குறிப்பகராதி 329

சுந்தரபாண்டியம்

காப்பு

பூமலி நாவலம் பொலன்க னிப்படு
தேமலி வரைக்கதை தீட்டுங் கற்பகம்
பாமலி சுந்தர பாண்டி யன்கதை
நாமலி தமிழ்ப்பல மெனக்கு நல்குமே.

மதுரை நாயகன் சுந்தர பாண்டிய வடநூற்
கதிரு லாமணி யாறுகாற் பீடத்திற் கல்லூ
ரதிப ளுந்திரு விருந்தவ னவையினில் வாயற்
பதியில் வாழன தாரிசெந் தமிழினிற் பகர்ந்தான்.

உற்பத்தியா காண்டம்.

வையைச் சருக்கம்

உலகத்தைந் தொழிலிலே றலையிற்றந் துலகின்முற் றேன்றி
யிலகற் றுதியாய் சமயகோடியு முத்தி யடைய
இலகச் சத்தியோ டவரவர் கடவுளா யியங்குந்
திலகச் சொக்கனைப் பரவுவாம் பவப்பிணி தெறவே. (1)

யோகக் கண்விழி சமத்தலி னுரியநான் முகத்தோ
ளுகக் கண்ணனெம் பிரானென முத்தொழி னடாத்தி
யாகக் கண்ணன்வெம் பழியொழித் தருளிய சொக்கன்
பாகக் கண்ணுறை யங்கயற் கண்ணியைப் பணிவாம். (2)

கரங்க நான்ம றைக்கொடி படர்கொம் பிற்கவின்
வுரங்கொள் வேலைமுற் றெருகைகொண் டுமிழ்மால் வரைபொற்
றரங்க வாடகத் தாமரைக் கரையுறீஇத் தவத்தோர்க்
கிரங்கி நல்வரந் தருசித்தி வேழத்தை யிசைப்பாம். (3)

கார்விரிந்த வெற்பிற வியிற்றழை மயில்க டாவிச்
சூர்விரிந்த வல்லிரு ளுடைத்த மார்தோ கையர்தஞ்
சீர்விரிந்த வானன மரையலாத் தீவின் சேர்நம்
நீர்விரிந்த வத்தி யைப்புணர் சேய்பத நினைப்பாம். (4)

பறிதலைச் சமணர்களை களையுழ வனைப்படு நீடு
ரெறிக டற்கிலைப் புணையணை வணிகனை யிறையை
நிறையரு ளுடையப் பொருட்டிறை கொளுநிரு பனைப்பொதுவி
லறைத மிழ்ப்பொரு ளிதுவெனு மறைஞனை யறைவாம். (5)

அருந்த மிழ்ப்புல வரைமுனிந் தரசனை யொருவி
யிருந்த வத்திடைக் காடன்பின் னெய்திய சொக்கன்
பொருந்து மிக்கதை கொள்வனென் புன்றமி ழிகழார்
திருந்து பொற்கிழி மலினமார் சிந்தைசெய் தொழிப்பார். (6)

பொருவி ருந்தடங் கலுவரப் பொருதரி புயல்வாய்க்
கருவி ருந்திட வரைத்தநீர் நிலங்கலந் தெனவென்
மருவி ருந்தமிழ்த்துக்க ளறுத் தவைகொள மன்றைத்
திருவி ருந்தவனளி த்தலி னுலகமேற் சிறக்கும். (7)

ஆத வன்கரத் தலரிணை யவாவிய வண்டுஞ்
சீத வெண்மதி யவாவிய சிறுரும்போற் சிறியேன்
வேத நாரண னுணர்வுறு வாலவாய் விமலன்
தாதை யோதுகென் கைநவை பெறுகருத் தினனே. (8)

எந்தை காசியி லயன்மகத் தருந்தவ ரீண்டிப்
பந்த நீக்கிவீ டருள்பதி யாதெனப் பரிவால்
வந்த வீணைமா தவத்தகூ றென்னமற் றவனும்
புந்திகூர் விண்டு விரதராதி யாத்தவை புகன்முன். (9)

அயனு ளத்துமுறை குணத்துவந் தருள்சனற் குமாரன்
பயனு லாவுநூ லனைத்துமிவ் வியாதன்பாற் பகர்ந்தா
னுயர்வி திட்டமா தலமிவ னுரைப்பனென் றிடவே
நயனு லாமறை முனிவரன் முனிவர்பால் நவின்றான். (10)

நாவ சைந்திடாத் துலையிலெம் பிராற்கெதிர்ந் தத்து
மேவு வான்றமிழ்க் கடனுகர் கடலென விடுத்தோன்
றேவி பாலிறை கூறுநாட் சேயுணர்ந் திசைக்க
வோவு மூதுணர்ந் தானவ னுரைப்பனென் றுரைத்தான். (11)

மலய மாதவன் முனிவர் பாரில்கா சியில்வடிக்க
விலகு காந்தத்துச் சங்கரர் கீதையி லெம்மான்
குலவு கூடலங் காதைமா தவர்கொளச் சூதன்
புலமை யாற்புகன் றதனையான் றமிழினாற் புகல்கேன். (12)

(வேறு)

பொருள்பெறு முயிர்க்குயி ரெனப்பொ ருந்திய
சுருள்பெறு செஞ்சடைச் சொக்க நாயகன்
றெருள்பெறு வேந்திற்செங் கோல்செ லுத்திய
வருள்பெறு பாண்டிநாட் டணியு ரைக்குவாம். (13)

இரப்பவர்க் கீய்ந்திடார் திருவை யீய்ந்தருள்
புரப்பவர்க் குதவிய விறைவன் போன்மென்
வுரப்பர வையிலுவ ரொழித்து வெய்யவன்
வரப்புயல் வாய்ப்பெய்ய மாநதி மீண்டதே. (14)

வளைந்துகார் பிணித்தது விடுப்ப வான்கதி
ருளைந்தபோற் றுடித்தமீ னுண்வ தாய்ப்புய
லளைந்துண வதன்வயிற் றலைமுன் னீரொலி
விளைந்தபோ லுருமுரற் றெலிமி குந்ததே. (15)

காரிடைப் படுநிலாக் கதிர்கள் கார்ப்புழைப்
பாரிடைப் படுவபோற் சொரியப் பாய்கணை
போரிடைக் கரிபொரப் பொழிப்புண் ணீரில்வெற்
பேரிடைச் சுணத்தோ டிழிந்த நீத்தமே. (16)

கரைபொரு வாரணங் கலிப்ப வெஞ்சிறை
வரைபொரு தெழிலியின் மருவி யீர்ந்தரு
நிரைபொரு நிழலுறீஇப் பழியை நீக்கிய
விரைபொரு முடியரி போலும் வெள்ளமே. (17)

பாணியிற் றருநிரை பறித்துக் கோடினிற்
காணிய வரைபிதிர்த் தூறிக் கார்விசைத்
தூணியல் வெவ்வினை யொழிக்க நீர்மலி
வேணிபாற் படர்ந்தவான் வேழம் போன்றதே. (18)

காலுற விசைகொடு கலினஞ் சிந்தியே
மேலுறை சுழியொடு விரைவி லாழிபெற்
றேலுறத் தடம்பரி திரைந்து சொக்கனன்
பாலுகை பரியென பரந்த வென்பவே. (19)

அறனுரை தழுவியே டணைவுற் றைந்திணை
துறைமறீஇச் சங்கமே சூழ்ந்து வெற்பிழிந்
துறையணி படைத்தர னுவப்ப மேவலி
னிறையனுர் பொருளெனப் பகர்ந்த தென்பவே. (20)

பொருந்திய வானையை வள்ளி யைப்புணர்ந்
தருந்திறல் வரையெறிந் தலையை யூடறுத்
திருந்திணர் வேங்கை யாயிணர்க் கடம்புற்
றிருந்திறல் வேளென வையை மேயதே. (21)

வலம்புரி திகிரி வார்சிலை மரீஇமிக
நலம்புரி வேங்கட நாகஞ் சிந்தியே
குலம்புரி கலையிடைக் குலவிப் பாலைமா
நிலம்புரி காவலங் கன்னி நேருமே. (22)

அதிர்குரற் கங்கைமண் சுமப்ப வாதியா
மதுரைநா யகன்பதம் வருந்த வார்புவி
பொதிர்பட வந்திரை வையைப் பொற்பினுக்
கெதிரொரு நதியினை யிசைக்கற் பாலதே. (23)

(வேறு.)

கறங்கு வையைப் படலிடர் [ந்] தகளமா மன்னவரை
யறங்கொ ளழீஇய மைத்திடு மமைச்சரி ணமைத்தார்
பிறங்கு சண்முகன் செந்தமிழ்ப் பெருமையைப் புலவர்
நிறங்கொ ணெஞ்சிடைப் படுத்தெனத் தடந்தொறு நிறைத்தார். (24)

தோற்ற மாதியா யருளினிற் றொழிற்றலை வர்களா
யேற்ற பல்லுயிர்க் குலமதா யியைந்த வன்போ
லாற்ற நீரிணைப் பிரித்தகா லிடத்துழி யாக்கிப்
போற்று மன்புடைக் களமாக வயின்வயிற் புகுத்தார். (25)

வரையுங் கானமுஞ் சுரமுநீர் வயலுங் கானலுமென்
றுரைசெய் யைந்திணை யுரிப்பொருள் யாவையு மயக்கிப்
புரையில் கேள்விதீர் புன்கவி யெனச்செலும் வையைக்
கரைபொ ருந்திரைக் கணைக்கட லிடைக்கடந் ததுவே. (26)

அனைய வையைமுத் தாரமாய் மலைமுனி யாகி
நனைகொள் வார்பொழில் கூந்தலாய் நயந்தவே பதிகள்
வனையு நல்லுறுப் பாய்மது ராபுரி யுயிராய்ப்
புனையும் பாண்டிநா டெனுங்கொடிப் பொலிவினைப் புகல்வாம். (27)

வையைச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 27.

பாண்டிநாட்டுச் சருக்கம்

சுழிந்ததண் புனற்பொரும் பளிங்குடைச் சுருங்கைவாய்
வழிந்துறப் பனைக்கமாக்குள் வாங்குசெவ்வி வான்மடிந்
தழிந்தபார் மடந்தைவா யதிர்ந்தருந்தல் போன்றதாற்
குழைந்தசெவ்வி நூல்கள்புக்கு குழைந்தநெஞ்ச மொத்ததே. (1)

நுணங்குநூல் விரிந்தகாலன் நோக்கியூக்க மேமிகுந்
திணங்குறும் பகட்டினங்கள் பூட்டிநாஞ்சி லூன்றியே
கணங்கொள்கார் விசும்பைவீசு காறெடர்ந்து சேறல்போ
லணங்குறுங் கருங்கைமள்ள ரானசா லமைத்தனர். (2)

நள்ளிச்சங்கு சூலுடைந்து நண்ணவண்ண மேவுநுண்
பொள்ளியிற் பரம்புடன் குரம்பமைத்த சும்மையால்
வள்ளிவாங்கு மெல்லிடைக ளாயர்மாதர் மானவே
யுள்ளிமேக மென்றுகொம்பி னூங்குமஞ்ஞை யெங்குமே. (3)

சேறுகொண்டு வித்துசெந்நெல் வெண்முளைத் திகழ்ந்தபண்
நாறுகொண்டு வண்டுடன்கை வண்டினங்கள் மாதர்பா
லூறுகொண்ட கொங்கைமென் மருங்கையென் றெலிப்பவே
கூறுகொண்ட நட்டவோதை கொண்டநெஞ் சகழ்ந்ததே. (4)

நடந்தடர்ந்து பாடியாடி நட்டசெந்நெல் பாசிலை
படர்ந்தபஞ் சுடர்க்கடா படும்பரிக்கு நேரதாய்த்
தொடர்ந்துசெங் கதிர்க்கும்வெண் மதிக்குமீத் துவன்றியே
படர்ந்தபைங் கதிர்க்குலாவி நீழலிட் டமைந்தவே. (5)

கலித்தெழுங் கதிர்க்குரைத் திடக்கருங்கை மள்ளர்கள்
பலித்ததொண்டி யுண்டுவண்டு பண்டறச் சுகிர்ந்துமுன்
மெலித்தகோரை நார்புனைந்த முண்டக மிலைந்துநின்
றெலித்த சொல்லில் வெண்பிடிக் குயங்கைகொண் டுயங்கினர்.(6)

வளைந்தவா னெறிந்தநெல்லி நேர்வரா வயற்கொளா
விளைந்தசூடு கோடுசெய்து வெம்பகட்டி னிற்படுத்
தளைந்தநூலு ரீயளந்த றைந்தவோதை மந்தரந்
துளைந்தவேலை யூனராற்று சும்மையொத்து விம்முமே. (7)

தடங்கொள் மார்நடுந் தடாரியார் களாயரு
ளடங்கவாவு மன்னர்பாலு நீக்கியைம் புலத்தர்பாற்
றெடங்குண வமைத்திடச் சகட்டுறுந் தொகைச்செந்நெல்
குடங்கொழுந்தி வெங்குறட் புகைந்தகூட்டி லட்டுவார். (8)

சென்னிலத்தி வித்தகஞ் சிறந்தபரனை யார்வமீத்
துன்னிருங்கோ டேனலெட் டோங்குதோரை யாதியும்
பன்னிருங் கிழங்குமுப் பலங்கடெங்கி னெண்பழ
மன்னுபண்டி கோளினங் குலாவுமான மானுமே. (9)

பண்ணுடைத் தவம்பயின்ற மெய்யொழித்து மேலையோர்
நண்ணுமற் றவம்பிறக்கு நல்கல்போல மள்ளர்கள்
கண்ணுடைத்த கன்னறுன்னு கோதினைக் கனற்கொழீஇ
யெண்ணுடைத்த சாறுகொண் டிரப்பவர்க் கருத்துவார். (10)

(வேறு.)

இந்திரன் னெடும்பழி விடுத்திடமு னெய்திச்
சுந்தரன் விளங்குதிரு நாடது தொடர்ந்தே
வந்துபணி கின்றசெய லொக்குமலர்க் கஞ்சஞ்
செந்திரு வொடும்பல செறிந்தபுன லோடை. (11)

கோழரை பரத்துகிரை துற்றியிரு கோடுஞ்
சூழுநிழ லிற்குவளை கஞ்சரினர் துன்றி
வாழுமல யத்துவசன் மங்கையுட னுட
வேழுவரி யுற்றென விசைந்தன குளங்கள். (12)

பண்ணவ னரும்பழி விடப்பரனை நாடி
யண்ணவ வனைந்த மரங்களைவ தென்ன
மண்ணமா தடம்பொழின் மலிந்தன வீழுலக ?
டண்ணமதி யொத்தசுதை யொத்தபிர சங்கள். (13)

முல்லைமுகை யொத்தவரி முற்றியிர திழினில் ?
வல்லமறை ஞர்க்கருள வளம்பரவு சாலை
தொல்லைமண முற்றிவரு சொக்கனரு டன்று
லொல்லையி லமைத்திடு மெனக்குழியை யொக்கும். (14)

முப்பழ நிரைத்தரு முயக்குநெறி தோறு
முப்பழ நிரைப்புனல் புதுக்கல முயக்கல்
வைப்படை யுடைத்த செழியர்க்கருள் வழங்கிப்
பைப்பணி யான்புனல்செய் பந்தரை நிகர்க்கும். (15)

முரிந்ததிரை வேலைமுகி லின்புனல் படிந்தே
விரிந்ததரு நிழலாட மேதிநெறி தோறுஞ்
சொரிந்துபொழி பாலனதி தொடர்ந்தபல கால்போ
யரிந்தவய லிற்கதிர் விளைப்பநனி யாகும். (16)

(வேறு)

முப்புடைக் கனிகண்டு முப்பலத் தருவை
முற்றி யெற்றிநிறை பூகமே
யொப்புடைத் தரளம் விட்ட பாளையொடு
தாறுதிர்த் ததிர வோடியே
செப்புதற் கரிய விஞ்சி காஞ்சிநிரை
சிந்தி நாண்மலர் சிதைக்கவே
வைப்படைக் கண்மட மாதர் நாள்நிறை
வாச மெல்லவ லிடிப்பரே. (17)

கோடி ருழ்கதிர் விளைந்த தண்பணை
யிடத்தி னிற்குடி கெடுத்திரு
வீடிழு துட்டு மாலைசே ருழவர்
வேறிசா றணிவி ழாவிழா
வாடி ருமரை விளக்கொடுப் பவெதிர்
மாறி நீருறை வேலையொத்
தேடி ருமரை வரைந்த மெய்ப்பறை
படுத்த டுத்தவொலி யெங்குமே. (18)

இருக்கு ரைப்படி முருக்கி லைப்படு
சருக்கு நெய்யினெழு தீயினுற்
றருக்கு வேதியர்கண் முத்தழற் பிரண
மித்த ருத்தியருள் சாரவே
வுருக்கு நெய்யினொடு கஞ்ச கத்துமுறி
யிற்கறிப் புனலு நாவினுற்
பொருக்கெ னப்புகலி குத்த ருத்திநுகர்
பொம்ம லோசைமிக விம்முமே. (19)

(வேறு)

வல்லினிற் பிணித்த புயலினுல் வளத்தை
புரியது மலையமா தவத்தன்
சொல்லிய தமிழாற் கல்விமீக் கொண்ட
திந்திரன் முடிதுகள் படலார்
செல்லுறழ் வீரஞ் சிறந்தநு..........பொற்கை
செய்தலா நீதியே நிகழ்ந்த
தொல்லைவெண் டிங்கண் மரபினுற் றப்ப
முரியது பாண்டிநா டதுவே. (20)

நிருதர்வே ரறுத்த விராகவன் பழியை
நீக்கிய திருவணைச் சிறப்புஞ்
சுருதியங் கோச மங்கையு முத்தந்
தோன்றுவேய்ங் கானமு மாறு
மிருதி யாகமஞ் சூழ்பதி களுமே
விளங்குமுன் னுடலான் முடியுங்
கருதிய கயலுந் தரித்திரசுந் தரனின்
காவல்வா னுட்டினு முளதே. (21)

ஆதியம்பரம னௌியரி னெண்ணுன்
கறத்துட னிரட்டியா டீலயுஞ்
சோதிநா யகியோ டிருந்துநா டோறும்
புரந்தருள் சுரந்தநா டிதஞே
டோதிய பிறநாட் டொன்றினே யுவமை
யுரைத்திடிற் சுந்தர நிகரென்
றேதமார் தெய்வத் தொன்றினே யிசைக்கும்
புன்மொழி யியல்பென லாமே. (22)

பொதியமால் வரையு மணியொடு தரளம்
பொன்கொழித் திரைதிரை படைத்து
மதியளப் பரிய பொருளேயுஞ் சூழ்ந்த
நாட்டினில் வளத்திணேப் புகன்றும்
நதிமதி கரந்து மணிமுடி தாங்கி
விடையேறி நற்கய லெடுத்துப்
பதியிது வேயென் றரனமர்ந் தருளுங்
கூடலம் பதிவளம் பகர்வாம். (23)

பாண்டிநாட்டுச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 50.

நகர்ச் சருக்கம்.

சுற்றிய வனந்தன் புகல்வட நூலு
முனிதமிழ்ச் சுவையுமுப் புலவர்
வெற்றியந் தமிழு முச்சுட வான்ன
விரிந்த தேவாரமு ஞானக்
கொற்ற மாணிக்க வாசகத் தேனுங்
கூறுமா னகர்வள னெளியேன்
சிற்றறி வுரைக்கெண் புவியிடைப் புயங்கஞ்
செங்கதிர் வாம்பரி செனவே. (1)

(வேறு)

அரியய னருந்தவ ருளத்து மாதியாய்
விரிதுரு சுருதிமீ மிசையும் வெண்சுடர்
சொரிதரு கயிலையங் குவட்டுள் தூயதே
வரியத னுடையரண் மதுரை யம்பதி. (2)

பழிவிடப் பண்ணவன் பரிநதி மானகர்
பொழிவிடச் சுவைப்பிராற் போற்றி யுய்யலா
விழிவுடைத் தமரர்நா டிதற்கு நேரெனு
மொழிவிடி பாலன்றி யுவமை முற்றுமே. (3)

இந்திர னமைத்திடு மெழில தன்றியுஞ்
சுந்தர பாண்டிய னென்னத் தோன்றிய
வந்தரி பாகனுண் டரசி யற்றலான்
மந்திர மறையினும் வழுத்தற் பாலதே. (4)

கரியவன் கரியவள் காக்கப் பெற்றளிக்
குரியவர் விசையமு மோங்குந் தன்மையா
லரியவிந் நகர்க்கிந் நகர மன்றியே
பெரியவண் டத்தினைப் பேச லாகுமே. (5)

திருவிளை யாடலெட் டெட்டுஞ் செவ்விசேர்
மருவிளை யாடக வனசப் பொய்கையுங்
கருவிளை யாடலங் கண்ணி நன்மணத்
துருவிளை யார்வமு மிதற்கலா துண்டே. (6)

தலையுகத் துறையெனத் தரணி மந்தணி
திலதமொப் பாமெனத் திசைமு கற்றரு
மலரென வனப்பிடை வனப்ப தாமென
வுலகினைக் கவின்படைத் துயருங் கூடலே. (7)

சுந்தர னுறைபதிச் சுந்த ரத்தினை
யந்தர நாடெதி ரமைத்துக் காணிய
வந்தபொன் னுடிபோல் வட்டஞ் சார்ந்தொளி
யந்தவே தெளிபல வாவி யுற்றவே. (8)

இருணிறை யகழ்வழி யதலம் விட்டெழீஇச்
சுருணிறை மதின்மணிச் சுடரி வீற்றுற
வருணிறை யாருளத் தகழ்பு ரத்தவாய்ப்
பொருணிறைந் துறைந்தெனப் பொலிந்த சோலையே. (9)

புறம்படு சோலையற் பொழுது வைகியன்
னிறம்படர் மணியென நெருங்கு வண்டின
மரம்படர் கடையடை யாம்பல் வாய்ப்படர்
வரம்படர் மலர்ப்புகு மகழை யோதுவாம். (10)

மழைக்கண்ணுள் மணியினின் மரமி யாடுதற்
கழைத்தவே ழுலைதழீஇ யரணஞ் சூழ்வதை
புழைக்கைவெண் கரிப்பழி போக்கு நாயகன்
றழைத்தவூர்க் கிடங்கெனத் தவத்தர் சொலவரே. (11)

விண்ணுற நிமிர்மதின் மெலியத் தாக்கியே
மண்ணுற விழுமகழ்த் தரங்கம் வாசுகி
பண்ணுறு மந்தர மதிக்கப் பாணியா
லண்ணுறு கருங்கட லறைதல் போன்றதே. (12)

முளையெயிற் றிடும்பிடி வயர்வு முற்றலும்
வளையெயிற் றடர்க்கரி வனச நாளமென்
றளையெயிற் றடங்கர்சே ரகழின் மூழ்கிவான்
றுளையெயிற் றனந்தனைத் தூக்கி நல்குமே. (13)

உலகமுன் றேன்றிவீற் றுயிரெ லாம்புக
விலகுமா நகரென்கை காட்டி யிற்றலை
யலகிலா வகழென வமர்த லோதினந்
திலகவாண் மதிலினைச் சிறிது கூறுவாம். (14)

போரிடை மறவரிற் போலி கார்ந்தெறு
நீரிடை செம்மலை நெருப்பெனப் பெயர்ந்
தூரிடைக் கதிர்க்கரக் கமல முற்றன
பாரிடைப் பெடைபிரி பறவை யன்னமே. (15)

(வேறு).

தூயமதில் வட்டமொடு சுற்றியதன் நெற்றி
வேயகுடு மித்திரள் விரிந்த வெழிலால
வாயென வளைத்தபணி வேந்துபணி மாறு
வாயிர முடித்தலை நிரைத்ததென லாமே. (16)

பரந்த வுழிஞைப்படை படப்புலவ ரூர்மட்
டுரந்தரு மதிற்குடுமி யூடுநிமிர் தோற்றம்
புரம்பொடி வடக்குழை பொலன்கிரியில் வட்ட
நிரந்தணி குவட்டொடு நிறைந்ததென லாமே. (17)

தூக்குதொட ரேந்திர முழன்றவளி சூழ்கால்
வீக்குவட மாடரவு வெந்நெய்கனல் வட்டு
தூக்குபொறி தீக்கட் நுனிக்குமுழ நூழி
லாக்குமத மாபுரவி யாசையு மிருக்கும். (18)

முடங்கயில் வளைந்தசிலை முத்தலைய சூல
மடங்கலெரி தற்பரவு கூடைமழு நாஞ்சி
லிடங்கர்குறள் பாரிட மெரிந்துசுழல் வட்டந்
தடங்கலரு ணிணைக்குமுள ழுந்தெறு திகைத்தே. (19)

வீசொளி வயற்கதிர் விதுபலநி லைக்கோ
டேசொளி விமானமுறை சேர்நுழை வாயில்
காசொளி யிழைத்தகன கத்தகடு மொய்த்து
மூசொளிய கோபுர மொழிக்கமை வுருதே. (20)

புரந்தர னிரும்பழி விடப்புலவர்க் கம்மா
விரைந்தகதிர் வீதிகொ டமைத்த பெருவீதி
பரந்துநிறை யன்பனுறு பையுள்விட நம்பன்
றுரந்தமர வீதிநிக ரொத்தொளி தொடர்ந்த. (21)

பன்மணி நிரைத்தபடு தாரைமணி மேடைத்
தொன்மணி யிழைத்தபணி மங்கையர் துவன்றி
நன்மணி யிழைத்தபல கந்துக நடத்தின்
வின்மணிசெய் மேருநிறை மின்னென நடிப்பார். (22)

கடைந்தகட லிற்கிளர் மடந்தையர் கடுப்ப
மிடைந்தவயி ரப்பலகை வேயர மியத்தில்
குடைந்தரி யுறைந்தமலர் கோதையி னிசைத்தே
யிடைந்திடை வருந்தவெறி யம்மனை விடுப்பார். (23)

புரிந்தகன கத்தொடர் மணிப்பலகை பொற்பச்
சொரிந்துகுழை வில்லிட வெயர்த்துளி துளிக்கப்
பரிந்துபுல வர்க்கரு ளெனப்படரு மாபோல்
விரிந்தக முகத்தொடரின் மின்னென நகைப்பார். (24)

கூறுபல மேடையுறை கோதையர் குழற்கே
நாறுபுகை யிட்டவை நடந்தசெயல் வானோர்
மாறிநட னம்பரவு சொக்கரை வணங்கி
யேறியிழி கின்றபடி யேணியென லாமே. (25)

மன்றலணி செந்தமிழின் வாசமொடு சேருந்
தென்றனுழை காலதர் சிறந்தமணி மாடங்
குன்றமெறி பண்ணவ னடுங்கொலை யொழித்தே
நின்றுமகிழ் வோடுகிளர் நீர்மையென லாமே. (26)

இடம்பெயர் குலங்குண மிசைத்துவிலை கூறிப்
படர்ந்தமணி யாவன நிரைத்தபல நாய்கர்
தொடர்ந்தகடை பொற்கமுகு வாழைதொடை கன்ன
லடைந்தளகை யாதியுறை யாலய நிகர்க்கும். (27)

துங்கமணி வேகட மியற்றுதொழில் வல்லோர்
பொங்குதர ளந்துகிரி டைத்துழை பொதிர்ப்போர்
சங்கறை பொருந்தினர் தடம்பொனுரை செய்வோர்
மங்கல மிகுந்தெரு வளக்கடல் கடுக்கும். (28)

பருத்திமயிர் பட்டுவினை வல்லவர் பளிங்கு
திருத்துணர் தசக்கிரிகை செய்யவல கம்மர்
பொருத்துபல வோவர்கழ கத்தொளிறு போர்வாள்
வருத்துனர் தெருப்பல நதிக்கவினை மானும். (29)

நுட்பமதி நூலினர் நுணங்குகணி வல்லோர்
தட்பமதி வேதியர் படைத்தலைவர் தாழா
வொட்பநிறை கேளிர்முதி யோர்வயவ ரொற்றர்
புட்பரவு பொய்கைகள் பொருந்தெரு வனேகம். (30)

(வேறு)

வளர்ந்தகொம் பிரிந்துபொன் குயிற்றி வாரியூடுசேர்
களர்ந்தவாரி யச்சொலா லடர்த்துநெய் மிதந்திட
விளைந்தவின் படிக்குமுட் பொருந்தியூட்டு வேங்கரி
கிளர்ந்த தூணொ டாழியிற் கெழீஇயவங்க மொத்தவே. (31)

ஒன்பதிற் றிரட்டிசாரி யோங்குவண்ண மைங்கதி
வன்பரித் திரணங்கொணர்ந் தகழ்ப்புரத்து மன்னியே
யின்பமுற்ற நீரருத்தி யெய்துகால் பிணித்தபோல்
பொன்பிணித்த சங்கிலிப் புறந்தொறும் நிறைப்பரே. (32)

சூழிவைத்த பித்தையிற் றொடைச்சுரும்பு பாடவுங்
காழுரைத்த தேய்வையிற் கதிர்ப்புயங்கள் வீங்கவு
மாழியிற் சிறந்தமா லெனச்சிறந்த வாடவ
ரேழிசைச் சுரத்துவீணை கூறிவீதி யெய்துவார். (33)

மருப்பிரும் பொலிக்கவெங்கண் வண்ணிகால மத்தக
நெருப்பெழுந் தெனத்துளித்த சோரிவார நின்றுமீச்
செருப்பயின்ற காலெடுத் திடைத்துமுன் னடந்துதிண்
பொருப்பெனுந் தகர்ப்பொரப் பொருத்தியார்ப் பெடுப்பரே. (34)

முருக்கலார் சிதைக்களத்து மொய்ம்மயிர் சிலிர்ப்புற
நெருக்குமுட் படைத்தகா னிமிர்ந்தெழுந் துரம்புகத்
தருக்குடைச் சினத்தினிற் றழற்கணிற் பொடித்திடச்
செருக்குயிர்க் கிரங்குருத சேவலே பொருத்துவார். (35)

பிடித்திடும் பணைக்கைபற்று பின்னல்வா ளராவென
வெடித்ததிங்க ளைப்பகுந்த வெண்மருப் பழுந்துறத்
துடித்துவண் டரற்றமேனி சோரி சோர நன்மதி
லிடித்திருட் பொருப்பையொத்தி பம்பொரக் களிப்பரே. (36)

வரிபடைத்த கொம்பு வீசி மத்தகம் பிளக்கநீ
ளெரிபடைத்த கண்களோடு போர்செய்மேக மென்னவே
யரிபடைத்த குஞ்சிமைந்த ரார்ப்பவார்ப்ப நீங்குருக்
கரிபடைத்த மேனிவிம்ப கட்டினுடல் காண்பரே. (37)

(வேறு)

நிறையு மங்கைப் பொருள்வழி நெஞ்சுறச்
சிறைவி ரித்து மலரினைச் சூழ்ந்து தேர்ந்
திறைவி டுத்தவண் டெய்ப்பவிப் பாரினுண்
முறைவி டுத்தவர் சேரி மொழிகுவாம். (38)

ஈட்டு பொன்கரத் திட்டவை நீங்குநாட்
பூட்டு விற்கணை பொற்புற மெய்துவார்
வேட்ட சேரியில் வேந்தனுங் காமனுந்
தோட்டு நீர்ச்சுழல் வண்டெனச் சூழ்வரால். (39)

வெண்ப ளிங்குடைப் பித்திகை மீதெலாந்
தண்பொ ருந்திய சந்தத்து லாமமை
தெண்ப சும்பொன் னிழைத்தொளி வெள்ளியின்
விண்பொ ருந்தவேய்ந் திட்டனர் மேன்மையால். (40)

ஏற்ற நான மிமசலத் தாற்குழைத்
தாற்ற நன்மெழுக் கிட்டதி லைம்புகை
தோற்ற மாலைக ளேக்கிச் சொரிந்துபூச்
சாற்றெ ணுக்கவின் மாளிகை சார்ந்தவே. (41)

வீணை வங்கியந் தண்ணுமை வீங்கொலி
சேணி வந்தெழச் செஞ்சிலம் பார்ப்பமெய்ப்
பூணி லங்கப்பூ தண்ட நூல்வழிப்
பாணர் மாதரி யண்ட மெய்துவார். (42)

அங்க மூன்றின் வினயந் தோன்றவே
பொங்கு பலவரி யும்புற வாடலுந்
துங்க வேழிசைத் தூக்கு நிறைந்ததாற்
றங்கு பொன்னுல கென்னத் தயங்குமே. **(43)**

விட்ட போதினும் வேரியங் காவினு
மிட்ட செம்மணி யானும்வெண் முத்தினும்
பட்ட கங்குற் பகனில வீதென
வுட்டெ ளிந்தில் தாயெழி லோங்குமே. **(44)**

இந்த மாநக ருக்கிறை யாவர்க்குஞ்
சுந்த ரந்தரு சுந்தர நாயக
னந்த ரத்திறை யாரண னாரணன்
மந்தி ரக்கவி போற்றிய மாட்சியான். **(45)**

ஆய சொக்க ரருட்கடல் வெள்ளமார்
நேயன் வெண்குடை நீழலிற் சேடன்பொற்
சேயபா ரச்சுமை செந்நுகந் தாங்கினன்
றூய நெஞ்சின னீதி தொடர்ந்துளான். **(46)**

(வேறு)

அன்னவ னரசர் சூழுங் கச்சி வீரப்ப னென்று
மன்னவ னருள்சேர் மன்றைச் செவ்வந்தி துணைவன் வாய்மைத்
தென்னவன் றிருவி ருந்தான் சவுந்தரன் றேவ பாடைத்
துன்னிருங் கதைதென் னூலாற் சொல்லெனச் சொல்ல லுற்றேன்.
(47)

(வேறு)

நிலவு லாஞ்சடை நின்மலன் காணியாய்க்
குலவு கூடல் வளத்தினைக் கூறினம்
புலவர் மாதவர் மாலயன் போற்றிய
தலவிசிட் டத்தை யன்பொடு சாற்றுவாம். **(48)**

நகர்ச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 98.

தலவிசிட்டச் சருக்கம்.

மறைபுகன் மதுரை பொற்ற
 மன்ரச் சொக்கன் றலநீர் மூர்த்திக்
குறைநிலத் தண்டத் தொப்பொன்
 றுரைக்கொணு விசிட்டத் துள்ளு
மிறைபதி யுயர்ந்த திந்தப்
 பதியின்மூ விருபத் தெட்டு
நிறைபதி யதிணு ணுன்கு
 நிகழ்த்துநர்ன் குள்சி றப்பே. (1)

காசிதென் கயிலை தில்லை
 கலந்துய ிறக்கப் போற்ற
வாசியிற் காண முத்தி
 யாலவாய் கேட்க முத்தி
யீசன்வா சத்தி ணுனு
 மரியய னேத்த லானும்
வாசவன் பழியைத் தீர்த்த
 வளத்தினு மிதைநே ருண்டே. (2)

அளக்கொணு வினையை நீக்கு
 மாடக நளினம் பாரில்
விளக்கமார் தீர்த்தந் தன்னி
 லுயர்ந்தது சிவன்விடாத
வளத்தலத் திதுவே மிக்க
 தாதியின் மருவி லங்கந்
துளக்குருச் சுதன்சி வத்து
 மூர்த்தியுண் முதலாய்த் தோன்றும். (3)

சிவதலந் தோன்று முன்னே
 சேர்ந்தது துவாத சாந்தம்
புவியினிற் சிவலோ கப்பேர்
 புனைந்தது விளையா டற்கே
நவமரு வியதென் பானே
 வுணர்வது நான்காம் பாதந்
தவறிலா தளிக்குஞ் சீவன்
 முத்தமாந் தலமி தாமே. (4)

பூளையம் பரத கத்துப்
　　புயங்கமிம் மதுரை மையற்
கோளுற வரினு முத்தி
　　பிதாக்கொலை புரிந்தாய்ச் சேர்ந்த
காளுடை மறையோன் தீமை
　　கழித்தது சராச ரங்கட்
காளுடை முத்தி நல்குந்
　　துவாதசாந் தத்த தாமே. (5)

இப்பதி போற்றுர் வேறென்
　　றவாவலின் சுவையை நீக்கிக்
கைப்புரஞ் சுவத்தன் ஞானக்
　　கரையெனுங் கூட மூவ
ரொப்புரப் பணியு நல்லோ
　　ரொருகண முறையில் யோனித்
துப்புடைக் கருவிற் சேரார்
　　கிளையுடன் கதியிற் சூழ்வார். (6)

அயமக மாதி யாகப்
　　பலனரன் காசி யாதி
பயனுறு தலத்து வாசம்
　　பகீரதி முதனீ ராட
னயனுறு சாந்தி ராயணப்
　　பலனொரு நாளே நல்கு
முயர்வொரு ஞன்கு மெய்து
　　மிதன்சிறப் புரைக்கொ ணுதே. (7)

அட்டமி சோம வார
　　மாச்சிவ நிசிப்ப சித்தாற்
பட்டவோர் திங்க ளுலா
　　ருண்டோளுர்ப் பசித்த லொக்கு
முட்டின முக்கால் துண்டி
　　மொண்பதி விரத முற்று
மிட்டவை யத்தி னெய்து
　　மேனையோர் தலமா தானம். (8)

எண்ணருந் தானம் பூசை
　　தவம்புனல் யாக மாதி
நண்ணுமோர் நாள்வ சிக்கில்
　　யோகஞா னத்தோ டெய்து
மண்ணலம் பதிக டம்ப
　　மாலவாய் மதுரை கன்னி
பண்ணுநான் மாடக் கூடற்
　　சிவபுரி பலபேர் சாரும். (9)

இத்தலம் போற்றி விந்தத்
திறக்கினு முத்தி யெய்து
மெய்த்தல மிதற்கு நேரா
யொன்றிலை மேவு முன்னே
பொய்த்தலை வினையை நீக்குந்
திருவினைப் புணர்த்தும் வேண்டி
கைத்தல நெல்லி போலச்
செல்வமுங் கவினு நல்கும். (10)

நினையச்சா லோக மன்பி
னேரச்சா மீபங் காண
வனகச்சா ரூபம் போற்றச்
சுந்தர னடியிற் சேர்க்கும்
வனையத்தா ரிதழிச் சொக்கன்
மதுரையில் வசிக்கத் தீய
வினையைத்தீத் துண்மை ஞான
வீட்டினை நல்கு மன்றே. (11)

(வேறு)

உகங்க ளன்கினும் விளையாட லோங்கியே
மிகுந்த சுந்தரன் குணமேவி வேந்தர்பொற்
சகந்தனை யிறுதிநாட் டினிலுந் தாங்கியே
இகம்பர மளிப்பதித் தலமற் றில்லையே. (12)

இன்னகர் புரைவதொன் றில்லை யின்னகர்
மன்னுபொற் றாமரை வளம திக்கொணு
தன்னதிற் சுந்தர னணை யிற்புனற்
றுன்னுதீங் கொளிக்குமத் தூய்மை கூறுவாம். (13)

தலவிசிட்டச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 111.

பொற்றாமரைச் சருக்கம்.

ஆதியிற் கார்நதி யலைப டைக்குமுன்
சோதியை யாட்டுவான் றேயம் வேண்டியே
வோதருங் கணமுறச் சூலமோச் சினன்
பாதலங் கீண்டுநீர் பரந்த தென்பவே. (1)

அந்தணன் மால்பணி யால வாய்ப்பதிச்
சுந்தர னுமையொடுங் கணங்கள் சூழவே
வந்துபொற் றாமரைச் சடில வானதி
நந்துறு நிறைத்திவை நவிறன் மேயினன். (2)

சிவந்தனை யளித்தலாற் சிவதீர்த் தப்பெயர்
நிவந்தமுப் புவனதீர்த் தத்து நீண்டலாற்
பவந்தனை முனிபர தீர்த்த மாதியா
யுவந்ததி லாதியென் றுரைக்கற் பாலதே. (3)

நாடவே வினைபொரிற் பாவ நாசமே
நீடுமெய்ப் பெயரின்மா தீர்த்த நேயத்திற்
கோடிபுண் ணியத்தினென் பதினிற் கோதி[லி]லா
தாடலிற் றீர்த்தமப் பெயர தாகுமே. (4)

(வேறு)

ஞானத்தின் ஞான நீரணி முத்தியி
லானமுத் திப்புனல் சடைநீ ராட்டலி
னூனமில் சிவகங்கை யுத்த மத்தின
மேனிறை யுத்தமொத் தம்மிம் மெய்ப்புனல். (5)

அண்டர்கோன் பழிபொர வருள்பொற் றாமரைத்
தண்டவப் பிரதிமெய் பிராத்தஞ் சாரறங்
கொண்டபொற் பிரதமுட் கொள்ளின் பத்தினி
லுண்டநற் பிரதமென் னுரைப்ப நாமமே. (6)

தேவர்கா தந்திக மாயுதத் தீர்த்தமீ
தோவில்மா கரணம்நற் றிருவு கந்தநீர்
மேவிசை தருபுன றீர்த்த வேந்தனுந்
தாவிலா வனநந்தி பேர்பெறும் பொற்றாமரை. (7)

வேண்டிய துதவுமிம் மெய்ப்பு னற்படிந்
தீண்டெமைப் பணியவீ டெளிதி னல்குவம்
பூண்டுமுக் காலுஞ்சத் தியம்பு கன்றன
நீண்டநீ ராட்டுதிர் தோயத் தெம்மையே. (8)

என்றுசுந் தரனுமிப் புனலி லாடியே
நின்றசொற் கணங்கட்கு நிகழ்த்தி நின்மலந்
துன்றிய விலிங்கத்தி லொன்றச் சூழ்கணம்
வென்றியி ளுன்மறை வீதியி லாட்டினுர். (9)

எப்பதித் தீர்த்தத்துங் கங்கைமாண் பெய்து
மப்புணர் சுந்தரன் சடைய டங்கலா
லொப்புரைக் கருத்தையு மதனி றைத்தலாற்
பொய்ப்பவ மிமைப்பினிற் போக்கு முண்மையே. (10)

ஈசனு ளேயிற்சல சரங்க ளிங்கதில்
வாசமெய் துருதான் வடிவித் தீர்த்தமே
நேசமோ டிப்புன னிளைத்து மூழ்கினர்
பூசைசெய் யினும்வரும் புத்தி முத்தியே. (11)

பஞ்சபா தகமும் பாத கங்களும்
வஞ்சமாய்ச் செய்நன்றி மறந்த தீமையும்
விஞ்சையோ டருந்தவம் வேள்வி நீத்ததுஞ்
செஞ்சவே யிப்புனல் காணத் தீருமே. (12)

காலேயி னுச்சியின் மாலேக் காலத்து
ஞாலமீ தியாருமென் னுளுந் தோயினும்
மேலுறு வாரருந் திதியின் மேவினுற்
சூலபா ணியனடித் தொடர்த லுண்மையே. (13)

பிரதரிப் புனலிடு பிண்டத் தாலயன்
புரமதி லவன்றின முறைவர் போற்றிலர்
விரககண் டப்புவி போகம் விண்ணலாற்
பரதகண் டத்தினும் பவத்தை நீக்குமே. (14)

(வேறு)

அன்பினி லவன்பின் மற்றோ
    ராடலிற் றுன்பந் தன்னி
லின்பமாற் களிப்பின் வேறோர்
    தோளினி லின்ப நீங்கி
னன்புலித் தாடி னுனுங்
    காண்கினு முத்தி நல்கு
முன்புலப் படிந்தோர் காணி
    லுரைக்கொணு வினைமு ருக்கும். (15)

ஆதியம் பரனுக் கட்ட
　　மூர்த்திய லரிய நீரா
யோதிய மூர்த்தி யிந்தப்
　　பொன்மறை யொருநாண் மூழ்கிற்
றீதுறு மாக முற்றும்
　　சேர்பிர யாகை தீர்த்தம்
போதமோ டாடு முத்தி
　　பொருந்துறும் புகலொ ணாதே. (16)

(வேறு)

ஆதியம் புனற்பர மானந் தப்புனற்
சோதியார் சிவப்புனல் ஞானத் தோயமென்
றேதினீர் படிந்தருக் கியமுய்த் தஞ்செழுத்
தோதியெக் கணங்களு முத்தி யுற்றனர். (17)

வருணசூ தத்துநீர் மண்ணென் புண்மயத்
தருணிறை கங்கைய தாதி தீர்த்தத்துப்
பொருணிறை யாண்டுநூ றுடல் பொன்மரை
தருமொரு முழுக்கில்முக் காலுஞ் சத்தியம். (18)

வாருண நீரொலி தேவ மந்திரங்
காரண மானசங் கரபி லம்மெனச்
சேரெழு வகைக்குமித் தீர்த்த மேலதா
மோரொரு முழுக்கொரு கோடி நல்குமே. (19)

(வேறு)

சனநாண மூழ்கி லெண்ணில்
　　சனனத்தீங் கொருவு மேடம்
புனைவிருச் சிகத்திங் கட்கே
　　படியப்புன் பிறப்பை மாற்றுந்
தனியமா வுவர்க்கிரா ணத்து
　　விதிபாதத் ததனி நீர்தோய்
வனையவோர் முழுக்கு நூறு
　　யிரங்கோடி யனந்த மாமே. (20)

அந்தணன் கொலையை நீக்கும்
　　பவத்தினை யகற்றும் பூசை
சுந்தர வேள்வி தானந்
　　தவமதிற் றேய நல்கும்
முந்துநல் வினையி லின்னீர்
　　மூழ்கப்பக் குவம்வந் தெய்தும்
வந்தையோ ராண்டு மூழ்கின்
　　மனுவைநேர் மகவுண் டாமே. (21)

ஓதுபொற் ருமரைத் தீர்த்த மொப்பெனப்
பூதலத் தொன்றினைப் புகலிற் றீங்குறும்
ஆதலா லரியயன் மறைமுன் ஈந்திடா
தாதியா மூர்த்திசீ ரறைகு வாமரோ. (22)

பொற்றுமரைச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 133.

சொக்கலிங்கச் சருக்கம்.

மேருவே காசி மற்றத் தலம்புவி செவிமவு முன்னர்ச்
சேருமிவ் விலிங்க மூல லிங்கங்க ளிதனுற் சேரு
மாருமிவ் விலிங்கப் பூசை யண்டத்து ளிலிங்கத் தாகும்
வேரிடை நீரைப் பெய்யத் தருவெலாம் விளங்கு மாறே. (1)

மந்திரத் தைஞ்செ ழுத்து மறைகளிற் சரம மாவிற்
றந்தவாண் மாணி டர்க்கு ளந்தணர் தானந் தன்னிற்
சுந்தர வன்னத் தாள நோன்பினிற் சோம வார
மெந்தலிங் கத்துஞ் சொக்க லிங்கமே சிறப்ப தென்பார். (2)

மகத்தய மேத நாட்டில் வானநா டாற்றிற் கங்கை
நகத்தினின் மேருத் தீர்த்தப் பலத்திற்பொன் னளின மன்பார்
நகத்திட பித்தர் தன்னிற் சிவபத்தர் மாத்தைந் தாறு
வுகத்தினிற் கிருத மென்ன விலிங்கத்தி லிங்க மோங்கும். (3)

உமையுடன் கூட லாலே சோமசுந் தரப்பே ரோங்கி
யமைவன மீனவன் பிரம்பி னடியுயிர்க் கெல்லா மார
விமையொடு விழியை நேரா யியங்குமிவ் விலிங்கம் வேதச்
சமையகோ டிகளு மிந்த மூலலிங் கத்தைச் சாற்றும். (4)

இறப்பலா தெதிர்கா ணுரை முத்தியி னெய்தி ஞானஞ்
சிறப்புற விறைவன் செய்த தமிழ்ப்பெற நரிமா வாக
மறச்சமண் கழுவி னேற வரிப்பறழ் முலைப்பால் வாய்ப்ப
வறற்புனல் வையை மண்ணை சுமப்பநண் புடன ளிக்கும். (5)

நிற்குணஞ் சதாசி வத்து மூர்த்தியே நிறையுங் கூடற்
சிற்குண சுயம்பு வாதிச் சோதிதன் னன்பிற் சென்ற
தற்குண வடிவாம் வேறோ ருவமையுஞ் சாற்றொ ணுதால்
முற்குண னெண்கு ணத்த னளப்பிலாக் குணத்தன் மூர்த்தி. (6)

இரவிமுன் னிருள்சிங் கத்தி னிபமெய்முன் னிழுதை புட்கோ
கரவுகா லினிற்கார் வச்சி ரத்துவெற் பவாவிற் புத்தி
யிரவுகோ பத்து நோன்பு மடியினில் விஞ்சை லோபத்
துரியபஸ் குணம்போ லிந்த விலிங்கமுன் பவம்விட் டோடும். (7)

விரவிய காலைப் பூத ரன்பல னுச்சி மேவித்
சுரபியா யிரத்ததான மாலையத் தொகைப்ப லன்கள்
பரவிமுக் கால மும்போய்ப் பணிந்திட விவ்வி லிங்க
மிரவிவிற் பொருத போற்றீங் கறுத்துமுத் தியினை யீயும். (8)

பத்துனூ றுயி ரத்த வினைகெடும் பரிவிற் கேட்ப
யத்தனை யுள்ளக் காணப் பணிந்திட வாயி ரத்த
மெய்த்தய மேதம் வாச பேயமே வேந்த சூயத்
துய்த்திடு பலமே நல்கு மிதற்கொரு தலநே ருண்டே. (9)

ஐந்துகவ் வியமைந் தான முதமும்நன் னீரா ரத்தின்
முந்துற வாட்டி னுன்கு பொருளுமற் றவர்க்கா முன்னித்
தந்தமான் மதங்கற் பூரங் குங்குமஞ் சாத்தத் தேவர்
பைந்தொடி மகளிர் போக மவரின்பம் பலிக்கு மன்றே. (10)

உருமலர் சாத்த னூறு பொன்மலர் பலத்தை யொக்கும்
மருவிய தீப நைவேத் தியந்தரத் திருவின் மன்னி
பொருவிலாச் சிவலோ கத்திற் புகுவர்தாம் புலம ளித்தாற்
றருநிறை கயிலை வெற்பிற் கோடிநா ளுண்டு சார்வார். (11)

மணியபி டேக கும்பந் தூபம்பாத் திரங்கண் மற்று
மணிபெற வுதவல் வேட்ட பலன்தரு மாடற் கீதம்
பணியிய மாலை யூர்தி தேர்விழாப் பலவு நல்கி
லினையிலாத் துறக்கந் தன்னி லெளிதவன் சேர்வ னன்றே. (12)

கருப்பூரச் சொக்கன் வீறு கதம்பகா னகத்திற் சொக்கன்
அருட்கலி யாணச் சொக்க னபிடேகச் சொக்க னன்பால்
விருப்புடை மூல லிங்க மேவுமா லாலச் சொக்கன்
பொருட்புழு கனைய சொக்கன் பழியஞ்சி புராரி யாமே. (13)

மதுரைநா யகன்சேர்வித் தைந்தான் மாறுக் கன்னி
பதியினுன் மாடக் கூடற் பரன்புவிச் சிவலோ கத்தன்
கதிதரு சீவ முத்த புரேசனென் றுரைப்பர் காதல்
விதியரி சுருதி போற்றுஞ் சுந்தர விமல நாமம். (14)

கயிலைய தாதி யிட்ட தட்டெழக் கனகக் கோயி
லியவுறு மதுரை யிட்ட தட்டெழா திருத்த லாலே
புயல்வண னுதி யோர்கள் போற்றினர் தேவி பீடத்
துயர்வுறு பீட மீதென் றுரண முரைக்கு மன்றே. (15)

அறமுத னுன்கு மெய்த நினைத்தவை யளிக்குஞ் செய்த
மறவினைப் பஞ்ச பாத கத்துடன் மற்றத் தீமை
யுறைதரு புராண கத்தி யொருக்குந்தீங் கிலரேல் வீட்டை
யிறையினி லளிக்கு முள்ளக் கரணம்போற் றிடவெ வர்க்கும். (16)

உலகமீ ரேழு மெய்யா யுயர்விராட் டாரு தார
மலகிலான் கமலை நாவ லருணையம் பலங்கா ளத்தி
கலைபயில் காசி யாறே கயிலைமேற் றுவாத சாந்த
மிலகிய கூட லென்றேற் சுந்தர னெவர்க்கு மேலோன். (17)

பிரமகற் பத்து மன்னு வந்தரத் தும்பி றங்கும்
புரிநகைப் புரம தட்டோன் பொற்பினு லுகங்க டோறும்
வரமிகு மெண்ணி ரண்டாய் மானவப் படிவங் காட்டிப்
பரமதைத் தருமி லிங்க மீதலாற் பாரி லுண்டே. (18)

ஆதியம் பிரமன் காலத் தருங்கடல் கடையத் தோன்றுஞ்
சீதவா ரமுதிற் சிந்துந் திவலைவித் தெழுங்க டம்பு
சோதியாஞ் சொக்கன் மேவ நிழல்தரத் தொடர்ந்து கண்டோர்
பாதக மஞ்சு நீக்கி யிப்பதிப் பரவு மன்றே. (19)

மகந்தவந் தானம் வேதம் மந்திர மதனி ழற்கே
சகந்தனில் யாவ ரேனுஞ் செய்யிலொன் றனந்த மாகு
மிகம்பர நல்குங் கேட்கக் காணச்சேர்ந் திடவி சைக்க
வுகந்தொறு மெய்தும் வேத முரைக்குமிவ் வனத்தின் சீரே. (20)

(வேறு)

மருவிய தலம்புன லிலிங்க மாட்சியும்
பொருவிலா துரைத்தனம் புரந்த ரப்பெயர்
வெருவரு பழியொரீஇ விமானஞ் சாத்திப்பின்
றிருவினை மருவிய சரிதஞ் செப்புவாம். (21)

சொக்கலிங்கச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 154.

திருவிமானச் சருக்கம்.

புரந்தரன் சுதமை தன்னிற் பொதுவும்வேத் தியலுங் காட்டிப்
பரந்தசொற் றிலமா ளுட மதுவினைப் பருக வாசான்
விரைந்துவந் தேமாதல் கண்டு வெகுளியன் றவத்திற் போனு
னுரந்தரு தகுவர் போரி லுடைந்தரி யயனை யுற்றுன். (1)

உற்றயன் பாதம் போற்றக் குரவனற் றுடைந்தாய் தொட்டாப்
பெற்றமுத் தலையாக் கோடி யெனவனம் பெயர்ந்தன் ளுேே
டற்றவு ணரைவென் ளுக்கி யவர்க்கவி யுதவன் ளுனைச்
செற்றனன் மறையோ ளுசா னென்பதுந் தெளிவு ருதே. (2)

முத்தலை மைந்தன் வீய முனிந்துதொட் டாத்தீ மூட்ட
வத்தலை விருத்தி ரன்வந் த்மரர்கோன் றனைத்து ரந்து
வைத்தலைத் ததீசி யென்பான் மடியமுன் வினையை நீங்க
மெய்த்தலை யிலிங்கஞ் செய்வான் வடதிசை விண்வேந் துற்றுன்.
(3)

வெள்ளிமால் வரைமுன் ளுன தலமெலாம் மேவிப் போற்றிப்
புள்ளிமா னுரியி னுனைச் சிவலிங்கத் தமைத்துப் பூசித்
தெள்ளுபூத் தென்பால் வேட்டந் தேய்ந்தரிப் புலிகண் மேதி
துள்ளுமான் முயல தாகி தொலைத்துநீ பத்தான் சேர்ந்தான். (4)

இருதலை வட்டங் காட்டச் சிலைகுழைத் தெய்த வாளி
வருதலை விலங்கிற் பாயா மனத்தளி தோன்ற நெக்குப்
பொருதலை நீங்கி வேட்டம் புகாக்கொலை மறுவென் றுள்கித்
தருதலை பிரம கத்தி தொடர்ந்திடாத் தன்மை கண்டான். (5)

ஆதலா லிவ்வ னத்தோ ரதிசய முதவ வுண்மை
யோதுதி ரென்னத் தேவர் திருவலு முருவக் கிள்ளை
மாதொரு பாக வீச மகேசவென் றேத்திச் சென்றுர்
போதணி தடாகங் கண்டார் புறத்திலோ ரொளியைக் கண்டார். (6)

குதுகுதுத் திருகை கூப்பிக் குறுமயி ரெறிந்து தேம்பி
விதுமுடிப் பானைக் கண்டால் விபுதர்நா யகனுக் கோதக்
கதியிடத் தெய்து வோரிற் கடிதுவந் தாயி ரங்கள்
பொதிவிடு மரைந ருவிற் புனற்றரப் போற்றி வீழ்ந்தான். (7)

விழுந்தன னெழுந்து விம்மி வெய்துயிர்த் திரங்கி யேங்கி
கொழுந்துடை ஞான முள்ள நிறைந்துமீக் கொண்ட தென்னத்
தொழுந்தகை கைகள் கூப்பி யன்பெனுஞ் சுதைய ருந்தி
யழுந்துநண் பொடுவ லஞ்சேர்ந் தமரருக் கிவையி சைத்தான். (8)

வனத்திடை வருமுன் னீத்தேன் பிரமகத் தியையெம் மானை
யினத்தொடு பணிந்தேன் சீவன் முத்தன்யா னென்னப் பொன்
[ன்னும்
நனைத்தட மலருஞ் சாத்த வாணியு நம்ப னெய்த
மனத்தொகை விமானஞ்சாத்தென் றிசைத்தலு மனத்துட்
[கொண்டான். (9)

ஆடினன் றடத்துட் டகுநீ ராட்டினன் மலரைச் சாத்த
நாடினன் செம்பொற் கஞ்ச மதனிடை நட்பிற் கண்டான்
பாடினன் சுருதி யெய்திக் கொய்தனன் பரன்கொ டீரஞ்
சூடின னுபசா ரத்தி லருச்சித்தான் றுறக்க வேந்தன். (10)

(வேறு)

நினைத்தன னற்பதியை யவனு நீண்டதன்
வினைத்தொகைக் கணிவிழா விமான மொன்றினைத்
தினத்தரி நிறைவட சிகர மொப்பென
மனத்தினுங் கடிதிகொண் டவண்வந் தெய்தினன். (11)

குருமணிப் போதிகோ மேத கத்திடு
கருமணித் தூண்பவ ளத்தி லுத்திரங்
க்ருமணிக் கோன்மர கதக்கை வச்சிரப்
பருமணிப் பலகையவ் விழிப டுத்ததை. (12)

உதையவெற் பாயிரம் கோடி யொண்கதிர்
புதையிரு டப்பொரீஇ வருபொற் பிலைந்தென
விதவுருச் செய்வினை விதிக்கொ ணுப்பெற
மதியகத் திருளையு நீக்கு மாண்பதை. (13)

தடமத மலையிரு நான்கு தாங்கவு
முடவுளை பரிக்கவுங் கணங்கள் மொய்க்கவுங்
குடநிரை நிறைக்கவுங் குலவுமா னத்தைத்
திடமொரா முழுத்தத்திற் றேவன் சாத்தினன். (14)

அளப்பரு மண்டப மிஞ்சி யஞ்சுமேற்
றளப்படு தூவிகோ புரஞ்ச மைத்தபின்
வளப்படு திருவிழா மறுகு தோரணங்
கிளத்தரு முருகெழக் கெழுமச் செய்தனன். (15)

மத்தக மரகத வயிரச் சேமமே
மொத்தபூ ணணிவிழா முற்றிப் போற்றினன்
சித்துடை யிலிங்கமேற் சகுணச் செவ்வியின்
பைத்தபொற் கொடியிடப் பாகன் றோன்றினன். (16)

நதிமதிச் சடையிள நகைமு கங்குழைக்
கதியுழை மழுவா தபயக்கை முன்னூல்
பொதியுரி பரிபுரம் பொலிய மாதுடன்
மதிவிடைப் புறமுற மதியிற் போற்றினன். (17)

(வேறு)

ஏகனென்று மனேகனென்று நிறைந்து வானி லெங்குமா
மாகனென்று மிகும்பரா பரவாதி யாகி யுயிர்க்கெலா
மோகனென்று முழங்கி நான்மறை போற்றவாழ் தோகை
தோகை பங்கின் கூடலாதிப சோமசுந்தர போற்றியே. (18)

அறிவதா யறியப்படும் பொருளா யறிந்தவ னுகிநன்
னெறியதாய்ப் புவனங்க ளெங்கு நிரம்பியைந்தென நொந்திடும்
பொறிக ளாலறி யப்படாத புராரியே புகலாகமத்
துறைவழா துயர்கூடன் மேவிய சோமசுந்தர போற்றியே. (19)

ஆஅய மகத்தினை யாதிவேள்வி யலர்ந்தனு ளாவமுத்த
வேபய னளித்துயர் ஞானவீடு பணித்தியா வருமேத்த
வேநய னுடைச்சகளத்து நிற்கள நாடுவீடருள் வாய்விண்ணோ
ராதுயர் விடப்பணி கூடன்மேவிய சோமசுந்தர போற்றியே. (20)

கருமபந்த மறுத்து நற்கதி காண மாதவர் யாவரு
மருமறைப் புகலால் வணங்கவு மந்தகன்வினை நீக்கியே
யொருமு னிக்கருள் செவ்விகண்டு முனைப்பணிந்திட வவருழைச்
சுருபநல்குவை கூடன் மேவிய சோமசுந்தர போற்றியே. (21)

படைத்த லாதி யெனுந்தொழிற் பலதேவரைப் பரிவாலளித்
தடைத்தடஞ் சத்திய ஞானசிற்பர னுகியண்ட மனைத்தையு
முடைத்துடைத் துலகங்கள் யாவுமொடுங்க வோரொளி யாமலர்த்
தொடைத்தடம் புயகூடன் மேவிய சோமசுந்தர போற்றியே. (22)

அறம்பொருட் பலவின்ப முத்தியளித் தருத்தி பொருத்தியே
சிறந்தவீட்டினு மீளவா நெறிதந்த சிற்பர தற்பரா
வறைந்த நான்மறை வடிவெடுத் தறியாதவர்வுள் ளவாவினைத்
துறந்தபேர் பணிகூடன் மேவிய சோமசுந்தர போற்றியே. (23)

தன்னிலொப்பவர் தன்னில் மிக்கவர் தானிலர் நிறைபூதமு
மென்னிலுற்றன னென்னி லுற்றன வென்னவுந்தெரி யாததாய்
நன்னிலைப்பத மன்பருக்கு நயந்து காட்டிய வெளியனே
தொன்னிலைப்பெறு கூடன் மேவிய சோமசுந்தர போற்றியே. (24)

ஓதிமத்துட னேனமா யுணராத சேவடி யுள்ளியே
யாதொருத்த ருன்னுல யத்திடை யெய்தினுலவர் செய்திடும்
வேதியற் கொலையாதி நீக்குமெய் வீடுதந்த பராபரா
சோதியைப் பெறுகூடன் மேவிய சோமசுந்தர போற்றியே. (25)

(வேறு)

இன்னணம் போற்றி வெய்யோ னிணையென வுடுவைக் கூறி
னுன்னைநேர் தெய்வ முண்டென் றுரைப்பர்க ளென்னச் சொன்ன
மன்னனைச் சொக்க னோக்கி வரத்தினை வேண்டு கென்ன
நின்னிடத் தன்பு நீங்கா வரமதே நெறிய தென்றான். (26)

எந்தையவ் வரத்துக் கேற்ப விந்திர விமான மீதென்
றந்தமா னிறுதிக் காலத் தங்கியிற் பிரள யத்துஞ்
சிந்துறு ததிக பரச கங்களீங் கணையத் தீர்க்குந்
தந்தைசித் திரையிற் பூர ணைத்தொழத் தரும்வீ டென்றான். (27)

முத்தலைப் படையோர் போற்றி முத்தலை முனிவி ருத்தன்
பொய்த்தலைப் பிரம கத்தி புறஞ்செல விடைகொண் டெய்தி
வைத்தலைக் குலிசன் வான்போய் நகுடனை மாற்றி மாறா
மெய்த்தலை யரசு செய்தான் விமலனும் லிங்கத் துற்றான். (28)

சம்பரற் கதட்டு மீண்டு வெள்ளியஞ் சயிலக் கார்போ
லும்பரர் நாயக னுறக்கத் துறுதலுந் துருவா சன்கண்
டம்பிகை யளித்த தொங்க லளிக்கவங் குசத்து வாங்கித்
தும்பிமத் தகத்திற் சேர்ப்பக் கரங்கொடு தொடைசிந் திற்றே. (29)

காண்டலு மிதழ்து டித்த களத்தமர் குறுவேர் கான்றத்
தூண்டிய சுடரிற் கண்கள் சுழன்றனன் முனிவன் வேந்தைப்
பாண்டியன் வளையிற் சென்னி படியினிற் படிய வேழம்
நீண்டசா பத்தி னுன்னை நீங்கவென் றுருத்துச் சொன்னான். (30)

ஆயசா பத்திற் கூட லணைந்துசுந் தரனைப் போற்றித்
தூயபொற் றும ரைக்கே தோய்ந்துதோ யப்பொற் பூவும்
நாயகற் கமைத்துக் கீழ்பாற் பிறத்தான மதின லஞ்சேய்
தோய்பிலத் தேவ லிங்க மொன்றுதந் தின்ப மேவி ; (31)

குடதிசைத் தடாகஞ் சேர்த்துத் தன்பெயர்க் குலவு நாமக்
கடகரி முகனை நாட்டிக் கரியுந்தண் சாப நீக்கித்
தடவிமா னம்ப ரித்த கரியுடன் சார்வ னென்ன
விடையரன் களிப்பாய் விண்ணோர் வேந்தயற் சேர்தி யென்றான்.
(32)

அற்றதே புரிவ னென்ன வமரர்கோன் றுதன் பின்னர்க்
கொற்றவெண் களிறு சென்ற திவ்விலிங் கத்தைக் கூடற்
பெற்றவர் பெறுவார் வீடே விமானத்தின் பெருமை சொற்றும்
நற்றவ வணிகன் சொல்லால் வேந்தன்சேர் நலத்தைச் சொல்
வாம்.] (33)

திருவிமானச் சருக்கம் முற்றும்.
ஆக விருத்தம் 187.

குலசேகரச் சருக்கம்

காக்கு நிம்ப வேந்தன் மேவு கல்லியாண நாயகநீ
தாக்கு வேற்ற னஞ்செயன் றனுதொ டேனை யோர்பொருட்
டேக்கு கோல ளந்திடக் கொடான்ற லைசுமந் துகோன்
மேக்கு கோள ரன்ற ராசு நாவினால் விளங்குவான். (1)

ஆய வூதி யஞ்செய்வா னமர்வி ளங்கு சோமனா
டேய கூடல் வாயிருட் டொடர்ந்த வைகல் வைகலும்
நாய கன்ற னைப்பராவி நாகர் நான்கி யாமமு
மேய பூசை செய்ய ஞான வழிபெருப் பராயினன். (2)

போற்று வானு ளோரெனப் புராரி பூசை யாமநான்
காற்றி மற்ற நாட்பதிக் கனைந்திடா முன்னவ் வீரர்
வேற்ற சித்த னாகி யெந்தை யாலவாய்க்க ணெய்தெனச்
சாற்று நற்கனா வுணர்ந்து தென்ன னன்பு சார்ந்தனன். (3)

அந்த வேலை நாய கன்வந் தறைந்திடச் சிறந்ததன்
சிந்தை நெக்கெழுந்து கூடல் சேர்ந்து வான விமானநேர்
சுந்தரற் பணிந்தவ் வெல்லை சூழ மேவு சித்தனும்
வந்த வெல்லை காட்ட வுள்கி மாநக ரமைத்தனன். (4)

காலை மாலை நீள வேற்று நூல்வழிக் கலந்தநாட்
சீல மேவு கம்மர் வீதி செய்துஞால மான்முலைக்
கோல வார மொப்பெனக் குயிற்றெரு முக்க மெம்பிரா
னால வாய னாகமத் தொழுக்க மொத்த மைந்தவே. (5)

இஞ்சி கோபு ரம்பொன் மேடை யேறுதேர் விழாச்சிறப்
பஞ்சி லோதி யார்கண் மான மானபூசை பல்லியம்
விஞ்சுவா கனங்கண் மற்றும் விண்ணு மண்ணும் வெஃகவே
பஞ்ச வன்பணித் தெம்மான் பணிப்பி லின்ன ணஞ்செய்தான். (6)

கங்கை யங்க ரைத்தொடுங் குலத்தர் காணி யாக்கியே
தங்கு காழி யத்தி னாற்ற ரும்விழா நடத்தினான்
மங்கை பாக னுஞ்சடைக் கண்மங் கையான னைக்கவே
துங்க மேவு மதுரை யென்று நாமமுந் தொடர்ந்ததே. (7)

நாற்றிசைக் குணக்க தாதி யையன் மாதர் நாரணன்
போற்று காளி காவலாய் பொருத்தி வாணி சொல்லினா
லேற்ற கூடலிற் பொருந்து யெண்டி சைப்பெ ருஞ்சுமை
யாற்றி மேரு வாளராக் கரிக்க லக்க ணீக்கினான். (8)

மாதிரங் கடந்து துங்க மான மீதி லேகியே
சாது ரங்க முந்தொகத் தடங்கொள் வாள வெற்புமட்
டோது ரந்தருந் துரங்க மேழு கைத்த வண்பொரத்
தீது ரங்க ஆழ்ந்திடத் திடத்தி னாட்சி செய்தனன். (9)

(வேறு.)

முன்பெருந் தவத்தினார் முடித்தழும் படிந்துதா
டன்பெருங் களிற்றுடைத் தழும்பழுந்த வைகுவான்
நன்பெரும் புவிக்குநன்கு தீங்குநட் பிருபகை
மன்பெருந் தவத்துட னாதெனா வயங்கினான். (10)

அருக்க னிந்து வேலைகால கன்றிடாத ராலையா
னொருக்குநேமி யங்கிரிப் புரத்துலாவு நேமியா
னிருக்குவேத மாதிதேர்ந் திருக்குமாதி நீதியான்
சுருக்கிலாத தோவியங் கடற்றுளைந்த தூய்மையான். (11)

ததும்புதண் ணளிக்கடற் றயங்குவெண் மதிக்குடை
வெதும்பநீழ லிட்டுமண்ணில் விண்ணில்வா ழுயிர்க்கெலாம்
பொதும்பர்சே ருமைந்தருப் புறஞ்சுடக் கவித்தல்போ
லதிர்ந்திடாத மலரிலொன் றலாதவா வகற்றினான். (12)

சொற்பழுத்த காதினாடு சொக்கரஞ் செழுத்தினான்
விற்பழுத்த செங்கையன்பு மீச்சிறந்த கூப்பினான்
மற்பழுத்த தோளுமுந்த ஞாலமே வணக்கினா
னற்பழுத்தி டாதருட் கதிர்க்குலா வகத்தினான். (13)

கடங்கவிழ்ந்த யானைவான கங்கலந்த கூடமுந்
தொடங்குநாணு நீப்பினுந் தொடைத்தமுத வாக்கரத்
தடங்கொள்பாதர் செய்வினைச் சமைந்தபொற் றணுதமைச்
சடங்கெனக் குணஞ்சிறந் தடங்குகின்ற வானையான். (14)

இன்னதன்மை மன்னர்மன்ன னின்பவாரி யிற்படும்
பொன்னனார் பொருப்பினிற் பொருந்துதோகை யீட்டமொத்
தின்னறீர வைகல்வைக லின்பமே புதுக்குவார்
கன்னலாளி யாகமங்க ளகற்றுவெற்றி முற்றுவார். (15)

கொத்திணர்க டொசிந்தசைந்த கொம்பரிற் குமிழ்த்தகோங்
கைத்துணைப் பணைப்பினிற் குழைந்தகாமர் மேனியார்
மைத்துணைக்க ணீலவாளி வாங்குவீங்கு வானுதற்
கத்துணைப் புருவவிற் குனித்தனுக்கு மன்பினார். (16)

சொருக்குவிட்ட வார்குழற் றொடைச்சுரும் பெறிந்தெறிந்
திருக்குநூண் மருங்கசைந்தி டர்ப்படுப்ப நொந்துநொந்
துருக்கரக் கெனக்குழைத் திழைந்தவல்லி யொப்பவே
தருக்கிழந்து கலகலென் றரிக்கநெஞ்ச மஞ்சுவார். (17)

பஞ்சினுங் குழைந்தனிச்ச மொத்த பங்கயப்பட
செஞ்சிலும் பெறிந்தலத் தகக்குழம்பு தீட்டவே
யஞ்சியஞ்சி மெல்லமெல்ல வென்றகன் றகன்றலை
விஞ்சுமாட ழூடுலாய் விளங்கமெய் விளங்குவார். (18)

நலஞ்சிறந்த கொம்பனார்ந் திடற்றடம் படிந்தெழா
அலஞ்செறிந்த தொழிலினு னுலப்பிநாட் கழித்தபின்
வலஞ்சிறந்த மைந்தரின்றி மாழ்கிவஞ்சி மன்னவன்
குலஞ்சிறந்த மின்மணங் குலாவவேட் டுறைந்தனன். (19)

எண்ணிலா மடந்தைமார்க ளின்பமுற்று மூழ்கலான்
விண்ணுலாவு ரோணியன்பு வைகலும் விரும்புறுந்
தண்ணிலா மதிக்குநேர் வஞ்சிதந்த கையரன்
கண்ணிலாய பாவையிற் கலந்தவின்ப மேவினன். (20)

காகதுண்ட தூமமீக் கமழ்ந்தமாட நெற்றிமேற்
போகமுண்ட நெஞ்சினிற் புணர்ப்புறப் பொருந்தினர்
மேகமுண்ட பொன்வரைப் புறத்துளிட்டு நீங்குரு
மாகமுண்ட காமவல்லி கற்பகத்தை மானவே. (21)

மலர்ந்தபூ வணைப்புறத்து மங்கைநா ணொடுக்கமே
கலந்தபோத கண்கணீர் கலிப்பவீங்கு கைகளா
லுலங்குறுந் துணைப்புயத் தொளிக்கவே ஞெமுக்கினன்
புலர்ந்தகொம்பர் தென்றலிற் றளிர்த்தபோற் பொலிந்தனன். (22)

நிறைந்த நாண னப்புகைத்த காடிபறிந்து நீங்கவே
யுறைந்தமன்ன னின்பமான வோடையானை தாக்கிய
மறைந்தமங்கை யச்சமிச்சை மன்னனுர்வ வேலைபுக்
கறைந்தவண் டெழுந்ததாசை யாசைசெல்வ தொத்ததே. (23)

அங்கைமங்கை யங்கமே யணைக்கவாலை சிந்தியே
வெங்கையானை யுண்ட தொப்ப விண்டவா யருந்தியே
கொங்கைநாஞ்சில் வாய்மடுத்த கோலமார்பு மூரப்பனீர்
பொங்குவார் வயற்சிறந்த போகமே விளைத்தனன். (24)

கூடலிற் களிப்புமக்க ளிப்பிடைக் குறிப்புரு
வூடலிற் சிறப்புமிக்கு வப்பெனுங் கடற்பட
வாடலிற் சிறந்தமன்னை யன்னமன்ன மென்னடைத்
தோடலர்க் குழற்பெணின்ப வாரியுட் சுழிக்கவே. (25)

அரத்தகங் குழைத்திழைத் தடிக்கணிந் தணிந்தநூ
புரத்தகந் திருத்திநீள் பொலன்கலம் புனைந்துவே
லுரத்தகட் டுணைக்குமை யுறுத்தியோதி கோதியே
கரத்தகஞ் சிவப்பநின்று காளைவின்ன ணஞ்சொல்வான். (26)

முனைப்படைத்த ளுய்ப்படைத்த முண்டகத்தன் மண்டலத்
தெனைப்படைத்த நாளுனக்கி யைந்ததொண்டு பூண்டுநின்
வினைப்படைப் பழுத்தலை விதித்ததென்னை யாளவென்
றுனைப்படைத்த தென்றுவந் துவந்தினைய கூறினன். (27)

இன்னண மலர்ந்தமார்ப னின்பமெய்த வன்புடைப்
பொன்னணங்க ளுட்கிவை பொருந்துவைகல் வைகலு
மன்னணங் குறச்சிறக்கு மைந்தரின்றி யாலவாய்
மின்னணங் கலங்கழற் பிரானிடத்து மேயினன். (28)

(வேறு.)

கடம்ப டிந்த களிற்றிற் பொற்றுமரைத்
தடம்ப டிந்து வெண்ணீறு தரித்துத்தா
ணடம்ப டிந்தரு ளையக னுலயத்
திடம்ப டிந்து வலம்படர்ந் தேத்தினன். (29)

உரமி தந்தவே ரின்குழைந் துண்மடிக்
கரம மைத்திரு கட்டுணை துண்டஞ்சேர்த்
திரவி பொன்றிரு முன்றலர் நீக்கிமீப்
பரவு நாதப் பரத்துடன் றேன்றினன். (30)

ஞான நாட்டத்து நாதனைக் கண்டவன்
மேனி யுட்கம லத்துற மெய்தளிர்ந்
தானை தண்ணீ ரவிழ்த்துரோ மம்பொடித்
தேனை வேதத்தி னின்னணம் போற்றினன். (31)

காம னைக்கட வுட்கு வேலைபட்
டேம மற்று பவமெய்தி யாவருந்
தோம றுத்திலர் வேதந் தொடருமுன்
னம மேத்திலர் ஞானமுள் ளார்களே. (32)

என்று போற்றி யிருத்தலு மெம்பிரான்
றுன்று வாய்மையோர் வாணி தொடர்ந்தது
நன்று மன்னவோர் மைந்தனை நல்கிநீ
வென்றி சோரம் பதத்தினின் விருத்தியே. (33)

இல்ல றத்திருந் தீன்றருண் மைந்தனு
னல்லத் தோளிற் பாரினை நல்கியே
தொல்ல றத்தோர் முறையிற் றெழுவமைப்
புல்ல றத்திற் பரத்திற் புகுதுவாய். (34)

இன்ன வாணி யிசைக்க வெழுந்துபோய்த்
துன்னு நாயகன் சொக்கனைப் போற்றியே
மன்னு சேடந் தரக்கொண்டு வான்றெடும்
பொன்னு லாந்திரு மாளிகை போயினன். (35)

(வேறு.)

மத்தக விழிச்சிவன் வரத்தினை மதித்தே
வித்தக மதிச்செழிய னெய்தி யருண்மேவி
முத்தக முலைத்திரு மயக்கின முயங்க
வத்தக விளைவையி னடைந்தது கருப்பம். (36)

எப்புவன மும்பரிவி னீன்றவரி யொப்பான்
செப்புமிவ டன்வயி னடங்கியுறை செவ்வி
யொப்பிலா ணிச்சிறு புலிங்கமு முரற்று
மைப்புயலி னுட்கெழுதி வானுருமு மொக்கும். (37)

கொண்டலி னடித்த மயலில்குழல் வீழ்ந்தாள்
விண்டகம லத்துவயி னிற்சுழிமி தந்தா
டண்டரளந் தோழி தழைத்ததென வீழ்ந்தாள்
கொண்ட வினையிற்சிறு விழித்துணை குழிந்தாள். (38)

விரித்தபரு மக்கயில விடுத்திட தடித்தா
ளுரைத்தமொழி நூபுர மொலித்தென வுரைத்தா
ணிரைத்தபுளி மண்புகை நுகர்ந்துணவு நீத்தாள்
பரித்தமது ரத்தமிழின் மென்னடை பயின்றாள். (39)

தருப்பண நிழற்பெரு விருப்பொடு சரித்தாள்
மருப்பொலி மலர்க்கலவை யைம்பெற வரித்தா
ளருப்பமதி பெற்றுள மடிக்கடி யயர்த்தா
ளுருப்பவிற் வெயிற்குரு மிடிக்கரவை யொத்தாள். (40)

ஊருவி னிருங்கர முரைத்தெழுவ ளோர்பாற்
சாருமொரு வல்லிநெறி சார்வன்கல நீக்கி
வாருலவு கொங்கைமணி வைத்தருட மொப்பா
ளேருலவு பஞ்சிகை பிடித்தெழுதல் நோவாள். (41)

உள்ளுறையு மைந்தனி லுரோமவலி மிக்கா
டள்ளுரு வயாவெரடு வருத்தநனி சார்வாள்
விள்ளுமதி பத்தினிலவ் வேலைநிறை வெய்யோன்
றுள்ளொளி யுடன்வருதல் பொற்புவி தொடர்ந்தாள். (42)

ஆரவமு லிகம்பெற வருக்கனய மேனுள்
சீருலவு வில்லெழ மதித்த கடல்சேரு
மேரணி கவுத்துவம தென்னவினை யில்லா
வாரமு தெனப்புவி யிடத்தவ தரித்தான். (43)

(வேறு.)

பொழிந்தகா ரிருசுடர் பொலிந்த வானிரை
பிழிந்தபால் கடல்வளம் பிறங்க மேவின
விழிந்ததீ தறந்தலை யெடுத்த தாழியார்ப்
பொழிந்தமாப் புள்ளுமெய் யுணர்வு பூத்தவே. (44)

மறைமொழி யோங்கின மகத்தின் றூமம்போய்
முறைமுறை வலங்கொடு முதிர்ந்த தாகமத்
துறைவழி சமயங்க டுதைந்த வாறெலாங்
கறைமொழிந் தனசிறைக் காவ ளீங்கிற்றே. (45)

ஆலவாய்ச் சொக்கன தருணி னைந்துவேந்
தேலவாய்க் குதலைபெற் றிருகை மீச்சுமந்
தேரலவார் கலியெனக் கிளேயோ டுண்மைசேர்
கோலமீன் விழியொடுங் கூறிப் போற்றினான். (46)

ஆரண னாரண னறிவு ருநிறை
பூரண நிறைஞ்சன புறத்த கத்தினுங்
காரண காரியக் கட்டு நீக்கிய
வாரண வுரிப்பர மதுரை நாதனே. (47)

அண்டகோ டிகளெலா மளித்து காத்துநீத்
தொண்டார் மறைத்த னுக்கிரத் தெய்துநீ
தொண்டனை னிடத்தருள் சுரப்ப விப்பதி
கொண்டதெம் மனோர்தவக் குறிப்ப தாகுமே. (48)

ஐயநீ யாயுநீ யருளுநீ நின்ற
வையநீ புனலுநீ வன்னி காலுநீ
துய்யவா னிருசுடர்த் தோற்ற நீயா
னுய்யதீ யிவண்விடா துறைதன் மேயினாய். (49)

உன்னைமுத் தேவரோ டுரைப்ப ராரணந்
தன்னைமுற் றுணர்கிலா ரென்சொல் சாற்றுகே
னென்னைமிக் காம்பதந் தலைக்க ணெய்தவுஞ்
சொன்னயத் துணர்கிலார் சுமட ராகுமே. (50)

அளித்தனை யொருமக வைய வன்புடன்
களித்தன னுனதருட் கடலின் வைகலுங்
குளித்தன னடியருக் கடியன் கோதிலன்
றெளித்தன னுள்ளமெத் தெருண்டு போற்றினான். (51)

நீண்டகை முடக்குறு நிதிய மான்றலந்
தூண்டுமாக் கரிபுவி துகிரவித் தாதியும்
வேண்டியவ் வரவுமீந் தாசன மேகமொத்
தாண்டுடிப் பார்மிசை யார்வ நீக்கினான். (52)

பிறந்தநாட் கருமமும் பிறக்கிப் பத்துநா
ளிறந்தபின் மலையமர் துவச னென்றுபே
ரறைந்துமுன் றிற்செவி யாற்றி நன்மதி
நிறைந்துப நீக்கிரா யணமு நேர்வித்தான். (53)

பொன்னவிர் தொட்டிலிற் புவன முண்டமான்
மன்னியா விடஞ்செறி கலினில் வைகல்வைத்
தன்னமூ விருமதி யதனிற் சேர்த்திப்பின்
றுன்னிய கருமங்க ளனைத்துஞ் சூழ்ந்தனர். (54)

(வேறு.)

பிறைவ ளர்ந்தென வளர்ந்துசொற் பேதையும் பாவ
முறைவ ளந்தரு தருக்கனுான் முதற்பல நூல்கண்
மறைவ ளந்தரு மிருதியும் பயின்றுவார் சிலையின்
றுறைவ ளந்தரு படைக்கலத் தொழிலுமுற் றுணர்ந்தான். (55)

கலையிற் சேடன்போர் வென்றியிற் காத்தவீ ரியன்வெஞ்
சிலையிற் காகுத்தன் றிருவி லிந்திரன் பொருதெவ்வர்
தொலையிற் கூற்றுவன் வேள்வியில் யாதிகூ றரிய
நிலையிற் றனெனப் பொன்னவாம் பருவதம் நிறைந்தான். (56)

அணங்கனுர் நெஞ்ச மணங்குற விரதியொ டணங்கள்
வணங்கியவ் வனமணங் கெழீஇ மலைமா துவசன்
குணங்க ளெண்ணு ருவுறக் குலசேகர னெருநா
ளிணங்கு நன்மண மைந்தனுக் கியற்றுவா னிசைந்தான். (57)

கருணை சேர்குல சேகர னுலவாய்க் கடவு
ளருணி றைந்திட நகரமைத் தணிகலம் பெற்றுத்
தருண மைந்தனே டுறைந்தமை சாற்றின மிப்பாற்
பொருணி றைந்தவை யுறைத்தர சளித்தவை புகல்வாம் (58)

குலசேகரச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 245.

தூதுச் சருக்கம்

மன்னர் செங்கதிர் மாலை புக்க
கொன்னுற் றுவயிற் குலவுங் குருநீர்
கன்னற் கணிகூ ரவுளங் கவரா
நன்னற் பெருமா ளிகைநண் ணினனே. (1)

ஓவப் பிடியங்கை யோவா ளுடைசேர்
காவற் கணிமா தர்கலந் திருபா
லேவற் பெறுமங் கலமேந் தந்திப்
பூவிற் பலநெய்ச் சுடர்பொற் புறவே. (2)

மரபைத் தருவெண் மதிவந் தெழினு
மரவப் பெருநீ ரமுவத் தொளிபொன்
விரவிப் பலவேத் திகர்மொத் தொலியு
முரல்வுற் றபலோ தையுமெய்த் திடவே. (3)

யாளித் திரளுன் றுமெழிற் படிமேற்
கோளித் தருவிற் பலவொத் தருள்தேர்
வாளிக் கண்மிறு ரொடுவன் னிப்படர்
வேளிற் றிருமே டையின்மே வினனே. (4)

உள்ளிப் புனல்வாய்ந் தமுதுண் டுமணிப்
பள்ளிப் பரியங் கமிசைப் பரிவாய்
வள்ளிக் கொடியோ டுறைமைந் தனனே
வெள்ளற் கருமா துபனெய் தினனே. (5)

மலையத் துவசன் றனைமா நிலனற்
றுலையிற் பொறைதாங் குறுதொன் மையுள
நிலைபெற் றிடவுள் ளினநே ரிழைபா
லலைவற் றுயர்நெஞ் சனறைந் தனனே. (6)

ஆறு யிரமாண் டுறவாற் றியபார்
மாறு துயர்மைந் தனில்வைக் கமணப்
பேறு மனைவாழ்க் கைபிறக் குதுமென்
றூறு வருளா லிறையோ தினனே. (7)

பாலா ழியிடைத் துயின்மா லப்பால்
நூலா ழிதனைத் துயர்நோன் றருபார்
மேலா ழிகொடாற் றியவேந் தனுமான்
மாலா ழியிடைத் துயில்மன் னினனே. (8)

தண்ணார் மதியஞ் செறிதா ரகையும்
பண்ணா ரிருளும் பிறவும் பரிய
விண்ணா ருதையக் கதிர்மேல் வருடக்
கண்ணா ரிறையுங் கண்மலர்ந் தனனே. (9)

கொலைபெற் றகளிற் றிருகொம் புபறித்
துலைபெற் றழல்சிற் றுளியுட் பொரவே
விலைபெற் றுயர்மஞ் சமிசைத் துயினீத்
திலைபெற் றவைவே லரசெய் தினனே. (10)

மிசைவே திரையா டகமெய்ப் புனருழ்ந்
திசைவேய்ந் ததெனத் திருநீ றணியா
வசைவே துமிலா னடிதாழ்ந் தருளி
னசைவே யவைமண் டபம்நண் ணினனே. (11)

வெருவுங் கொடுநோக் கினர்மெய்ப் பைவிடா
வுருவம் பெறுவேத் திரரொற் றியவேய்
மருவும் பலகஞ் சுகர்மா டியமே
பொருவெம் படையோர் கள்புறத் துறவே. (12)

விரிகின் றமயிர்ப் படமீப் பலபூச்
சொரிகின் றநெறிக் கொடுசூழ் மணியா
லெரிகின் றதழற் கெதிர்வெய் யவனில்
வரிகின் றகழற் பொரவந் தனனே. (13)

பரியா வயிரப் பலகைப் புறமேல்
வரியா ளிகளூன் றிமழைக் கடவெங்
கரியா கமகழ்ந் தகரத் துகிர்வா
ளரியா சனமே றியமர்ந் தனனே. (14)

பணிவெற் பன்விற் பலமன் னவரை
முனிவற் றகரங் கைமுகந் தனிலே
நனிமற் றவருக் கிடநல் கியபி
னினிமைச் சொலமைச் சருமெய் தினரே. (15)

வினைவல் லவர்வே தியர்தூ தர்விடு
முனைவல் லவர்மூ வறுசுற் றமுறப்
பனைவில் லவன்மங் கையொடும் பரிவாற்
றுனைவெங் கரிவேந் தவைசூழ்ந் தனனே. (16)

(வேறு.)

குருமணி பைம்மணி சுடர்கொ ழித்துமீத்
தரும்மணி முடியொளி தழைத்தல் சுந்தரன்
கருமணி நிகர்க்குமங் கயற்கணி மாதொடு
முருகணி யிவன்சிரத் துறைதல் போன்றதே. (17)

ஒருகுல மரபினை யுவந்த தென்னென
விருகுலச் சுடர்களு மெய்து மாறுபொன்
குருமுல வியதொடை மொய்ம்பிற் ருழ்ந்தெழீஇப்
பொருகுலக் குண்டல மொளிபொ ருந்தவே. (18)

வழிந்திடு கருணையே மலிவி ழித்துணை
பொழிந்திடத் திசைதொறும் புக்கு மீள்வன
வழிந்திடாப் புரந்தர ஞதி யெண்மர்க
லொழிந்திடாக் கோல்வலி யுணர்வ போன்றதே. (19)

துன்றிய பொருட்டரு சொக்கன் ருளிணைந்
தொன்றிய யோகக்க ணுற்ற நாசிகைக்
கன்றிய பகைவட கனலே விரித்தெழு
வென்றியங் கடற்கரை வீங்கல் போன்றதே. (20)

இளநகை வதனமு மெழிலு வாம்பணிக்
களமுமேற் றவர்க்குள கவினே நோக்கியே
தளமலர்ப் பதுமமா நிதியுந் தன்னி
வளநிதி யமும்வல மருவு போன்றவே. (21)

ஓங்கிய விருபுயத் துறநி மிர்ந்தொளி
வாங்கிய மூவரை மண்விண் ணுகமு
மீங்கிவன் பால்வரை யாகி யாதிஞற்
றீங்கவென் றிடவலந் தழீஇய போன்றதே. (22)

வடிவுகண் டிரவிசூழ் வலம் தேய்ப்பவே
நெடியபூண் பணிச்சுடர் நிழற்ற நித்திலப்
படிவட மணங்கிஞர் பாரவை யென்னுமக்
கடியமான் பிடித்தபொற் கண்ணி யொத்ததே. (23)

விளங்கிய சவுரிய வேலே விண்ணுரை
கிளர்ந்தெனக் கெழீயவெண் பட்டின் கேளுற
வளர்ந்தரு வீரமான் மூரல் மாட்சிபோற்
றுளங்குரு விரலுகி ரொளிதொ டங்கவே. (24)

முருகயர் தொடலேய மொய்ம்பிற் செம்மணி
பெருகொளிச் சுடரிவ ணீகைப் பெட்பினுக்
கொருகைபோ தாதென யொளிப ரப்பியே
தருகையா யிரத்தவாய்த் தளித்தல் போன்றவே. (25)

கரித்தழும் பிரிந்தகா லுகிரு டைச்சுடர்
விரித்தடி பணிந்தெழு வேந்தர் மாமுடி
தரித்திட வீரபட் டத்தைச் சாத்துவான்
பரித்தெதி ரீகையே பலித்தல் போன்றதே. (26)

(வேறு)

கொடைக்கதிர் வலாத்தருள் மண்ண மெங்
குணத்தினுக் களவி லாமை
நடைபுக ழினுக்குத் திக்கு
விஞ்சைக் கேதலைக் கண்ணனுர்
படைக்கரி யனுராகத் துக்கிதை ..—..
மதிவல்லோர்க்கு மின்சேர்
றெடைக்கவிக் கதிக வரக்கு
மதிக்குளம் பரவு சூட்சி. (27)

தருமத்திற் காப்பு நட்டோர்க்
குயிர்தரித் திரற்குச் செம்பொன்
சுருதிக்கு நுட்பஞ் சேர்ந்த
சுற்றத்தோர்க் கினிய செல்வங்
கருணைக்கு வாரி தானந்
தனக்குயர் கற்ப கம்போற்
பொருவற்ற செழியர் கோமா
னிருந்தன னரசர் போற்ற. (28)

பன்மணித் தூணித் தன்பெய்
நிழலெனத் தருமப் பாங்கில்
நன்மதி மெய்சூழ்ந் தென்ன
நாகர்வேந் தைச்சூழ்ந் தென்னப்
பொன்மலை சூழ்ந்த வெண்ணில்
பொருப்பென வரசர் சுற்றத்
தொன்மைசேர் மதிகு லத்துத்
தோன்றல்வீற் றிருந்தா னன்றே. (29)

மாதரைப் படைத்தோ னன்னுர்
வனப்பெலா மொருங்கு சேர்த்துக்
காதலின் முன்னு டீர்த்துக்
கழித்திடத் தரும ணங்கு
தீதிலா வனப்பின் செய்கை
முடியுளத் துவகை செம்பொற்
பாதுறை மருவி சைக்கு
மிசைபொறைப் பொறையொப் பானுள். (30)

ஓரையி னேரை காந்திக்
கொளியனு ராகத் தூய்மை
வாரமார் கல்வித் தெய்வஞ்
செய்மத னுணைச் சித்தி
யார்வமார் செல்வச் செல்வ
முலகிய லறியு மான்மாச்
சேர்வுறு பருவத் தோற்ற
மெனவுருச் சிறப்பு மிக்காள். (31)

வனப்பினில் வனப்புத் தொல்லை
மரபிற்கு மாவு மாதர்க்
கினத்துயி ராவி தோழிக்
கின்பநீர் வஞ்சி கேள்வர்க்
கனைத்துநூல் வழியி னன்மை
தானென மமைந்து சந்தி
யெனப்பலர் வணங்குஞ் சேரர்
குலக்கொடி யயலி ருந்தாள். (32)

புலவர்நாப் புகழச் செம்மை
பொருந்திய தென்னன் மன்னர்
குலமுடி மணியில் செய்ய
கொழுந்தொளி படர்ந்த தென்ன
விலகிய வலத்த கச்சே
றிழைத்தநூ புரங்க ளாதி
பலவணி மணியிற் செங்கேழ்
பரந்துகண் கவர்ந்த தாளாள். (33)

மனஞ்சிறைப் படாத சாலை
யகழ்மத னிதிசூ ழிஞ்சி
யினஞ்செறி மயிரொ முக்கின்
வல்லிசேர் பாத்தி யின்பம்
புனைந்திடு மல்கு றுட்டுத்
தோரணம் போலச் செம்பொன்
வனைந்தநன் மணிசெய் கோவைப்
பட்டிகை பதிந்த பட்டாள். (34)

மலைமுலை யல்குல் வேலை
யிருபுறம் வளைக்க வஃகு
நிலையென வதனம் பாரார்
நிமிர்முலை தடுக்க வெய்த்த
புலனெனப் பாரந் தாங்க
நிறைவலி பொருந்தக் கையா
லலரயன் பிடித்த தென்ன
வணங்குறு நிலைம ருங்காள். (35

பருவமீ முலைவெற் பேறும்
படியென வலியோர் முன்றுங்
கருவரா வளைவீழ்ந் தென்னக்
கரமொழுக் குளாமப் பாங்கின்
மருவிய சுழியு முத்து
வடமும்வா னதிகா ளுந்திப்
பொருபுனல் வரம்பு மூன்று
பொருதலை படுவ போல்வாள். (36)

உளத்தடக் கமல நாட்போ
துறைமுகை யெனவு ரோம
வளக்கொடி கனியை மான
வாடல்வேள் மானமீ தேறி
கிளைத்தென வனப்பு விஞ்சக்
குவித்தெனக் கிளர்ந்த வாகந்
தளைத்திட மலரிற் சேர்ந்த
தெனத்தசைந் தெழுந்த னத்தாள். (37)

அசைதரு கொங்கை வீழா
தறைகறை யாணி யேய்ப்ப
மிசையெனு ராகச் செப்பு
முத்திரை வேய்ந்த தொப்பத்
தசைமுலை மலையிற் சூர்தார்
நிகரெனச் சக்க ரத்தின்
விசைதரு மாயன் செங்கை
விரலென முலைசேர் கண்ணாள். (38)

ஆசையங் கனிசேர்ந் தென்ன
வவர்கட றவள மென்ன
மாசிலா வதரம் வாயத்தாள்
யாழிசை மழலைக் காட்ட
பேசிய மொழியான் மாரன்
கொடுஞ்சிலை பிளந்த முத்தந்
தேசுறச் செறித்த தென்ன
வாலொளி நிகழெ யிற்றாள். (39)

சுந்தரத் தென்னன் சூட்டுந்
தொடையெனச் சிறந்த தோளா
டந்தைவி னைத்தண் டத்தைத்
தண்டஞ்செய் கரத்தா டாருக்
கொந்தவிழ்ந் தனமுன் கையாள்
கொழுனவே ழங்க ளிப்ப
நந்துருத் தோட்டி யென்ன
யெழுதிய விரன கத்தாள். (40)

அனங்கவே ளரைம னைக்கா
　　லதரென மதர்த்துச் சீறி
மனந்தனிற் செல்லக் காது
　　மறித்ததாற் கடைசி வந்து
புனைந்தமுத் தொழிலின் மூன்று
　　குணங்கொடு புறத்து லாவி
நினைந்தநெஞ் சிருகூ றுக்கி
　　நேமிவெற் புலாவுங் கண்ணுள். (41)

நகைக்கம லத்தின் வண்டின்
　　றிலத்ததா ளுளு நாளு
மிகற்புரி பருவக் கூத்தி
　　நடத்திவர் புருவத் தாளெண்
முகிற்குழாம் விழிவே லைக்குண்
　　முகந்தன குழலாள் கூந்தற்
புகைக்கொடி வடுவா ளல்லிற்
　　பொருந்துடுத் தகைய பூணுள். (42)

(வேறு)

மதன்புடை யவன்றுணை மருவு மாறென
விரஞ்செறி புட்பத மிதுனஞ் சேர்ந்தென
விதந்தரு கற்பக விலதை நேர்ந்தன
நதஞ்செறி நதியெனப் புரத்து நண்ணினுள். (43)

விரையொடு மலரென மழையின் மின்னென
வுரைபொரு ளெனவிரு சுடர்க ளொப்பென
வரைதரு கோளென மகளு மாதவ
நிரைதரு தென்னனுந் தவிசி னேர்ந்தனர். (44)

இருபெரு வடிவினுக் கெல்லை யாமெனத்
திருமக ளொடுகுல சேக ரப்பிரான்
சுருதியு மிருதியுந் தொகுத்தி சைத்திடும்
பொருவின்மா தவருட னுறைந்த போதினில். (45)

(வேறு)

சொருக்குடை யளகந் தாழத்
　　துணைமுலை யசையவெண் பட்டுப்
பொருப்புவெண் புயல்போற் சேர்வ
　　ணங்கிடை புடையிற் சாய
விருப்புடை மங்க லங்கண்
　　மின்னனு ரேந்த வீதின்
மருக்குல மதிநி லாவிற்
　　குடையொடு கவரி மல்க. (46)

கடற்புனல் பருதித் தாரை
காறுைகொண் மூவின் மூன்று
தடர்க்கடாங் கவிழ்த்த வோடைச்
சயிலங்க ளொருபாற் சேரத்
தொடைப்புய மன்னர் வீசுங்
கந்துகம் புரையத் தொன்னூ
ணடைப்பரி நிரைகள் சுற்ற
விரதமால் வரையி னண்ண; (47)

இருந்திசை விரித்த கோல
மாகத ரீண்ட நின்று
பொருந்திசை புகன்ற சூதர்
மெய்ப்பையுட் புகுந்து மொய்ப்ப
வருந்தொறு நடந்த வேதா
ளிகரியல் வழுத்த மன்னர்
தருந்திறை யுரைத்துக் காட்டும்
வேத்திரக் கரத்தா ராசர். (48)

தண்ணுமை வீணை யாமந்
தரிகுழற் றதும்பப் பாணி
விண்ணமை மாதர் வெஃக
வகநடம் விரித்துப் பின்னர்
பண்ணமைப் பொதுவை நீக்கி
வேத்தியல் பதினே ராடன்
மண்ணமைக் குழலார் பாங்கிற்
கடலகம் வணங்கிக் காட்ட. (49)

விரித்திடுங் கவுட வோசை
விளங்குவை தருப்ப மற்றப்
பொருட்சுவை யணிமூ வாறு
பாடையிற் புலமை யோர்க
டிருத்துநாற் கவிதை செந்தே
னிருசெவி நிறையத் தேக்கி
யருத்தியுஞ் சாத கப்புட்
களிமழை நிதிநி றைக்க. (50)

பகையிலாத் தண்டஞ் செங்கோல்
பரித்தயாழ் நான்கு மேந்தி
நகைநிலாச் சிறிது கோட்டிக்
குரன்முதல் விரன டாத்தி
வகைபுரி கூட நீக்கிப்
பண்ணலே வார்த லாதித்
தொகையிரு வகையீ ரொட்டார்
கானவ ரமுதந் தூவ ; (51)

ஆயுள்வே தியர்கள் காலக்
    கணிதர்நா ளமைப்போர் தூதர்
நேயமா ரமைச்சர் நட்டோர்
    பழையர்பண் டிதர்க ளீண்ட
காயகர் முதலீ ரொன்பா
    ன்யமுங் கவினிற் சுற்றப்
பாய்திரைக் கடலின் மின்சூழ்
    பான்மதி வடிவ மென்ன. (52)

நிலச்சுமை பரித்த பொற்றோ
    ணிலாவடம் புரள நீங்காக்
கலச்சுமை பொறுக்க லாற்றுக்
    கன்னியா ருடைவா ளேந்த
மலைச்சுடர் முடியுங் கண்ணு
    மகரகுண் டலமும் மார்பு
நலத்துடைச் சுரர்வேந் தென்னத்
    தென்னவன் மனையி னண்ணி ; (53)

(வேறு)

மந்திரக் கிழவரை மற்று ளோர்தமைச்
சுந்தரத் தென்னவ னோக்கித் தூக்கிய
கொந்தொளிப் பகன்மணிக் குழைவில் வீசவே
யிந்துகுத் திடுந்தை யென்னக் கூறினன். (54)

உருவெழு தரிதென வொளிரு நம்பிக்குப்
பொருவெழி லரிதிருப் புணர்ந்த செல்விபொன்
மருவொழுக் கில்லறம் படுத்து மாண்பினைத்
தருவெழு தடக்கையீர் சாற்று மென்றனன். (55)

தூதர்வாய் விறைச்செவித் துளைக ளொற்றர்தாட்
தீதறுமக் கண்ட மருதிண் டோள்வாய்
நீதிவேந் தனும்பொறி யியற்றி னேத்திர
மாதலே நீதிவிர கண்ணலது மெய்யுண்டே. (56)

கற்றநூல் பேரவை வெஃகக் கற்றநூன்
முற்றுமே கேட்பரா முறுவ னீங்குறப்
பெற்றவர் பெற்றதம் பேறதென் னச்சொற்
றெற்றுறு தோதுத லமைச்சர் செய்கையே. (57)

பலதலை யிறையோர் மெய்ப்படுத் தனந்தனிற்
புலவர்சொற் பொறுத்தவன் புவித ழைக்குமே
யலகிலா வமைச்சர்வேந் தறைசொல் பொன்னிடைக்
குலமணி யெனவிரு கவின்கொ டுக்குமே. (58)

மருவிரும் பியதொடை மன்றை யாதிபன்
றிருவிருந் தவனிக ரமைச்சர் சேர்ந்திடிற்
பொருவிரும் பகையொரீ இப் புவிக்கு மற்றொரு
தருவிரும் பரியென மன்னர் சார்வரே. (59)

மந்திரக் கிழவர்சொல் லிழுது வாரத்தீ
யுந்திரமீ தெழுந்தென வுருத்து மன்னனு
மிந்திர சாலமொப் பென்ன வீந்தவன்
சுந்தர நாடுகா டாகித் தோன்றுமே. (60)

இத்திற மமைச்சருக் கிசைக்க வவ்வழி
பத்திர னெழுந்தடி பரவி யையயான்
யத்தசொற் றலைகண் டுவத்தி யன்னம்போ
லத்தநீ கொண்டுதீ தகற்றுவா யென்றான். (61)

பங்கயத் தகடுவிண் டெழில்ப டைத்தெனப்
புங்கவர்க் குலமறுப் பொதிந்தி டானுளன்
றங்குடித் திருமக டன்னை நட்பிபாற்
றுங்கநன் மணம்பெறத் தொடர்ச்சி பூண்டுளான். (62)

ஈச னெம்மணத் திமைய மெய்துவான்
மாச னம்பரம் பொறுவரை யுதைந்திடத்
தேசுடைக் குறுமுனி சேரத் தென்றிசைப்
பூசலம் புனல்விடு பொன்னி ழுட்டினன். (63)

தோன்றிய மனுகுலச் சூர சேனனு
மூன்றிய புகழினன் வறத்தி னேன்மையா
னீன்றபொற் கொடியிசை யாணர் யாழ்பயில்
மான்றிகழ் காஞ்சன மாலை யாகுமே. (64)

ஊங்கவ ணம்பித்தின் றுரிய ளாமெனத்
தீங்கொளி பத்திரன் செப்ப வேந்தனும்
பாங்குறை யமைச்சரோ டுறைந்து பண்பினு
லாங்கொரு தூதனை யழைத்துக் கூறுவான். (65)

வருகநீ சயந்தவிவ் வல்லை சென்றிவட்
டருகமித் திரனையென் றுரைப்பச் சார்ந்தவன்
பருகுதீஞ் சுவைமொழி யருளிப் பாடென
வுருகுநெஞ் சவன்வராப் பணிந்தோர்பா லுற்றான். (66)

(வேறு)

மந்திரத் தொழிலும் மாதின்
வண்மையு மவையின் காழ்ப்புஞ்
சுந்தர நம்பி சீருங்
காலமுந் தொடரு நட்புந்
தந்துற வல்லை யொல்லை
வளவன்பால் நண்ணிக் கூறி
முந்திய நம்பி தம்பான்
மணவினை முடித்தி யென்றான். (67)

மாற்றுணர் வரும்பொ னேட்டில்
வயிரத்தி னூசி நாட்டித்
தோற்றுறு வருண மேற்று
நூலெனச் சுடருஞ் செல்வி
போற்றிய முடங்க னீட்ட
வாங்கினன் பணிந்து பொங்கி
யேற்றமா தவத்த னென்று
துணங்கிய வறிவன் சென்றான். (68)

கரிநிரை துறுமப் பெற்றோர்
கலிகெழப் பரிவான் றுவ
வரிநிரைக் குஞ்சி மாலை
யாடவ ரிரைத்துப் பொங்க
விரிதிரைக் கொடிக ளோங்க
வனைவயிர் விளிக்கத் திண்டேர்ப்
பரிநிரை வெய்யோன் கீழ்பாற்
படர்ந்தென விரைவிற் போனான். (69)

வையையுங் கானு நீங்கி
யிடபமா லியானை சிங்கச்
சையம தொருவி மூன்று
தலைத்திரி பொன்னி பின்னிட்
டையனய் யாறு கும்ப
மரிச்சுன மணிமா யூர
மொய்யெனப் பரீஇவெண் காட்டின்
புறப்புகார் நகரத் துற்றான். (70)

வழுதிதன் தூதன் சென்று
வளவனைப் பரிவி னோடுந்
தொழுதென முகமன் கூறிச்
சுரும்பினம் விரும்பித் தொங்கற்
கொழுதிய மார்பன் கையா
லிருக்கையுங் கொடுத்தான் றூதன்
முழுதுணர் முடங்க னீட்டி
யின்னண மொழிந்தான் றூதன். (71)

(வேறு)

அருந்தவ நெடுந்தினம் யாத்தனைகோ லைய
பொருந்து செழியன்கடை புகுந்துனது மாதை
மருந்தினை விரும்பமரர் மன்னவனை யேய்ப்ப
பொருந்துவ னெனப்பரி துளத்துவகை பூத்தான். (72)

பூணற நிமிர்ந்தன புயத்துணை யுரோமம்
வாணிற முறத்தனி பொடித்தமது வாரச்
சேணிறை கதிர்க்கெதிர் மறைக்குநிகர் செவ்வி
காணுறு முகக்களி கவின்பெற விரைப்பான். (73)

அருந்துநல் விருந்தென வனைந்துவகை தந்தாய்
பொருங்கரி பரித்திரள் பொருந்தென வளித்தே
திருந்துவது வைக்குரிய செவ்விநன் முழுத்த
மிருந்தவ ரிசைத்ததை யிசைத்துவிடை யீந்தாள். (74)

கற்புநிறை யுந்தனது தேவிகளி யெய்த
வற்புநிறை மங்கைவது வைத்தொழி லுறைந்தே
தற்புதல்வ னிற்சதம் பங்குநகை மின்னார்
பொற்புவது வைக்குறு புலன்றெளிவ தென்றான். (75)

குலந்தன மெழிற்கலை குணத்தனை நினைப்பார்
மலர்ந்தவய லன்னைமயி றந்தைவரு கேனீ
ரலர்ந்தவி லணித்தையு மணைந்தவ ரவர்க்கே
நலந்தரவோர் நம்பிவது வைப்பொரு ணயந்தேன். (76)

களித்த வதுவைப்புனல் கருத்திலுற மாதை
யளித்தவள விற்கணு தகத்தினை யளிப்பார்
விளித்தநதி யிற்றரை பொரப்பொர மிருந்தேன்
துளித்ததரு வொக்குநம துள்ளமது தோதாய். (77)

முத்தமொரு காழ்முலை முகட்டிலள கத்தே
கொத்திகழ தோன்றுபர மென்றுதுவள் வல்லி
யொத்த விவளைக்கய லுடைச்செழிய னுக்கே
புத்தமு தெனத்தனி புணர்த்துமென நொந்தாள். (78)

(வேறு)

வழுதி யுரிமையை மருவு மடவரன்
மணம துணர்வுற முரசமே
பழுதி லுரையுட னறைமி னெனவுயர்
பகடு மிசைவரு பழையதா
முழுது மொருகுடை யரசர் பணிதர
முழுது மணிகவின் மருவவே
யெழுது மெனுமொலி படர வடர்கட
லிரைவ தெனநனி மருவினர். (79)

பருதி மதிநுழை சிகர மிசையசை
வலது கிலிகைகள் கவிவழாப்
பொருத சுரநதி புரளு நெளிபணி
பொருவ வயின்வயி னிரைசெய்வார்
கருது நெடுவரை யருவி யெனவுயர்
கதலி மதலிடை புனைகுவார்
பொருத சுடர்பெறு தரள மணிதொடை
புரள நிரைநிரை விடுவரே. (80)

மணியு மணிகளு மருவு தெருவினின்
மதுர விமசலம் விசிறுவார்
அணியு முளையகல் கதலி கழைகமு
கடர நிதியின னடுகுவார்
தணியு மகிலிடு புகையை வரைமுடி
தவழு முகிலென வணிகுவார்
பணியு மகளிர்கள் பணிவர் தழுவுவர்
பரிவு நறவொடு மருள்வரே. (81)

தருவி னிழலென நிழல்க டருகுவர்
சவர நிலவென விடுகுவார்
மருவு மலர்களும் வனைவர் மிருகம
தவன்று மெழுகுவார் வடநூற்
பொருவு பெருவிலை யுரிய கலைமுலை
புனைவர் தொடைகுழல் வனைவராற்
றெருவி னிரைநிரை கடலி லெழுபல
திருவை நிகரென வருவரே. (82)

பரும மதகரி கொணர்வ ரணிபல
 பரவு புரவிக டருகுவர்
உருமு மரணற மொழியு மிளையவ
 ருடைய் னுழையயில் வெயில்விடா
மரும மிசைபுலர் களப நிலவெழ
 மணிகள் வெயில்விட வடிவினுற்
றரும மெதிரெதிர் வருவ தெனவெதிர்
 தழுவி மொழிபல தருவரே. (83)

வடிவ முறநிதி மணிக ளிரசத
 மருவு முருவுறு நிரைசெய்வார்
படிக மதலிடை பருவு வெளிபடு
 புலவி கலவிகள் பரவவே
நெடிய சடைமுனி வரரு மயல்கொள்வர்
 நிரையி லவர்மன மெதுபடா
கொடிய புலியுயர் வளவ நகரணி
 குலவு மெழில்புக லரியதே. (84)

(வேறு)

இத்தகைய ரிங்குறைய மித்திரனு மெய்தி
மொய்த்தகைய தென்னனை முகிழ்த்தகைய னுகி
வைத்தகை யயிற்கை வளவன்செய லிசைத்தா
னெய்த்தகைய வேள்வியென நெஞ்சினிறை கொண்டான். (85)

சந்துவினை முற்றிவரு தன்மையை யுணர்ந்தே
வந்துவினை முற்றிய வமைச்சரு மகிழ்ந்தார்
இந்துவினை முற்றுமுறு விற்கரை யிகந்த
சிந்துவினை யொத்தத முளக்களி திளைத்தார். (86)

நம்பிமண மென்றுகுல சேகர னயப்பாற்
றும்பிமுற் றெருங்கலணி தூதரை விடுத்தச்
செம்பொன்வரை யெல்லையுள மன்னவர் திரண்டே
யம்பொன்மது ரைப்பதி நெறிப்படர்வ தானர். (87)

வலம்பரவு மன்னவன் மணத்துவகை யிற்றே
ஞலம்பரவும் வள்ளுவ ரொலித்தமுர சோதைச்
சிலம்பரவ மொத்தெதிர் திரண்டெழு மனீகம்
நிலம்பரவ மன்னவர் நெருங்கினர்கண் மாதோ. (88)

கற்பக மிணர்த்தொகை கலித்துநடை பெற்ற
பொற்பக மெனப்புரவி பன்னுரிய பொற்றேர்
சொற்பகர் கொடித்தலை துடக்க விழுகாரி
னற்பக னிழற்றெடர நண்ணுவள மாதோ. (89)

கறங்கருவி தாழ்வரைக் கறைப்பத முடைத்தாய்
மறங்கருத வெய்துசெய னமரநுத லோடைப்
புறங்கருவி துற்றமர் நசைப்போ ருரைபோக்க
நிறங்கருவி வல்லியொடு சென்றநிரை வேழம். (90)

குயத்தகிரி வட்டம்விடு கோல்விசை மயூரத்
தயற்பரவு வாவலகை யடிக்கவெழு பந்தின்
நயத்தநடை நாகவிசை மேகநிரை நாணு
மியத்தொலி பெறக்கடி தெழுந்தபரி வெள்ளம். (91)

வட்டுடைய ரோலவுரை வேங்கைவடி வான
மொட்டுடைய கொங்கைபொரு மொய்ம்பரண தும்பைக்
கட்டுடை வலத்தினர் புலர்த்துகள் பதத்தர்
மட்டுடைய தார்வயவர் வாளரியில் வந்தார். (92)

எருத்திடை சிமிழ்ப்ப விழிருட் குழல்தார்
முருத்துடை நகைக்களி முகத்துவெயர் சுற்றக்
கருத்திடை மணிக்களி யுறக்கலச கொங்கை
வருத்திடை வருத்தமுற மங்கையர் நடந்தார். (93)

பண்டியிர தம்பிடி பரந்தசிவி கைப்பால்
வண்டியில் கருங்குழன் மடந்தையர் நிறைந்தார்
முண்டக மலர்த்திரு முரிந்ததிரை யன்னங்
கொண்டலிடை மின்றுதிர போர்க்குழுமி மாதோ. (94)

சங்குவயிர் பேரிமுர சும்பல தழங்கத்
தொங்கறழை தண்கொடி தொடர்ந்துவி ணடைக்க
மங்கலமொ ரெட்டுநிறை யப்பலர் வழுத்தத்
துங்கமுடி மன்னவர்க ளன்பொடு தொடர்ந்தார். (95)

இத்தகைய மன்னவர் வொற்றர்க ளிசைக்க
வைத்தகைய வோகைமலை யத்துவச னென்னு
மொய்த்தகைய சேயினையும் வம்மென மொழிந்து
மெத்தகைய சொற்கருணை மன்னனெழ வொட்டான். (96)

மங்கையொடு தேரின்மரு விப்பொருவி லாத
செங்கைமுகில் பொன்மழை தரத்திரளி ரப்போ
ரங்கைவிரி யக்களியோ டார்த்தியணி கத்தைச்
செங்கணொடு நோக்கிவட வாயினெறி சென்றான். (97)

விந்தநகர் மன்னபதி மேவுசெயல் காண்பா
னந்திவழு திப்பெயர் நடந்தசெயல் சொற்று
முந்தியெழு சேனையை முரட்புலவ ரோரைப்
புந்தியொடு நோக்குசெய லும்புகலு கிற்பாம். (98)

தூதுச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 343.

திரிசிராமலைச் சருக்கம்

கோடறுத் திணக்குவெண் கொடிஞ்சிலார் மாலைபொற்
றோடறுத் திழைத்தசெம் மணிக்குழாந் துவன்றதா
ரூடறுத்து வானகத் துருஞ்சவூன்று கூவரத்
தேடறுத்த காலில்வுரசி யேற்றதேர் நடந்ததே. (1)

விண்ணமைந்த மேகவாய்ப் பகுத்ததிங்கள் வெண்மருப்
பெண்ணமைந்த திண்பரிப் பொலன்றகட் டிளங்கதிர்ப்
பண்ணமைந்த செம்மணிக் குலம்வெயிற் பரப்பவே
கண்ணமைந்த மும்மதக் குலாசலங்கள் சார்ந்தவே. (2)

நெறித்திடுஞ் செவிக்கிடைக்கு சக்கைநீங்கி நீங்கியே
மறித்தெழுந் துலாவுகாலின் வட்டமிட் டிருப்பினைக்
கறித்திருந் தழற்கணிற் கலிர்த்ததிர்த்து வானிடைக்
குறித்தெழுந்த வெண்டிரைக் குலத்துவாசி சென்றவே. (3)

சுற்றுதும்பை யம்பொலன் றொடைப்படுத் தகுஞ்சிவ
னற்றிடா தெழுத்தரற்ற வோங்கன்மொய்ம்பு வீங்கவே
பொற்றமேனி குங்குமக் குழம்பினிற் பொலிந்திடா
வெற்றிமேவி யாளியன்ன வீரர்சுற்று மேவினார். (4)

கீறுசந்த மெய்ப்பைநீர்க் கெ(ளீ)[ழீ]இயகஞ்ச நாளமொத்
தூறுவெண் பளிக்கறைப் பதைத்தபொன்னி னோலமிட்
டேறுபட் டிகைக்குல மியங்குவெண் கலைக்கொளீஇ
யாறுமைந்தர் தோள்பிடித் தசைந்துமாதர் சென்றனர். (5)

நடுக்குழைந் தொலித்திடுந் தடாரிவட்ட நல்லியந்
தொடுக்கும்வார் விசித்ததண் ணுமைச்சுமைத் தொடுக்கவே
யடுக்குமுட் கனிப்பலா நிகர்த்தணங்க னாரொடு
மெடுத்தவேய்ங் கழாய்கூட்ட மெங்கணும் பரந்தவே. (6)

பண்ணலஞ் சகோடயாழ் பரித்தகொட்டி பேரியாழ்
தண்ணலங்கொள் செங்கைகொங்கை தாங்குவாங்கு நூலிடை
மண்ணலம் பரத்துளங்க மைந்தராவி பின்செலப்
பெண்ணணங் கனார்கடாட் பெயர்த்துமெல்ல வெய்துவார். (7)

வீசுகொம்பு ணிற்புலம்பு தாரலம்ப வென்னிடத்
தாசில்சாத் துடன்செல்பாண்டி லாடுகந் துகம்பொர
வூசலாடு மொட்டுமேனி யொட்டகங்க ளத்திரி
வாசமாதி பல்வளம் பரித்துவாரி போன்றவே. (8)

பலங்கிழங்கு கன்னலிக்கு நெய்யமைத்த பண்டியு
மிலங்குதோரை யாதிவெள்ளி லைப்பொருந்து பண்டியுங்
கலங்களாடை காஞ்சிகாழ கந்திரைச்செல் பண்டியும்
வலங்கொள் பல்வளங்கொள் பண்டியோடு மாறிலாதவே. (9)

வீசுசுண்ண மாதரார்கை வெள்ளிவள்ளை யோசையு
மாசையோடு சென்மினென் றுரப்புகின்ற சும்மையும்
பூசன்மாதர் மேகலைப் புலம்புறுங் களிற்றினம்
வாசிதேர் கலித்தலு மருதுலம்பு மாண்பவே. (10)

விசைத்துவாசி தேரினூற் றுகட்பிறந்து விண்ணுடன்
றிசைக்கையானை மூக்கினுட் செறிந்துசெம்ம வாரண
மசைக்கசைந் துறக்கடாந் திறந்தவாரி யாடவர்
நசைப்புயத் துகுத்தசந்த வற்றுநாகம் வீழுமே. (11)

ஊசலுங் கறங்குமம்பு நாகமு மூர்த்துமேல்
வீசுபந்து மொப்பவீதி வீதியாய் விளங்குமா
வாசியேறி யானையேறி மாதர்தம்மை யஞ்சியே
மாசிலந்த ணர்க்குழாம் நடந்தவேத மானவே. (12)

(வேறு)

இவ்வணம் நகரெல்லா மெய்த்த தென்னவன்
மைவண மளவுயர் தேரின் மாதொடுஞ்
செவ்வண மேகமுந் தடித்துஞ் சேர்ந்தெனத்
துவ்வண வயிற்படைக் கட்லுற் றேஎன்றினன். (13)

சுழன்றகா லெனச்செறி துரங்க வெள்ளமு
மழன்றவெற் பெனச்செறி யானைக் கூட்டமு
முழன்றதே ரும்பல படையு மோங்கவே
நிழன்றபூட் டம்புயக் குடவ னேர்ந்தனன். (14)

நந்தியும் வாசியுந் தேருந் தானையு
முந்தியுங் கொடியுடை கவரி யோங்கவே
லுந்தியம் பணையதிர்ப் புடனு நாற்றிசை
வந்தமன் னரையெலா மருத்தன் கூறினன். (15)

உடலகக் கன்னனெற் றுருவ மாகவூர்ந்
தடலகங் கலக்கிய வயோத்தி யாள்பவன்
கடலகம் வணக்கிய தானைக் காவலன்
படலக மார்பனிம் மன்ன னெந்தையே. (16)

முருகுல வாத்தொடை முல்லை மன்னவர்
பொருகுலக் களிறுதேர் புரவி வேந்தர்கள்
சருகுல வையிற்சரிந் தென்னத் தாக்கிய
குருகுல வேந்திவன் கூட லாதியே. (17)

வாகையந் தொங்கலான் வாளு ரீஇச்சம
ரோகைய மன்னர்மெய் யுறையி லிட்டவன்
தோகையர் மடல்கொளு முருவத் தோன்றலான்
கேகய வேந்திவன் கிளரு மேந்தவே. (18)

கவந்தமு மலகையுங் கழுகு பாறுமே
னிவந்திடப் பகைவலி நீக்கு மன்னவன்
சிவந்தகட் கரியமெய்த் திருவின் கேளனு
னவந்திகற் கரசிவ னுலை வாயனே. (19)

நாளுவந் தெதிர்பொரு நண்ண லார்தமைக்
கோளுவந் துயிர்தெறுங் கூற்ற மன்னவன்
வேளுவந் துருவுடன் மேவு செவ்வியான்
மாளுவத் தரசிவன் மதுரை யாதியே. (20)

கந்துகங் கந்துகத் துகைத்துங் கைமலை
யுந்துபு மலையெறி யுருமிற் போரிடை
நந்துருச் செறுநரை நலித லாற்றலான்
சிந்துவேந் திவனருள் சிறந்த வேந்தனே. (21)

ஊதிய வணிகரி னுகைத்தகோ லொன்றி
லேதிலர் பலமெய்கொண் டிகலின் மேயினு
னீதியுந் தருமமு நிறையு நீங்கலான்
சேதிப னிவனருட் சிறந்த தென்னனே. (22)

செங்கைவே ளுைக்கியுந் திரண்ட தோளினைப்
பொங்குகண் களிற்புறம் புரிந்து மாற்றலர்
தங்களை யொலிபொரு பஞ்சிற் சாய்த்தவ
னங்கர்கோ னிவனிறை யருளின் வேலையாய். (23)

புலிங்கவெங் கனற்பகை பொருத காரனுன்
மலிந்தயா னைப்படை வயவன் வானகங்
குலுங்கமண் குழையநாண் குழைத்த வில்லினுன்
கலிங்கவேந் திவன்பல கலைதெ ளிந்துளாய். (24)

சத்திர நிழலுயிர் தட்பஞ் சேர்ந்தன
மித்திர னெனவருள் விளியிற் பாளித
தத்திரம் பகையுடற் றுணி யாக்கிய
மித்திர னிவன்றமிழ் மலைய வெற்பனே. (25)

இவன்கரு நாடக னிவனலி தாபர்கோ
னவன்க ளுேசிகன் மகதேச மற்றவ
னுவன்குட நாட்டிறை யுவன்வி ராடர்கோன்
கவின்செறி யையவென் றுரைத்துக் காட்டினுன். (26)

கண்ணினின் முகத்தினிற் காதி லுள்ளத்தி
லெண்ணினிற் சிறப்புடன் விடையு மீந்திறை
யண்ணலங் குமரனே டணைதிர் நீரெனப்
பண்ணுறு மொழியுடன் பரிவி னேகினுன். (27)

(வேறு)

அலேயிற் கதிர்நே ராசே வலிஞன்
மலேயத் துவசன் புடைமன் னவர்கள்
கொலேவிற் றகுவர்ப் பொருவேற் குகனே
யுலேவற் றணேதே வரையொத் தனரே. (28)

சாற்றுங் கனிசொற் றனிநெய்த் தழல்போன்
றேற்றந் நகர்நம் பியெழுந் திருதாட்
போற்றும் பலர்மீ தருள்பூண் டிபமீ
தாற்றும் புனிதப் புனலா டினனே. (29)

தருவும் புயலுந் தடமா மணியும்
வெருவும் படியந் தணர்வே றுளர்பேர்
மருவும் பொருளார் நகைமா றவளித்
துருவுங் கெழுகா மனேயொத் தனனே. (30)

பணிபூண் டவர்கைப் பணிபூண் டுபராய்க்
கணிபூண் டமுழுத் தமுறக் கரியோன்
றணிபூண் ததுதம் மெனவா டலினிற்
றிணிபூண் டதுகொண் டெதிர்சென் றனரே. (31)

ஆகா யமளா வியசைந் தசையா
மாகால் செவிமா றவிழித் தழலின்
மேகா டவிதீ யவிரைந் ததன
மேகா திபனு மெனநண் ணினனே. (32)

(வேறு.)

புரசை வாரணத் திரள்புறத் துறந்த
நிரைசெய் வேலேயிற் கரைதி ரண்டெழக்
கரைசெய் தேர்செலக் கலிக டாம்பொருந்
தரசு வரவெருத் தழக னேகிஞன். (33)

வயிரி சைத்தன வளேயொ லித்தன
வயிரு டைக்கடற் பணேய திர்ந்தன
வெயில்வி ரித்தபல் படைமி டைந்தன
துயில்கொ டித்திரம் கொடைது வன்றவே. (34)

வீசு சாமரைக் கானு மேலுறத்
தேசு லாநிலா வட்ட முஞ்சிறந்
தாசை யெட்டினு நீழ லாக்கவே
வாச மங்கலம் புடைவ யங்கவே. (35)

(வேறு.)

ஊன்று பொற்கிடு கூடுதார்
நான்ற வெற்றி நலங்கொடொ
கான்ற பொற்றளிர் காமரி
னீன்ற கற்பக மெய்க்குமே. (36)

கலித்தெ ழுந்துக டாந்திறந்
தொலித்த மாவுரு முக்குரற்
பலித்து நீர்பெய் பயோதரம்
வலித்து லாவுதன் மானுமே. (37)

பட்ட நல்லணி பைம்பொலன்
றட்ட மெய்புதைத் தார்மரீஇ
விட்ட வெங்கரி மேருவார்ந்
திட்ட தன்மையை யேய்க்குமே. (38)

ஊட்டு லைப்பரி யூர்தொழில்
வேட்ட பேரொடு மேவுத
லீட்டு பாருண வீற்றினிற்
காட்டு வேலை கடுக்குமே. (39)

இறைத்த சுண்ணமு மேந்தகண்
நிறைத்த வைம்புகை யுந்நிமிர்ந்
துறைத்த செக்க ருலாவிருட்
பொறுத்த மேற்றிசை போலுமே. (40)

தேங்கு லாமலைத் தேனிரு
றுங்கு மாரன் றூணியால்
வாங்கு வில்லினர் வாயொலிக்
கோங்க லோசை யுரக்குமே. (41)

விரிந்து வீக்குடை வாளினர்
கரிந்த தோற்கட கத்தினர்
விரிந்த கார்மதி மின்னெடுஞ்
சரிந்த பேர்நெறி சார்வரே. (42)

கறங்கு காலரு விக்கரு
நிறங்கொள் வெற்பினை நேரவே
மறங்கொள் வேற்படை மள்ளர்கள்
பிறங்கு சொல்லொடு போவரே. (43)

அனித்த மஞ்சடி மங்கையர்
பிணித்த சைஇப்படர் பான்மையர்
தனித்த கால்பொரச் சாய்ந்தொசி
புனிற்றி ளங்கொடி போலுமே. (44)

கொம்பு காழ்வயிர் கோடுதார்
பம்பு சொற்பட கம்முழா
விம்பர் நால்வகை யாழிசை
யம்ப ரஞ்செவி டாக்குமே. (45)

(வேறு.)

உடைகடல் புரையச் செவ்வி
தூசியோ டுற்ற தானை
விடையுடைப் பரமன் காணிச்
சிராமலை மேவ வேந்த
ஷடையலர் நாடு வவ்வி
யவரவர்க் களித்தன் மானப்
படையுடை வேந்தர்க் கெல்லாம்
பரத்துறை பாடி யீந்தான். (46)

அத்தவெய் யவனின் மாத
ரயினிசெங் கரத்தி னேந்தி
யுய்த்தபல் லாண்டு கூறில்
முழுத்ததி னுவாவி ருத்தி
மெய்த்தலை மைந்தன் மேவ
வேந்தனு மிரத நீங்கி
மொய்த்தபல் வரைசூழ் மேரு
நிகர்பட முறையிற் சேர்ந்தான். (47)

கண்டகத் திரையி னிஞ்சிக்
காழ்முனை யிருத்தி முட்சூழ்
கொண்டுயர் பிளையின் பக்கத்
தடியிணைக் கொத்த தோலார்
தொண்டகத் துடியர் வீளை
யெறிமணத் துழனி காப்பார்
மண்டிய வுருமுச் சொல்ல
ரொல்லென மருவுச் சேர்த்தும். (48)

கருமணி யருவி யேய்ப்பக்
களியளிக் கடாத்த வேழம்
பருமணி வேலிற் பல்லோர்
கவர்த்தமுட் படுமெய் யோடு
திருமணி விளக்க நாப்பண்
வல்லியிற் செறித்துப் பாம்பின்
குருமணிச் சின்கட் செந்தீக்
கொளக்கவர் நெறிநி றுத்தி. (49)

தண்பணைக் கணையில் விற்றேற்
றணிதா ழாண மெஃகம்
விண்படு மதிதேர் வட்டம்
வலியவேற் படைநி றைத்துக்
கண்படு காழிற் கண்டம்
வெண்டிரை கடுப்பக் கோலி
நண்படர்ப் புயல்வீழ்ந் தன்ன
கஞ்சிகை நால விழ்த்து. (50)

புன்மயிர்ச் செங்கட் சட்டை
மறியுடைப் புலிப்போத் தன்னர்
நன்மைமூ தாளர் மெய்யி
லுரைத்திடு நங்கை மார்கள்
பன்மணிப் பலகை யெஃக
மெறிமணிப் பாரி மாதர்
தொன்மயஞ் சுடர்சேர் நெய்யர்
சூழ்வர விறைவன் சேர்ந்தான். (51)

புரவியந் தார்க ணீக்கிப்
புரளவிட் டணியக் காரம்
பரவுநீ ரயிற்றிப் பார்முத்
தாரத்திற் பந்தி சேர்த்தார்
விரவுகூர்ங் கோட்டு வெற்பு
சிறைப்புன லெறிந்து மேக
நிரையெனத் தூணஞ் சேர்த்து
நெய்மலி கவளங் கைத்தார். (52)

வல்லியு மின்னுங் கொம்பு
மோவமு மானச் சென்று
மெல்லிய லார்ப ளிங்கின்
புறத்திமை விழிமு கிழ்த்தார்
சொல்லியன் மைந்தர் வீக்குஞ்
சுற்றுடை நெகிழா வெற்பின்
பல்லிய மென்னச் சாய்ந்தார்
மற்றுளோர் துயிலின் வாய்த்தார். (53)

கணிவிதிக் கதலி பூகங்
கழைமலர் மாலை தூம
மணிகடை யொழுங்கின் பந்தி
காழுறி யாத னத்தாற்
பணிசெய்கம் பளம்வி ரித்துப்
பகலென விளக்க மாட்டிப்
புணரிகா லெரித்த லொக்கப்
பொம்மென்மிக் கெழுந்த வென்றே! (54)

காவிரி மலர்கள் வெய்துங்
கமழுமிழ் தயின்றும் பாடற்
பாவிரி சரிதங் கேட்டும்
பரதநூல் கண்டும் பண்பிற்
ருவரு மூடல் பெற்று
மலத்தகங் குஞ்சி சார
மேவியுங் கங்கு னீக்க
வெய்யவன் வெற்பி னுற்றான். (55)

நெடுந்தகை நேய முற்றிச்
சிராமலை நித்தம் போற்றி
யடுந்தொழி லரசர் தம்மை
மைந்தனோ டணைய வேள்விப்
படுந்துடி மருங்குல் மங்கை
பாங்குற நெடுந்தே ரேறி
கடும்புனற் பொன்னி நீங்கி
வடபெருங் கரையிற் சென்றான். (56)

திரிசிராமலைச் சருக்கம் முற்றும்.
ஆக விருத்தம் 399.

விசுவாவசுச் சருக்கம்

வெடித்தமுட் கனிச்சுளை விளங்கு மாங்கனி
வடித்தசெஞ் சாற்றுடன் மருவிச் சேர்தர
யடித்தலம் வழுக்கிய யானை பாங்குறு
பிடித்திரள் பிணைக்கரம் பின்னிச் சென்றவே. 1)

திசைமதி மாத்திரல் சிதறக் கொம்பர்போய்
விசைமதிக் கஞ்சுகம் பீற வீழ்ந்திடு
நசைநற வழுதெழு நதியின் வீழ்பரி
கசைபொரக் குசைவிடக் காலிற் சென்றவே. (2)

கூவிர முரிஞ்சலுங் குழவிக் காய்சிதர்ந்
தோவி ருழையி னருக்கூ டறுத்துராய்
மேவுதேர் கிழங்ககழ் பயம்பின் வீழ்ந்திடாப்
பூவின நெறிதொறும் புதைய மூயதே. (3)

ஓட்டிப் வூசலி னடக்கு மொட்டகம்
நீட்டிய களத்தினி னிம்பத் தண்டழை
கோட்டிண ரொடுங்கொளாக் கொடியிற் செம்மலர்க்
காட்டிடைப் புதைதலுங் கதியை நீங்குமே. (4)

பொற்றிரட் கணிகணி சாறும் பொற்பலாச்
சுற்றளிச் சிறைபோர்ச் சுருக்கு விட்டதிற்
பெற்ற தெனும்போர்ப் பேதை மாதர்கள்
வெற்றி நாயகர்புயப் புணையின் மேவினர். (5)

சுகம்பொரு மாதுளங் கனியைத் தோகைய
ருகுந்தசெந் தழலென வொதுங்க வாடவர்
நகுந்தொறு மதிக்கெதிர் நளின நேரென
முகங்கவிழ்ந் தணிநுதன் முத்து குப்பரே. (6)

வரிமருப் பெருமையின் வாளை காரிடை
விரிதடித் தெனவெழு வெரீஇய புட்குலங்
கரியசொற் குயிலொரு காஞ்சி யந்துணர்
பரியவுட் புகுநிறைப் பழுவஞ் சென்றனர். (7)

இத்துணை வடகரை யெய்தி மாயூர
மெய்த்தலத் தென்கரை நகரி மேவினன்
மொய்த்ததா ரகையுடன் முகலிற் பன்மதி
யொத்தவ னுறைந்தன வயர்ந்த தோன்றலே. (8)

(வேறு)

வீணை மாதவன் விச்சுவா வசுவனைச் சேர்ந்து
கோணை வேழத்தாய் கூடன்மீன் வழியருட் கொண்ட
வாணை மாதவத் தன்மகள் வித்தியா பதியே
சேணு லாம்புகழ்ச் சென்னிபான் மகளெனச் சேர்ந்தாள். (9)

காஞ்ச னைப்பெயர் படைத்தனள் வளைக்கை தவர்கோன்
வாஞ்சை யிற்பெரு மணஞ்செய வந்தன னீன்ற
பூஞ்சினைக் கொம்ப ரனையள்பாற் புதல்வியாய் மறைவி
னூஞ்ச லிற்கொடி மீன்விழி யுதிப்பளென் றுரைத்தாள். (10)

களிப்பின் விஞ்சையர் தலைவனுங் கன்னியுங் குழாமுங்
குளிப்பு நெஞ்சுட னித்தலை மானமேற் குறுக
வொழிப்பொ ளுடிமுந் தாலென வொலித்ததை யொற்ற
ரளித்த தென்னவ னுங்குல சேகரற் கறைந்தார். (11)

அதுக ணத்தெதிர் கொண்டுசென் றரசனுந் தழுவிக்
குதுகு துப்புட னுறைதலுங் குழகன்றுள் போற்ற
மதும லர்த்தொடை வண்டிரி தாமரு மத்தின்
விதுவி னைக்கிரி யணைத்தென விஞ்சைய னணைத்தான். (12)

விஞ்சை மன்னனுந் தென்னனும் வந்தமை வியவ
ரஞ்சு ருவரி யனையசொல் வளவனுக் கறைய
மஞ்சி னேன்கயிற் பிணிமுக நிகரென மருளிற்
குஞ்ச ரத்திடை முரசறை யெவ்மொழி கூற ; (13)

(வேறு)

அரசர் வந்துபணி தென்னனுக் கெதிர்கொ
ளபய னேவலி லொற்றரான்
முரச றைந்தவொலி செவிபு கப்புகர்
முகப்பு நைக்கணழ லசைசெவிப்
புரசை வெங்கரியின் மன்னர் மன்னவரு
துன்ன முன்னமெழு புணரியொத்
துரைசெ றிந்தபொரு ளெனவு வந்தவுள்
முடனெ டுங்குடையி னுற்றனன். (14)

கவரிரும் புகள பம்பிடித் திரள்
கலந்துறத் தொடர விடுத்துமீப்
பவரிடும் புனலி றைத்தி றைத்திடு
மருப்பி னிற்பணி பணித்துமேற்
றுவரொழிந் தவளை யறைந றைப்புனல்
குழைத்தி ழைத்தணி தொடுத்தடுத்
திவர்பெ ருங்கிரி மடங்கலிற் கரிய
றுத்து ருத்துவா செய்தினன். (15)

தெரிந்திடும் புரவி முகதுகத் திலக
வாலகி லாதெதிர் திருத்தியே
வரிந்த பொற்கசை முசைக்கு சைநகை
நெகிழாது முள்ளுற வயக்கிமேல்
விரிந்த பொற்கொடி கொடிஞ்சில் கூவிரம்
விளக்க விட்டகிடு கூன்றியே
யெறிந்த பன்மணி யொளித்தொ டைபடர
நடை[போர்த்]..........திரத மேயவே. (16)

நெறித்தி டுஞ்சிறு செவிப்பு றக்குசை
திறைத்தி டுங்கவின் வொள்ளமுற்
றெறித்தி டுங்கள மரத்த கத்துளை
திளைத்தி டப்படு பண்டியே
பொறித்த டங்க ணழலிற் சுழற்பரி
சுழித்த காலெறில் பொரப்பொரச்
செறித்த மாடிய வயத்த யத்திரள்
செயத்தொலிக் கலியொ டெய்தவே. (17)

குழைத்த விற்கைய ரிழைத்த பொற்சட
விரற்ற மும்பர்புனல் கொண்டுசேர்
மழைத்த டம்புய லெனப்பி ளந்தவொலி
மள்ள ரள்ளுகதிர் விள்ளுறத்
தழைத்த பொற்புக ருடம்பி டிப்பிடி
தணக்கருந் தொழிலர் தாங்கியே
யுழைத்த டங்கதிர் வெயிற்ப ரித்தன
வுடைச்செவ் வரளாபுற முற்றனர். (18)

பொன்செய் வேய்த்தலைய மண்டலங் கோடி
பொருந்து தொங்கறழைந் நிழலிடக்
கொன்செய் வார்ப்பணை தடாரி[தடாரி] பேரிவளை
கொம்பு பம்பையொலி பம்பவே
மின்செய் தார்குழலி குந்தெருத் துறவ
ருந்துரு லிடைமி ளுரியாழ்
முன்செய் நாட்டிய மியற்பு றத்துற
வறத்தோடார் வளவன் முன்னினுன். (19)

(வேறு.)

மதிகு லத்தர செதிர்கொ ளச்செறி
வளவ னுற்றன னெனவெழா
வதிற்கு ரற்பணை முழவுச் சரி
யறைக டுப்பிட வழைவழா
வெதிர்வ யிர்க்கலி கெழ வுகத்திடை
யிறுதி மைக்கட லெழுவபோற்
கதிர யிற்படை வயவ ருட்செறி
களிதி ளைப்புற மருவவே. (20)

குடைநி ரைமதன கொடியெ டுத்தன
குழலி ரைத்தன வெயிலினு
விடையி டைத்தழை நிழனி ழற்றின
வேறெழ ணித்திர ளொலிவிடா
தொடையு டைப்புய வரசர் சுற்றினர்
சுடரு டைப்படை மிடைடவே
புடைய கிற்புகை துறுமி மிக்குயர்
புவன முற்றெருலி மிடையவே. (21)

களிற திர்த்தன புடைம ணித்திரள்
கலியெ ழுப்பின வொலிவிடா
வொளி றுடைப்பரி மணிய ரற்றின
வுருமொ லித்தன வலியனுற்
பிளிறு சொற்பெரு முருடி ரட்டின
பிறவொ லித்திரு செவிபெருக்
குளிறு சொற்பெற வயவர் கைப்படை
குரலெ ழுப்பின் திசையெலாம். (22)

துயிலு வத்திர ளெதிர் நடித்தன
குழலு டைக்குரல் விரலியா
ழியலு டைத்தமிழ் பரத கட்டளை
மியமியக் கினவரி யோடே
கயலு டைக்கொடி புலி யுடைக்கொடி
ககன முட்டின வமரர்பாற்
புயல திர்ந்தென மலரி றைத்தனர்
புவிநெளித்தது பணியொடே. (23)

திசைநி லேக்கரி செவிடு பட்டன
திசைய டைத்தெழு துகளினுல்
இசையு டைக்கடல் புனல்வ றுத்தன
வெளிய டைக்கது முகடுவா
னசைகொ டித்திரள் சுரந திப்புன
லறவ றுத்தன வொருகையாற்
குசைநெ கிழ்த்தொளிர் கசையி டைப்பரி
குலவ ரைப்பிடர் புகுதுமே. (24)

(வேறு.)

பஞ்ச டித்தவர் பைய பையெனு
மஞ்சொனு நிகழ்ந்தில வவர்கெர லாமிவர்
நெஞ்சினு புறத்தினு நீங்க கிற்றில
ரிஞ்சொனு முரைத்தில ரெனநெஞ் சுள்குமே. (25)

பணிந்திடு துணேப்பதம் பாவை யல்குன்மே
லணிந்தபட் டிகைகையி னெகிழ்க்கு மார்வமே
தணிந்திடத் துணேமுலே தைவ ருந்தொடை
துணிந்திடை யனுங்கினுஞ் சூட்டு வேனெனும். (26)

இருத்தியென் கவானிடை யென்னி நூபுரந்
திருத்து கொல்லெனம் விழிசிறங் கணித்திட
வருத்திசேர் நோக்கரு ளருளு மென்றுமெய்
வருத்தமோ டின்னண மணங்க வார்த்தனும். (27)

எய்தினள் காஞ்சனை யிருளே யேத்தினள்
மைதவழ் நெடுங்கணி மாற்றங் கூறின
ளுய்திற முண்டென வுருகிக் காட்டினள்
கைதவழ் மடலேயக் கன்னி காணவே. (28)

விடைகொடு போற்றி மீண்டிது விரித்தனள்
படைநெடுங் கண்ணியும் பரிவு கூர்ந்தன
டொடைமத னிருவர்பா றெடர்ந்த டர்ந்துதன்
னிடைநெடுந் தேருட னுள்ள மெய்திறன். (29)

கதிரவன் றன்குலக் கன்னி மானுளம்
பொதிபடர் நோக்கல னென்று பொங்குநீ
ரதிர்கடல் குளித்தனன் சுடர்க ளம்பரம்
விதிபட மிடைந்தபொற் செக்கர் மேயதே. (30)

(வேறு.)

விஞ்சைக்குல மடவார் விரையப்பத விரலிற்
பஞ்சிற்சுட ரொளிபோற் படைவேள்வரு நெறிவாய்
செஞ்சித்திரப் படம்போல் வெய்யோன்செலத் தினமான்
கஞ்சக்கர மடல்போற் கவினுற்றசெவ் வானே. (31)

எழுமாதவர் மறையா லெழுவேள்வியி னழல்போற்
றெழுமாதித னடத்தின் சுருள்செஞ்சடை விடல்போற்
றழுவாதசித் தியாதரள தருணக்குழ லொளிபோற்
வழுவாக்கந் திமகள்தண் வரிபோன்ற செவ்வானே. (32)

நிரைவெண்மணி யொலிக்க நெடுவாய்க்குயில் கூவத்
திரைவார்முர சிரட்டத் திரள்வேயிசை யிசைக்க
விரைவல்லிய கொடிவான் விளங்கத்துளங் கரியன்
வரைநெட்டுயிர்ப் பெறிந்தே மருண்மாலை வந்ததுவே. (33)

குலக்கங்குலக் கொடிதன் குழல்வெண்டன வலர்போன்
மழைத்தென்றலஞ் சிவைக்கால் வளர்க்குங்கனற் பொறிபோற்
கலக்கம்பெற வருவான் கங்கைத்திவ லையைப்போ
லலைக்கும்புயற் றுளிபோ லடர்வுற்றன னடுவே. (34)

இருள்வெங்கரி துரந்தே யெழுவேள்விரித் தெடுக்குஞ்
சுருள்வெண்குடை தரளத் தொகைமாலையொ டெழல்போன்
மருளுஞ்சுர மடவார் மணிநூபுரத் தொலிசேர்ந்
தருள்வெள்ளெகி னம்போ லணைவுற்றது மதியே. (35)

மலையக்குகை தனிற்கான் மருதங்குரு கூத
நிலைபெற்றவெண் ணெருப்பார் நிலவானுரு கியமான்
கொலைபெற்றகட் களங்கின் குலவானனம் வெளுத்த
திலகக்குண திசைநக் கெனவந்தது மதியே. (36)

நிறைக்குங்கல விருளாய் நிமிர்சேறகங் கழுவத்
துறைச்சந்திர காந்தத் தோயத்தினை நேயத்
திறைக்குஞ்செய லெனவே யெழுவெண்ணில வடல்வேண்
மறத்திண்படை புரைய மலிவுற்றது மதியே. (37)

நாகத்திறை நிறைவா னதிவெண்டிரை போர்த்தன்
மாகக்கரி விடல்போன் மருவுங்கறை யுடனே
யாகித்தலை நிலவே யருள்வெண்மதி யிருள்வா
னேகச்சுடர் விளக்க மெனத்தோன்றிய தெழுந்தே. (38)

சேணுகிய தடமாஞ் செக்கர்புன றனிலே
நாணுவிரு ளறலால் ஞாலத்தெழு மதியம்
பூணுர்முலை யிவள்போற் பொலிதாமரை குவியப்
பாணுரளி யகலப் பனிவேண்டுநின் றதுமே. (39)

(வேறு.)

உலகுயிர் களிபெறவே யுதவிய சுவைமதியே
யிலகிய வெனைமுனியர் வெறிகொடு பரவினையே
யலரம தனனையா ளணையினு மெரிகுவையோ
மலர்தரு நளினமுலென் மதிகுலன் மனையவளே. (40)

தமிழ்மண முடனூரத் தருமரு வருவித்[illegible]
கமழ்பொழி லினிலாடிக் கதிர்பெறு சிறுகாலே
யிமிழ்முர சுண்டயெங்கோ னில்லவ ளெனவோரா
யுமிழ்புகை யெரிகால்வா யுன்னுற வொழிவேனே. (41)

பருதிய மணிசேரும் பாவையர் சுடரேந்தச்
சுருதியை யளிபாடத் தொடைபெறு மலர்சூடிக்
கருதியென் னுயிராரக் கதிபெறு வருமாலை
பொருதுயிர் தெறவெண்ணி புடையிடை விடமேயே. (42)

உளமய லெரிமீதுற் றுளிபெறு வடமுத்தங்
களபமென் முலைநீங்கிக் ககனம துறவேமற்
றளவறு முடுவென்ப ரலவெனில் விரகத்தீ
விளவுற நிறைகோடே குவையென விரியாரே. (43)

கம்மிய ருலைவாய்பட் டுருகிய கனகம்போல்
விம்மலி னயன்மாதர் விடுமிம சலமாரக்
கொம்மைவெம் முலைமீதிற் கொப்பிளி நிரையுள்ள
விம்மலின் மயன்மீதார் முளையென விழைவாமே. (44)

மலரணை தழலாக வரியளி புகையாக
நிலவொளி மணிநீயே நெடுவிழி விடுநீரோ
குலவிய செபமாலை குளிர்படி கமதாக
யுலகினி லரிதாமென் னுறுதவ நினைவாரே. (45)

உருவெளி தனிலேவந் துயர்முலை மலைசேர்வர்
மருவெளி யனுநாடில் வரிவிழி துறைகிற்பார்
பொருவெளி யிதயத்தே புகுதுவ ரிவர்தாமே
பெருவெளி தருமாயத் துணைவல பெயர்தாமே. (46)

எனைநிகர் மடவார்முன் னொளிமையி னுயிர்வாடக்
கனவிடை வருமாபோ னனவிடை வரல்காணே
னினைவுட னுயிர்போறு னிறையுட னிலையாமோ
வனிதையர் பழிபோமோ மருமதி குலவேளே. (47)

இசையினை நுகர்குயிலே யெனதுகை வளர்கிளியே
நசையற வகலுழையே நனியெனை நினைதருதூ
திசைகிலி ருமதுறவே யுமையுமென் னிகுளையரோ
விசைபெறு கணைமதனல் விடுமுயிர் தருகிலனே. (48)

பவனியை நுகர்விழியே பருகிலை கனவினிலே
நவநிரை யணிமுலையே நலமொடு புணர்கிலையே
யவனிய ரரசனையே யணைகிலை யிருகரமே
யிவணழ தெழுவதெனே யிதுவிதி வசமெனுமே. (49)

மருவிலை கதிரவனே மலிகிலை வளையொலியே
யொருவிலை யெனதுயிரே யுறுகிலை காவலையே
வெருவிய மன்னுறவே விழைகில மணமெனவே
யுருமெய் மாலியென [மறுகுக] வொலிமண முரசெழவே. (50)

(வேறு.)

பருவக் கனியிற் பயனைப் பகர்வா
யருளுக் குருவா யுணர்வுக் குணர்வாய்
மருவிப் பிரியா மலர்வா சமனுட்
டெரிவைக் கயல்சேர்ந் திவைசெப் பினளே. (51)

மடமுங் குலமும் பயமு மதியா
யிடமுங் கருதாய் துயரெய் துமதோ
தடமுண் டகனுர் தமதூழ் வினையே
யடவும் படுமோ வலம்வந் தனனே. (52)

மயல்கொள் ளுனர்மைந் தரலான் மடவா
ரயல்கொள் ளுதுமா லதுகொள் ளுவரே
புயல்கொள் ளுமலர்க் குழலாய் புதியை
யியல்கொள் ளுமுனக் கிசையா திதுவே. (53)

அடுபா லமுதா றுமுனே யயிலப்
படுமா றெனவே பயில்வாய் மயிலே
விடுமா றுளமே குடிமே வியதின்
னெடுமா லையுநன் மணம்நோ வுறுமே. (54)

ஊடுந் திசிரிக் குடையுந் தடமு
நீடுந் தடல்வா யயனீங் குறுமே
யாடுந் துணையன் றினுமப் படியே
நாடுந் தலைவர்ப் பிரிவார் நலனே. (55)

உயருங் குலனுண் மடமச் சமொரீஇத்
துயர்கொண் டுவெளுத் தனைதோ கையென
வயருந் திடரங் குரமா கவுன்மெய்ப்
பயிறண் பணையோ வினிதிற் பகர்வாய். (56)

உன்னு ருயிர்போ லுமெனுண் மையுரை
யின்னு தனவோ துயரெய் துமதோ
பொன்னுர் கருவிப் பொருபா கனுறுங்
கந்நா கமெனக் கனல்விக் குதியே. (57)

அடர்கா லினனுங் குமனித் தமெனப்
படர்மே வுதியோ படரங் குரமென்
றுரைடைநீர் விழியான் முனைதோய்ந் தெழுமே
யிடர்நீங் குதியென் னுயிரே யனையாய். (58)

எனவோ தியபாங் கியலின் பழுறுங்
கனவே யெனமே வுகவின் பெறவே
நனவா மெனநண் ணிடர்நீங் கினளாற்
புனைவார் குழறுங் கியபொற் கொடியே. (59)

(வேறு.)

தொல்ல றப்பரி வாற்றுயர் தூங்கிய
நல்ல றக்கொடி செவ்வி நவின்றனம்
புல்ல றத்துமு ஞய்ப்புகன் மீனவற்
கில்ல றம்படு காதை யிசைக்குவாம். (60)

விசுவாசுவச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 459.

கடிமணச் சருக்கம்.

கடிமண நாளெனக் கடிப்பி டும்பணை
யிடியொலி செவிபுகா வரச ரெய்தினர்
வடிவுடைச் சசியையா வாகனஞ் செய்வார்
கொடிவித சித்துவே திகையங் கொட்டுவார். (1)

பன்மணித் துகட்படு காரஞ் செயத்திற்
பொன்மணிப் பலகைகள் பொதிந்த பித்திகை
தொன்மதிக் கருப்புரத் துகள்க டீற்றிமேல்
வன்மணி யோவியம் விளங்கத் தீட்டுவார். (2)

காலையிற் சுமங்கல மகளிர் கைக்கொளுங்
கோலவக் கதைதில மிறைத்துக் கோதிலாச்
சீலமங் கலவொலி சிலம்ப வாழ்த்தியே
சோலையின் மயிலையுந் துயிலெ ழுப்புவார். (3)

மகரமீன் கொடுவரி மகர தோரணம்
பகலருண் கதலிவெண் டாழை பூகமும்
பகநிகர் மணியினி லமைத்துப் பத்தியாய்த்
துகளறு மறுகுக டோறு நாட்டுவார். (4)

அரதனப் பணியறைந் தசும்பு வானவிற்
புரையமீப் படர்தாக்கு சும்மைப் போற்றுகி
லிருதிசைச் செக்கர்போ லியங்கத் தாங்குமுத்
தரியமார் சிலதியர் தோளினிற் சார்குவார். (5)

குண்டலந் துயல்வர மகுட கோடிகண்
மண்டலக் கதிர்பொர மடங்க லேறென
விண்டலத் தமரர்கள் வழுக்கி வீழ்ந்தென
வண்டரும் வியப்புற வரசர் மேவுவார். (6)

ஆடக நவமணி யமைந்த கால்களின்
மூடிய விதானம்விண் ணிருண்மு யக்குற
நாடரும் பன்மணி மா[ற்]றிலை நாற்றிவிண்
கூடிய கதிரெனப் பந்தர் கொட்டுவார். (7)

குங்குமக் கலவைதக் கோலங் கூறிவ
வங்கமே வங்கருப் புரங்கண் மாட்சியின்
றிங்களுங் கணங்களுஞ் செறிந்த தாமெனச்
சங்குடை மகளிர்கள் கொண்டு சார்குவார். (8)

நாட்டுபொற் றறியினிற் பவள நன்மனை
யீட்டிய வூசல்கண் முறையி னீக்குவார்
ஈட்டிய குலமுறை மரபி னீணெறி
கோட்டிய முதியவர் கருமங் கூட்டுவார். (9)

நிறையிழ வேயிற வழநில வெற்பெனக்
கறையடி மதமலை கவினப் பன்மணி
முறையிழைத் திடும்படி முயக்கிக் கொண்டுகொண்
டிறையவன் முன்னிறீஇத் தொழிலி யக்குவார். (10)

அலையிடைப் பிறந்தெழு மாடல் பாம்பறிச்
சிலைகணை வாட்படை பலவுஞ் சொக்கரை
குலவிய கதலிகை நாணிற் கொண்டென
நிலைபெற மள்ளர் வீதியி னெருக்குவார். (11)

இந்திரன் கணத்துட னெய்து மாறெனப்
பந்திசேர் மானமுன் பருதித் தேரென
வுந்துபொற் றேர்களு முவப்பின் காட்சிபோன்
முந்துற வொர்ப்பனை முயக்கிச் செல்குவார். (12)

வெற்பணி செக்கரின் கொங்கை மீத்துகில்
பொற்புற விழிக்கடை புரள வானவர்
கற்பக வல்லிபொற் கணிகை மங்கையர்
சொற்பெறு பொற்கலத் தயினி சுற்றுவார். (13)

அரவுரி யரம்பையின் குருத்த மைப்படம்
பரவுபூ கத்தினிற் பட்டை போன்றவை
யிரளிவெண் பட்டுநூற் கயிற்றி சைத்தவை
மரவுரி பரிசிக்க யுணரு மாண்பவை, (14)

வானவை நிகரென வருணப் பட்டிசை
மேனிறை விதானம் வெண்டாளக் கஞ்சுகம்
பூனிறைத் துகில்பல பொருப்ப தென்னவே
வானக முயச்செலக் குவித்து வைகுவார். (15)

மன்னனும் பன்னியு நிகர மாநகர்
துன்னிய கணமெலா முவகை தூங்கினர்
முன்னிய பண்டியின் முதிரை நெய்யரிக்
கன்னலக் காரமுக் கனிக ளீட்டுவார். (16)

அரசனி லிதையநட் பணங்கின் மாதர்பாற்
பரவுப காரஞ்சஞ் சாரம் பாங்கினிற்
புரிதொழி லிற்கண் ணனந்தம் பொன்மணித்
துரிமையிற் றுய்பல வுருவ மேயினன். (17)

அரசனு மவ்வழி யமைய மங்கல
முரசமர் முழுத்தமே முன்ன மன்னுயிர்
பரவிய மங்கலம் பரிச னத்துடன்
விரவிய மன்னவர் முன்னர் மேவினர். (18)

காவிரிப் புனல்கொடு கணங்க ளுமங்கை
பூவிரி கவுரிதன் பூசை யாற்றுவான்
மாவிரி கடலென மாதர் சூழ்ந்திட
நாவிரி மங்கல மிசைக்க நண்ணினான். (19)

பணிபெறு மடந்தையர் பலர்வந் தீண்டியே
மணிகடைந் தெனவிரை மெய்யின் மன்னியே
யணியெறி கருமணி யனைய பின்புறந்
தணிகுழ லுனைநீர் தழுவ வாட்டினார். (20)

பரிவொடு விரலினைப் பைதறத் துவரத்
தெரிவள ரகிற்புகைத் திலம்பஞ் சூட்டுறீஇ
சுரிவளர் நறுங்குழற் சொருகி முத்துட
னரிவளர் தொடையல்பொன் னலங்கல் சேர்த்தனர். (21)

கயிலுறு கிம்புரி மகரங் கவ்விய
பயில்வயி ரத்தொடர் பரந்த பல்லிழை
வெயிலுறு சிறுபுற மறைத்து வெம்முலைத்
துயில்வுறப் பருவச்செந் தளிரிற் சூழ்ந்தனர். (22)

கங்கைகா ளிந்தியிற் கலந்த பொற்பெனக்
கொங்கைசேர் நித்திலக் கோவை யுந்திற
றங்கு ரோம ரவ்விதை வாத்தறீஇத்
திங்களின் மருவெனத் திலகஞ் சேர்த்தினார். (23)

வாவுவெண் டிரைநுரை மணிவா னறல்போ
னீவிவெண் பட்டிற் பட்டிகை நெருக்கினார்
பூவில்வண் டெனப்பொலன் சங்கை போர்த்துபா
லாவியிற் குழைபதத் தணிகள் சாத்தினார். (24)

அரத்தகந் தாளினிற் கண்ணி லஞ்சனந்
திருத்தினர் கருப்புர வயினி சேர்த்தினர்
பொருத்திய குமரியைப் போற்றிப் பூவையர்
பரித்ததோர் மானத்தும் படியி னுய்த்தனர். (25)

(வேறு.)

நெருங்குழலை யல்குலு நிறைந்த திறுமென்றே
மருங்குலென னடைக்கல மறைந்த தெனவோலிட்
டிருங்கலை மணிப்பருமம் வண்டுட னிரங்க
வருங்கொடி யசைந்தென யடித்துணை பெயர்த்தாள். (26)

பகுத்த கவ ரித்துணை பரந்த நிலவானுங்
நகைத்ததர ளத்தொடையின் னக்கநில வானு
முகைத்தெழு சகோரமென வுண் கணுள நாணுற்
றுகைப்பணி யெருத்தொசியு நோக்கொடு தொடர்ந்தாள். (27)

விட்டபணி றத்தலர் விரித்ததவ ளத்தூ
சட்டொளி யலத்தக மதிற்பவள மொப்ப
வட்டவுகி லிட்டசுடர் ஞானமென பாங்கர்
நட்டவெகி னத்திர டொடர்ந்திட நடந்தாள். (28)

திரித்தகுழல் வட்டுடை திரைத்ததுகில் வெங்கண்
விரித்தமுர சத்துரை வெடித்தமினல் வேய்ங்கோல்
பரித்தபல கஞ்சுகியர் பற்றிலர்கள் சுற்று
நெரித்த புருவத்தினர் நெருக்கொடு படர்ந்தார். (29)

மங்கலமோ ரெட்டுமிரு பான்மகளி ரேந்தப்
பொங்கொளி மணிக்கொடி பொடித்தனைய போற்றற்
றிங்கணுதல் வேர்வுகம லத்திவலை யேய்க்கப்
பங்கைய மடந்தைவரு பான்மையி னசைந்தாள். (30)

வந்தமக ளங்கைவிரல் பற்றிவழு திப்பேர்
சுந்தரவ டிவத்துணை தொழப்பரிவி னுய்க்கத்
தந்தகொடி யிற்பணி தரக்கையி னெடுத்தெ
ழுந்திமடி வைத்தரி யிகச்சுழியின் மோந்தாள். (31)

பாலுறை மலர்க்கொடி பதம்பணிய வேந்தி
மாலுறு முளத்தினள் வளைக்கர னெழுக்கி
மேலுறு முலைத்துணைகண் ணேரவெழு மின்னை
யாலுறு மலர்ச்சினை யணைத்தென வணைத்தான். (32)

நெய்தவ ழுயிற்படை நிருபகனை நோக்கி
மொய்தவழ் புயத்துமுரு கக்கடவு ளொப்பாங்
கைதவள மாமணிக ளேயிணைய கோலஞ்
செய்தரசு தம்மென நடந்திவைசெய் கிற்பார். (33)

(வேறு.)

தகரமட் டித்து நான
மளைந்தணி தடநீ ராட்டி
யுகிவிர லலைஇ யைந்து
புகையுறுக் கோசை வண்டு
பகர்நனைச் சிகழி சுற்றி
பானிலாச் சுடருங் கங்கு
னிகரெனப் பிடிகே சத்து
நிரைக்கணி மகுடஞ் சூழ்ந்தார். (34)

குலவரைக் குடிமை யென்றாழ்க்
குண்டலந் துயில நெற்றித்
திலகமுட் புண்ட ரத்துட்
சிறப்பக்கண் ணருள்கொ ழிக்க
விலகியு வரிமுன் றெய்து
மகலத்தி னழையு நூலுங்
கலகவேல் விழியார் மாமை
நகையொடுங் கலப்ப தேய்ப்ப ; (35)

நீண்டுதா டவழ்த டக்கை
கடகத்து நிரைக்க முத்தம்
பூண்டகோ லத்தோன் சேரும்
பொற்பெனக் கவினிற் பொங்கத்
தூண்டுதேர் வணிலோள் வாட ?
சுடரவிட் டிசைசூழ்ந் தென்னக்
காண்டகு வெண்பட் டெய்த
பொற்கழல் கலாவச் சேர்த்தார். (36)

கொடைக்கட நீக்கி யானை
யெருத்துநீக் குடையோ டாடை
புடைக்கவின் மங்க லங்கள்
பொருந்துறப் பூவுந் தாரும்
தொடைக்கவி ஞோர்க ளேத்து
மாசில்பல் லாண்டுந் தோன்ற
நடைக்கரி பரிதேர் சேனை
நாற்கடல் கடுப்பச் சென்றாள். (37)

வளைந்தமுள் ளுருக்கி யானை
யிரீஇத்தவர் வாழ்த்த வெய்தி
யளைந்ததந் தையைத்தாள் சூடி
வளவனை யஞ்ச லிப்பக்
கிளர்ந்தபே ருவகை யோடுந்
தழீஇயுளங் கேழும் வேள்வி
விளைந்தநன் முழுத்த மென்ன
மகந்தொழாக் குமரன் மேவி ; (38)

அரிமணி மூழ்க வூறு
மரியெருத் தனையி னமைகத்
தெரிவையைத் தரித்த பூணி
லேந்திச்சென் றயலில் சேர்ப்ப
வுரியகண் கடைபோய் நக்க
வொசிந்திரு வோரு நோக்க
விரிதரு குடையி னுப்ப
னுழைக்கலம் விரித்தா ரன்றே. (39)

நாளொடு கோள மைத்துச்
 சுருக்கிநெய் நால வன்னி
நீளெழு நாவு நீட்டி
 முத்தலை நிமிர வோம்பி
வாளொளிக் கன்ன நீரை
 மாதுகை மேல தாக்கி
காளையித் தென்னன் கன்னிக்
 குரித்தெனப் புனல்க விழ்த்தான். (40)

ஆர்த்தன மறைகள் வேள்வி
 நிமிர்ந்த வானவர் பூமாரி
தூர்த்தனர் முனிவ ராகித்
 துவன்றின மகத்தைச் சூழ்ந்து
வார்த்தனை முலையி னூரு
 மைந்தனு மின்னூர் போற்ற
நீர்த்தடத் திருவு மாலும்
 நிகரென வறையுட் புக்கார். (41)

அச்சமு மடனு நாணும்
 கலத்தன னசலத் தாக்கிக்
கச்சிற வளர்ந்த கொங்கை
 வல்லியுங் கமழத் தீட்டி
யிச்சைநன் மொழியிற் கூடி
 யூடிநல் லின்ப முற்றி
வச்சிரன் றிருவுற் றென்ன
 மரீஇப்பிரி வரிய தானன். (42)

அரத்தனங் குஞ்சி தோயப்
 பணிந்தடிக் கலன்தி ருத்திக்
கரத்தினை விழியி னொற்றிக்
 கவுட்படப் பளித மூக்கி
நிரைத்தபூங் கூந்தல் சுற்றி
 நீவியை நீவித் தீமை
யுரத்துவீ ழணித் தேனென்
 றுரைத்தவ ளுடன்சேர்ந் திட்டான். (43)

இவ்வண்ண மெழுநாள் வைகி
 வழுதிசே யுடனி ருப்பச்
செவ்வண்ண விரவித் தந்த
 வளவனுஞ் சிறப்பு நல்கி
மைவண்ணக் குழலி பேராய்ச்
 சிலதியர் மணிபொன் னுடை
மொய்வண்ணக் களிறு வாசி
 காவலன் முகந்து கொண்டான். (44)

கண்ணிடைப் புண்ணி முற்ற
விடைகொளுங் கன்னி தன்னை
விண்ணிடைக் கொடிதி ளைத்த
வுயிரெனப் புல்லி மிக்க
தன்னுடைக் குரவன் பன்னி
கையடை தரக்கைக் கொண்டு
பண்ணிடைப் படுகை மாவும்
பிடியும்போற் பரிவ னுற்றான். (45)

விஞ்சையர் தலைவன் விச்சு
வாவசு விழிநீர் சோர
வஞ்சியைப் புல்லி யுச்சி
வண்டின மிரிய மோந்து
செஞ்சுடர் மணிபூ ணாதி
நல்கித்தென் னவன்சேய் தன்னைக்
கஞ்சமின் மால்போ லன்பாற்
கையடை யோம்பு கென்றான் (46)

நினைக்குமுன் படரு மானம்
நேமிவா விலது பாரி
லினைத்துயிர் பொருந்திற் சங்கப்
பலகையொன் றிடம மைப்ப
தெனைத்துணை படைகள் சோர
வலியதண் டத்து ளேற்று
முனைப்பகை வெல்வ தீந்து
முறைமுறை புல்லி னானே. (47)

(வேறு)

வஞ்சிநன் மணத்தினை முடித்து மன்னன்சேய்
விஞ்சையன் விமானமே நல்க வெற்றியார்
குஞ்சர மெனவிடை கொண்ட தோதின்
மஞ்சொலா ளுடன்பல வறைதல் கூறுவாம். (48)

கடிமணச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 507.

விமானச் சருக்கம்.

வரளொளி வயிரம திடையிடை வெயில்விட
மகரிக நிரையுணின்றிக்
காளொளி விடுகரு மணியணி மதலைக
ளிருளொளி கஞலச்சேர்த்
தாளொளி யெரிமணித் தகடக டுறமுறை
யணிகிடு கமைவித்தே
கோளொளி யொடுபல குலவரை முழைநுழை
வெண்மணி குயில்வித்தே. (1)

எரிதெற வுருகுறு தொழில்விடு கனகம
திடுசுவ ரெனநேர்வித்
துரின்மயின் மரகத மலைமக ளொளியென
வுறுகுடு மியின்வேய்ந்து
விரிநில வினையுமிழ் தரளம துறுவட
மிடைதர வயிணூல்வித்
தரிமருள் பெறநறை நிறைமல ரெழுதிய
வணிபல கைகள்வேய்ந்தே. (2)

பருமணி நிறையொடு படிகம துறவெளி
படுமொலி யதர்பரவித்
தருமணி யறைதுக ளளறுகோ டுருவுற
வவணவ ணெழுதோலங்
கருமணி யிருவிழி கவரவண் புலவிகள்
கலவிகள் பெறவூழ்வித்
திருமணி தனினிரை கழைகமு கொடுகத
லிகள்தனி டைநட்டே. (3)

விழிவிடு மிமையென வொளிவிடு கடைபுத
விடைமிளிர் வுறவேய்ந்து
பொழிகதிர் நிலவென விரசத நிறைதக
டிருபுடை பொரவைத்துப்
பழிவிடு பலவொளி பரவிய கதலிகை
பணிமுடி தொறுநாட்டி
சுழிபெறு தடமென வயிடுரி யமணிகள்
சுடர்குமிழ் தொகுவித்தே. (4)

அமரர்க டருவிடு துணரென வொளிமல
 ரணியணி பெறுமானம்
பமரமு னெழுவன வகிலிடு புகைசிகை
 பரவிய தெனவேய்ந்தக்
குமரரு மகளிரு முளமளி பெறநிறை
 குழைகள பமதார
விமசல மொடுசுவர் மெழுகிய நரைசிகை
 யிபமள வுறவுய்த்தே. (5)

இனையன தொழிலுட் னிமையவர் தபதிமு
 னெழில்பெற வருண்மானந்
தனையிசை யினரர சுதவிய பொழுதவ
 னிருதளி ரடிபோற்றிப்
புனைமறை யவர்மிடி புலர்வுற நிறைநிதி
 பொழிபுய லெனவார்த்தி
யனகனு மரசருள் வழியெழின் மயிலுடன்
 தினமரி யிவைசொல்வாள். (6)

(வேறு)

ஞாலமங்கை கொங்கை யங்க
 ணுேக்க மிக்க நன்மணிக்
கோலமஞ்ச விஞ்சி மஞ்சு
 துஞ்சு மிஞ்சி குஞ்சிகொண்
டேனுநித்தி லத்தோ ளாரத்
 தொடுத்த தேய்ப்ப வீதிவா
யாலவெம் பணிப்ப ணித்த
 வாவ ணங்கள் காண்டியே. (7)

எழுந்தமான மான மித்த
 லத்தெ ழுந்த கோபுரக்
கொழுந்து போன்ற வூன்றுபொற்
 கொடிக்க ணம்பி ணங்கியே
யழுந்தவெய் யவன்றன் மெய்யி
 லைய மற்ற றைந்தறைந்
தொழுங்குசேர் மடந்தை மாரி
 னுற்று நிற்றல் காண்டியே. (8)

சிலம்பி நூல் வலந்தி லங்கு
　　சேந்து ணர்க்க டுக்கைவா
யலம்பரும்பி ரும்பி ருஞ்சு
　　ரும்பு பாடி யாடல்போ
னலம்புரிந் தசைந்த கொங்கை
　　நங்கை யங்கை யோரையிற்
பொலன்கொள் கோவை நின்மணிப்
　　புறத்த நீவி காண்டியே. (9)

அறைந்த கந்து கத்தெழுந்
　　தெழுந்த ழுந்து வாரறுத்
துறைந்த கொங்கை நீலவேயி
　　னுச்சி யேறி யாடுவான்
சிறந்தி டுங்க ழாயரிற்
　　றிகழ்ந்த ரோம வல்லிமே
லுறைந்து கண்வி ழித்துதைத்
　　துருத்தெ ழும்பல் காண்டியே. (10)

பொன்பி றந்த தாமரைப்
　　பொலன்ற கட்டின் மங்கைநீ
முன்பி றந்த வூர்துறந்து
　　மூச்சு விட்டி ருங்கணீ
ரன்பு டன்று ளித்தபோ
　　லடைத்தி டாத வாயிலின்
மின்பி றந்த தூமமாலை
　　மேவு செய்கை காண்டியே. (11)

வளைந்த வெள்ளை யிற்றிடங்கர்
　　வள்ளம் விள்ளும் வாய்ப்படா
வுளைந்த வாளை வாவிவாவி
　　யுற்று லாவி வாரிசங்
கிளர்ந்த செம்மல் சிறந்தகழ்க்
　　கெழீஇய புண்ணை ருப்பெறு
வளர்ந்த விண்ண டைத்தபந்த
　　ரொத்தர் பற்றில் காண்டியே (12)

தோணிலைப் படர்வி டாத
　　வேணி லிற்சு ருங்குறு
நாணிலைப் படர்வு றத்த
　　டைந்த டைந்து நண்ணியே
வாணிலைப் படாத சேலி
　　ருல்வில் வாளி போலவே
கோணிலைப் படாத போர்க்கு
　　வித்துணக்கல் காண்டியே. (13)

புரந்தொ லைக்க மேருவாங்கு
　　போது நட்ட கால்கள்போ
னிறைந்த பெண்ணை மீதுலா
　　நெடுந்தி ரைக்கு லங்கள்வா
னரந்தை நீங்க மாயவ
　　னளந்த தாட்கி ளர்ந்தநாட்
பரிந்து கங்கை சாய்க்கமீப்
　　படர்ந்த தொத்தல் கண்டியே. (14)

(வேறு)

கொழித்த நித்திலந் துகிற்கொடி யெறிந்துநீர்
கிழித்துயர் தண்டமீக் கிளர்ந்த பாயுடன்
சுழித்தலை பொரக்கலந் துகைத்த வானிறை
வழித்தொடைப் புயலென வருதல் காண்டியே. (15)

நன்னிடை மருவிய தைய னீயென
மின்னிடை சுழிகுத் தெழுந்த வெண்டிரை
யுன்னிடை நட்பினிற் றழுவ வோங்கல்போ
லென்னுடை மானமட் டெழுதல் காண்டியே. (16)

ஈன்றபூங் கொடிவிடுத் தெய்தி ஞயென
வூன்றுவெண் டிரைக்கரம் வயினு றுத்தியே
மான்றுகட் டிவலையே வார வார்சுழி
தோன்றவா யதிர்ந்தெனத் தொடர்தல் காண்டியே. (17)

பற்றிய கூடலே பிழைக்க நாட்டநீர்
முற்றி யவ்வழி யொழுக்க மொய்குழல்
சுற்றிய விரல்வழி சொரிந்த வெள்வளை
யுற்றநீர்ப் பிறையென யொளிரல் காண்டியே. (18)

நூக்கிய திமில்விடு மீனயர் கூம்பிற்கால்
வீக்கிய விதையுட னுவலை வெள்வலை
யாக்கிய காவணத் தயர்ந்து சாற்றிடை
வாக்கிய நீர்பொழி மணத்தைக் காண்டியே. (19)

இறவுடற் புறமுட் கைதை யேந்தியே
புறமடற் சுறவுமுட் பொருவ நாப்பணி
னறவுடை யரும்புவெண் ணுரை மீன்கொள
வுறைவது போன்றதை யுவப்பிற் காண்டியே. (20)

கடுகிய நீரக் கயவாய் நெரித்திடக்
கிடுகிடு வினைஞர்கைக் கிணையின் பூசலும்
படுகுரமீன் குருகுணுப் பறந்த பூசலும்
விடுகுரற் பூசலும் விழுங்கல் காண்டியே. (21)

கொடுப்பெரி வித்து நென்முளை துய்த்திட
விடுப்படு தோலடிக் குருகு மல்கவே
வுடுப்படு மதியின்முத் துக்கவ ரல்வளை
எடுத்தெறி தாறுவை யிரைத்தல் காண்டியே. (22)

மண்படு வரிமருப் பொருத்தன் மாட்டியே
புண்படு காலினர் புதைய வூன்றியே
தண்படு கொழுநுதிச் சலஞ்ச லங்கள்தாம்
விண்டென மணிநில வெறித்தல் காண்டியே. (23)

கருவரை யிரண்டிடை கறங்கு காலுடை
யருவிய ஞெஞ்சில்சேர்த் தடர்ந்த மேழகப்
பொருவில்விஞ் சையரெனப் புனலின் வாளைசெல்
வெருவர் வுழுநர்சேர் வெள்ளங் காண்டியே. (24)

அலர்மிழா நிரைவிர லரிக றும்பிழி
நிலவுதாழ் முழையென மாந்தி நீங்குருக்
குலவய மள்ளர்வெங் குயத்திற் கோவையார்
பலகதி ரெறியரிப் பரப்பல் காண்டியே. (25)

கைவளை யொழுகுதல் கடுப்ப வாக்கிய
பெய்வளை நுடுநுகர் கடையர் போந்தரி
மொய்வளைச் சூடுகொள் முழக்குங் காலுறீஇ
வைவளைப் படுத்திய மலிவுங் காண்டியே. (26)

குயினுழை பொழிலிடைக் குயினு ழைந்துசார்
வெயினுழை யாச்சிதர்ந் தயல்வி ழைந்தென
மயினுழை பொதும்பரின் வண்டு பாண்செயாத்
துயினுழை விரியுடன் சோர்தல் காண்டியே. (27)

காவியுங் கமலமுங் காட்ட மங்கையர்
வாவியஞ் சேலெழ மருண்டு தம்புறத்
தாவியங் கொழுநர்பா லணிந்த தூரிகை
யோவியம் போற்றமீஇ யுறைதல் காண்டியே. (28)

துருவையஞ் செம்மயிர்ச் சுதரும் பாணரும்
மருவலு முழத்தியர் மட்டு வாக்கியே
பொருவரு மருதயா ழிசையின் பாற்படைத்
தருவரும் பொன்மழை தருதல் காண்டியே. (29)

விரிமருப் பொழிலிடை மிடைந்து பால்பொழி
வரிமருப் பெருமையால் வாழை நன்கனி
கரிமருப் பெனவொளி காட்டப் போத்தின
முரிமருத் தெனவெரீஇ முழங்கல் காண்டியே. (30)

குருகணி விசைத்தெழு துழனி கோழரை
முருகணி மாத்திரு னருமு ழக்கென
திருகணி யாலைச்சா றெலிப்பத் தேனெனப்
பொருகணி விழாவரிப் பூசல் காண்டியே. (31)

இலையொழி கொடிகிழங் கிஞ்சி மஞ்சள்வா
னிலையொழி முப்பல முதிர நீண்டபொற்
கொலையொழி தாழைமுப் புடைத்தொ டைப்பலந்
தலையொழி யாவழிச் சகடங் காண்டியே. (32)

துறைமுகத் தூணமுந் துறந்த பூசலி
னிறைமணத் தோசையு நிகமத் தோதையு
முறையுப கரித்த வைசுரி முழக்கமு
மறைகட னிகர்ப்ப மகரங் காண்டியே. (33)

வெய்யவ னும்பரின் மேவிக் கண்ணுறீஇ
வையகம் விளக்கிய மாண்பிற் காவிரித்
துய்யநா டுயர்வளஞ் சொல்லிப் பாரிடை
பொய்யெனச் சேர்ந்தன னுவப்பு மேவவே. (34)

உரைத்தசொற் கிழியனு ளுவப்பத் தாழ்ந்துலாய்
வரைத்தடம் புயத்தின னனைய வேந்தனும்
நிரைத்தடஞ் சேனையும் பிதாவு நொந்துறை
விரைத்தடம் பொழிலுற்றான் வேன லானினே. (35)

ஆதவம் பொறீஇயுடைந் தகன்ற வல்லிரு
ளோதுவெண் மதியுடைச் சூழ வுற்றென
மேதகு மிருளலர் விளங்கப் பாங்கெலாம்
போதுறு பொழினரை பொலியக் கண்டனன். (36)

அனங்கனுச் சிரமமே யனைய வார்பொழிற்
கனங்குழைப் பொதுமினு ருளத்திற் காளதாய்
மனங்கவர்ந் திருவிழி வாங்கு றுததுந
நனந்தலை மேயதன் னலத்தை நோக்கினன். (37)

(வேறு)

மான மேவி மடக்கொடி தன்னுடன்
வேன லானனுன் கூற விரித்தன
மான சோலை யயர்ந்து புனற்படிப்
போன மார்ந்தெழும் போதுறல் கூறுவாம். (38)

விமானச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 545.

ஓரைச் சருக்கம்.

திருந்து பாவல ரருந்தமிழ்த் தேர்வுழி யின்பம்
பொருந்து மாறென மறத்தொடு மடந்தையர் பொலிய
விருந்த ருந்துவான் வேனில்வந் திருத்தது வாரி
மருந்த ருந்துவா னவரெனப் புவியுளோர் மகிழ்ந்தார். (1)

பொன்பி றழ்ந்தன விதழியந் துணாமருப் பொருந்தாத
தன்பு லன்பெற நுகர்வுறுன் றிருவெனத் தயங்க
வின்ப மேவிய மடந்தையெம் பருவமொத் திடையே
யன்பர் நெஞ்சக முகவணி வேனில்வந் ததுவே. (2)

காய மானசப் பொன்மரைக் காரணந் தவத்தைச்
சேய பாரிடை யோடையி லுறத்தனே செனுத்தி
யாய செண்பகத் தரிபுகாத் தன்பய னிறைந்த
வீய செவ்வியைத் துறைவரப் படுத்துச்சூழ்ந் ததுவே. (3)

சூதத் தண்டளிர் கோதவிற் குரற்றுக ளறச்சே
ரோதைக் காகளந் திசைதொறுந் திசைதொறு மொலிப்பப்
போதத் தூய்பொழில் பணிந்திடப் பொருகளே குழையச்
சீதத் தன்கணே மதன்கெடச் சிறந்தது வேனில். (4)

துய்ய வீணையின் பாண்மகா ரிசைத்தலுஞ் சொரிதன்
வைய மன்னவ ரன்பொடு வாக்கிய செயலி
னைய வெள்ளிசை முக்கணத் தமிழ்க்குல நண்ணப்
பைய வாய்திறந் தமுதுண வளித்தபைம் பொழிலே. (5)

மிடைந்த தெங்கினிற் கரும்புகை விரிந்தன வசோகத்
தடைந்த பன்மல ரடைந்துதே னுண்டுவண் டெழுந்த
குடைந்த கோகுலம் பெடைக்குல மருட்டமேற் கொம்ப
ரிடைந்து தாழ்தர விணர்த்தொகை புணர்ந்தன காஞ்சி. (6)

நகைய விழ்ந்தகேழ் பொருந்துறுர் நலங்கனிந் தென்ன
முகைய விழ்ந்துதண் முருகலர் பயங்கிணர் முருக்குத்
தொகைய விழ்ந்தபொன் னீகலான் றருவெனத் துணரின்
றகைய விழ்ந்தென மருவொரீஇத் தமனியக் கோங்கே. (7)

தென்றி சைக்கொடி காரெனுங் கொழுநனைத் தேடி
நின்றி சைத்தநெட் டுயிர்ப்பென நிமிர்ந்தது தென்றல்
வன்றி சைக்கரித் துளைக்கர மடுத்திடத் துரும்பாந்
துன்றி சைச்சுரும் பிரித்துப்போய்த் தூயின வாசம். (8)

பிரிந்த மாதரி னழுங்கிய மயிலினம் பெடையோ
டிருந்து மாளிகை யெருத்தமீப் புயலென வியைந்த
கரிந்த தாமரை தளிர்த்தன துளிப்பனிக் காலம்
பரிந்த தாற்குறும் பொழித்தவ னடல்குடி யெனடு (9)

உலவைக் கொம்பரிற் றளிர்நிறை யூழ்மலர் பிரிந்த
கலவிக் கேழ்வரைக் கண்டணி யணிமினார்க் கடுப்பப்
பலவிச் செல்வமுங் கல்வியுந் தொடர்ந்தபூ வையரின்
மலரிற் றும்பியின் சாய்கொடி மறித்தகான் மலயம். (10)

இருந்த வத்தருங் காமுறும் ஓவம்வந் திருக்கப்
பொருந்து தண்புதுப் புனல்கொளப் புனலிடைப் புகுந்தா
ரருந்து ணர்க்கொடி யெடுத்தன சொரிந்தபேர் தளிக
டிருந்து பாண்செய நடித்தது தமிழ்வரைத் தென்றல். (11)

ஆய சோலையின் மலரியந் தருபுனற் குடைந்துஞ்
சேய னாருடன் களிப்பதுந் திருந்திய நோன்றாட்
டூய வாடவர் கரிவரி நிரைத்தலுந் தோன்ற
நாய கிக்குளம் புகுத்துவா னம்பியும் நடந்தான். (12)

(வேறு)

எருத்திடை யிசைமுளைக் கெருவி றைத்தல்போன்
மருத்தெழு பிணர்க்கையிற் றுகளை வாரியே
பருத்தவெண் மருப்புடைப் பகடு வீசுத
றிருத்துசித் திரமணாய் சிறப்பிற் காண்டியே. (13)

குழவிவெண் டிங்களைச் சேரு குன்றென
வெழிலுடை மருப்புட னிகலிக் குஞ்சர
மழியிடைப் புனலினை மாந்தி வல்லியி
னுழையிடை நிழலையொத் துலாவல் காண்டியே. (14)

வானிற மருப்பிடை வல்லி தாங்கியே
தீநிறச் சிறுகண்மாச் செலுத்த நோக்குடன்
பூநிறச் சிலைமரம் புதையத் தாக்கிலு
மேனிறை காய்கனி வீழ்தல் காண்டியே. (15)

நெற்குளி கைக்கொடு நேயமீ திப்படி
நற்கவ ளங்கொடிப் பணைக்கை நான்றிடா
தெற்கலி னிடைமருப் பேந்தி வாய்ந்தபேர்
சொற்களாக் கரிநிழல் சுழிதல் காண்டியே. (16)

கவர்படு முள்ளுறீக் கவழங் கைத்தலு
மிவர்கர நீட்டுருப் பற்றி லாரெனப்
பவர்கரி கவுள்விடு படியைப் பற்றுடை
யவருள கத்தினி லரிகொடல் காண்டியே. (17)

பண்ணொளி புரவிகள் பாரிற் றூள்பட
விண்ணொளி புயலென விழைந்தெ ழுந்திருங்
கண்ணொளி கழையிலக் கார மாந்தியே
மண்ணொளி திரையென வருதல் காண்டியே. (18)

ஊட்டுளைக் கலிமணிப் புரவி யோடுதேர்
பூட்டுவிட் டயினிகள் பொருந்தி மீதுயர்
மோட்டுடைக் கற்பக முளையிற் சூழ்ந்தெனக்
கோட்டுறு சாலையிற் கொணர்தல் காண்டியே. (19)

தூயபொன் வடத்தினிற் றுவக்கு மாணினர்
பாயிர மாயிர நிரைகொ டார்ந்தன
பாயிருஞ் சுதைதரு பரவை யின்றலைத்
தூயவர் நதியெனத் தொடர்வ காண்டியே. (20)

மின்னுடன் மழைசெல விளங்கு மானச
நன்னெறிப் படரனக் குழாங்க ளுணவே
பின்னிய குழற்சிறு புறத்திற் பேதையர்
கன்னிலை கண்டுபுட் டனத்தல் காண்டியே. (?) (21)

தயங்குகொத் திணர்பொருச் சாய்ந்த கொம்புகள்
வயங்குறு துயரினை விடுக்கு மாண்பென
நயங்கிளர் மலர்கொள வரிந டந்துபோய்
முயங்கொரு பொழிலிடை முரணல் காண்டியே. (22)

தொடைக்கணி பூவலித் தருவிற் சுற்றலுங்
கடைக்கணிக் கொருவன் மூரல் காட்டவே
படைக்கணி யணியெலாம் பரிந்து நீடுயிர்த்
துடைக்கணீர் சொரிந்தவ ளொருத்தி காண்டியே. (23)

சிறங்கணி காவியிற் செப்ப வேந்தனைப்
புறங்கணித் தணிகணி புகாத வண்டென
நிறங்கனிந் தூசலாற் நெஞ்சிற் கால்பொரு
கறங்கென வொருத்திசேர்ந் துலைதல் காண்டியே. (24)

பனிபடு சண்பக மலரிற் பட்டிகை
யினியவெண் பட்டக நிழற்ற வெய்தியே
கனிபடு மொழியினர் களுலப் பாண்குரற்
றுனியளி வெரீஇப்படர் தோற்றங் கண்டியே. (25)

(வேறு)

கொய்யும்பல மலரிற்செறி தொடலைத்திரள் கொணர்ந்தே
வையுந்திய யயில்வெம்படை மன்னன்புய மிசையே
சையந்தனி லெழுமின்னெனத் தரித்தேமொழி விரித்தே
பெய்யும்புய லளகக்கொடி பெயருஞ்செயல் பாராய். (26)

விடுபன்மல ரொருமன்னவன் விரியங்கையி னெடுத்தே
வடுமன்னிய குழலின்கடல் மதிக்கும்பொழு தெழுந்தே
நெடுமின்னிடை மலர்மங்கைகை யயிராபத நிறையப்
படுகங்கையம் புனலாட்டலின் சொரிகின்றது பாராய். (27)

தேடித்தரு மலரோமயி லள்கத்திடை செருகக்
கூடிப்பிரி யொருமங்கைபின் னுறவம்மலர் கொடுப்ப
வாடித்தல நிழல்கண்டுயிர்த் தணிபன்மலர் சிதர்வித்
தூடிக்கரு விழிசேந்தய லொருவுஞ்செயல் பாராய். (28)

ஒருமங்கைகண் புதைத்தேமறித் தொருமங்கை தனதாம்
பருகுந்தலை வனேநாமம துரைத்துக்கரம் பறித்தே
மருவுந்திரு முகநோக்கினள் புறநோக்கு மயக்கின்
றெருமந்தழற் படுமாலையிற் புறஞ்சேருதல் பாராய். (29)

மலர்கொய்குனர் தொடைகட்டுனர் மழைக்கூந்தலிற் பெய்மார்
பலரின்பம துணராமலர் பதியாவுலை தொழில்சேர்
சிலர்நீங்கருந் திருவத்தர மு[ன்]னில்லாரெனச் செறிமேய்
புலரும்படி யுளமேக்கறப் புகுமாதரைப் பாராய். (30)

தொடுக்குந்தொடை நறவத்துளி துளிக்ககளி துளித்தே
யெடுக்குங்குர லிசைத்தேன்விளி விளித்தியாணரு மணுங்க
நடுக்கும்பிரி வினையுள்ளிதன் கொழுநன்கொள நாணம்
விடுக்குங்கொடி தனியேநனி நிழல்மேவுதல் பாராய். (31)

இத்தன்மையின் மலர்கொய்தவர் சரற்காலத்தி லேகின்
நத்ததுஞ்சுர நதியிற்பதி யெனச்சேர்ந்திடு தகவின்
முத்தும்பல கலனுந்துறந் துய்ந்தேவையை முதற்கொண்
டெத்தன்பினிற் புனலாடுதற் குறுகின்றவை பாராய். (32)

வாசப்புல னிறையுங்கல மருவக்கல மருவிப்
பூசற்பெற நிரையாயிரு புறத்துஞ்சம ரமைத்தே
யூசற்புகுந் துகைத்தாலெனத் துரக்குங்கலத் துடனே
நேசத்துடன் புயலிற்றடித் தெனநேருதல் பாராய். (33)

காழ்பட்டசந் தரைக்குந்தளக் கலவைப்படு பந்துந்
தாழ்பட்டபைந் தொடையுங்கரத் தெடுத்துஞ்சமர் தடுத்துஞ்
சூழ்பட்டவெண் டிரையிற்சுரித் தெழுந்தாமரைத் தொடர்பின்
கேழ்பட்டதங் கலத்தாழ்ந்துபின் கிளர்ந்தும்பொரல் பாராய். (34)

சூலார்கரும் புயலிற்படத் துடிக்குந்தடித் தெனவே
பாலார்கருந் தோணிப்படை பாணிப்புன லிறைத்தே
வாலார்தவ முரிந்தாலென வொளியேபெற மடவார்
காலார்திசை படர்வல்லியிற் கலந்தேபொரல் பாராய். (35)

வெடிக்கும்பிறை நிலவிற்சிவி றயிற்பன்முறை விடுவான்
வடிக்கும்பனி நீரிற்கலந் தெறிசுண்ணமு மருவித்
துடிக்குந்தகிற் கொடிசெம்மணிக் குவையிற்படர்ந் தெனவே
படிக்குங்குயின் மொழியாருடற் பரக்குஞ்செயல் பாராய். (36)

பலர்மாதர் ஒருகேழ்மிசை பாணிப்படு பாணி
நிலவானது மலேமேற்படு செயலாமென நிறைப்பக்
குலவாதவந் திசையின்புடை விரிந்தாலெனக் குழலி
னலவாசகுங் குமத்தண்புன லணிவீசுதல் பாராய். (37)

இவ்வாறுதன் மனைவிக்குரைத் திசைமைந்தனும் பிறருந்
தவ்வாப்புன லயர்ந்தாரமு தருந்திப்பகற் சரித்தே
வொவ்வாவிருட் பொழுதவ்வையி னுறைந்தாரவ ணிறைந்த
செவ்வாயுடைப் பொதுமங்கையர் செயலுஞ்சிறி துரைப்பாம். (38)

(வேறு)

குறுமுனை விரலரி விழிகொண் முத்தலை
யுறுபணை தேங்கரி தலையி லொண்ணறு
மறுவில்கா தம்பரி கொளாது வாருண
நறவுகொண் டனைவரும் பொதும்பர் நண்ணினர். (39)

கங்குலின் வெண்மதிக் கடுப்ப வாய்வழி
பொங்கிய நறவுடைத் தொண்டி பொற்பினுற்
செங்கைவெண் டாமரை யலரிற் செவ்வழி
தங்கிய யரிக்குழா னிகர்ப்பச் சார்ந்தவே. (40)

மதிநில வழியவாய் மலர்ந்த வாம்பலின்
விதிபெறச் செய்யவாய் விரித்து வெண்ணிறம்
பொதிமணி வள்ளத்தி னறவு பூவையர்
திதியி னுபகரித் தருந்தல் மேயினர். (41)

வெள்ளிவள் ளத்திடை வாக்கு வெண்ணறுத்
தள்ளருங் கரங்கொடு பருகு தண்மைநீர்த்
துள்ளுவெண் டிரையின்வெண் கமலத் தோயச்செப்
புள்ளதா மரைமிசை யுமிழல் போன்றதே. (42)

மட்டுடை வள்ளத்தை மடுப்ப வாய்வழி
யுட்டெளி யாப்புறத் தொழுகி வெண்பலின்
விட்டதண் டசுரர்போர் விரிந்து நால்வது
பட்டமுத் தின்றொடை பரத்த லொக்குமே. (43)

வழிந்தவெண் ணறுமணி வள்ளத் தின்வயி
னிழிந்திடா விரகத்தீ யெழுந்து கண்ணிடைப்
பொழிந்தபோற் சேந்தன புகைமு றிந்தபொற்
கொழுந்துடை யோதிவென் குலைந்து சாய்ந்ததே. (44)

விரிந்தவேள் விக்குழி வீழ்த்த நேயனை
தெரிந்தவள் ளத்திடை நறவு தேக்கலான்
முரிந்தெழு கனலெனச் சுழன்று மொய்குழற்
சரிந்திட வதரிசே ராட்டஞ் சாரவே. (45)

மணியிழைத் தனசெம்பொன் வெள்ளி வள்ளத்தி
லணியிறைத் தார்விருந் தயுர்ந்து வாக்குபு
பணியிழைக் கலேவடம் பரிந்து வெண்ணிலாத்
தணியிழைக் கலேயெனத் தரிக்கச் சார்வரே. (46)

வெடித்தெழு மூரலுஞ் சோம்பு மெய்யெலாம்
பொடித்தெழு வேர்வுஞ்சே ரோமப் புள்ளிம
மடித்தெழு மதரத்தில் வள்ளெ யிற்றுட
னடித்தெழு குரவையும் (ஞா) நால மேவுவார். (47)

ஓடுவர் தழுவுவ ருருத்துக் கட்டுணே
நாடுவர் வணங்குவர் நற்கை கூப்புவர்
பாடுவர் கடிமணத் தோகையைப் பாங்குறத்
தேடுவ ருடலுயிர் தேரு மாற்றினே. (48)

எழுவர்வாய்க் குதலேயி னிசைப்பர் பாரிடை
விழுவர்செம் மலர்த்தொகை வீசித் தெய்வமே
தொழுவர்மெய் யறந்துயிர் சோர்வர் வாய்விடுத்
தழுவர்பே ரின்பத்தா ரன்பர் போல்வரே. (49)

இந்துவை வள்ளமென் றிழிநி லாவிஉனக்
கந்தவெண் ணறவமென் றுள்கிக் காயத்தே
சிந்தினர் நறவைவான் வள்ளஞ் சேர்த்தினர்
பைந்தொடி யார்களே பகையென் றேதுவார். (50)

இன்னணம் பரத்தையர் நறவத்தி ன(ன்)புறப்
பொன்னணங் குறுபதி ஞேன்பிற் பூவைய
ரன்னமுஞ் சுவையுமே யருந்திப் பள்ளியின்
மன்னணங் குறநிறை கலவி வாய்த்தனர். (51)

இசையியன் நடத்தினுங் கலவி யின்பத்து
நசையுறு கதையினு நவில்புன் கோட்டியார்
வசையினுந் தூதினும் புல்லி மாண்பினுந்
திசைவிளங் கிருளொரீஇச் சிறப்பு மேயினுர். (52)

(வேறு)

நதிபெறு பொழிலிடை நனியே
விதியுட னயர்தலே விழைவா
யதிச முடனருள் செய்தன்
பதியவர் புகுசெயல் பகர்வாம். (53)

ஓரைச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 598.

நகர்புகுச் சருக்கம்

கறைமுற்றிய விருணக்கிய கதிருற்றெழ வெழுந்தே
துறைமுற்றிய குலசேகரன் றொழுவிச்சைய ரிறைவன்
பிறைமுற்றிய மதிவானிடைப் பெயர்ந்தாலெனப் பெயர்ந்தான்
பொறைமுற்றிய மலையத்துவ சனுமானத்திற் பொலிந்தான். (1)

வளவன்படை புடையிற்செல மடமங்கையொ டரசன்
தளவண்பொழி னெறிகொண்டிறை சரியிற்கரி பரிதே
ரிளமைந்தர்கண் மடவாரொடு படரச்சுட ரெனச்சேர்ந்
துளமங்கைமுன் மலையத்துவ சனுமின்னண முரைத்தான். (2)

அய்னூர்மல ரிதழ்விண்டென வலருந்திரு வடியாய்
பயனூன்மறை பரவிப்பலி சுடர்தூண்டிய மதியாய்
நயனூர்தமிழ் முனிபோற்று மணுளத்துட னண்பா
யியன்மாதவ ரறியாமறை வனமென்பது மிது வே . (3)

வாமக்கணை புதையாவமு மருளுங்கணைக் காலாய்
நாமத்தவர் தமக்கானந்த நடனந்தனை நல்கி
யிமத்தயன் மடியப்பலி நிறமுற்றிரும் புவனிக்
கோமப்புகை தவழச்செறி வெண்காடெனு மிதுவே. (4)

பிடியின்கரம் பிணர்நீத்தெனப் பிறழுமின் னிடையே
படியும்பணி மார்க்கண்டயன் வெருவப்படர் காலன்
முடியும்படி யொருதேவரு முனிமைந்தனை முடியா
தடியுந்தம தருளுந்தருங் கடவூரது வாமே. (5)

தசைந்தோங்கிய முலையாளிடை தளராவணி பருமத்
திசைந்தார்க்கரு மணியிற்சுடர் பொருரோமமின் னிடையே
யசைந்தாரணம் வளைந்தார்ந்தெனப் பணிவாயிற்கிண் கிணியார்த்
தசைந்தாடியோ ரடிக்காயிரந் தருமானக ரதுவே. (6)

இருக்குந்துடி வடிவுந்தடித் துருவும்புரை யிடையாய்
தருக்குந்தருக் கலைதன்றலை திருகித்தடம் படப்போர்
முருக்கும்படை முசுகுந்தனென் றுறையத்தரு முனிவோர்
திருக்குந்தெரு மறையும்பணி திருவாஞ்சிய மிதுவே. (7)

துயிலுந்தளிர் புரையுந்தியிற் சுழியுந்திய தோகா
யயிலுங்கட லிறுதிக்கென வகற்ருவய லுயிரும்
பயிலும்பதி யடைந்துய்ந்திடப் பார்க்குந்திருத் தோணி
யியலும்பதி யிதுபன்னிரு பெயர்பெற்றது மிதுவே. (8)

வளைக்குங்கிரி முடியாயிர மிரண்டாய் வனப்புறவே
முளைக்குஞ்செய லெனகொங்கைமொய் குழலேயய னிறுதித்
திளைக்குஞ்சிறை மறையப்பவந் தெறவே நிறைபூசை
விளைக்குமடி பெருமானுறை வேளூரெனு மிதுவே. (9)

அறமோம்பிய தவவிச்சுவட் டீனயைப்பணி காத்தாய்
புறமோர்ந்தரி யுணராண்றமைத் தாம்பூசனை புரிந்து
நிறமோங்கிய ஞானத்தினைப் புறநேரிழைக் கிசைத்துந்
திறமோங்கிடை மருதாயுறை சிவமாநக ரிதுவே. (10)

கதிர்கண்டலர் கமலத்திதழ் விரலார்கரக் குயிலே
யதிர்வும்பரி புரவோசையி லரவம்புலி பவநீத்
துதிரும்படி துடியோலிலே யொருதாள்விசை நடத்தாற்
பொதிருந்தவ முனிவோர்பணி பொன்னம்பல மிதுவே. (11)

சூழத்திரு விசையாழ்மருப் பெனச்சேர்தொடிக் கரத்தர்
யாழிக்கல ரோராயிரத் தமையாவிழி யிடந்தே
பாழிப்பத மிசைநான்றபொற் கழலிற்பதித் தரிதாழ்
வேள்விப்புகை முகிலேப்பொரு விழிமீழலை யீதே. (12)

மணத்திற்சிறந் தணியுந்தொடை நிகருங்கர மயிலே
கணத்திற்படி முடிதாங்கிய கற்கோதர னனேயாத்
திணர்க்கோத்துட னருச்சித்திட வருணல்கிய திவனேந்
திணைக்குட்பல புனற்றண்பணைத் திருநாகீச் சுரமே. (13)

கைச்சங்கமொத் தெழிலேப்பெற வொளிருங்கள முடையாய்
மெய்ச்சங்கர னுறையாயவ னடிதாழரி மெய்யின்
மைச்சங்க முறப்போற்றிய பரந்தாமன திருப்பா
மச்சந்தனே யகற்றிப்பொலி யாராவமு திதுவே. (14)

கடகத்துளே யெனவட்டமொ டுறையுங்கவுண் மயிலே
யடையப்புவி கடலுண்டிடு மன்னுளுல கனைத்து
மிடையத்துய ரகலப்பெரு விதமுற்றிய கருனைக்
குடமுட்பட நிமிர்முக்குடை நகர்மற்றது குறியே. (15)

எற்றுமரை யிருள்வெண்மதி யெனுமானன வனமே
சுற்றுநதி யணியும்புயத் தொடைபோலிடை யிடையே
கற்றூர்மறை யொடுபோற்றிய பெருமான்பதக் கமலஞ்
சொற்றூர்பவ மறுக்குந்திருத் துருத்திப்பதி யிதுவே. (16)

மூரித்தள வலர்செவ்விதழ் சுதையைப்பொரு மொழியாய்
மாரிப்புன லதியின்புனல் வளர்வேணியம் புனலோ
டாரத்திரு விழியிற்புன னந்திப்புன் லருந்தா
தீரத்தொடு பவநீக்கிய வையாறெனு மிதுவே. (17)

அரியின்றிர ளிருசண்பக நிகர்துண்ட வணங்கே
சொரியும்புனல் விழியிற்பலர் தொழுமன்றி னிடமே
விரியுஞ்சுடர் வயிரப்பெருந் தூணுய்மறை விளம்பும்
வரியின்படி மனுவாடிய வளமாநக ரிதுவே. (18)

மதிவெங்கதிர் பொருதோருடன் மருவுஞ்செறி குழையாய்
விதிமைந்தரொ டெழுமாதவர் விழுமத்தொடு குழுமிப்
பொதிசெஞ்சடை யுடைவேள்விடை யமலன்புக லிருதாள்
துதிகொண்டுறை தவநீடிய துறைமானக ரிதுவே. (19)

இருவெஞ்சிலே குனியத்தனி மனிலந்தொட் டெனமேற்
புருவந்துணே விழிபெற்றருண் மயிலேபொன்னி நதிவா
யுருவந்திக ழரங்கக்கரு மணியுத்தரத் தொருபான்
மருவுந்திரு விருந்தான்வரு மன்றைப்பதி யிதுவே. (20)

வெண்டாமரை செந்தாமரை விழைவார்நிகர் மடந்தாய்
தண்டாவலி யிபமோடிழை கருசெந்துவு மிகலிப்
பண்டாரண நிறையும்பத பரமன்நெறி நிழலாய்
வண்டாவலி கவர்நாவலி லுறைகாவண மிதுவே. (21)

நிறங்கொண்டமு பிறையிற்கறை நிகர்சிந்துர நுதலாய்
கறங்குந்திரை திரையக்கரை கரையக்களி யளிசேர்ந்
துறங்குந்தரு முறியச்சுழி சுழியக்கலி யொலியாற்
பிறங்குந்தடப் பொற்காவிரி பிறழுஞ்செய லிதுவே. (22)

அரவத்தொலி யரவத்துட னமர்செய்திட விடபாற்
பரவப்பெருங் கிரிமுத்தலைப் படர்ந்தேபொன்னித் தென்பால்
விரவிச்செறி குணமுன்றென வேள்விக்கன லெனவே
திரமிக்குயர் பரமன்றிரி சிரவெற்பிது பாராய். (23)

சொரியுங்கரு முகிலொத்துகில் விரியுஞ்சுரி குழலாய்
விரியும்பல தலையிற்பணி மணிவெஞ்சுடர் விடல்போ
லரியும்பிர மனுநாடிய வடிவத்தட முடிமேற்
றெரியுங்கொடி படரத்தின கிரியாவது மிதுவே. (24)

(வேறு)

எழுந்த பொற்கொடுங் குன்றமீ திடபவெற் பிதுவான்
றெழுந்த கைப்பிரா னிந்திர னரும்பழி தொலைப்ப
விழுந்து மன்பினி லமைத்திடு விமானமற் றதனை
யிழிந்தி யாம்புவிப் படிதுமென் றிழிந்திறைஞ் சினனே. (25)

இறைஞ்சி மற்றொரு சோலைவா யிருத்தலுந் தந்தை
நிறைந்த சேனையோ டணைந்தனன் கங்கைநீ தகத்தைக்
கறங்கு காளிந்தி பாரதி கலந்தெனக் கலந்தே
வுறைந்து மாநகர்க் கெய்தின நகரமுற் றனவே. (26)

(வேறு)

இறுதியிற் புட்கர வெழிலி யாமெனச்
செறியொலி பரப்பின சேவ துந்துபி
மறுகிய விடியென வார்கொ டண்ணுமை
யறையொலி யகலிடம் பரக்க வார்த்தவே. (27)

முழங்கின வரியென மூரில் வால்வளை
தழங்கின வாசியிற் சங்கம் வங்கியம்
வழங்கின கொம்பொலி மாதி ரக்கரி
யொழுங்குறக் கையெடுத் துலம்ப லொப்பவே. (28)

பாற்கட லுரையெனப் பரந்த வெண்குடை
மேற்பொலி யரவென வட்டம் வீசின
காற்பவ ளக்கொடி கங்கை வான்செல்வ
போற்பல திசைகளும் புதையச் சூழ்ந்தவே. (29)

கறைமதிக் கதிரெனக் கவரி யார்ந்தென
வறைபல றண்டிரை கடற்போ லதிர்ந்தன
துறைதொறுந் தழற்கொடி தொடர்ந்த மாறனு
மிறையவன் தளர்ச்சுடர் படர்வ தேய்ப்பவே. (30)

கரியமான் மணிச்சுடர் கலந்த பொற்பென
வரிவையர் திசைதொறு மயினி சுற்றினர்
வரிமுடிச் சுடரில்வான் செக்கர் மெய்க்கர
ருரிமையிற் சூழ்ந்தெனத் தூம முற்றவே. (31)

மாதிரக் கரியினை விளித்து வம்மென
மேதுகை நீட்டல்போன் முகட ளாவிவான்
பாதவம் வேரொடு பறித்து ராயரி
யோதுமுக் கடகரி நிறையு லாயவே. (32)

காலினைக் காலெனக் காடிக் கான்றநீர்
வேலையை யெள்ளவா லுளைவி ரிந்திட
ஞாலமான் வடிவொடு நடந்த பொற்பெனக்
கோலவெம் பரிக்குழாங் குமுறிச் சென்றவே. (33)

பன்மணிக் காலிடைப் படிவெ னப்பிரான்
றென்மைய யாவினுந் தோற்ற லொப்பெனப்
பொன்மலைப் பலவரைப் போல மன்னவன்
வின்மணித் தேருடன் றேர்மி டைந்தவே. (34)

அயனொரு தினத்தினி லரச ரைத்தரு
வியனெனக் குமரர்கள் பாங்கின் மேவுற
மயனிரு மித்தன மாட வீதிசூழ்
பயனுடை மதுரையம் பதியின் மேவினன். (35)

தொடர்ந்தன வளவெயின் மகுடச் சூழலி
லடர்ந்தன கவின்புடை யரசர் பூணினின்
மிடைந்தன கொடிகுடை விண்ணிற் பொற்றுகள்
படிந்தபோன் மகள்விடு சுண்ணப் பண்பினே. (36)

பொற்றுகள் விண்ணகம் புதைக்க வாநதி
வற்றின விண்பதி மண்ணி னுடென
வுற்றது புலவர்கண் ணுற்ற தூரொளி
பெற்றதா மரைமக ரந்தப் பெட்பினே. (37)

மாகதர் சூதர்வை தாளர் வந்திகர்
பூகத ரியலிசை நடனர் பொற்களாய்த்
தோகையர் சூழ்தரச் சுதனுந் தந்தையு
நாகர்சூ ழரியென நகர நண்ணினர். (38)

மைந்தனுந் தானுநன் மதுரை யம்பதிச்
சுந்தரன் திருவடி தொழுது போற்றியே
கந்தனை யருளுமங் கயற்க ணுயகி
வந்தனை யாற்றித்த மில்ல மன்னினர். (39)

வளவனை யன்றியே மன்ன வர்க்கெலா
மிளநகை முகமனு வின்சொல் கூறியே
யளவளாய்க் கரிபரி யாடை பொன்பல
வளமணித் தணிவிடை மன்னன் நல்கினன். (40)

சிறிதுநா ளிருந்துபின் சென்னி யைத்தழிஇ
யுறுசிறப் புடன்விடை யுதவ நம்பியு
மறிவிலாக் காஞ்சினி மயிலும் பின்செலா
முறைமுறை தழீஇயிவை மொழிதன் மேயினர். (41)

என்னுடைத் தவப்பல னியைந்த திம்மண
நின்னுடை யடைக்கல மென்று நேயத்தி
னுன்னுடைக் குலமர புன்னை யோம்பெனத்
தன்னுடை மகட்கிவை சாற்றல் மேயினன். (42)

மன்னனு மனைவியு மியானு மற்றுள
தன்னையு மென்னவில் லறத்தி னூல்வழி
முன்னுவா யெனவிடை யுதவி மொய்ம்புடைச்
சென்னியேய் தென்னவர் சிறப்பின் வைகுநாள்; (43)

(வேறு)

விடைகொடு சென்னி யெய்த
வெறுக்கையின் வெறுக்கை நீடிப்
புடையுடை மகன்பாற் றன்பாற்
சென்னிகம் பரத்தை யாக்கி
நடையுடை வேந்தன் சேருந்
தவம்பெரும் பருவ நண்ணத்
தொடையுடைத் தமிழ ளித்த
முனிவருஞ் செய்கை சொல்வாம். (44)

நகர்புகுச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 642.

———

உபதேசச் சருக்கம்

சுற்ற மொன்பதிற் றிரட்டியுஞ் சுற்றமங் கையர்கள்
பொற்ற வான்மதிப் புறத்துடுக் கணமெனப் பொலியப்
பற்ற வாலி லருள்நிகர்ப் பளிக்குவே திகையின்
கொற்ற வாளரி யணையுழைக் கொற்றவ னிருந்தான். (1)

இருந்த தோர்குல சேகரன் புறத்தினி லினிமை
பொருந்து முண்டகன் புரந்தரன் பாலனைப் பொற்பி
னிருந்த மிழ்க்கட லுமிழ்ந்தரு ளகத்திய னனைய
விருந்து கண்டனன் உவகையின் வேந்தனுங் கண்டான். (2)

பாய வார்கலி யுவாவினிற் கலித்தெனப் பரிவின்
மேயி னன்றவக் கடல்விழு மதியிற்றுள் வீழ்ந்து
தூய நீர்விழி சொரிதரப் பெரிதுளஞ் சோர
நேய மாமணித் தவிசளித் திவைநிகழ்த் தினனால். (3)

மதித்தி டாக்கடல் சுதையளித் தெனக்கடன் மருவிக்
கொதித்தி டாப்புய றுளிகொழித் தெனத்தரு நிரைகள்
விதித்த காயிலாக் கனிகனிந் தெனவிதி நிகரா
யுதித்த மாதவத் தடிகளூற் றதுவும்மெய்த் தவமே, (4)

ஆதி நாயகன் றிருமுடிக் கங்கைபே ரன்பி
னோது மெனமணி முடிமிசை யழிந்தென வுழையா
மாத வப்பல னருவிச்சேர் மாண்பென விழிவண்
டேத நீக்குதாட் போதெனத் திடத்தலர்ந் தனவே. (5)

வளிக்கு வான்கதி ரெளிதினில் வந்தென வடியே
னிழுக்கு றுநெடு நாட்பசித் தெப்பிறப் பினிலோ
முழுத்த னும்புரிந் தேனினித் தவமியான் முயற்றே
னழுத்து பேரன்பி னெத்தவஞ் செய்ச்செய லிலனே. (6)

நள்ளி ருட்பொரு மாதவ நிகரென நடந்தே
னுள்ளி ருட்பிழம் பகற்றினை யுனதடைக் கலமென்
புள்ளி ருக்குமா லைச்சிறு புதல்வனும் யானுங்
கள்ளி ருக்குமம் புயத்தருஞ் சரணெனக் கனிந்தான். (7)

அதுக ணத்தினி லிருந்தவன் கருங்கட லடக்கு
மதும லர்க்கரத் திருக்கையே வழங்கலு முழங்குங்
குதுகு துப்பினன் கதிர்வழிக் குலவுகோ டரத்தின்
றுதைம ணிப்பொலன் மடங்கலந் தவிசிடைச் சார்ந்தான். (8)

சார்ந்த மன்னனைத் தென்னவன் றனிமதிக் குடைக்கீழ்
சேர்ந்த பல்லுயிர்க் களிப்பினால் தெவிட்டநீ புரந்த
வாய்ந்த நாட்டகம் வலியவே யெனச்சொக்க னருளா
லாய்ந்த நின்னரு ளாலைய வழகிற்றென் றிசைத்தான். (9)

(வேறு)

ஆண்டனன் புவியெலா மரசர் போற்றவே
பூண்டன னுமதருள் போத மில்லரின்
மாண்டன னெனுமுரை யஞ்சி வான்கதி
நீண்டன னெனமொழி நிரப்புவா யென்றான். (10)

மாறுகொண் டருள்தவ மாட்சி யாட்சியை
யூறுகொண் டிடவர சுரைத்த வேலையி
லேறுகொண் டடற்கட லருந்து மேந்தலும்
வேறுகொண் டோருரை மேவிக் கூறுவான். (11)

எண்ணில்சா லுழுதெரு விடினும் வித்திலா
மண்ணில்ப லன்பெரு தனைய மாட்சிபோ
னண்ணிய தொல்வினை நன்மை தீமையாற்
புண்ணியந் தீமையிற் றவம்பொ ருந்துமே. (12)

நிறந்தரு வோன்செய்கை தூரி நேரினு
முறைந்தவோ சார்விலா தேரிவங் காட்டுமே ?
யறம்பொரு ளின்பம்வீ டமர்ந்த தென்னினுஞ்
சிறந்தவூழ் வசமலாற் செய்வ தில்லையே. (13)

தனதுயிர் மயிர்ப்புறஞ் சாரத் தீண்டிலா
கனவெனு முடலினைக் காகநாய் நரியென
தெனதென வுணவு ரைக்க நாறவும்
புனைகுவர் தூய்தலாக் குரம்பை போற்றியே. (14)

இருதிய லொருமையி லென்ன வெய்தவு
மறிகிலா மினுமலப் பூழை யார்வத்தின் ?
குறுதிவீய்ந் தெரிபடு நிரையக் கோட்படர்
மறுகுவ ரென்னையே பொறியின் மாந்தரே. (15)

இரும்புகொல் பவன்குரு கென்ன வாயுவுட்
பொருந்திய துருத்தியைப் புல்லர் நாவினில்
வருந்துற முகமனில் வழுத்தக் கேட்டுநல்
விருந்தென நன்னெறி விடுப்ப ரென்னையே. (16)

தொடைநரம் பென்புறுப் புறைநெய்த் தோர்முடி
படர்புய மிறைச்சியே ஞாயில் வாயில்பா
லடர்மலப் பூழையோ ரரண மெய்யிதை
யுடையவன் பிறந்திடி லோம்ப லாகுமே. (17)

மலக்குடர் மூழ்கிநீர்ப் பூழை வாய்மரீஇ
யலக்கணிற் சிறூர்பெற வனப்பி லார்ந்தொரு
நிலைப்படர்ப் புள்ளெரிக் குணவு நீடக்கை
குலைத்திட மடிந்திடுங் குரம்பை யுள்ளுமே. (18)

புள்ளுமா வும்பெரி தவர்விற் போந்துயிர்
விள்ளுமை யறிவின ரவாவில் வீழ்வரோ
வுள்ளவா வினிலொரா யிரக்க ணுற்றரி
யெள்ளுற வான்பதி யிழந்த தில்லையோ. (19)

தேய்ந்தமெய் யிற்சில பகல்சென் ருற்றினோர்
வாய்ந்தவீட் டினிநெடு நாட்கள் வைகுவா
ராய்ந்தமா தவத்தில்வீ டளிப்ப தொன்றிலை
பாய்ந்தவான் மண்ணினோ டும்பர்த லத்துமே. (20)

தெளிந்தரு மாறனுந் துறவிற் சேர்வுரு
தழிந்திடு மரசினு முள்ளி யாய்ந்திடில்
விளிந்தவர் தம்மையும் விளிந்த வேந்தனை
முளிந்தவர் தம்மையு முணர முற்றுமே. (21)

நான்முகன் றூரிகை நமன்கையிற் றேடு
வான்முகம் பார்வழி யிளைப்பு மாறவே
தூன்முகத் துறவிடா நோன்ற லைப்படா
தேன்முகத் துறவிடைச் சிறப்பிற் சேர்வதே. (22)

(வேறு)

வானின் மண்ணிற் றிருநிலை வாய்த்திடா
ஞான மெய்வகை நல்கப் பெயற்றுரந்
தான காட்சிப் பொருளற் றெழுகினர்
மேனி மைந்த வெளிப்புலன் றுய்ப்பரே. (23)

மன்னு மெய்யுண ராமதி யாநினைந்
துன்னி ஞான விளக்கி யைந்ததைப்
பொன்னு லாமலர்த் தாளிணைப் புல்லினோ
ரன்ன நாயகன் போலிறை யாவரே. (24)

(வேறு)

என்று கால்பொராச் சுடர்தெருப் புனலிடைப் புதையா
தின்று மாநிலத் தமர்வுரு வான்வெளி நிகழ
மன்றன் ஞானத்தை யுரைத்தெழுத் தஞ்சுடன் வலியாற்
றுன்னு வேந்தனைக் குறுமுனி தொடரினை விடுத்தான். (25)

எளியி னைப்பிர ணவத்தோ டஞ்செழுத் துபதேசத்
தெளிவி னுமன வெழுச்சிமெய்த் துடிப்பவாத் தீர்ந்து
களிபொ ருந்துறத் தேம்பியுட் கனிந்துபங் கயத்தா
ளளிய தாயன்பி னு க்ந்துகந் தருளுட னுவந்தான். (26)

குறிப்பு டன்குறி பலபொருட் கொள்விருட் குலவு
வெறுப்பு டன்விருப் பொழிந்துஞா னக்கணே விழித்துச்
செறிப்ப சச்சிதா னந்தத்திற் பூரணத் திகழ்வாய்
நெறிப்பு குந்தருள் புடைத்தன்ன் வெழுதிய நிருபன். (27)

காய மாநகர் கன்னெழன் றுவளப்புச் சிவப்பு
நேய மார்க்கரு மந்திரு வுயிர்ப்புவா னிறைய
மேய வேர்க்க மொழியவுள் புந்தியும் விடுத்து
நாய கன்பதம் பூண்டன மூண்டனன் மயத்தால். (28)

சனன மாய்வந் தகக்கர ணம்புறக் கரணம்
புனித மாகிய வவத்தையைந் தகம்புறங் களாதி
யினிய தோர்சமை யஞ்சடங் கணியிதற் கவலே
முனிவு நீங்கின னுலகெலாந் தானென முயன்றன். (29)

உணவு காட்சியுட் கனிவுகாண் பவைதனே யொருக்க
லிணைம லர்ப்பதத் தேர்வுசொற் றெளிவுதோன் றிடாம
லிணைய ஞானசக் கரநடாத் துவான்றவ மனைய
துணைகள் வேறிலான் சுந்தரன் றெழும்பிடைப் பட்டான். (30)

(வேறு)

குறுமுனி புரைகொடு வழுதி கோளிடைப்
பெறுமுனி விகந்துளம் பரித்தல் பேசின
முறுமுனி விலாதநோன் பியற்றி யோதுடற்
றெறுமுனி வொரீஇப்பதஞ் சேர்தல் கூறுவாம். (31)

உபதேசச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 673.

மாதவச் சருக்கம்

மாயை யுட்பொரா ஞான்றசை வலப்புனல் போல
நேய மார்குல சேகரன்விழித்து நீங்காத்
தூய தண்டமிழ் முனிபதந் தொழுதுதான் வேருய்ச்
சேயச்செய் மந்திரத் தவருட னின்னணஞ் செப்பும். (1)

(வேறு)

உரிமையாங் கொ ருவற்கல்ல
 னலாதொரு முறைவண் டென்ன
விரிமல ரணங்கு பற்றற்
 றவணவண் விழைத ரிண்ணந்
திருமக ளுழைய தாயுங்
 கானிடைச் சென்ருன் மாயன்
புரியழிந் திடரின் மூழ்கிப்
 புலேபுக்கா னொருவ னன்றே. (2)

ஈட்டலி னேம்பு மாற்றி (த்தி) ன்
 வெரூத்தரும் பொருளே யின்றி
நாட்டமார் துறவு பூண்டோ
 ரிருமையும் நயந்தோ ராகும்
பூட்டிய வுலத்தி னேடு
 புனலிடைப் புகுத லன்ரே
வேட்டமாஞ் செல்வ நச்சி
 நிரையத்தில் வீழ்த லென்ருன். (3)

வரும்பொழு தரிது போங்கா
 லெளிதிவை நச்சி லச்சம்
பொருந்துறுந் தேகங் காட்டும்
 பொருளிரு லிருமை தீர்வோர்
மருந்தெ னுந்துறவு பூண்டு
 வச்சிர யாக்கை மேவி
யிருந்தவ ரிருத்தல் கண்டு
 மிழிவுட னிறப்ப ரென்னே. (4)

அரசுட னட்போர் தாயந்
 தமதெனும் பொருளே யாய்ந்து
பரசிவீ டிழப்பர் நீத்து
 பதத்துணை பெறுகி லார்க
ளிரவிமெய் யொளியே காட்டி
 வைகலு மிறத்த லெண்ணர்
முரசுடை மன்னர் வாழ்க்கை
 யிமையென முனிகி லாரே. (5)

(வேறு)

முள்ளிரைச் சன்மலி முகிழ்த்த செம்மலர்
கள்ளவிழ் காயதாய்ப் பூளை காட்டிலீய்ந்
துள்ளகம் பனிப்புற வொருவக் கண்டுள
மெள்ளல றிளமையை யுலகினி லென்னையே. (6)

தூனகு வேற்கணார் போகந் துய்த்துயர்
வானகம் வழுத்தரு விளமை மன்னினு
றூனகு மம்புகொள் சிலையி னேங்கிய
கூனுட ருழ்த்துந்தா னங்கொ டுக்கிலார். (7)

மங்கையர் விருந்துண மருவி யிம்மையே
வெங்கண்மா நகரிக்கு மினிமை மேவுவார்
பொங்கிய வானவர் போற்று தற்கொரு
துங்கனா னம்பெறூர் சுழித்து வீய்வரே. (8)

நிறைகலை தேய்ந்துடன் மெலிந்து நீர்மையா
லறைதரு நாண்மதி மாட்சி யோர்கிலர்
குறையுநா ளாதவ மஞ்சல் கொட்பென
வுறைதரு மிளமைகண் டுவப்பு மேவுவார். (9)

யாமுளம் பின்றவ மியற்று வாமெனாத்
தோமிகு மிளமையே தோய்வ தன்றினித்
தாமர்சேர் துறவிடைக் கலந்து வைகனு
மேமமி லினிமையி னுறைய வெண்ணிலார். (10)

போயநாட் சிறிதுபின் பொருத்தி யெண்ணமே
லாயநா ளிருத்துமென் றன்று வீயவர்
நாயிரு மளவை யின்மனு ணுக்கொளா
மாயுமேய் மொக்குளென் றுண்டு மாண்பிலார். (11)

துளித்தவெண் பனியெனத் தோன்றி யாகம்விட்
டொளித்திடு மொருவன்வா முரையை யெண்ணிலர்
களித்திடு க்ளிற்றினிற் கதழ்ந்து கூற்றுவன்
விளித்திடத் தமரடி வீயு மாந்தரே. (12)

அழைத்திடர் மரீஇவிடை கொண்டி டந்தகன்
நிறைத்தபா வட்டமொத் தியங்கு சீவனே
டுழைத்திருந் தருந்தின மொருவிக் காண்கிலா
மழைக்கணார் மனத்தினின் மருள்வ ரென்னையே. (13)

விரவிய மடமையாம் வித்தில் வேதனை
மரமுத லாசைவேர் வாய்ந்த தாதன்மீ
யுரிதளிர் பெறுசினை யவலம் பூத்துக்காய்
பரவிய விடும்பையே பழுத்து வீயுமே. (14)

மெய்யெனும் பெயர்கொடு மெய்யெ லாமிகும்
பொய்யெனப் புள்ளெரிக் குணர்வு பொங்கிமீ
தைவளி யெனைய தகவை யாயதை
நொய்யரி னுனித்திடர் நீங்க நோக்கிலார். (15)

இறந்தவர் பெருமையு மிறைவ னைத்தொழாத்
துறந்தவர் தன்மையு முணர்ந்த தூய்மையேன்
மறந்தரு செல்வத்து மயங்குற் றென்றிருத்
துறந்துமெய்த் துறவினிற் றுறக்கஞ் சேர்வனே. (16)

(வேறு)

மன்னவ னுரைத்த வாய்மை
தேக்கியுண் மறலிச் சேரா
வன்னவர் முனிவன் வாய்மை
யகத்துறத் துறவு வேண்டி
முன்னிய வுணர்வு மன்னன்
பிரிவெனு முயற்சி தானு
மின்னலிற் பொரவுள் ளோய்வுற்
றெருவழி நிலைத்தி சைப்பார். (17)

அரசர்கள் வருணம் பாரைப்
பொதுவுற வாழி யோச்சி
முரசொலி யுமிழ மைந்தர்க்
கணிமுடி சூட்டி வானம்
பரசுநற் றுறவு பூண்டு
சின்மய பரத்தைச் சேர்வர்
விரைசெறி தொடையா யின்னுங்
கேளென விரித்துச் சொல்வார். (18)

காதிசெய் புதல்வன் முற்றுங்
கரத்தன வலியன் றெண்ணு
மாதவம் புரிந்து வேத
முனியென மருவி வானிற்
கோதின்மண் டவமி யற்றி
யருந்ததி கொழுந னோடு
மோதுறு மொருவ னென்ன
வுயர்ந்தன னளியின் மல்கி. (19)

பார்வள முன்னிற் றுங்கிக்
குடைநிழ லுயிர்கள் பல்கப்
போர்வளப் பகைஞர் போன்று
பொதுவறத் திகிரி யோச்சிக்
கார்வள நதியின் ஞாலங்
கவினுறத் தருமுன் சேய்முன்
னீர்வளத் தழுந்து நீரிற்
சிறப்பென நிகழு மன்றே. (20)

நன்மதி யமைச்சர் கூற
மைந்தனுக் கினைய கூறிப்
புனைமுடி முகுத்த நாடித்
தம்மெனப் பெயர்ந்து போனார்
மனவுவே கடஞ்செய் தாங்கு
மதிகொளக் கருணை சேர்த்து
முனைவனை முதலோர் துய்ய
மொழிகொடு தெருட்ட லுற்றார். (21)

(வேறு)

செய்ய மன்னவன் மனமுதன் மூன்றிற்செய் கையினில்
வெய்ய ரன்றி ராயான் றவிந்தவர் நட்பினை விடாது
வைய்ய மீதினி லோம்புதி பிரிவரென் மதியு
மெய்ய நீங்கிநீங் காவுயிர் விடுத்திடும் புவியில். (22)

அறமுங் கல்வியு ஞானமு மருந்தவப் பொருளு
நிறமு மன்னவ ரருள்வழி விதியென நிலைக்கு
மறைவ லாளரின் மூவரு நாலிரு வடிவுந்
திறமி குந்ததோ விருமைக்குந் துணையெனத் தெளிதி. (23)

மூவர் போற்றரும் பிரமமு மாரண முறையை
மேவு வேதியர் முனிவினை விலக்குறத் துணையாக்
காவன் மன்னவ வச்சிர யாழ்ப்பினாழ் கடக்கத்
தாவி லாமருந் தவரருள் தோன்றுத ரூமோ. (24)

கடைபடர் மண்ணிசை வலப்புனல் போலி கரந்த
வடிவ வெங்கன லனையவர் தமதருள் வடிவ
நடையி னுற்றளி யிருமையு நண்ணுமீ தல்லா
லிடரை நீக்கிவீ யாப்பதந் தருவதொன் றில்லை. (25)

அரிய மானவத் தணிபுன லூட்டிற்றீங் கன்றி
யுரிய நற்குல நற்குண நற்செய்கை யுடைத்தாய்ப்
பொருள்கண் மூட்டிலாத் தொன்மையி னடத்தார் பல்வளத்
திருவுருவரோ விதியினைப்பழிக் கிலினுற்றுனர் மீளலா நெறிபுகப்
பொருந்தார் நிறையவித் தெனுநிகமங் கணிலையுடை வேந்தே. (?)
(26)

நல்வி னைப்பொருண் முட்டில்லாத் தொன்மையி னடந்தார்
பல்வ ளத்திரு வுருவரோ விதியினைப் பழிக்கில்
வெல்வி னைப்பொரு ளன்றுள்மறை படிக்விளை யாத
தொல்வி னைப்பொருண் முதலிலார்க் கூதியந் தொகாதால். (27)

நிறைந்த வூருணி நெறியினை யடைப்பரோ நிதிசேர்ந்
துறைந்த காலையி லறஞ்செயல் விலக்குவ ருளரோ
குறைந்த நாள்வெறு மியாக்கை நற்பயன் குலத்தரு
மறைந்த கன்னலிற் சாறுகோ துடம்பென வறிதி. (28)

ஒழுக்கங் கல்விபெற் றில்லறத் தறத்தொழி லுவந்து
வழுக்குறு துய்ய வீட்டுறல் வள்ளியோர் தன்மை
விழுப்ப மேவுதம் பதிபுகத் துணையுறு விழைவ
ரிழுக்கி யெய்துநா ளப்பய னொருவர்தேர்ந் திலரே. (29)

(வேறு)

அறமெனு மிறைவயிற் றுன மாதியாய்
நிறைபடி நான்குள நேர்ந்து வாய்ந்தவீட்
டுறைபொரு டிருவரு மொழிவி லாதரு
ளிறைதரப் பெருமென மறையி சைக்குமே. (30)

புரிதுநல் வினையெனுத் துணைவில் பொறப்புநீர்
கரியுடை வேட்டுவன் கரியோ டெய்தினுன்
வரிமுயல் வேட்டையன் வறிந்து சேர்வனீர்
தெரிதிர மேல்பொருள் செய்மறுமை சேருமே. (31)

(வேறு)

என்னு றவெளி தெனவரி தெனவுரை யெய்தர்
வுள்ளந் தேரினும் பிறரிடத் துரைப்பினுந் துறைதேர்
நள்ளு நல்வினை யிம்பரு மும்பரு மமைக்கும்
வள்ள லேயிதன் வழிநிலம் புரத்தியென் றுரைத்தார். (32)

ஆட்டி னூர்புனன் மேவிற்கோ ளரியென வணிகள்
பூட்டி னூர்கதிர் வளங்கொளல் பொன்மணி மகுடஞ்
சூட்டி னுருதை யக்கிரி பருதியிற் சுருதிப்
பாட்டி னுரிற்பல லாண்டொலி பரவவாழ்த் துறவே. (33)

(வேறு)

மைந்தனை மணிமுடி சூட்டி மன்னவன்
புந்திசேர் தவப்பொறை பொருந்திநீ பத்தின்
கொந்துலா மருநிழற் கூட லாதியை
வந்தனை செய்குவான் களிப்பு மன்னினுன். (34)

பொருபுனல் விளங்குபொற் றாமரைத்தட
மருவிமுக் காலமு முறையி னூல்வழி
தருபுன லாடிவெண் ணீறு சாத்தியெம்
பெருமனை நண்புளம் பிறங்கப் போற்றினான். (35)

அருக்கிய முதலதா வைந்தி ரட்டியா
றுருக்கமா டணியுப காரப் பூசனைத்
தருக்குட னந்தரி யாகத் தார்புரிந்
திருக்குநா யகன்பத மிதையத் துய்த்தனன். (36)

உரமிதந் துரியவென் குழைந்து ளத்திடை
வரமிகும் பதநினைத் திருகை வாரிசம்
பரவவன் மடியில்வைத் திருக்கப் பார்வையுஞ்
சுரநிறை துண்டமீ தரிக்க வைகினான். (37)

இடைகலை பிங்கலை யிடைப்ப டாவிடுத்
தடைதரு சித்திர நாடி யார்ந்துறீஇ
நடைதிரை சுழிமுனை நாடிச் சித்திரத்
துடையவா னுதனிறீஇ யணியொத் தோங்கினான். (38)

அங்கியுங் காலுமீப் பரவி யமைப்பினிற்
றங்கிய பராசத்தி நிலையிற் சார்ந்திடு
திங்களிற் சுதைநிறைந் துளைந்தே வீட்டியே
பொங்கிய சதாசிவப் பரனைப் போற்றினான். (39)

அயன்முத னவமுவி ரண்டம்பு யத்துச்சின்
னயனமோ டுறீஇப்பல நாளி யோகத்தி
னயநிறைந் துவாதசாந் தத்துச் சொக்கனரு
ளியநெறி யெரியைவிண் ணளவு மீட்டினான். (40)

பூசையு மியோகமும் பொருந்து பூழிய
நேசமு முவந்தணி கூட னின்மல
வீசனுஞ் சொக்கனு மிதையத் தாமரை
மூசொணுக் கதிரென முயக்கித் தாங்கினான். (41)

வான்செவ் விடைநிறை வாயு நாசியின்
கூன்கனல் விழியினீர் நாவிற் கூடியே
நான்கிரண் டிருதிசை நிறைந்து நரகமொத்
தூன்கனிந் திவனுற வெரியு லாவதே. (42)

அரியய னுதியா ராலவா யப்பரன்
விரிமலர்த் தாளிணைப் போற்றி வேந்தனுக்
குரியதா ருளரென வோல மிட்டனர்
வரியத ளுடைப்பிரான் விடையின் மன்னினான். (43)

வித்துரு மக்கிரி வெள்ளி வெற்புமீப்
பைத்தெழு கோடி புறம்படச் சேர்ந்தென
மெய்த்தவர் பணிந்திட விடையின் மாதுட
னத்தன்வேந் தகத்துறைந் தென்ன வண்மினுன், (44)

அகதறட் மலருகைத் தானெ ழூந்துபோ (?)
யிகற்பெரு விடையுட னெய்த கண்விழித்
துகைத்தநீர் கரைபொரு துகைத்துத் தேங்கல்போ
லகைக்கொடி பாகனை நண்பிற் போற்றினுன். (45)

(வேறு)

அருவாகி நாடு மனுவாதி வேத
மளவாது லான நிறையு
முருவாகி ஞான வெளியாகி வீடி
லொளியாகி யாரு முணரா
மருவாகி வாச மலராகி வான
மதியாகி வீறு கதிராய்
பொருவாரு மோத வரிதாய நாத
புகழால வாய மலனே. (46)

ஆகாய மென்ன நிகுணத் துலாவி
யதில்வந்த வாயு வெனவே
யோகா நலத்தர் பரிசத்து மேவி
யொளிதந்து வந்த கனல்போற்
பாகார் விழிக்கு ளுருவாகி யோதல்
பணிநாவி நீரின் வடிவாய்
மாகாய மான மழுவுந் தரித்த
மதுரா புரிக்கு ளிறையே. (47)

சமையங்க ளாறு மெதிரே பிணங்கி
யவர்தங்க டெய்வ மெனவே
யமையும் பிரானு னளவேதெவ் வண்ண
மவையே திவ்வாறு னமைவே
இமைகொண் டிடாக்கண் முனிவோர்கள் வேத
முணரா யெனக்கிவ் வெளிதா
யுமைமங்கை யோடு பதமே யளித்தி
யுனையே யிதென்று முணரேன். (48)

எக்காலு முன்னை மறவே னினக்கிவ்
 வுருநல்கி மல்க வெளிதோ
புக்காயுண் வேணி யுறையிந்து நல்கும்
 மரபென்று கொண்டு புகலத்
தக்கா யெனக்கு மீளாத வீடு
 தருவா யதொன்று முணரேன்
சொக்கா யெனத்தன் விழிநீர் பெருக்கி
 நிறைநண்பி னோடு தொழுதான். (49)

முடியிற் சுமந்து மறைநாடொ ணாத
 முளரிப் பதத்தி னிடையே
படியிற் சிறந்த கனல்விட்ட சோதி
 பருதிக்கு ளெய்து மதுபோ
லடியிற் கரந்து பெருமானு மீள
 வமரா லயத்து ளனைய
விடியொத்த பேரி முரசத்து நம்பி
 யிடரிற் கலங்கி னனே. (50)

(வேறு.)

கோதி லாக்குல சேகரன் சொக்கன்றாட்
போதி னெய்தல் புகன்றன மெம்மனே
மாது காஞ்சனை மாலை மடித்தலை
வேத வேள்வியி னெய்தல் விளம்புவாம். (51)

மாதவச் சருக்கம் முற்றும்

ஆக விருத்தம் 724.

திருவவதாரச் சருக்கம்

ஈன்ற தந்தைவீ டெய்த விரைத்திரைத்
தூன்று பையுளி ஞேனட்டுத் தாயொழித்
தேன்ற வான்றளி ரென்ன விரங்கலுந்
தோன்றி ஞன்றமிழ் தந்தரு டோன்றலே. (1)

அரந்தே தன்னே யரந்தைப் படுத்தியே
நிறைந்த நெஞ்சறி வற்றிடு நீர்மையோர்
புரந்த ரன்றனி வின்டுற்றுத் துன்பத்தைத்
துரந்து பாரின் சுமையமைத் தாற்றுவாய். (2)

படித்த நெஞ்சி னலக்கண் மரீஇயினர்
வெடித்த சொற்பகைத் தொண்டென மேவுவா
ரிடித்த பின்மழை யெய்துதல் போலவே
பொடித்த லக்கண் டிருவைப் புகுத்துமே. (3)

மைந்தர் பார்கொள மன்னவர் கான்மரீஇச்
சிந்து ருத்தலஞ் செய்துவீ டெய்துவ
ருந்தை சொக்கன் றுணேப்பத முற்றனன்
றந்த வேந்துயி ரென்புவி தாங்குவாய். (4)

காட்சி யாதி கலப்பதுஞ் சின்மய
மாட்சி தேர்வதும் வீட்டின் வளமையு
மாட்சி சேரறி வாலன்றி மற்றெரு
சூட்சி யில்லென நான்மறை சொற்றதேல். (5)

செறியுந் தீமையும் புன்மையுஞ் செற்றிய
பொறியி னல்லிருட் போக்கற நீக்கியே
நெறியு லாங்கதிர் நேர்ச்சுட ரேனு
மறிவி ஞன்மதிக் காய்ந்துளங் கோடியே. (6)

என்று கும்ப முனிவ ரிசைத்தலுந்
துன்ற லக்க ணெரீத்தன் தொன்மையோர்
நின்ற செவ்வி நிலேயு ணர்ந் துற்றனன்
மன்ற ருழு மலேயத் துவசனே. (7)

பரந்த பாற்கடல் போலிசைப் பாரெலா
நிறைந்த தன்குலச் சேயென் றண்மதி
புரந்து நீழலிட் டென்னப் பொலிந்ததாற்
கரந்தி டாதரு ளாரவெண் கவிகையே. (8)

வீரத் தின்கரை மெய்யி னிருப்பிடம்
வாரத் தின்ஒரு வண்மைப் புயனுப
காரத் தின்கடல் காட்சியின் கண்ணவர்
வார்வத் தண்பொறை யிற்புவி யாயின. (9)

அறத்தி னாட்சி யகிலந் தரிப்பதி
நிறைத்த சேட னிடத நெடுங்கிரி
மறத்தின் கூற்றுவன் மாற்றலர் காலன்மெய்ச்
சிறப்பிற் றனென வாட்சி செறிந்தனன். (10)

சுருதி போலத் தொகுத்து மிவன்புகழ்
மிருதி போல விரித்து மனுவெனக்
கருதி டுங்கட வுட்சரித் தக்கவின்
றருதல் போல்விணுய்ப் பாருந் தழைத்ததே. (11)

கொடைக்கட னிறுத்த செங்கரத் தன்கொளக்
கொடைக்கட னிறுத்தமெய் நலத்த னண்ணலார்
படைக்கட னிறுத்தபோர் வாளன் பாவலர்
தொடைக்கட னிறுத்த ருண்மா ராட்சியான். (12)

நன்மதி யவர்வழி நடக்கு நீர்மையன்
புன்மதி யினர்வர வரிய புந்தியிற்
பின்மதி சொக்கன் பேணிற் சாத்துவான்
றென்மதி யென்னத்தண் ணளியின் றேற்றத்தான். (13)

பிறந்தஞான் றனங்(கு)[கொ]டை யாளி பெயர்மலை
நிறங்கிள . . . . டுலம்பு நீர்மையி
னிறங்கிமுன் றவழ்தறெட் டெண்ண லாருயி
ருறங்கவுண் டுலகினை யோம்பு மாற்றலான். (14)

உலைதரு . . . . ஃகுருவிணு னென்று
மிலையென லியானென விரண்டுங் கற்றிலான்
கலைதெரி சூட்சியுங் கல்வி யானமு
நிலைசெரி யமைச்சர் . . . . . னின்றுளான். (15)

இம்மையின் மறுமைத்தோ தெய்வ மொப்பவே
செம்மைசே ருலகெலாம் புரந்து செய்யகோல்
வெம்மையுற் றெளிநிழன் மேவி மேதினி
மம்மர்தீர்ந் திடவருள் பரவி வைகுநாள்; (16)

சுத்தநான் மறைவழி தொடரப் பாரினி
முத்தொழி னடாத்திய முதல்வ ராமென
வொத்தமெய் யறம்பொரு ளின்ப மொத்தவை
மெய்த்திரு திறத்தினி நடாத்தன் மேயினன். (17)

ஓங்குபார் மன்னவ ரொருவர் வெறுத்திடை
வீங்குதந் திருவெலா நல்க வேந்தனும்
வாங்கியாங் கவர்க்கருள் வழங்கி வேதியர்
நீங்கொழி முழுத்தமே சிறப்ப நாடினன். (18)

இரவியான் பொருந்திய மதியி னின்பமே
மருவிய புந்தி யந்தத்திற் பண்பினன்
மரபுடை ஞெண்டெழ மகத்துக் காயினு
னரவினன் மறையிலோ ரறையவுட் கொண்டான். (19)

கால்விழு புயற்றுளி கடுப்பக் காவண
மேல்விழுப் பத்துற விதானஞ்சூ ழகத்திண்
மால்விழு கவரியின் றூக்கு பஃறொடைக்
கோல்விழு பளிங்கெனக் குலவ நாற்றினர். (20)

பந்தருட் சதுக்கமார் சிகரப் பந்தியிற்
சுந்தரக் கயற்கொடி துவள வூன்றினர்
மந்தரக் கிரியெருத் தலங்கல் வாய்ப்பென
வந்தரச் சுரநதி யசைத லென்னவே. (21)

வட்டமுங் கோணமும் விறையின் வண்ணமும்
பட்டநாற் சதிரமும் பரித்த குண்டத்தின்
றெட்டவூற் றெனவருள் சுரந்த வேதிய
ரிட்டநான் மறைவழி யெரியி யக்கினர். (22)

வழுதிநீர் படிந்துவெண் ணீறு மத்தகங்
கொழுவிய நிலவெழக் குலவு சொக்கனைப்
பழுதிலா கமவழி பராயம கத்திய
லெழுதுமோ வப்பிர ணவத்தோ டெய்தினன். (23)

தமிழ்முனி மொழிப்படி தருப்பை தண்டுலங்
கமழ்வுற பணியுழைக் கலம்ப ரப்பியே
யுமிழுநெய் சுருக்கில்விட் டுரிய விந்தன
மமிழ்தெனு மனுவினு லதனி டைப்பெய்தார். (24)

கூவிளந் தறிப்பசுக் குரைத்தி டாவறுத்
தோவிநெய் யுடன்வபை யழலி னூட்டினர்
மேவு வெண்பொரித் தேதிட்டு வெண்ணிடைத்
தாவிலா வுடுமதி கடுப்பத் தந்திட்டார். (25)

சூழவே வலங்கொடு தூம நீங்கியே
யேழுநா முத்தலை யெழுந்து பார்க்கவ
னூழ்முறை யருந்தியுள் ளுவப்ப னென்றுமே
வாழிவேந் துளப்படி வளைத்து நல்கினன். (26)

(வேறு.)

அங்கிட் டோமமே யாதியர் பாயாச் சூயதே
துங்கத் தீர் தாயப்பர் மனத்தொரீஇ யுற்காதாச்
சங்கத் தோதுமோ தாமரையோ மாதவராய்ச்
செங்கட் டீயெழு நாவுண வருத்தினன் றிறலோன். (27)

ஆய நாளைய மேதமெய் மைக்குவா னெண்ணித்
தூய னுய்ச்சொக்க நாயகன் வ[ம]ன்று டோன்றி
யாய ஞாலத்தி னரசரை யருளிப்பா டெனவே
மேய தூதுடன் முடங்கலுந் திசைதிசை விடுத்தான். (28)

திருமு கத்தினிற் றிசைதிசை செருமிவா னுருமிற்
பொருமு கக்கரி பரியா யிரத்துடன் புகுந்தார்
ஒருமு கக்கட லுட்படு தட்பநீ ரூடைத்தாய்
வருமு கப்பல நதியென விளங்கு மன் னவரே. (29)

மேரு விற்பல கானிற மேகத்து விதானித்
தூரு டைப்பல மதியுடைப் புரையவிவாப் பணிசெய்
தேரு டைச்செம் பொற்சாலையி லிட்டுதி முன்னர்த்
தாரு லாம்பரி பூசித்துப் பட்டமுந் தரித்தார். (30)

விட்ட வாசிப்பின் னரசரும் வேணியர் குழாமு
முட்டி லாருதி யொன்றிநூற் றினிமுடி யுரையு
ளெட்ட வாளியின் வில்லினன் சுரபதி பிடித்து
கட்டி னுன்பனி வரைப்புறத் தத்திரி கண்டான். (31)

கண்டு வேந்தனுக் குரைத்தலுங் கரக்குசைக் கணையைக்
கொண்டு தம்மென விடுத்தனன் சமரெதிர் கொண்டு
விண்டு மேருவிற் கரந்தனன் விண்ணவர் முனிவ
ரண்ட நாதனைத் தருகென வவர்க்கருட் பணித்தார். (32)

அந்த மந்திர மகம்புக வமரர்நா யகனைத்
தந்த தெய்த்தன னரசனென் வேள்வியைத் தணந்து
வந்த விந்திரன் மற்றுளோர் பாகமு முதவிச்
சிந்தை கூர்ந்துவேண் டுவநல்கி யில்லகஞ் சேர்ந்தான். (33)

(வேறு)

ஆய நாளினிற் காஞ்சனை பாலரு
ணேய மிக்குப் புவிப்பர நீங்குறத்
தூய பொற்புயங் கொங்கைச் சுமைபெறக்
காயு முள்ளமா றுண்டக் கலந்தனன். (34)

அளப்பின் மங்கையர் சூழு மணங்கின்பால்
விளைத்த பூவார் கலவைமெய்ச் சேர்ந்ததெனத்
திளைத்த குங்குமம் பூணெனச் சேர்ந்துதே
னுளைத்த கூந்தன் மலர்மழை யோச்சியே. (35

அற்ற நித்தில மாலையண் டத்திடை
சுற்ற நாணிக ராத்துக ளொன்றிலாக்
கற்றை யங்கதிர் பொற்குழை கான்றவை
யுற்று வான்கதிர் நாடுத லொத்தவே. (36)

அங்கை மெய்நெகி ழாத்தொடையா யாக்கையிற்
பொங்கு வாளுகிர்ப் பட்டுடை யாய்ப்பொலி
திங்க ளின்சுதை யாய்ச்சிறு வேர்வுக
டங்கு மென்றுகைவ் வால்வளை சாற்றவே. (37)

எழுந்த வண்டிழை யிட்ட கருமணிக்
கொழுந்து போன்ற தாச்சுதை கொள்ளுத
லொழிந்தி டாவென் றுரைத்தென வோலிட
வழிந்த சாந்து கரும்புயன் மானவே. (38)

அடியரத் தகச்சே ரரச ராட்சியின்
முடிதரித் ததின்மு ழக்கும னுவென
நெடிய கூடலு மூடறு நீழல்சேர்
வடிவு போலக் கலவியின் மன்னியும் ; (39)

வளைந்த வண்டை மலர்க்கையி லேந்தியே
இளந்த கங்கை கெழுமிய நீரெனத்
துளைந்த சிந்தனைத் தொய்யி லிறைந்திறைத்
துளைந்த வானிலாப் பொல்ல ரோச்சியே. (40)

ஐயி ரண்டு மாச்சு ரத்திற்
றுய்ய நாண்மலர் கொண்டுதோய் வல்லியுஞ்
செய்யு நன்மலர் வண்டெனச் சேர்ந்துசூழ்
வைய நாயகன் மாலின் மயங்கினன். (41)

வாம மிக்குயர் வாணியும் புத்திர
காம விட்டிசெய் யென்றதை காமர்சேர்
மாமதிக் குஞ்சு மதிக்கு மற்றுள
கோம ளத்தை யர்க்குமுன் கூறினன். (42)

தரங்க மேவுபொற் றமரை நீர்படிந்
தரங்கி லாடு மழகிய சொக்கனைப்
புரங்க ளட்டவப் போற்றி யெனப்பணிந்
திரங்கு நெஞ்சினன் வேள்வி யியற்றினன். (43)

அங்கயற் கண்ணி யம்புயத் தாளுளப்
பங்கயத் தமைத்துப் பரிவிற் பராய்
வெங்க மீற்கொடி மனவன் காஞ்சன
மங்கை யோடு மகத்தழன் மன்னினன். (44)

புத்திய மெத்திய பூருவ பாகம்போ
யுத்தரத் திற்ற மூற்பொரி யுற்றபோ
லத்த ஞேர்புரத் தங்கயற் கண்ணிதன்
மெய்த்த நற்கலை யாஞ்சுதை மேவிஞள். (45)

நிரம்பு தாமரை வாய்நெகிழ்ந் தீன்றநாட்
பரம்பு பொன்மகள் பார்வைக் கருமணி
தரம்பெ றும்புவிச் சார்ந்தெனத் தீக்கொழுந்
துரம்பெய் நெய்விழி யுச்சியுற் றெய்திஞள். (46)

நீல மாமணி நீண்ட துகிர்ப்பெருங்
கோல மார்கடற் ருேன்றிய கோலமோ
டேல மேனிப் பசுஞ்சுட ரியாண்டையுஞ்
சீல மாய்பொரச் சீறடி போந்தனள். (47)

நெற்றி யாற்றிவழ் பூங்கழ னீண்முகில்
வெற்ற வாலப் பிறையென வொல்கவே
பற்று கைதழற் பங்கயத் தேனெனத்
துற்ற வாய்த்துய லுஞ்சுதை றூங்கவே. (48)

காது லாவு கருங்கண்வெண் டாமரைப்
போது லாவரி பொன்றிட மூரலிற்
சீத வெண்ணில வாரத் திருமுக
மாதி ரக்கரு ஞாயிறு மானவே. (49)

கருங்க டற்றரங் கத்துறு கார்த்துணை
பொருந்து றக்குழை யப்பொரு மார்பிடை
யருந்தவச் சொக்கன் முக்க ணழுத்தல்போல்
விரிந்த கொங்கைச் சுவடு விளங்கவே. (50)

ஆட கத்தரை நாண்மதி யங்கியிற்
சூட கத்திற் கருமணி தோள்வளை
பாட கத்திழை பன்மணி பாசடைத்
தோட கக்கம லத்தொளி தோன்றவே. (51)

பாசொ ளிச்சுடர் பொன்னிழை பாய்ந்தெனத்
தேசு லாவுந் தளர்நடை சோர்ந்துபோய்
வாச மேவிய காஞ்சன மாலைதன்
னேசி லாமடி மீதுற் றிருந்தனள். (52)

செக்கர் வானிற் குழவி சிறுமழை
புக்க போற்றழிப் போற்றருங் கஞ்சனை
நெக்க நெஞ்சின் ஞெமுக்க வுறைந்தன
டக்க வண்டமெ லாந்தந்த தையலே. (53)

மங்கை யேந்தி மலையத் துவசன்பொற்
செங்கை நல்கத் திளைத்தன ளங்கையு
மங்கல நகையுஞ் சுதையார் செவ்வாய்ப்
பொங்கு மோசையுங் கண்டன புல்லினுன். (54)

எழுது வல்லியுங் கொங்கையு மின்பமோ
டுழுது மார்பணைத் துச்சியை மோந்தலர்க்
கொழுது வண்டிள முலைக்குறி கண்டுளம்
வழுதி யங்கியின் வாய்மெழு கொத்தனன். (55)

மன்ன னுள்ளந் தெருட்டுற வாணியொன்
றுன்னு வானத் தொலியொடு வந்துகேண்
முன்னை வல்வினை முற்றினை யாவர்க்கு
மன்னை கன்னியா யன்பினுற் ருளரோ. (56)

தக்க னில்லந் தணிந்திம வானிடைப்
புக்க மங்கை பொரமலை வேந்திவண்
மிக்க மேனையென் றித்தலை வேள்வியிற்
றெருக்கு வந்ததைச் சொல்லவுங் கேட்டியால். (57)

முத்தியாங் குதவிய முதல்வி காஞ்சனைப்
பத்தியான் மகளெனப் படர்த லோதின
மத்தியா னத்தவ மாலை வாய்ச்செறி
வித்தியா பதிக்கதை விளம்பு வாமரோ. (58)

திருவவதாரச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 782.

வித்தியாபதிச் சருக்கம்.

நீல மைப்பய ருழ்நெடு வாயிலின்
கோலம் விஞ்சிய விஞ்சையர் குன்றமே
பால லைச்சுவே தப்பணிப் பாயலின்
மாலு றங்கும் படிவத்தை மானுமே. (1)

பருதி நேயந் தடுக்குமப் பால்விரை
பிருது மன்புவி யான்முலை யலகமுற்
கருதி நன்மணி ஞான்று கறந்திடு
மொருத னிக்குழ விக்கிரி யொக்குமே. (2)

விரிந்த செம்மணிப் பாறையின் மீதெலாஞ்
சரிந்த வெண்பணி யின்குவை தன்னிற்கார்
தெரிந்த நீழலச் செகத்தி டத்தினிற்
புரிந்த வான்மதி மெய்க்கறை போன்றவே. (3)

தொடர்ந்த வெய்யவன் றூசிப் படைபொர
வுடைந்த கங்குற் கபைய முதவியே
மடைத்த கற்புழை சேர்த்தரு ணல்கியே
மிடைந்த நற்குணர் போல்வெற்பு மிக்கவே. (4)

திரைபொ ருந்தரு விச்செல விற்சுழி
துரைபொ ருந்திப் புரித்து நுடங்குதல்
வரைபொ ரும்புற மானச வாவியிற்
கரைபொ ருந்தவ ளக்கரி போன்றவே. (5)

புதைத்த நாசிகண் ணுடப் பூருர்மரம்
பதத்து வாயுநீ றிப்படர் சித்தர்கள்
விதத்து நான்மறை யோதல் விரிந்தநீ
ருதைத்த கங்கை யுடைந்தன போன்றவே. (6)

இழையி டைக்கொடி யாரொடி யாணர்கண்
முழையி டைக்கல விக்குநாண் மூய்மணிக்
குழையி டைக்கண் புதைப்பக் குளிருவான்
மழைய டைத்து விழியை மறைக்குமே. (7)

பாடு கந்திரு வக்குலப் பாவைய
ரூடு ருமனு பாங்க மிசைத்தல்போ
னீடு கால்பொரத் தூம்பு நிறைந்தவே
யாடு கின்ற வரவ மிகுந்தவே. (8)

பரிமு கக்கிம் புருடர்தம் பாவைய
ரரியி ரைக்க வடிவழுக் கப்பணி
யெரிம ணிச்சுமை கொங்கைக் கிடையுகச்
சரிச ரிக்குமொ ழுக்கந் தரித்ததே. (9)

தேவ மங்கையர் செங்கற் பொடியினுன்
சேவு சீரையிற் றீட்டி விடுத்தசொற்
பூவை தந்தகேழ் மார்பிற்பொன் வல்லிபொற்
காவி லாருங் கலவியைப் பெற்றதே. (10)

இளக்கு ருவெற்பிர வேரி பாதவ
விளக்கி ருட்குறிக் கேழை விலக்கலுந்
துளைக்கொ ணுக்கன விற்புணர் தோகைய
ரளக்கும் பாவையர்க் கோதர வத்ததே. (11)

முனிவ ரேழ்வரு முக்கணன் பூசனைக்
கினிமை யார்ந்தபொற் கஞ்ச மெடுத்தவை
பனிம திப்பகை யாதவன் பாற்செலீஇத்
துனிப டைத்த வலர்முகை சூழ்ந்தவே. (12)

கறைம திக்குடைக் கீழ்வெண் கவரிவா
னிறையுஞ் சாய்மறை நேர்வன் நேமிவேந்
தறையுங் கின்னரர் பாடற் கவாவிய
சிறைம யூரங்கண் டோகை சிறப்பவே. (13)

மாக நாடு மதிற்றலை யென்றுகீழ்
நாக நாடகழ் சேர்மத ஞகத்தி
லீகை நாட வெரீஇப்பட ரன்னத்திற்
போக நாடு கொடித்திரள் போர்த்தவே (14)

சேம வச்சிரப் பாசிழை செம்மணிக்
கோம ளத்திற் குயிற்றுபன் மாளிகை
தாம ரைத்திரட் டங்கி யலர்ந்திடுங்
காமர் மானச நீரெனக் காட்டுமே. (15)

மாட நெற்றியின் மங்கையர் விட்டபந்
தாட கப்பதி யிற்புத வங்கையாற்
பாடு லாமதி பற்றி யறைந்திட
வூடு வெண்ணில வோடமு துக்கதே. (16)

உடைந்த நாண்மல ரோதிய ரேழ்வரி
யடைந்த வாட லரங்கத் தமலைவான்
மிடைந்த தேவர்கள் மாந்தர்கள் வெற்பினிற்
கடைந்த வேலை யொலித்தல் கடுக்குமே. (17)

கோதி லாதப ணிக்குடைக் குட்டிம
வீதி லாவணப் பன்மணி மேவுத
லோதி ருட்செறி வானுடுச் சேர்பகற்
போது வீது பொருந்துதல் போலுமே. (18)

யானை தேர்பரி யாடவர் நீங்குரு
வானை நக்கி யெழுங்கடை வாயில்கண்
மேனி ரைத்திரை வானதி வெண்டிரை
பேன மோடு பெயர்ந்தது போலுமே. (19)

பளிங்கு டைச்சுவ ரிற்பல மாமணி
விளம்ப மைத்த கதிர்ப்பல மேடைக
டெளிந்த நன்னிழற் றிண்புவி யாவையும்
வளைந்த நீர்வட வைத்தழன் மானுமே. (20)

பரிமு கத்தர்புட் பாதர்மின் னுருடன்
விரிமு கத்தர் முறையிட மேவியே
யெரிமு கத்தலர் போற்றவி சேறிமால்
சொரிமு கக்கல விப்பதம் தோய்வரே. (21)

துணர்க்க லித்தெழு சூழலிற் செம்மனு
மிணர்த்த வல்லி நவமல ரீட்டமும்
புணர்த்த வாசம் புகர்முகத் திக்கயம்
பிணர்ப்பு ழைக்கையுட் பெய்தர நாறுமே. (22)

மைந்தர் பித்தையின் வாய்க்க மலப்பதந்
தந்த வச்சிரச் சுட்டிமச் சார்பெலாம்
விந்தை மாளிகைச் செஞ்சுடர் விட்டவண்
முந்த வோங்கி முளைத்தது போலுமே. (23)

உத்தர குருவுட னளகை யும்பர்நா
டித்தகை யெழிலினை யிரந்து கோடலான்
முத்தர்கள் வழுத்துறு முறைமை மேயின
தத்துவெண் புனற்படு சயில மாநகர். (24)

கரிபொரு நெடுங்கரைக் கங்கை நீரிடை
யிரவெரி மரத்துட னிஞ்சி யும்பரி
னிரைமணி யொளியொடு நெருங்கி நாடொறும்
பரவையிற் படிந்துவீழ் பருதி போன்றதே. (25)

முழையிடைப் பிறந்தெழு முகர வாம்பரி
விழைகதிர்ப் பரியுட னட்பு மேவின
தழைசெவிக் கரிக்கரி யுறவுச் சேர்ந்தென
வுழையிடைப் புலிநிரை யுருத்த ரற்றலே. (26)

பரிமுகக் கணங்கள்புட் பாதர் வானிடத்
துரியகற் பகநிழ லுலாவு மாதர்க
ளிரிகுரற் கிண்கிணி யமலை யாழிசை
விரிமுகட் டளாவியே யரவ மிக்கதே. (27)

விளிம்பிடை நவமணி விளங்கு மாளிகைப்
பளிங்குடைச் செய்வரை முன்றிற் பல்லிதழ்
நெளிந்ததண் மலர்க்குழா நெடுமு கட்டிடைக்
குளிர்ந்தவெண் மதியுடுக் குழாங்கள் போன்றவே. (28)

இரவெரி மரத்தொளி யிருளை நீக்கவே
யரவமே கலைச்சிலம் பரற்ற மெல்லெனப்
பரவிய மங்கையர் பருவ நீங்கியே
யுரகவூண் மயிற்குழா மொதுங்கல் போன்றவே. (29)

கலவியிற் கட்டுணை சேர்ந்து காமர்சேர்
புலவிகண் டிரும்பதம் பூண்ட விஞ்சையர்
குலவிய முடிதொறு மலர்ந்த கோதையர்
நிலவினு முகிழ்படக் கமல நித்தமே. (30)

அரம்பையர் வானவ ரரிய மாதவர்
நிரம்பிய விருந்தென நிறைய மன்னவன்
புரந்துப கரித்திடு சும்மை போர்த்தின
வரம்பரு திக்கடன் மடுப்ப தென்னவே. (31)

வான்றரு நிகருப வனத்து மன்னர்பாற்
றேன்றரு கலவியைச் செலுத்த மங்கையர்
நான்றபூங் குழலினை நாடிக் காரெனத்
தோன்றிமுன் னடித்தன தோகை யீட்டமே. (32)

(வேறு)

இன்ன தாஞ்சந் திரப்பதி யெய்திய
மன்ன வன்விசு வாவசு மாதவந்
துன்னி யீன்ற சுதைச்சுதைச் சொல்லுடை
மின்னனாள் வித்தி யாபதி யென்பவே. (33)

மாலை நீழன் மலிந்த வனப்பெனச்
சோலை வல்லி கிளர்ந்த தொடர்பெனக்
கோல மேனிக் கணிந்து குணத்துடன்
சீல மேவின டம்புகன் மங்கையே. (34)

கண்டி நீறு கவின்பெறச் சாத்தியே
கொண்ட கோல விபஞ்சிக் குரலிடை
யண்ட மீன்றரு ளன்னையைப் போற்றியே
விண்ட சொல்வித்தி யாபதி மேவுநாள் ; (35)

ஈன்ற தந்தையை யேத்துலு மிப்புவி
மூன்றின் மேலதாய் முத்தி யளிப்பது
தோன்ற வோதெனச் சொற்சதா னந்தன்பாற்
றுன்ற மூப்பெறு மாதலஞ் சாற்றினன். (36)

தலமலைத் துஞ்சேர் தட்டெழத் தாழ்பதி
புலவர் பொன்றவர் போற்றிய தம்பிகை
நிலவு பீடத்து மிக்கதும் பைக்கானங்
குலவு மின்வழி சொக்கனுட் கொண்டதே. (37)

எந்தை பஞ்ச சுரனு மியக்கனும்
புந்தி கூர்வசுப் புண்ணிய னும்புகழ்
விந்த மார்சொற் சைவித்தி யனுமரீஇச்
சுந்த ரற்பராய் வீட்டின் றெடர்ந்ததே. (38)

அத்த லத்திடை யங்கையற் கண்ணியாஞ்
சத்தி யைப்பராய்ச் சேர்ந்துபொற் றுமரைச்
சுத்த நீரிடைத் தோய்ந்து விருப்புடன்
மெய்த்த வம்புரி யென்று விளம்பினுன். (39)

தந்தை சொன்மனத் தாங்கிய தையலுஞ்
சிந்தை கூர்ந்தவன் றுய்சிறப் பாய்த்தொழ
முந்தி வேந்தி யெடுத்துச்சி மோந்துமுன்
சுந்த ரன்பதிக் கெய்தெனச் சொல்லினுன். (40)

(வேறு)

இரதி வெஃகிய வெழிலுடை வித்தியா பதியும்
விரத மீன்வழி மதுரைநா யகன்விரை பதத்தே
சுரத மாப்பணிந் தரும்பலன் பெறவுயிர்த் தாங்கி
யரத னக்கொடி யசைந்தெனச் செல்குவா னமைந்தாள். (41)

மண்டு தண்புனல் புயலிடை வார்ந்தெனத் தவத்தைக்
கொண்டவா றென்னை வண்டறுத் தொடைகொழுங் கனல்வாய்
விண்ட பன்மலர் வைகுமே யென்னவெய் துயிர்த்துக்
கண்ட வன்னையுங் கட்புயன் முலைமலைக் கவிழ்த்தாள். (42)

உயிர்பி ரிந்துட னிலைக்குமே யோவெனத் தழுவிச்
செயிர்பி ரிந்தவண் முலைமுக நெமிக்கியுட் டேம்பிப்
பயிர்பி ரிந்திடு வேலியிற் பையுளி னெப்ப
வயிர வேதினேர் மன்னவன் றெருட்டினன் மாதோ. (43)

அளித்த தந்தைபால் விடைகொடு திரிபுரத் தண்ண
லளித்த தேன்றெடை நால்வபொற் குழற்சடை தொடுத்து
விளித்து மேகலை யொரீஇமர வுரியுடீஇ விருப்பின்
றெளித்த சந்துடன் முத்தநீத் தன்புடன் சென்றாள். (44)

சென்று கூடலிற் சேர்ந்துத்த ராயணந் தன்னிற்
றுன்ற வாடகத் தாமரை தோய்ந்துநீ றணிந்து
வென்றி மாமுகன் மீன்வழி சொக்கன்றாள் பரவித்
துன்று மன்புருக் கொண்டென வைகலுந் தொழுதாள். (45)

கும்ப நூற்றெட்டி லாடகப் புனல்கொணர்ந் தாட்டி
யம்பொ னுடைபூ ணுயிரத் தெட்டுநீ லத்தா
ரும்பர் கோன்பணி சொக்கனே டுமைக்குமே சாத்தித்
தும்ப ராதியர் வியப்பயாழ்ச் சுரவிளி யெடுத்தாள். (46)

மத்தங் கங்குலூண் மாசிக மலைப்பல கனைப்புன்
மெய்த்தி லப்பிண்டி சாந்திரா யணம்பஞ்ச கவிய
முய்த்த நீர்பயங் குசப்பினல் காலுணு பசித்தல்
வைத்த வாறிரு திங்களாண் டருந்தவம் வாய்த்தாள். (47)

காலை யிற்சென்று பொன்னுடைக் கஞ்ச நீராடி
யாலை யத்திலுற் றுடக மலர்கொடு சாத்தி
வேலை யிற்சுதை துளித்தென வீணையிற் பரவி
மாலை யிற்சென்று சாகரத் தருந்தவம் வாய்த்தாள். (48)

ஆயி ரத்தெட்டுச் செங்கழு நீர்மல ரலங்க
ணேய முற்றின்பத் தங்கயற் கண்ணிதா ணிறைத்து
மாயை யிற்புவி யீன்றவள் பாலணைப் புற்ற
சாயை யிற்பிரிந் தெய்தி நாடொறுஞ் சரித்தாள். (49)

வைகல் வைகலித் துணைவிழி மனமுட னமைக்குஞ்
செய்கை வேறிலா ளாயினள் சிறந்தசுந் தரனைப்
பெய்க ரும்புயர் குழலுடை மீன்வழிப் பெண்ணை
யுய்க ருத்தின டிருத்திய நண்புட னுவந்தாள். (50)

அழுந்து மன்பினள் பூசையைக் கன்னலொன் றதனிற்
றெழுந்த ளிர்ப்பதத் திறைவனுந் தோகையுங் கிளர்ந்து
வழிந்த பேரரு ளாலுற வித்தியா வதியு
மெழுந்தி டாமலஞ் செறித்தவ மியற்றுவா னிசைந்தாள். (51)

மயிலி டத்தியல் குயிலிடை மொழிவிழி மானின்
பயில்வு வல்லியிற் பொருத்திமா தவம்படி வத்தி
னயிலு லாவிழி நாசியி னிதியைக்கண் டன்பா
னியலும் வாயுவைப் புருவமத் தியத்திடை யியக்கி; (52)

தரித்த கைப்படி கத்திடை விரலொளி தவழக்
கிரிக்கு நாயக னருண்மயில் மாதவங் கெழும
வெரிக்கு நாற்றிசை யங்கியு ளிலங்குத லிதழே
விரித்த வாடகத் தாமரை யெனவொளி மிளிர; (53)

விலங்கும் புட்களு நட்புறப் பலமலர் விழைய
விலங்க ருக்கனை மலரென வதனம்பார்த் தெழுதி
னலங்கொள் செஞ்சுடர்க் கொழுந்தென வேனினின் றகலின்
கலந்து நீழல்சேர் வல்லிபொற் கவின்பெற வுறைந்தாள். (54)

இறுநு சுப்புமின் னெனப்புய லெய்துபூங் குழலாண்
முறுகு வெங்கதிர் வேனலி னழலிடை முயங்கிக்
குறுகு மாரியின் னிலமென வெம்மையே குறைய
மறுகு தண்டுளி புதைக்கவுந் தலத்தொழின் மதித்தாள். (55)

(வேறு)

அருந்தவத் தாண்டொன் றெய்தி
யாடக நளினத் தாடித்
திருந்துவெண் ணீறு கண்டி
கவின்பெறத் தேவி தன்னைப்
பொருந்துநீ ரோற்ப லத்தாற்
புனைகுவான் கோயில் சார
விருந்தெனத் துணைக்கண் காண
மீன்விழி காட்சி தந்தாள். (56)

எழுதரு வடிவிற் பொற்றேட்
டிருவிழி யளாவப் பொற்பூண்
பொழிகதிர் விளங்க விண்ட
தாமரை யெனப்புன் மூரல்
வழிதரப் பொன்னி னுடை
நீவியஞ் சுருக்கு வாய்ப்ப
முழுநெறிக் குவளைச் செங்கை
முளரிச்சூ டகம்வி ளங்க. (57)

மருங்கிடை யொருதாழ் மான
மான்மதம் பளித மாரம்
நெருங்கிய வாசம் வீச
வாண்டுமூன் றெல்லை நீங்காக்
கருங்கொடி யசைந்த தென்ன
விஞ்சையங் கண்ணி காண
வொருங்கிய கருணை யோடு
வாயிலி னுவப்பச் சேர்ந்தாள். (58)

கண்டனள் கண்டு கண்ணீர்
கவிழ்த்தனள் முலையி லன்புட்
கொண்டன ளுள்ளந் தேம்பிக்
குறுமயி ரெறிந்து கூப்பு
முண்டகக் கரங்க டாழ
முரிந்துகால் சாய்ப்பத் தாழ்ந்து
விண்டபொன் வல்லி யென்ன
விணைமலர்ப் பதத்து வீழ்ந்தாள். (59)

(வேறு)

பங்கையா சனத்திரண்டு மாதர்பார்வை யங்ரிசேர்
வெங்கைமாரன் மாதுபோல் வெறுங்களம் பொருமணீர்ச்
செங்கையா லெடுத்தவால முண்டசெல்வர் செவ்விகண்
டங்கையா லமைந்தகூட லங்கயற்கண் மங்கையே. (60)

ஓதிவேத மாதிதேர்ந் துருதசொக்கன் மிக்கபொற்
பாதியாய் விளங்குகின்ற பாவையே யளக்கொணுச்
சோதியே தொழிற்கெலாஞ் சுரந்தருட் டருஞ்சிறப்
பாதியே விளங்குகூட லங்கயற்கண் மங்கையே. (61)

போர்பிடித்த முப்புரந் தெறப்பொறுத்த மேருவைக்
கார்பிடித்த கண்டர்வாங்கு நாளிடைக் கரத்திறுற்
சீர்பிடித் திராமலே நடுக்குழைந்த செவ்வியி
ஞர்பிடித்து ளார்கள்கூட லங்கயற்கண் மங்கையே. (62)

என்னமாய மென்னசெய்கை யென்னமாய ஞதியோர்
முன்னமாய மாயமாய முயங்குகின்ற பல்லுயிர்ப்
பின்னமாய வண்கொடி யீன்றுகன்னி யாய்ப்பரங்
கன்னமாய் விளங்குகூட லங்கயற்கண் மங்கையே. (63)

நெஞ்சகத் தவத்தசித்தர் நின்றுபோற்ற வீசர்மெய்க்
கஞ்சுகத்தி னுள்விளக்கி னன்பிஞேடு காவலாய்
நஞ்சுகக்கு மெந்தைபோற் றிடப்பிராண வத்தகூ
டஞ்சுகப்பெண் ணனகூட லங்கயற்கண் மங்கையே. (64)

உரங்குலாவு மீண்டகோடி யுக்கஞான்று மார்பிடைச்
சிரங்குலாவ நான்முகன் சிரங்குலாவ முத்தலைக்
கரங்குலவ வாடுநாதர் கண்டமேக மென்றுளத்
தரங்கிலாடு மஞ்ஞையான வங்கயற்கண் மங்கையே. (65)

என்னையாதி மூவரோடி யாருநாளு மேத்தியே
யுன்னையோ யெனக்களிக்க வோங்கன்மீது தூங்குநீர்
தன்னையார்ப் பிரக்குநே ரெனத்தனத் தொழுக்குபா
லன்னையா வளித்தகூட லங்கயற்கண் மங்கையே. (66)

யோகமங்கை ஞானமங்கை யோதுவேத ஞடொணுன்
பாகமங்கை யெங்குமாய் நிறைந்திடும் பராபர
ஞகமங்கை யென்றுகாண ஞளுமே சிறப்பிஞ
லாகமங்கள் கூறுகின்ற வங்கயற்கண் மங்கையே. (67)

(வேறு)

என்ன நின்று துதிசெய்து விஞ்சைமக
ளேத்த வெம்மனே யுவப்புரு
நன்னர்சேர் துதியை யாவர் கேட்டவர்
படித்துளோர் கதியை நண்ணுவ
ருன்னுடைக் குறைய தேதுநல் வரமு
வந்து கோடிதரு வேனென
நின்னு டைப்பத மருது வைகவர
நல்கு வாயென நிகழ்த்தினள். (68)

மற்ற விஞ்சைமகள் சொன்ன வாய்மையின்
மகிழ்ந்த வன்னேயவ் வார்த்தையே
வெற்றி மேவவுத விப்பொ ருந்தவரம்
வேறு கோடியென வோதலும்
பெற்ற விஞ்சைமக ளின்று வந்தவெழில்
போல வென்மகள் தாதியின்
சுற்ற முய்யமரு விப்பின் முத்திதர
வேணு மென்றுநனி சொல்லினள். (69)

அன்ன தேதருது மிரவி தன்குல
மணேந்த சூரனெனு மன்னவன்
கன்னி யாகிமலே யப்பெருந் துவச
னில்லறத் திடைக லந்தநாண்
முன்னி யிவ்வடிவி லுனது ளின்பமிக
முற்ற வந்துகதி நல்குவே
மென்ன மீன்விழிதன் னுலே யத்திலுற
விஞ்சை மங்கைபதி யெய்தினள். (70)

யாணர் மேவுவிசு வாவ சுப்பரிவி
னீன்ற மங்கையக ளங்கனுங்
கோனே வெங்கரியி னுன ளிக்கவரு
காஞ்ச னேக்கொடி குழாத்துடன்
சேணு ளோர்பரவு மீன்வி ழித்தெரிவை
தந்த மான்றெரு மரேலென
வாணி யோர்முலே மறைந்த நாண்மண
மருவு வாளென வுரைத்ததே. (71)

(வேறு)

வாணிசொல் வினவிய மன்னர் மன்னனும்
பூணிய வாவுடன் பூவை தன்னுடன்
சேணுளோர் வியப்புற வில்லஞ் சேர்ந்தன
னேணுறத் தையலே யினிதி னேம்பினன். (72)

அங்கையா லுலகிடை யலகி லாவுயிர்ச்
செங்கையும் வாய்களுஞ் சிறக்க வூட்டிய
கொங்கையாள் காஞ்சன மாலை கொங்கைபா
ரங்குறை வருதலை நிலாக்கடுத் துண்டாள். (73)

கட்டிய வரைவடங் கலிக்கக் கிண்கிணி
சுட்டியங் குதலைமேற் றுயலப் பொற்பணி
யட்டிய மரகதத் தாட வத்தரை
முட்டிய பசுங்கதிர் மொய்ப்ப வைகுநாள் ; (74)

கருங்கணிற் பாவைபொற் கவினிற் றுயர்கள்
விருந்துகண் டெனவுளம் விழைய வேவளர்ந்
தருந்தவ ருணர்ந்திடாக் கலைக ளாய்ந்தனள்
பொருந்துநல் வினையுட் டொடர்ந்த போலவே. (75)

வயந்தநின் மாந்தளிர் வரியைக் காத்தல்போற்
பயந்தனள் பேதையம் பருவஞ் சேரவே
இயைந்தன பன்மணி திகழச் சிற்றிலே
யுயர்ந்தவெண் ணுன்கறச் சிற்றி லூட்டினாள். (76)

இரலையங் கன்னியு மிரைத்த கார்மின்னு
நரலையந் திரைமிசைத் திருவு நாணுற
முரலிருந் தகர்பரி கரிமு னூர்ந்துலாய்க்
குரலியாழ்ப் பண்ணெனக் கோல மேயினாள். (77)

கொடுமர மிருதலை குழைத்துங் கோரணவாட்
டொடுமரப் பலகையிற் றேய்ந்து செங்கதிர்
விடுமயில் படைபயில் பயின்று மேவுநா
ணெடுமர வரசர்பேரர் நிலையின் றுயதே. (78)

அரமுனி வேற்கணு ளரச ரியாவரும்
வரமுனி வோருடன் வழுத்த வாளயில்
சரமுனி வற்கொடு சரித்த லோதினஞ்
சுரமுனி வேந்தன்பாற் றொடர்தல் கூறுவாம். (79)

வித்தியாபதிச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 861.

நாரதச் சருக்கம்.

இத்தன் மைவரைந் தனளெம் மனையுங்
கைத்தண கரிவேந் தர்களிப் புறவே
யத்தன் மைமணத் தையயர்ந் திலனுன்
முத்தன் பணியென் றுளமுன் னினனே. (1)

முன்னித் திலவா ணகைமொய் குழலோ
டின்னற் பெறவோ திலனே தமிலான்
கன்னிக் கிணையாய் வருகன் னிதனை
மன்னிச் சுதனு கவளர்த் தனனே. (2)

தருமங் கைதடா தகைமும் முலையாற்
பெருமங் கலநெஞ் சுபிரிந் தணிநாண்
மருமந் தெறவாண் முடிதூக் கியுயிர்த்
திருமுண் டவரா வெனவுன் னினனே. (3)

காணுங் கனவிற் கனவின் பலனு
மூணும் பெறவோ துவனென் னுமுள
நாணு முடிசாய்க் குனைக் குமிகுஞ்
சேணும் புவியும் பணிதென் னவனே. (4)

(வேறு)

கடாமலை யரசர்க் கெல்லாங்
கண்களால் விடையும் நல்கி
விடாவலி மடித்த வள்வார்
மத்திகை மிலேச்சர் கூயுத்
தடாதகை யெனினும் வாயின்
விடாதிரென் றுரைத்த தன்பா
லடார்தமை யகற்றி நீதி
யமைச்சர்பா லருளிச் செய்வான். (5)

உள்ளெழு மன்பு மெய்யு
முயிருமொத் துறைவீர் கேண்மின்
புள்ளெழு விடியற் காலை
கனவிது பொலன்வாய் கானற்
கள்ளெழு கடுக்கை சொக்க
னடியர்போற் கவினி நின்றார்
முள்ளெழு குசைத்த டக்கை
முனிவர்வந் துரைத்த தென்றான். (6)

முக்குணந் தொழில்கண் மூன்று
மும்முதன் மூன்று கண்க
டெக்குணர் வதற்கு நேராய்ச்
சொக்கனை யிகழ்வ துண்டே
யக்குணத் திவட்டு மூன்று
மூலைபெற்ற ததனைக் கொள்ளா
தெக்குணத் தவருங் காணு
விறைவியென் றுணர்தி ரென்றார். (7)

ஆயதா லுரிமை மற்று
மவட்களித் தெனக்கு வேண்டுந்
தூயமா தவங்க ளெண்ணித்
துணிந்தன னென்ன லோடு
நேயமா மறையோர் வாயில்
காவலு நீங்கி யெய்தச்
சேயனு னெழுந்து போற்றி
யரியணை சிறக்க வைத்தான். (8)

அன்னவ ரரச ருள்ளத்
தக்குறி முகத்தி னோர்ந்து
பொன்னவிர் பலகை மீதிற்
பொருந்தவெள் ளலகு சேர்த்தி
மின்னவி ரிடையாள் செய்கை
விதித்தசா தகம்வி ளங்க
முன்னவர் சடிலம் வெட்பு
மிறைமையு முறையிற் சொன்னார். (9)

தொல்லைமா தவமு முள்ளச்
சூட்சியு மமைச்சர் சொல்லு
மொல்லையிவ் வலகு மங்கை
கற்புமிவ் வுலகின் பேறும்
வல்லையோர் வழியிற் சாரா
மணிமுடி துளக்கிச் சாய்ந்து
நல்லவிவ் வாய்மை யென்னு
நகைமணிக் கோயில் புக்கான். (10)

முடவுடல் வெங்கை யொள்வாண்
மூ [ழ] ரிவெற் பரவிற் கொங்கைத்
தடமலிக் கச்சி னுற்றி
வட்டுடைத் தானை வீக்கி
யிடமொடு வலமு மாத
ரெட்டுமங் கலமு மேந்த
வடவரைத் துறுகட் சீயத்
தரசன்மா ளிகையிற் சென்றாள். (11)

தென்னவன் மனையிற் சேர
வுலகேவிர மீன்ற செவ்வி (?)
யன்னமுங் கரியெ ருத்த
மணிக்கலத் தாட கத்த
முன்னிதழ்க் கமல நீர்கொண்
டாட்டவே மூழ்கிச் சொக்கன்
பொன்னுடை மலர்த்தாள் போற்ற
வவரொடு மறுகிற் போந்தாள். (12)

(வேறு.)

கருந்திரு வுடற்கதிர் தனித்தகவி னெக்கப்
பொருந்தளக முத்தணி பொருத்திவிடு பின்னல்
விருந்திரு முகக்கலை மதிக்குவெரு விப்பின்
றிருந்திருள் சரிந்தசெய லைப்பொருவு மன்றே. (13)

சொக்கனுள மற்றிவ ளெழிற்கட றுளும்பப்
புக்குமிகு மொக்குளன் பூண்முலை யடைந்தோர்
நெக்குற முருக்கியவ னெஞ்சரி னடிக்கீழ்
மிக்கவிடை யைப்பொர மதத்தெழு மிருந்தே. (14)

வீறுமிகு கொங்கைவரை மேற்செல நடந்த
யேறுபரு வப்படி வெனுந்திரி வரைப்பா
லூறுகரு நாகமெய் யொழுக்கென வுரோமங்
கூறுபரு மக்கரு மணிச்சுடர் கொழிக்கும். (15)

இட்டதில கத்துட னிலங்குமணி யம்பொற்
பட்டநுதல் மீதொளி பரந்திவர்பு லூர்ந்தே
ரட்டவழி யொத்தகு வளைத்துணை துரப்பான்
வட்டமுறு வற்கிடை மதன்கைநிக ராமே. (16)

ஓதுகலை யுந்திருவு மொத்தடிய ருக்கெப்
போதுமுத வுங்கணிரு புண்டரிக மேவு
மாதரிரு கண்ணென மறைத்திர ளொலிக்குங்
கோதினுரை யன்றியிரு சேல்பொருதல் கொட்கும். (17)

தங்குறை விரிப்பவர் தமக்கரு ளளிக்குங்
கொங்குறை தருங்குழலி கொண்டிவடி வம்மா
விங்குறை பவர்க்கலவி யற்பரவு சொக்கன்
பங்குறை விறற்செய லெனத்தனி பணிந்தார். (18)

வெண்கவரி தண்ணிலவு வீசவதை யீனுந்
தண்கலை மதிக்குடை தழைக்கமணி யாடி
கண்கவர வுற்றகன கக்குட மெழுந்தே
விண்கவ ரிளங்கதிர் விளங்கியதை யொப்ப. (19)

கடிப்பிடு பெரும்பணை கடற்கெதிர் கறங்க
விடிப்புய றெடக்குகொடி வானநதி யெய்ப்பப்
பிடித்தவர வத்துநிறை வட்டவொளி பெட்ப
நடத்திடு விளக்கமொடு நங்கையர்கள் சூழ. (20)

வரிந்தவுடை மாடிய மலர்க்கைபெறு வேணுத்
திரிந்தகொடு நோக்கொடு செருப்புறை துணைத்தாள்
பரிந்தவுள மேகுமி னெனப்பக ரிடிச்சொல்
விரிந்தமுலை வம்பினர் மிடைந்துமுட னடப்ப. (21)

வட்டமரு வுங்கடகம் வாளொடயில் விற்கொ
றெட்டகர முங்கொடுமை தூங்குமிரு கண்ணும்
பட்டநுத லுங்கலை படைத்தமுலை வீக்கும்
பெட்டவுள மும்பெறு பெதும்பையர்மு னெய்த. (22)

அனித்தமலர் பன்மல ரடுக்கிய படத்தே
பனித்தகம லத்துணை யெனப்பத மொதுங்க
முனித்திரள் வழுத்திய முதற்கடவுள் சொக்க
னணித்திரு மதிற்புதவு புக்குற நடந்தான். (23)

ஒலித்தபரு மத்திடை யொசிந்திடு மெனப்பாற்
கலித்ததென வெள்வளை கறங்குகை யெடுத்தே
பலித்தமலர் வல்லி நிகர்ப்படி படிந்தே
வலித்தவுள நெக்குருகி யன்பில்வலம் வந்தாள். (24)

வலங்கொடு நடந்துமது ராபுரியில் வாச
நலங்கனி யுமைக்கிறைவ நம்பச குணத்தி
னிலம்பரவு சொக்கபர நித்தவெமை யீன்றோர்
குலம்பரிவு நற்குண வெனப்பிரிவு கூர்ந்தாள். (25)

சொற்பரவு பூசுர ரளித்ததொடை நீறு
மற்புட னணிந்துவிடை கொண்டு புலவோர்கள்
கற்பக மலர்க்கொடியில் வண்டிசை கலிக்க
நற்பொல னிழைத்தமணி மாளிகை நடந்தாள். (26)

கோதைவளர் நாளிலருள் கூர்மதி குலத்தோர்
மாதவம தானமலை யத்துவச மன்னர்
நீதிசெறி யாயமிரு பாலுற நெருங்க
வாதிநெடு மாலைநிக ராயவை யிருந்தான். (27)

(வேறு)

எடுத்த கொல்லி பஞ்சியா லெழுந்த காலி லேழிசை
யடுத்து விண்ணு மண்ணு மின்ப மாரவார மேவமே
விடுத்த செஞ்ச டைச்சுடர்ப் படர்ந்து வானில் வில்லிட
வுடுத்த வல்லி யத்திரித்த மித்தி னூலு டங்கவே. (28)

மெய்யணிந்த நீறு மெய்யு மேவு பாலின் வேலையுந்
துய்யவெண் ணிலாவு மொக்க மிக்க கண்டி சூழவே
கையணிந்த மாலை யாலை வாய்ம ருங்கு காணுநீஇச்
செய்யகண் டுளித்த முத்தொ ழுக்கெனச் சிறக்கவே. (29)

ஏற்றதன் குலத்து மன்னன் முன்பு சென்ற விந்துவி
னேற்றமா தவத்த னெய்த ஞெண்டு கொண்டு கண்களா
லாற்றல் சேரு வர்வரக் கலித்த வாழி யாமெனத்
தோற்ற மோடெ ழுந்தவன் றுணைப்ப தங்கள் போற்றினன். (30)

துதித்து வீழ்ந்தெழுந் தெழுந்து துன்ப வேலை யேறியுண்
மதித்து வாய்வெரீஇ விழிப்பு னற்கள் வார வாரமாய்க்
கதித்து மெய்துடித்து நின்று கைகள் கூப்பி மெல்லணை
விதித்தி ருத்தி யன்னவன் பணிப்ப வேறி ருந்தனன். (31)

இருந்த மன்ன னன்புகண் டிரங்கி மாத வத்தினன்
றிருந்து வெண்கு டைக்குள் வைய மின்பமே தெவிட்டவா
னருந்து வேள்வி தாழ்வி லாத ரங்களோங் கவாலைவாய்
மருந்த ளித்த செல்வ மல்கி வாழ்க வென்று கூறவே. (32)

மீண்டெ ழுந்து போற்றியேத்த வத்தை யெம்மை மேவினேன்
மூண்டெ ழுந்த நண்பினிற் பவத்தை யான்மு ருக்கவே
யீண்டெ ழுந்து வந்துளா யெனக்கோ ருண்மை கூறென
வாண்டெ ழுந்த வுட்க ளிப்பி னின்னண மறைந்தனன். (33)

தொல்வி னைப்ப யன்றரப் பிறந்த றந்து றந்துபின்
வல்வி னைப்ப டாமலாசை நண்ணி யெண்ணி மாலுறும்
பல்வி னைத்து ரித்திமெய் யரித்த ரித்தி சேர்ந்துவீந்
தல்வி னைக்க னற்புகுந் தழிந்த ழிந்து சோர்வரே. (34)

மான வத்து நன்னகர்த் தலத்து மாட்சி சேர்குலத்
தான மற்ற மெய்யெடுத்த தொழுக்க நீதி யன்புகள்
ருன மிக்கு நட்புவந்து வந்து மேன்மை சார்பொருள்
ஞான முற்ற நூலுணர்ந்து நல்லார் வீடு சேர்வரே. (35)

பரம்பு நோயு மூப்புமெய் பரிந்து துன்ப நீக்கியே
நிரம்பு மாதி பாதமே நினைந்து நைந்து ஊைத்துமேல்
வரம்பி லின்ப மேவிவச் சிரத்தி யாக்கை மன்னினர்
புரம்ப டுத்த வன்பதம் பொருந்து வீடு புல்லுவார். (36)

என்ன தென்ன தென்றுபாரி டத்து மன்ன ரெண்ணிலார்
மின்ன ரன்ன வீய்வர் வீய்வு ருதுபார் விளங்குமா
லன்ன தன்மை தொன்மைநா ளறஞ்சிறந்த தாதல்மாற்
பொன்ன தன்வ ழிப்பரத்தை போன்ற தன்பு மென்பரே. (37)

புனற்கு மிழ்த்த மொக்குண் மிக்க புன்பவத்தி யாக்கையுங்
கனற்சுடற் பொருந்து நெய்ய றக்க னிந்த தென்னவே
யெனக்கு னக்கெ னப்பருந் தருந்த வீயு மிற்றதே
தனக்கு ரித்தே னப்பு ஊனந்த கோலமுந் தணக்கவே. (38)

மன்னர் மன்ன துன்னு வேள்வி வைகல்வைக லாற்றிஞய்
நன்னர் நெஞ்ச மெந்தை சொக்க ஞயகன் பதத்துவைத்
தின்னறீ ருந்தரி வத்தி கைத்தோ ரஞ்செ மூத்திலே
துன்னு மாத வம்புரிந்து துய்ய தாளி லெய்துவாய். (39)

துறந்த வேந்தர் தன்மை யுந்து றப்பதற்கு நாணிவீந்
திறந்த வேந்தர் செய்கையு மினைத்தெ னத்தெ ளிந்துநீ
யறந்த வாத வாழ்க்கை யன்பு நீக்கியால வாய்ப்பிரான்
சிறந்த தாள்பெ றத்தவஞ்செய் யென்று ளந்தெ ருட்டினன். (40)

(வேறு)

இத்திறஞ் சுரமுனி யிசைத்து நல்விடை
மொய்த்திற லிறைக்களித் தும்பர் முன்னிஞு
னத்திர முளங்கொளா வமரர் கோனெனக்
கொத்திர நிமிர்புயக் கோனும் வைகிஞன். (41)

உரிமையிற் சுற்றமு முழையர் மாக்களுந்
தெரிவைமா ரீட்டமுந் தொடரச் சின்னங்க
ளரிவைய ரேந்தவெற் பருக்க னென்னப்போய்க்
கரியுடை படிமனே கமழ வெய்திஞன். (42)

(வேறு)

வீணை மாதவ னுரைப்படி வெஃகிய மனத்தன்
கோனை வெங்கரிப் படிநெறிக் கோயிலிற் குறுகி
யானை யாறிடந் திகிரியி னடுக்கிலா தாடச்
சேனு ஞாலமும் புரந்துபற் பலதினங் கழித்தான். (43)

(வேறு)

துத்திவா ளரவு சூழ்ந்த
வேணியிற் சுமந்த கங்கை
மைத்தடங் கடலுட் சேர்வ
காடவ னப்புற் றுங்கு
தத்திய நெடுங்கட் செவ்வாய்த்
தடாதகை பிறந்த லாலே
கொத்திணர் நிம்ப வேந்தன்
குலமிகச் சிறந்த தன்றே. (44)

வட்டவெண் மதியிற் போற்றுர்
வளரிளம் பிறையைக் காணத்
தொட்டநீர் வேலி ஞாலம்
விண்ணினைத் தொழுதிட் டாங்கு
விட்டசெஞ் சுடர்வே லிந்து
குலந்தனை வணங்கா வேந்தர்
பட்டவா ணுதலை யீன்ற
நாண்முதற் பணிந்திட் டாரே. (45)

வெங்குரற் றெறுதிக் கான்ற
வுறுமுறழ் மேகந் தன்னைப்
பொங்குநீர் பெய்து பாரை
வளர்த்தலாற் போற்றல் போல
மங்கைவந் துதித்த பின்னர்
வழுதிகள் மரபா மற்றித்
திங்களு மறுவை நீங்கிப்
புவிதொழச் சிறந்த தன்றே. (46)

இந்தணைத் தழலை யெண்ணு
ரதனிலேற் றியத ழற்கே
வந்தனை செய்திட் டாங்கு
மதிநுதல் பிறத்த லாலே
சந்திர ஞதி வேந்தர்
தமைத்தொழா வரச ரெல்லாஞ்
சிந்துரம் வாசி பொற்றேர்
திரைதந்து பணிந்திட் டாரே. (47)

மந்தவா னிலங்கு லாவு
மலையமால் வரையு மிக்க
செந்தமிழ் பிறத்த லாலே
புவியிடைச் சிறப்புற் றேங்குச்
சந்திர குலமு மிந்தத்
தடாதகை பிறத்த லாலே
சுந்தர மருவி நாளும்
வளங்கொடு தொடரு மன்றே. (48)

இயங்குமெண் டோளி சூலி
யுறைதலா லெரியின் கற்றை
வயங்கிய பாலை மற்ற
நிலங்களில் வனப்புற் றுங்கு
தயங்கிணர் நிம்ப வேந்தன்
மரபெலாந் தடாத கைப்பெயர்
வியந்துட னுறைத லாலே
வேந்தரின் விளங்கிற் றன்றே. (49)

உலகெலா மீன்ற மாதை
யுதவலா லிமைய வெற்பு
மலையர சென்னப் பாரின்
மாதவர் வணங்கி யாங்குக்
கலைமதி குலமு மிந்தக்
காரிகை பிறத்த லாலே
நிலைபெறு மாட்சித் தாகி
நேமியிற் சிறந்த தன்றே. (50)

நிறைகெழு தடாத கைப்பெண்
ணலங்கனிப் பருவச் செவ்வித்
துறைகெழுந் தித்த ரங்கந்
தாக்கியே கங்குற் றேன்றி
நிறைகெழுமா ரெங்கக் கரங்கு (?)
மணவினை நினைந்து நைந்து
கறைகெழு வேற்கை வேந்த
னுளப்புலன் கனிந்த நாளின். (51)

உத்தரப் பருவ மென்ன
மங்கல மகளி ரொப்பக்
கொத்திணர்ப் பருவ மோங்கச்
சிறந்துமுக் குணத்தி னங்காற்
பைத்தநெற் கதிர்கள் பாங்கிற்
பங்கயம் குவளை வாச
மத்திறத் துணர்ந்து சென்னி
யசைத்திட வைத்த தன்றே. (52)

வேனல்வந் திறுத்த காலை
மீனவன் பொழிலுட் சேர்ந்து
கானவண் டிசைக்க மஞ்ஞை
நடத்தினைக் காட்டக் கொன்றை
யானபொன் சொரியப் பாங்கர்
தலையெடுத் தசைப்ப முல்லை
மேனியிர் கொடிக்கே ளந்தச்
சிலாதல மீதி னுற்றாள். (53)

வள்ளவெண் ணறவு மிழ்ந்தொத்
தலர்ந்தன வகுள மூரல்
கொள்ளவ னிறத்த ரும்பி
நாகமே குழைந்த பொற்று
ளள்ளரத் தகத்தி கைக்க
மலர்ந்தன வசோக வங்கை
விள்ளுறுத் தொடரச் சுணங்கின்
மாவலர் விரிந்த வன்றே. (54)

நாக்குகண் செப்ப தொக்கத்
    திலதம்பூ னுடங்கக் கூறும்
வாக்கித மென்னச் செங்கொங்
    கவிழ்ந்தன வரிமிட் டற்ற
வூக்கமா ரிசையின் மெல்லெ
    னிதழொடு ஞாழ லுற்ற
வாக்கமா ரனுரா கத்திற்
    கலந்தசண் பகங்க ளன்றே. (55)

தழுவுமெய் யெழில்சார்ந் தென்னக்
    குரவலர் தந்த மாதர்
குழுநெடி துயிர்ப்புற் றென்னச்
    சிந்துவ ராம்வீ கொண்ட
வழுவில்பா டலம்வி ரிந்த
    வடகணே செருந்தி செந்தே
னெழுகலால் மகளிர் கொங்கைச்
    சுணங்கினை யுய்த்த தன்றே. (56)

தோல + யன்னம் பிண்டி
    யிதழ்சுடர் துண்டத் தேந்த
யேலமா துளம கத்தீ
    வளர்ந்திடக் குயில்க ளெங்கு
கோலவெம் பணமு ழக்க
    வண்டுபல் லாண்டு கூறப்
பீலியந் தோகை செய்யு
    மணத்தொழில் பிறவுங் கண்டான். (57)

பொன்னிற நிம்பத் தின்வீழ்
    பலத்தினைப் பூவை யேந்தி
மன்னிய கிளிகள் பாட
    மாதவி மலரின் முன்னர்
தன்னுடைப் பெடைக்கு நல்கச்
    சேர்தல்பொற் றுலி யேந்திக்
கன்னியை மணம்பு ணர்த்துந்
    தொழிலெனக் காட்டல் கண்டான். (58)

மருவிய மகளி ரானு
    மரசன்கோ வளத்தி னானும்
பருவமுற் றியதா முற்றும்
    பன்மலர் மணங்க மழ்ந்து
மொருவிலா மணத்துக் கோலம்
    புனைந்துமெய் நலங்க னிந்து
தெருவுமா லுவகை மாறித்
    தெளித்திடு மாட்சி கண்டான். (59)

விரியினர் மாத விக்கீழ்ப்
பேதையர் விரவிச் சிற்றில்
பரிவில்வண் டலம்பா வைக்கு
வானைகாள் பரிய நல்கி
யரியமுத் தரிய மைத்து
மாதுளை மணியி ஞர்த்த
வுரியமங் கலநாண் பூட்டு
மணத்தினை யுமைப்பிற் கண்டான். (60)

கண்டுதன் மகள்ம ணத்தைக்
கருத்திடை யுள்ளக் கூட
லண்டர்கோன் கோயில் வாயின்
முழவொலி யதிரத் தன்பால்
கொண்டபே ருவகை வேலை
விழிவழிக் குதித்த தெய்ப்ப
விண்டநீர் சோரத் தேம்பி
மெய்ம்மயிர் பொடித்தா னன்றே. (61)

என்னையா ளுடைய சொக்கன்
அருளினைந் தேங்கி யேங்கிப்
பொன்னற மலர்சூழ் காவின்
மணத்தொழில் புல்மைக் கேற்பத்
துன்னிய மங்க லப்பொற்
றுழனிகண் டமையா ஞகி
யின்னனீர்த் தணங்க ஞர்பா
னெருங்குற விருந்தா னன்றே. (62)

சுரமுனி யுரைத்த போத
முளங்கொளாத் தூய வேந்தன்
மரபுடை மகளி ரோடு
சோலைவாய் வருதல் சொற்றும்
பரவிய தமிழ்சேர் தென்றற்
பருப்பதத் தவத்தோன் கூறு
முரையுமந் திரத்தர் சொல்லு
மன்னவ னுவப்பச் சொல்வாம். (63)

நாரதச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 924.

உற்பத்தியா காண்ட முற்றும்.

2. திக்குவிசய காண்டம்

மந்திரச் சருக்கம்

அரியயன் முனிவர் வானோ ரருமறை தெளியா வாதிற்
பரிபுர மொலிப்ப வெள்ளி மன்றிடைப் பதஞ்ச லிக்காய்
விரிமலர்ப் பதமு தைத்தும் வீசியுங் கரங்கள் பத்து
முரிமையிற் கிளர வோங்கும் நடத்தினை யுளத்தில் வைப்பாம். (1)

அருந்தவ முனிவ னோர்ந னணைதலுஞ் செழிய னன்பாய்
பெருந்தவ முடைய னென்னுப் பேகணித் திருதாள் போற்றி
பொருந்திய வணையு நல்கி யருள்வழி புறத்தி னெய்திக்
கருங்கணி திறத்து வேறுக் கட்டுரை பயிற்றி னானே. (2)

வயந்தவைந் திருந்த காலை மதுகரங் குழுமி யாங்கு (?)
நயந்தரு செவ்வி நவ்வி நலங்கனிந் தரச ரெல்லாம்
வியந்தெனை யிரப்பா யானு நகைமுக விருந்து செய்யேன்
பயந்தவூழ் வலிதென் றெண்ணிப் பயப்பய வறிவு தேர்ந்தேன். (3)

ஆதினுள் வரத்தி னானு மமைச்சர்கள் புலமை யானுஞ்
சோதிட ருரையி னானுஞ் சுரமுனி யிடித்த லானு
மாதிவ னேன்பி னானு மகவிலேன் றளர்ச்சி யானுந்
தீதிலெ னெந்தை தன்பா லடித்தியாஞ் சிறப்பு நொந்தேன். (4)

அடிகளை தருளிற் றிங்க ளாதியெம் மரபின் வாழ்க்கை
கொடியனெ னளவி னீங்குங் குட்டுவன் சென்னி கொள்வன்
நெடியவிவ் வுரிமை யென்னுக் கலங்கவிழ் நாய்க னோர்ந்தேன்
கடிமல ரிழந்த காவுங் கதிரிலா வானும் போன்றேன். (5)

வருத்தத்து நெடுநாள் காறு மனநிலைப் படாமு யற்சி
பொருத்தின னதுமு டிந்தா ளவையொரீஇக் களிபுக் காங்குத்
திருத்துமிவ் வல்லி சேரச் சிறிதுநாட் டுரந்த தீமை
யுருத்திடா தடிகட் கண்டே னுறுகணுக் குறுக னோர்ந்தேன். (6)

(வேறு)

எனவுரை வழுதியை யெழில்சேர்
முனிவனு முயல்வதில் வருமோ
வினைவழி யெவரையும் விடுமோ
கனைகுர் லொலிபடு கழலாய். (7)

முரசடி படவரு முனைவே
லரசர்க ளளவிலர் நெடுநாள்
விரைசெறி குழலியர் விழைவாய்
வரைசெறி தவமரு வினரே. (8)

மகவில தெனவயர் மதியே
னகனில முழுதர னருளாற்
றுகளற வுனதொரு சுதையே
புகலுரி மையைநனி புனைவாள். (9)

வடகட லளவெதிர் மருவா
ரடபடை படவட கரிமேற்
றொடர்பிண வரிபொரு தொழில்போற்
படையொடு திசைதிசை பயில்வாள். (10)

முடியொடு முடிபொர முனைவெற்
படியர சர்கள்பணி வுறவே
நெடிபடு நெறிதொறு நடவா
வடிபர வபையம தருள்வாள். (11)

உலகமு முயிர்களு மொழியா
வலகுட னுதவுமை யனையாள்
வலதலை மிசைவரு மயில்போ
னிலைமன ருயிர்தெற நினைவாள். (12)

இருமர புரிமையு மிவளே
தருமத ரனுள்மகிழ் தரவே
பொருமதி குலவியை புதல்வியைநீ
திருமுடி புனைசெய விதுவே. (13)

இதுமதி யிதினுயர் விலையே
முதுமதி மதியரு மொழிவார்
புதுமதி முகமயில் பொலிய
விதுமதி விழைவர சருளே. (14)

உரமிகு புயமிசை யொருவாய்ப்
பரமக டெவமரை படரா
வரமிகு தவமரு வெனவே
திரமுற முனியுரை செயவே. (15)

(வேறு)

வென்றி மன்னன் விளங்கு புயத்துணை
குன்ற தென்ன வுயர்ந்து குளிப்புடன்
றென்ற லங்கிரி மாமுனி செய்யதாண
மன்றல் சேர்முடி வாய்த்திடச் சாத்தினுன். (16)

மேவு மாதவன் பால்விடை கொண்டெழாப்
பூவு லாவு புயத்திற் பொலன்குழை
நீவு மாதவம் வெற்பி னிறைந்தன
வாவு வில்விட வாண்முடி தூக்கினுன். (17)

வேந்தர் வேந்தன் விளங்கவை நீங்கியே
பூந்து ணர்ப்புயல் புக்கு வளர்ந்தினி
வேந்து சின்னம தேந்திழை யார்கொளப்
போந்து பள்ளி யணைப்புற மன்னினான். (18)

வாமச் செங்கை மணிமுடி தாங்கவே
நாமக் குண்டல மூசலி னாலவே
ஏமத் தென்னன் றனித்தணை மீப்பொலிந்
தேமச் செங்கையு மாழ்ந்திவை யெண்ணினான், (19)

புரசை யானை புரவலர் பொள்ளென
முரசு தண்படு முன்றி லுறங்கவே
யுரைசெய் மன்னவ ராயினு மூங்கவ
ராசுங் கண்ணுஞ்செங் கோலு மமைச்சரே. (20)

ஒற்றைச் சில்லி நுகத்தொரு பால்வரை
பற்றித் தாங்கிய பண்பினிற் பாரெலாங்
கொற்றத் தோளொரு பாலர சன்கொள
மற்றத் தொழில மைச்சர் வலிப்பரே. (21)

உருக்கு செம்பொற் களிம்பை யுருக்கியே
மருக்கு லாவித் ததுளி வாக்குறிற்
செருக்கு செம்பொனு மன்னர்தன் றீமையு
முருக்கி நிற்பார் முயற்சி யமைச்சரே. (22)

நிலைப டாப்புனல் கஞ்சமு னீள்கதிர்
மலைப டாச்சுருள் விண்டு வனப்பந்தாங்
கொலைப டாமலை வேந்தருங் கூறுசொற்
கலைப டாவமைச் சிற்கவின் சேர்வரே. (23)

என்று தன்னுளத் தெண்ணி யெழுந்திரீஇச்
சென்று கணங்களுறத் தீப்புன லாடியே (?)
குன்று கொட்டின்ன கொட்டிய வாலவாய்
தன்று கோயி றெழுதெழுந் தேயினான். (24)

விருத்தர் மங்கையர் வெய்யவர் பாலர்நோய்
பொருத்தி னோர்புல னீங்கினர் புள்ளொலி
யுருத்த வாணயி னீத்தெறி யூசலார்
கருத்தன் மந்திரச் சாலை கலந்தனன். (25)

பரித்த பொற்சுவர் நீலப் பலகைமீத்
தரித்த செந்து திருத்திரந் தாங்கிமேல்
விரித்த செம்மணிக் கோலிடை வெள்ளிவேய்
வரித்த மந்திரச் சாலை மரீஇயினான். (26)

ஆய்ந்த சூட்சி யமைச்சரைத் தம்மென
வேய்ந்த வேந்த ருளப்பா டெனவெழீஇத்
தோய்ந்த நண்பும் பயமுந் தொடரப்போய்
வேந்த னைத்தொழு தேவரின் வேறுற்றார். (27)

அகங்கு ழைந்ததொல் லோர்நட் பனுசர்நன்
மகங்கொள் வேந்தர் முதியர் மதியர்போ
யிகந்த பண்டிதர் சுற்ற லிறைமகன்
முகங்க ணகைமொழி யான்முறை சேர்ந்தனர். (28)

புல்ல ணற்புலி பேர்த்தனை யாருரு
மெல்லொ லித்தரு கட்சின முற்றுளார்
வல்ல வரற்கா வன்மை மிலேச்சரே
நில்லெ னக்கடை காவ னிறீயினான். (29)

வந்த பேரவை நோக்கி வழுதியு
மெந்தை சொக்க னருளினு மென்னுளப்
புந்தி மாட்சி பெறப்புக ழும்மினுந்
தந்த மாநிலச் செந்நுகந் தாங்கினேன். (30)

நங்குலத் திங்கள் போன்மென நாடொறும்
பொங்கு மெய்யினைத் தென்பொறை யாற்றலன்
றங்கு வெற்பிற்றவப் பொறை யுளினே
னங்கி சுட்டபொன் னேரவ வாவினேன். (31)

உலகுந் தொன்று ளுரிமையுந் தாங்குவா
னிலகு மன்பு மிருந்தவ சூழ்ச்சியுங்
கலக மெய்பொர வுளங்க வர்த்தனன் (?)
குலவித் தங்கிச் சகடங் குறித்தேன். (32)

தாய கீர்த்தித் தயரத னுறுபத்
தாயி ரத்தொகை யாதி யமைச்சராற்
றூய பார்புரந் தான்சுர வேந்தனு
மேய நல்லமைச் சாலர செய்தினான். (33)

தூய்மை திட்பஞ் செயல்வினை தூதுசொன்
மாம னற்சே ரொழுக்கங் குறிப்புவாய்த்
தேம மிக்கவை கண்டஞ் சுருவிவை
தோம றுத்தரு ணீவிர்சொற் சூழ்ச்சியே. (34)

கூறு செம்மணி தெள்ளிக் கொளுத்தென
வூறு நண்பி னுணர்மதி நுட்பமு
மேறு நூலுந் தெளிந்தர செய்தலோ
வாறு மாதவ மோவறை வீரென்றான். (35)

(வேறு)

வடர்க்கும் படைமன் னுரைகேட் டுவெரீஇ
யிடிக்கஞ் சாவென் னவிசைத் திலரா
ஞெடிக்கும் பதிஞேன் பினர்கே ளுரையே
பிடிக்கின் றதுபோன் மதியே சினனே. (36)

பன்னுள் வழிபட் டொருநாட் பரியி
லன்ன ளுயிர்தெய் வமடர்த் ததுபோற்
றுன்ன னிறைசூட் சியுலக் கவெழு
மன்ன லவன ருயிர்மாய் குவனே. (37)

பற்றுந் திருநீ றுபரிந் திடவுற்
றெற்றுங் கணமொப் பவிசைத் திடுநூன்
முற்றும் புலனுட் பமுதுக் குறைந்தீ
ரற்றந் தனுயர்க் கரசால் வருமே. (38)

சாதித் தகழா யர்தவக் கழையே
பேதிக் குமுவப் பில்பெருங் கதைகற்
ரேதிப் புலமைக் குதவா தெனலே
சேதிப் பவர்மன் னர்தெரிந் திடலே. (39)

பேழைப் பணிநூல் விடுபெட் பிலிய
நூழைப் பணிகொள் ளவுயிர்த் தெறுமே
கேழைப் பணிஆட் சிகெடப் புலவோர்
கோழைப் பணிவேந் தர்கொளப் படுமே. (40)

வங்கக் கடன்மா லுமிநூல் வழுவிற்
சங்கப் புனலுண் டுயிர்த்தா ளுவரால்
வெங்கட் புலநூ லினர்மே யின்வெகுண்
டுங்கப் பெருமன் னரிலோய் குவரே. (41)

கவர்முட் கருவிப் பயில்கற் பனைவிட்
டவரைக் கரியட் டதெனப் புலமைத்
துவர்பெற் றவரைத் தொலைவித் திடுவ
ரிவர்வெற் றியிகற் பெருமன் னவரே. (42)

அற்று குமமைச் சனலன் மதியுங்
கற்றார் பரவுங் கலையுங் குலனும்
பொற்று ரவைவெஃ குபுகற் றிரமு
முற்றார் வறிவெ னுமுரைக் குவனே. (43)

(வேறு)

அடிகள் கூறிய மொழிய தேபொரு
ளரசி ளுட்சியு முயிர்களும்
படியி ளுடொறு மெலிய வேதவ
நினைக நீரணி பகீரதி
கடிய நீரடை முழுகி லாதொரு
கரையி லோர்திணைற் கழுவா (?)
ளுடியு மானுயர் மதியை யேபொரு
நுவலொ ளுவயர் கவலையே. (44)

அளவி லாமுனி வரர்கண் மாதவ
மடைய நான்மறை மகமெலாங்
கிளர நீயர சுரிமை யேகொடு
கெழுமி வாழ்த லுரிமைநீத்
துளையு மாதவ நலம தோவுன
துயிரை யோம்புத லரசர்பால்
விளையு மோமனு நெறிகொ லோமிக
விழுமி தோமதி நிருபனே. (45)

ஆல வாயிறை யாதி பாதம
லாது மாதவ மேலதோ
கோல வான நதிப்பு னற்படி
கொள்கை தன்னிலு மிக்கதோ
வேலை வாயமு துண்ப தொக்குமி
மேதினிப் பொன்ற நீப்பரோ
சோலை வாழ்கனி யுண்ட பேர்க
டுறந்து காய்தனை யுண்பரோ. (46)

சொக்க லிங்க முனக்க ளித்த
சுமைப்பெ ரும்புவி தாங்குவான்
மைக்க ணங்கை தனைச்சி றப்ப
வர்க்கு நல்கிய வன்வயத்
திக்க டற்புவி நல்கி நின்னிலி
கற்ப டைத்தவ ளுட்சியை
மிக்க பின்பெரு மாத வத்தை
நினைத்த வேந்தர்கள் வேந்தனே (47)

சிறிய னன்பொடு கூறு மிவ்வுரை
திருவு ளத்தடை யாதெனின்
வெறிவி ருந்தளி யூட்டு பூங்குழல்
மெல்லி யற்பெரு வதுவையே
பொறிபு லன்றெளி யரசர் மைந்தர்கள்
பெறவ ளித்தவள் புதல்வர்பா
னெறிபொ ருந்தர சுதவி யேனுநன்
மாத வத்திடை நேருவாய். (48)

அரும்பி நன்மல ரூழ்த்த கொம்பனை
யாள வர்த்து வரன்றனை
விரும்பி நெஞ்சுக ரைந்த தென்கொல்
விளங்கு பொன்னி பொருந்தினர்க்
கரும்பி னித்தில மீக வான்றி
முரன்று கண்கய வாய்நெறித்
திரும்பு கார்புகு நாடன் மைந்தன்
பரிப்ப நல்குதி யெந்தையே. (49)

கொற்ற மேவு முடம்பி டிக்கை
பரித்த வேள்குல மிக்குளான்
கற்ற நூல்கரை கண்ட வன்பு
கழிகை நீதி கலைத்தெளி
வுற்ற வன்புவி யிப்பரந்தனி
யோர்பு றச்சுமை யாற்றுவான்
மற்ற வன்வது வைக்கெ னுள்ளம்
வரித்த தென்றுரை கூறினன். (50)

மதிபு கன்றசொன் மதிகு லத்திறை
மதிபு குந்தில மதியுடன்
நதிபெ ருஞ்சடை யெந்தை தன்னரு
ளெற்ற தோவென நளினமீப்
பொதிய விழ்ந்திட நோக்கு செங்கதிர்
புரைய நூலுணர் சுமதிமேற்
கதிபொ ருந்துகண் ணருள்பொ ருந்தவு
மிறைஞ்சி னன்சில கழறினன். (51)

(வேறு)

மணிகொழித் தனைய செவ்வி
மதிபுரை மதிய தாகுங்
கனிகொழித் தனைய வோவங்
கருத்துளத் திருந்து மாபோ
லணிகொழித் தனைய மேனி
யடிகளே யடியன் புன்சொற்
பிணிகொழித் திடினுந் தெள்ளி
யுளத்திறை வேட்பிற் கொள்வாய். (52)

மகத்தொழி லனைத்து முற்றி
மனுநெறி யுலகங் காத்தாய்
இகத்துடன் பரத்தை நல்குஞ்
சொக்கனை யிகழ்ந்து வெங்கான்
முகத்தருந் தவமு யற்சி
முயன்றனை யரிகொள் மேய
வகத்துமிக் குறுவா ரென்ன
வல்சினை யய்ய வென்றான். (53)

விண்ணகங் கட்குக் கொண்ட
வெண்குடை வெதும்ப நீங்கா
மண்ணகத் துயிர்க லோவென்
றாற்றமா தவம்நி னைந்தாய்
கண்ணகன் கூடற் சொக்கன்
றருங்கதி கருத்திற் கொள்ளாய்ப்
பண்ணகப் பித்தி சீவாய்
புறத்தணி பரப்பு வாயே. (54)

அயனரு ளகத்தி ரிப்பே
ரவிர்மதி புந்தி மற்றோர்
நயனமா முரிமை ஞாலம்
புரந்துநல் குமரர் தம்பாற்
பயனுறு முரிமை நல்கிச்
சொக்கனைப் பரவி நின்று
ரியன்மக ரவரு முன்பார்
நிறுத்தருந் தவமியைந்த தென்ன (?) (55)

கல்லென முழக்கிப் போக்கிக்
கவுளிழி கடாத்த வேழ
மொல்லெனப் பரிக்குந் திக்கை
யுழைபரித் திடுவ தன்றே
மல்லென வுயருந் திண்டோண்
மன்னவ மங்கை யர்வில்
வில்லெனும் வேலி கோலி
யறப்பயிர் விளைத்தி மேலோய். (56)

நலங்கனி பருவ மாதை
யறத்தொடு நிறீஇ யிஞ் ஞாலம்
வலங்கனி சுதனை நல்கி
யவன்வயத் தாக்கி மாளும்
பொலன்கனி மைபுட் கொங்கை
மீன்விழிப் பூவை யென்னுங்
கலங்கனி மணியைப் போற்றி
யுளத்திருள் கடிதி யென்றான். (57)

மற்றுள வமைச்ச ரெல்லா
மதியுடன் சுமதி தொன்னூல்
கற்றுள மதில்வே றில்லைக்
கவுரிய தலைவ வென்றார்
மற்றுளங் கிருந்தோ ளும்பர்
மகரகுண் டலந்தை வந்து
விற்றுளங் கிடக்கி ரீடஞ்
சாய்த்திவை விளம்ப லுற்றான். (58)

கருமணிக் கடகச் செங்கை
கற்பகக் கொழுந்திற் காட்டித்
திருமணிக் குழைவில் வீசி
சிறுநகை நிலவு போர்ப்ப
பொருமணிப் பணியின் விட்ட
நெட்டுயிர்ப் புலவப் பொற்பின்
கருமணி கண்கள் கொட்டி
யின்னணங் கழற லுற்றான். (59)

உரிமையு மரசுங் கோனு
முயிருமென் றிருவு நீவி
யருமையிற் புவனம் தாங்கி
யெய்த்தனன் தவத்தி னூர்வம்
விரிதரு நெக்கு நெக்கு
விழைந்தன பற்ற கில்லேன்
புரிகுவன் றவமென் றேதப்
புலமைநீர் துணுக்கு கிற்றீர். (60)

இந்துவை முதலா யென்றென்
றென்குலத் தரச ரேனோர்
சுந்தரத் தடாத கைபொற்
கொடியெனச் சுமைகொ டாற்றார்
முந்தைமா ஞால மன்றெப்
புவனமு மொய்ம்பி னுங்குங்
கொந்தலர் பலங்காய் தாங்குங்
கொடியெனப் படியி னென்றான். (61)

கடற்சுமை பொறைதார் வேம்பின்
கண்ணியி னொருமென் றெட்டு
மடற்சுமை பொறைய தாமென்
வயிற்சுமை மகட்கு நல்கி
யுடற்சுமை பொறைதரிப் பாலோ
னெல்கின னெல்கா மாற
னடற்சுமை பொறையி னீங்கி
யருந்தவ முடிப்பன் காண்மின். (62)

(வேறு)

செல்வ மென்பது பன்னாட்டே விண்டன
னல்வழி பக்குவ மருவ நாடலன்
கல்வியிற் காழ்த்தவ ருந்திக் கான்றபி
னெல்வளத் தமுதமே யென்று முண்பரே. (63)

விசையமு மமுதமும் பெறினு மேலவ
ரசையுமுட் கருவியின் படினு நன்பிடி
மிசைவுறுக் களிறென வெறுத்து மிச்சிலே
நசைவுறு ஞாளியி னனிய ருந்திலன். (64)

இருபொழு திருசுடர் மிகுந்தெய்த் தென்னமெய்
பொருவிரு வினைதொடர்ந் தூட்ட வைகலும்
வருபல னுணர்ந்தயான் வருந்திக் கோதினைப்
பொருவிறீஞ் சுவையுண்டும் விடார்கள் போல்வனே. (65)

தலைமுடி முடக்குமுட் சாரு நாவினி
னிலையறு மீனென நெக்கு மாதரார்
கொலைவிழி நச்சிவிட் டெளிதிற் கோதிலா
நிலைபெரு பதத்துடன் விளைய நேர்வனே. (66)

பவந்தரு மயமக முதல பன்மக
நவந்தரு மீள்கலா நெறியை நல்குமே
சிவந்த சோத்துகிற் சோரி தீர்க்குமே
தவம்புன லாயுட் செகத்தை நீக்கவே. (67)

கொனலினை யிாண்டநல் குரவஞ் செல்வமு
முனலினை யுலகமும வானு முட்டற
மனலினைக் கறங்கென மருவும் யாவுமீத்
தெனவினை தேறப்பா பத்தி லெய்வனே. (68)

(வேறு)

மந்தி ரத்தர்சொன் மலைமு ளைக்குலத்
தந்தி ரத்திருத் தென்னவர்க் கெய்தரா
யந்தம ரற்றநன் புடனு ரைத்தனங்
கொந்து லாமுடி சூட்டல் கூறுவாம். (69)

மந்திரச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 993.

முடிசூட்டுச் சருக்கம்.

என்னை யுள்ளிநீ ரிசைத்த சொல்விலே
யன்ன தன்பினுக் கவதி யில்லையே
முன்னை யூழ்வினை முயற்றில் நீங்குமோ
வென்னை கேட்டிசின் னேனது வாய்மையே. (1)

வீணை மாதவன் விரித்த தாங்கட
லூனை யுண்டவ னுரைத்த வாய்மையுங்
கோனை யாணையீர் கொண்டி லீர்கலோ
வானை மாதவத் தனைவ னட்பதே. (2)

அலகு ரைத்தது மால வாயர
னிலகு வாணியுங் கனவி லெய்ந்தது
முலக வாவுமுன் னுரைப்பக் கேட்டுளீர்
பலவி டிக்கினு பயன தில்லையே. (3)

ஆல வாய்ப்பிரா னருள்பி ழைக்குமோ
சோலை வாய்த்தலர் சொல்லி கக்குமோ
வேலை வாய்ச்சுவை யனைய மெல்லிய
ருல வாய்ச்சுமை தாங்கச் செய்துமே. (4)

உறுத்த தண்ணிமை யொப்ப மங்கைபார்
பொறுத்து வைகலும் பொலிவு தாழ்த்தபின்
வெறுத்து நோன்பினுன் வீடு சேர்வமென்
றிறுத்த சொல்லினு லன்பி லாயினுர். (5)

அண்ணல் வாய்மைகண் டமைச்சர் யாவரு
மெண்ண மீதில்வே றில்லை யென்னவே
வண்ண மாதினை வல்லை தம்மெனுக்
கண்ண ணுர்கள்போய்க் கடிது கூறினுர். (6)

ஈன்ற வன்பணி யென்ன வேயெழுந்
தான்ற வன்கணுர் புடையி லண்ணவே
கான்ற வந்துணர்க் காம வல்லிபார்
தோன்ற வந்தபொற் றேகை மேயினுள். (7)

ஏகு மேகுமி தானை யென்னவே
வோகை மாதர்வேய்ங் கொலியி னெற்றவே
நாகர் வேலைவா யமுதி னண்ணல்போற்
றேகை நாடுவா னுலகு துன்னவே. (8)

பட்ட கண்கொளார் பற்றி யெய்தவே
வட்ட வான னமதி யாண்டுபா (?)
லிட்ட வான்குருச் சேயி லங்கல்போற்
றெட்ட செஞ்சுடர் தோடி றப்பவே. (9)

நித்தி லச்சரக் கூந்த னீண்டுதாழ்ந்
தொத்த காளரோ மாவ லிச்சுடர்ப்
பத்தி வெண்ணிடை பயில்வ தெய்ப்பவே
தத்து வாட்கணரி சனமி லங்கவே. (10)

இக்கு விண்டமுத் தென்ன வாயெயிற்
றுக்க வெண்ணிலா வொளிகு லாவவே
தொக்க மெய்யெழிற் றெகைதொ குத்தென
மிக்க கொங்கைகச் சிடைவி ளங்கவே. (11)

தான டைந்தநூ லிடைத ளர்ந்ததென்
ருன வோலிடர்ப் பரும ராக்கவே
மான சத்தென மருவு மாறெனத்
தேனு லாமொழித் தெரிவை மேவினுள். (12)

வந்து தந்தைதன் றுள்வ ணங்கியே
தந்த பொன்பணித் தவிசி லெய்தனு
மெந்தை யெம்மனை யென்று கைக்கொளாப்
புந்தி யிற்புயம் புதையல் புல்லினுன். (13)

தழுவி னன்மடித் தலமி ருத்தியே
குழுமி வண்டுசேர் கோங்கு லாமலர்க்
கழும வுச்சியைக் கமழ மோந்துபின்
எழுது பொன்னனுட் கிவைவி ரித்தனன். (14)

எப்பி றப்பிலெத் தவமி யைந்துளே
னெப்பு ரைக்கொனு வுன்னை யீன்றனன்
செப்ப ருந்திருச் சேர வோங்கிய
மைப்பெ ருங்கடற் குவமை மன்னினேன். (15)

எனது ளத்தவர் வளவை யெத்துணை
யுனது செவ்வியு முறுநி கர்க்குமே
தனது செவ்வியுங் குமரி சார்வுசேர்
வனம தொக்குமென் மனையின் மாட்சியே. (16

வரிம யங்குகண் மதர்வை நோக்கினு
யெரிம யங்குமுன் னிழுது வேய்ந்தபோ
லரிய மைந்தரற் றிடர மூங்குநா
ளுரிமை தாங்கவந் துலகு தாங்குவாய். (17)

கரையி றந்தநூல் கற்று ளாயென
துரையி றந்திடா துரிமை தாங்கெனு
வரையி றந்ததோள் மறித்தும் புல்லினுன்
விரையி றந்ததார் வேந்தர் வேந்தனே. (18)

தந்தை சொற்றவர்த் தலைமை பூண்டனன்
முந்தை தந்தைமுப் புவன மீன்றுளான்
சிந்தை கண்டுவந் தில்லஞ் சேர்கென
நந்தி லன்பினால் விடையு நல்கினன். (19)

சுவைய னுள்மனத் தொடர வேந்துதே
ரவையி னீங்குவார் முரச மார்த்திட
நவையில் சுற்றமோ டில்ல நண்ணநீர்க்
கிவையு ரைக்கவான் கதிரு மேகினன். (20)

(வேறு)

அழுந்துமேற் றிசைக்கொடி யறைந்த கந்துக
மெழுந்துவீழ்ந் தெனவரை யிரவி சேர்தலுங்
கொழுந்துபட் டிளங்கதிர்க் கொடித வழ்ந்தெனத்
தொழுந்தகு மாலைவாய்ச் செக்கர் தோன்றிற்றே. (21)

அரியகேள் பிரிந்திட வரவிந் தக்கொடி
யுரியநெட் டுயிர்ப்பில்வண் டொருவிச் சார்ந்தென
விரியி னிலம்புனல் விளைந்த கங்குலைப்
புரியுமங் கண்சிரங் கணித்தல் போன்றவே. (22)

தடாதகை முடிபுனை முழுத்தஞ் சாற்றுவான்
கடாமலை யிந்திரன் கணிதற் கூய்நெடும்
படாமெனுங் கடுத்தமே விரித்த பண்பென
விடாவுடுக் கணமிடை விரிந்த தென்பவே. (23)

தன்னர சுரிமையைத் தவாத தடாதகை
மின்னர சேந்துதல் காண வேமதி
யன்னவ ளாடவா னதிய மைத்துவீழ்
பொன்னணி கடத்துமே னிலவு பூத்ததே. (24)

நான்முகங் கலவையு நறிய சந்தமுந்
தேனுகு மாலையுங் கலையுஞ் சேர்ந்திடப்
பானகுஞ் சுதைநிலாப் பரவு மாவணத்
தானபா லலமலர் விளக்க மார்ந்தவே. (25)

கூவியர் மோதகர் கூல்க ராகர்
நீவிய கடைக்கிடு கெடுத்துநேர் வைப்ப
மேவிய மணிவிளக் காவு வேந்திவண்
டூவியன் காணிய தெளிவு போன்றதே. (26)

வலம்படு தும்பையர் க[ா]டக வாழ்க்கையர்
பொலம்படு பூணினர் பூத்த கற்பகக்
குலம்படர் வல்லியிற் குழீஇத் திரிந்திடு
நலம்படர் மறுகெலாம் நன்மை சான்றதே. 27)

வெள்ளிவேய் மாளிகை மீப்பொ ருந்திய
வொள்ளிய வரங்கெலா மொப்ப தொக்கவே
வெள்ளிய வாரியம் பாணி வங்கியங்
கள்ளிய குழன்மினா ராடல் காட்டுமே. (28)

பரிநிரைப் பந்தியிற் பாசம் வீக்குனர்
கரிநிரைக் குரியநெய்க் கவளங் கைப்பவர்
விரியொலி யுருமுறழ் மேக மொப்பென
வரியவார் கலியொலி யடக்கு மென்பவே. (29)

வேரியுஞ் சாறுநல் விழாவு நீங்குருச்
சீரிய யாமமுஞ் செங்கட் புன்மயிர்க்
கூரியக் கழுக்கடைக் கொடியர் தோலடிப்
பாரியின் முழக்கமுற் பாவை போலுமே. (30)

தோட்டுடை மலர்க்கடை யுரையத் தென்னகர்ப்
பூட்டைக் கடைப்புனை மிலேச்சர் பொற்பிணி
லேட்டுடை மலர்விளக் கேந்திச் சோதினை
நாட்டுடை யோதைகார் நாவல தொக்குமே. (31)

நரையணர்த் தாடிமூ தாளர் நண்புடன்
வரையிடத் திரியெனும் வாயில் காவலர்
நிரைநிரை யுந்துருச் சுடர்க ணீட்டியே
யுரையினைக் காத்துரைத் துலாவன் மேயதே. (32)

தவாத்தகாள் கிடுகுவிட் டடைத்தக் கால்கடை
நிவாத்தவா வணநிரைப் பளிக்கு நெற்றியின்
றுவாத்தவா னன்மினார் துயில் வண்டுதேன்
சுவைத்ததா மரைநிறை துறைபல போன்றவே. (33)

கவ்விமீன் றந்திணைக் கரங்க ணீங்குரு
நவ்வியங் கண்ணினார் தழீஇய நாயகர்
திவ்விய தருவிடைச் செறிந்த வல்லியும்
வெவ்விய நிலத்தவாழ் வெற்பு நேர்வரே. (34)

புயத்துணை முலைமுக ஞெமுக்கப் பூணுட
னயத்துணை தொடலைநீத் துரிய நாட்டமாம்
வயத்துணை விழியிமை மடங்க மாடமேற்
பயத்துணைப் புள்ளெனத் துயிலைப் பண்ணுவார். (35)

பிரிசிறைப் பார்ப்பிணைப் பேடை யினைச்சுழி
வரிசிறை மலர்த்துயில் வாய்த்த புள்ளெனப்
பொருசிறை யணைமிசைப் புகல்வ மாதரோ
டரசர்க டுயிலிடை யளப்பி லாதவே. (36)

அலகொரு புறஞ்செல வாற்றிக் கண்விழித்
திலகுமன் றிலம்பெடைக் கின்ப முட்கெனக்
குலவிய காநெகிழ் கொண்கர் கையிடைத்
தலைவிய ரேமிக மயக்கஞ் சாரவே. (37)

உவாமருப் பிணைக்கடை யோவப் போதியிற்
றவாமணிப் புறவுதன் சேவ னீங்கவே
யவாவினிற் களவுகண் டயலிற் செய்வினைக்
குவாள்மதிப் புறவுடன் குறுகி வைகுமே. (38)

பொன்விளக் கனலொளி தணியப் பூணிடை
மின்விளக் கியமணி மிகவுந் தண்ணுற
முன்விளர்த் தனதிசை முழுக்குக் கங்குலு
நன்விளக் கெனுமுடு பதியி னனவே. (39)

கூடலம் பதித்திருக் கோயில் வாரண
மாடலங் குமரன்கை யமைத்த வாரண
மாடலம் பின்னிசை மகர யாழினிற்
றேடலர்த் திடுதடச் சுரும்பி சைத்தவே. (40)

விளித்தல புட்குலங் கதிரை விண்ணிடத்
தொளித்ததன் வுடுபதி யிருளை யொப்பெனக்
களித்தன தாமரை முகிழ்த்த காவிதேன்
றுளித்தன வரிபொரச் சோலை யீட்டமே. (41)

புறச்சமை யம்படு புந்தி யஞ்செழுத்
துறச்சமை யம்படிந் தொளிப டைத்தபொன்
மறச்சுட ராயிருண் மாய்ப்ப வெற்பிடை
யறச்சுடர் நிகரென மருக்கன் றோன்றினன் (42)

பரிகரி யிரதமும் பண்ணி யொப்பிலா
வரிபுலி யாளியொத் தரசர் மேயின
ரெரிமணிக் கொடிவிளக் கியின் மயூரத்து
விரியணி யணிமின ர் மிடைந்து தோன்றினர், (43)

அருந்தின முழந்தய னமைத்துக் காட்டுவான்
பொருந்தியே திருந்துறு புவன மொப்பெனத்
திருந்துபூ மயன்வினைச் செறிந்த கூடலை
விருந்தென வொப்பனை விரவச் செய்தனர். (44)

விடத்திரு விழித்தடா தகையை விண்ணுறை
தடப்பொலன் கொடியினர் சார்ந்து வேந்துறை
யிடத்தவர் வெய்திமா றெடுத்த கூத்தர்கள்
படைத்தடைந் தென்னவொப் பனைகள் பண்ணினர். (45)

(வேறு)

பற்றுந் திங்கட் கான்று புறஞ்சேர் பணிபோலச்
சுற்றும் பின்னற் கூந்தலி னுனந் தோய்வித்தார்
பொற்றும் பாசத் திற்கிமிழ் கங்குற் போர்வீக்கி
முற்றுங் கோலத் துச்சியின் முச்சிச் சுருள்வைத்தார். (46)

உடுபுஞ் செக்காற் சுருளிருண் மின்னு முரழோதி
வடுவும் பிறையுந் தொடையு மலரு மயன்மாற்றிப்
படுதண் புயலிற் புழைநுழை நிலவிற் பலமாலை
நெடுமல் லிகைவெண் டொடைபுடை யுறவே நிரைசெய்தார், (47)

கறைவெண பிறையிற் றிலகங் கவினு சிறுநெற்றித்
துறைமுப் பதகைத் திருநீ றெளியச் சுடர்வித்தா
ருறையஞ் சனம்வா ளிமுதிற் பொலிகண் ணுறன்மாற்றி
நிறையுங் கமலத் துறையொத் தனசீர் நிறைவித்தரர். (48)

சிலைவண் புருவங் குனியக் கனியுஞ் சிறையம்பின்
கொலைதங் கியகூர் புனைசா ணையெனுங் குறைமாற
வலைகுத் தொடுபாளை யண்டலவங் கதிரோன்சலத் துறைவென்ன ?
மலைதிண் புயமீத் தழையப் புனையா வடிவுய்த்தார். (49)

வளையின் கமுகின் றரளத் தொடுபா ளையைமானுங்
களமுங் கவிதை கதிர்மா மணிநான் களுல்வித்தார்
விளையைந் தருவின் புடைவண் டெனவெள் வளைநீக்கிக்
கிளருங் கிரிசுத் தரவங் கதமுங் கிளர்வித்தார். (50)

வயிரக் கணையிற் புனைசங் கிலிமற் றையபூணுட்
பயிலச் செறியின் புறமே மறையப் பயில்செவ்விக்
குயில்பொற் பணிகண் டிகைபா சிழையிற் குலமார்வுற்
றயில்பெற் றகனு டிருமெய்ச் சுடரொத் தணிவித்தார். (51)

துணைபெற் றமுகைப் புறநூல் விழைவின் றுகில்சேர
விணைபெற் றதனந் திருமார் பிடைவம் பவிழ்வித்தே
மணமுற் றியதன் னிசைவல் லியின்வா ணிறமுன்னூற்
கணிவித் தகர்சித் திரமொத் தவள்பாற் கமழ்வித்தார். (52)

பட்டுங் கலிபட் டிகையுந் துடியிற் பரனன்பாய்க்
கொட்டும் விரலுந் துகிற்பு ரையக் கொளனீக்கி
வட்டுந் துடையிற் பொலிநாண் வட்கஞ் செறிவாள
மெட்டுந் துருவக் கயிறூர் கதிரொத் தியைவித்தார். (53)

(வேறு)

சூழுஞ் சுருதிப் புகலிற் சுரருந்
தாழும் பதநூ புரசா லமொழித்
தேழுந் திசைவண் டெழுகஞ் சமலர்க்
கேழின் கழருட் கிளர்வித் தனரே. (54)

மண்ணு டர்விணர் வழுத்து முன்னுட்
பண்ணு மயிடற் பொருபா வையினுள்
விண்ணு டியார்மெய்ப் பணியொப் பனேயைக்
கண்ணு டினள்கண் ணடியிற் றணியே. (55)

மறைவா ணர்கள்மா கதர்பூ கதர்நூற்
றுறைவா ணரிடத் தருபோன் றிடவே
நிறைவா யவர்வேட் கைநிரம் பவளித்
துறைவா னவர்கற் பகமொத் தனளே. (56)

மதியுஞ் சுமதிப் பெயரும் முதலாய்
விதிதங் குமமைச் சர்கணமே வியுளப்
பொதியங் கவிழப் புலர வதன
மதியுங் கவிழத் தனிவாழ்த் தினளே. (57)

இகமும் பரமுந் தருமெம் மனேயென்
றகமுங் குளிரா வரசே வலிஞ
னகமுங் கனல்வாய் வழிநெய் யெனவே
சுகமெல் லுறையாட் கிவைசொல் லினரே. (58)

(வேறு)

அன்னைநீ யுணர்வுறு தில்லை யாயினு
மென்னையே யமைச்சென வமையு மெந்தொழி
றன்னையே னுணுக்குவ முளத்திற் சார்ந்ததற்
பின்னையாய் பொருளனப் பெடையிற் கோடியே. (59)

இருசுடர் மன்னவ ரிரண்டு காந்தமுந்
தருகுடி யங்கியுந் தட்ப நீருமே
மருவுறு மங்கைநீ மதித்து நன்குணர்ந்
தொருகுடை நிழல்படுத் துலகு காத்தியே. (60)

தண்கடற் கொதித்திடிற் றுங்கு வாரில்லை
வெண்குடை வெதும்பிற்பார் மெலியு மெம்மனை
யொண்கடற் புணர்புவிக் குதவு மாறெனக்
கண்கடை யுயிர்பெறக் காத்தி வையமே. (61)

என்செய்தா யெனத்தம ரிகழ்ந்தி டாதுயர்
முன்செய்செங் கோன்மையை மொழிந்தி டித்திடர்
மின்செய்கார் பிழைத்திடர் மறையும் வேள்வியு
நன்செய்க வர்வுறு ஞாலங் காத்தியே. (62)

பெரியவ ரொருவுருச் சிறியர் பெட்புறு
வுரியவர் வேறுறு வுரிமை நீங்குறு
வரியமா நிலத்தவர் வாரத்தி யாட்சிநீ
புரியவுன் குடைநிழல் பொருந்தும் வையமே. (63)

நீதியுந் தருமமு முறையு மீகையு
மூதிய மெனவவா வொடுக்கி வேள்வியும்
வேதியர் தொழிலுமீக் கூரக் காத்திடி
லாதிநா யகனென வறையும் வையமே. (64)

இத்திற மமைச்சர்க ளிசைத்து மங்கையை
மொய்த்திள வமுதிமுன் கொணர மூய்க்களி
கைத்திற மெல்லியி னகத்துக் காட்டவே
யத்திற மகட்கிவை யரசன் கூறினன். (65)

மேருவி னெடுமுடி விளக்க மென்னவு
நேருடைக் கடலெழு மதிய நேரவுந்
தேருடை யருக்கன்வான் செல்வத் தொப்பவு
மேருடை யென்குலத் தெய்து மேந்திழாய். (66)

அளப்பருங் குமரர்க ளெனினு மன்னையென்
விளப்பெரும் புவிப்பரம் வரிக்க வல்லரோ
விளைத்தன னாற்றலன் புவியை யெம்மனை
விளைத்தலால் வீழெனப் பரித்தல் வேண்டுமே. (67)

என்றுதன் மடமகட் புல்லி யாண்டையு
நின்றுபல் லாண்டிசை பரவ நீண்டபொற்
குன்றுறழ் மண்டபங் குறுகி வேதியர்
துன்றுநா ளினிதுற நெறிதொ டங்கினர். (68)

கற்பக நறுமலர்ச் சாகை யம்மலர்
பொற்பணி சூர்நடம் புவிமி னார்நடந்
தற்பொல னறுந்துமி சரும துந்துமி
சொற்பெறு முனிவர்பூ சுரர்சொல் லார்ப்பவே. (69)

கங்கையை முதனவ கன்னித் தண்புனல்
பொங்குபொற் ருமரை பொருனை யம்புனன்
மங்குறும் கடற்புனன் மணிக்கு டத்தினிற்
றுங்கவெண் பகட்டணி சுமப்ப வாட்டினர். (70)

தென்றலிற் கவுரிநின் றிரட்டித் திங்களின்
மன்றலங் குடையெழ மருவு தோற்றத்தின்
வென்றியங் கயற்கொடி விளங்க மங்கையர்
துன்றிய கருப்புரத் தீபஞ் சூழவே. (71)

ஓவவெ ணகர முடனு டம்பிடிப்
பாவைய ராயிரர் பற்றப் பாவையின்
மேவிய பஞ்சத டாழல் வேந்தர்க
ளேவனின் பலசின்ன மேந்தி நிற்பவே. (72)

மத்தக மிரகத வயிரச் சேமமே
தொத்தரி யணைப்புறத் திருந்து தோகையு
மெய்த்திரு விருந்தவ னளிக்க வெற்புனா
முத்தமிழ் முனிபுனை முடியுஞ் சூடினாள். (73)

மங்கையர் புனைபணி மாற்றி மன்னவர்
துங்கவெண் பூண்வெயில் சுடர வுற்றன
ணங்கைபாற் பகுந்துறை நக்கன் சொக்கனென்
றெங்குள வுலகமு மேத்தெ டுத்தவே. (74)

எரிகொளி கதிரிடத் தியைந்த தென்னவு
முரியதண் டருக்கொடி யொன்றுற்ற தென்னவும்
விரியுமா சனசத்தின் மீண்டுற் றென்னவு
மரிவைபா லெய்தின வரச னாட்சியே. (75)

எம்மனை யுலகளித் தின்ப மெய்திய
வம்மனை வாழ்க்கையின் மாந்தர் நாளெனத்
தம்மனை யெனவுயிர் தழைத்த லோதினம்
வெம்முனை வேலவன் கதைவி ரிக்குவோம். (76)

முடிசூட்டுச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,069.

குமாரச் சருக்கம்

முப்பு வனத்துளோர் முப்பு ளொப்பென
வொப்பிரு சுடர்மழை யுறழ வார்த்தினள்
கப்பவைந் தருவெனக் கரம லர்ந்திட
வப்புறத் தணியிர வலரு மமர்ந்திட்டார். (1)

வேண்டினர் வேண்டன வுதவி மெல்லிய
வாண்டகை சொக்கன் றாளிற் சென்னுகம்
பூண்டனள் புயலினம் பொழிந்த வாரண
மூண்டவேள் விப்பெரு முழக்க மிக்கவே. (2)

ஏற்றமன் னவர்கண்முன் னெழுத்துச் சாத்தினன்
மாற்றரு மமைச்சரை மத்தியி னோக்கியே
போற்றினள் சொக்கனை யன்னை போன்றெனக்
கூற்றரும் புவிக்குளங் குளிர்ப்ப நல்கினாள். (3)

தன்மர பருளிய மதியிற் றண்ணழி
நன்மையி னுயிர்க்கெலா நலஞ்சி றந்தனள்
வின்மய விரவிபொன் மேவ லார்க்கெலாம்
பொன்மயத் திருவிட வெம்மை பூத்தனள். (4)

இன்னணஞ் சிறிதுநா ளரசி யற்றியே
மன்னணங் குருவகை மதுரை யம்பதி
பொன்னனைச் சொக்கனைத் தொழுது போற்றினாண்
மின்னணங் கிறுமிடை யன்னை மெல்லவே. (5)

பண்ணவ ரிசையினைப் பயிற்ற மாதவர்
மண்ணவ ரருளொரு மலிய மன்னவ
ணண்ணுவந் தவமென நினைய நண்புடன்
கண்ணுவ முனியொரு கணத்திற் கண்ணுற்றான். (6)

வந்தமா தவனடி வணங்கித் தென்னவ
னெந்தைமா தவமுனா ளியற்றி யோமகட்
டந்தன ளிவ்வர சாட்சி சார்ந்தனண்
முந்தமா தவப்பலன் முயல்வ னென்னவே. (7)

அரசனும் பன்னியு மளித்த மங்கையு
முறைசெறி முற்பிறப் போர்ந்து வேறுகொண்
டிரைசெறி யரவின்மூச் செறிந்து நிட்டையிற்
கரைசெறி முனிபல கட்டு ரைத்தனன். (8)

இமையவெற் பிறைவனீ மேனை யாமிவள்
சிமையவிச் சுவர்வசு மகளெ னச்சிறந்
துமைமலர்ப் பதம்பராய் வளவிற் கோதைசேர்ந்
தமைவழிக் காஞ்சினி யவளி டத்தினே. (9)

சேர்ந்த தண்டடா தகையென்னச் செவ்வியோய்
வாய்ந்தவெற் பரசனில் வந்த செவ்வியை
யாய்ந்துரை யென்னலு மரச னுட்கொள
வேய்ந்தசொற் கண்ணுவ முனிவி ளம்பினன். (10)

தக்கனிற் புகுந்தது தணப்ப வெற்பகம்
புக்கண களமுது வான்மதியிற் புக்கென (?)
மிக்கநூன் மகளடி போற்ற மேலநாட்
டொக்கநற் கலையெலாம் பயின்று தோன்றினன். (11)

ஆயநாட் டருக னடலில் வானவர்
நாயக னன்புடை நண்ண வெம்பிரான்
சேயினுந் திடவான் யோகந் தீரென
வேயினன் மாரனுக் கிவைவி ரித்தனன். (13)

அரனிடத் தேவல்செய் துமைய மைந்தன
ளுரநிறை தாருக னுயிர்தே றப்பெறு
வரநிறை யோகமே மாற்றிச் சேயினைத்
தரவரு ளெனமதன் விடையிற் சார்ந்தனன். (13)

அணைதரு மனலமோ டனில மாமெனத்
துணையெனும் வயந்தனோ டனங்கன் றேன்றனு
மணிமலி சுடருமைப் பகுதி மானவே
பிணைவிளி யோகத்தெம் பிரானிடஞ் சேர்ந்தனன். (14)

(வேறு)

பின்னுடை யளகஞ் சேர்த்த வகுளமுந் தோளிற் பெய்த
பொன்னுடைக் கோங்கு முத்த மாலையு முலையிற் பெய்த
மின்னுடை மருங்கு முச்சில் வீழ்ந்தவண் டோச்சுங் கையுந்
தன்னிடை விளங்காச் சேரச் சம்புநோக் குதல்வேள் கண்டான்.
(15)

வாங்கினன் வண்டு நாண்டோண் மறுபுறம் பெயரச் செங்கை
பூங்கம லத்தைப் பூட்ட நுதல்விழி புறத்து நோக்க
வோங்கிய வடம பங்க லிறுதியி னுயர்நாத் தீண்ட
வீங்குகார் வீழ்ந்த போலப் பொலியுடற் பரவ வீழ்ந்தான். (16)

(வேறு)

கண்டு வீழ்ந்து கலங்கி மயங்கியுட்
கொண்ட சோபங் குளிக்க விடத்தினை
யுண்ட போலி ரதிக்கொடி யோய்ந்தனள்
வண்டி னேதையின் வாய்விட் டரற்றினள். (17)

மூடி னுள்விழி முடித்தன கேள்வனே
நாடி னுள்வேந்த ச[ர]ம்பரை நாடினுள்
வாடி வீழ்ந்து சுழிக்கொலை வாளியால்
வீடு மஞ்ஞைபொற் கூந்தல் விரித்தனள். (18)

வீழ்ந்த வெந்துயர் வேலைச் சுழியிடை
யாழ்ந்த வாய்விட் டரற்றியின் றையகோ
வாழ்ந்தவாழ் வொல்லென மாதவர் நெஞ்சினைப்
போழ்ந்த வாழிப் புரவல வோவென்றாள். (19)

என்னை விட்டுவன் கண்ணரி லெய்தினை
யுன்னை விட்டுக் கணமிவ னுய்வனோ
மின்னை விட்டுறை யும்புயல் விண்புய
றன்னை விட்டுமின் சாரத் தரிக்குமே. (20)

நீயெ னக்குமுன் றீமை நினைத்திலை
வாய்வி டுத்துயிர் வாழ்கவும் வந்திலை
தாய நீர்விடிற் றுமரை யுய்யுமோ
நாய கர்வுயி ராகிய நண்பனே. (21)

இரதி மார னெனுமுவ மைப்பொரு
ளுரைசெய் போதெ னுளஞ்சுடப் பாரிடை
நிரைமி னார்கள்முன் னுவி நிலைப்பனோ
புரவ லோயொரு மாற்றம் புகன்றிடாய். (22)

நிரைத்த நின்னுள் நீங்கல னென்றுசொல்
விரித்த யான்றுயர் மேலவிண் ணேறினை
யுரைத்தருள் பொய்ப்ப துன்னுழைக் கண்டனன்
றரைக்கு நாயக னேயென் றலைவனே. (23)

மைந்தர் செவ்வியு மாதர் நலங்களுங்
கந்த மற்ற கவிரலர் போன்றிட
வந்த ரத்திறை யாலழி வுற்றனை
யெந்த மாதவத் தியாண்டுனை காண்பனே. (24)

மதிய மார்க்க நிழறரு வாருதி
முதிய வோசை யெவர்க்கு முழங்கிடும்
பொதியு லாமல ரார்பொதி புக்குறும்
விதிவ சத்தினை வெல்பவர் யாவரே. (25)

வல்லி நீட்டிச் செவிமலர்த் தூர்வளைந்
தல்லி நாண்மலர்க் கூந்த லணிந்ததாள்
புல்ல ரத்தகஞ் சேர்த்திடாய் போர்வலி
வில்லலோ யெந்த நாட்டினின் மேவினாய். (26)

சூர ணங்கினர் போகநீ துய்க்குமுன்
சாரு வன்பிரி யர்மதன் ருள்செல்வ
ராரமீநன்றி யிரதிகை மைத்தொழிற்
சேரு மென்றசொல் கொண்டிலன் செல்வியோய். (27)

குயிலும் வண்டுங் கிளியுமுன் கூப்பிட
வெயிலில் வெண்மதில் பொறிகுடை மேவுறப்
பயினு மும்பர் வழிபெற வேனில்சேர்
மயிலின் மாழ்கியான் மாய்வது நீதியோ. (28)

எனப்பு கன்ற விரதி வசந்தனை
நினைப்ப மேவினன் கண்டு நெகிழ்ந்துளந்
தனக்க ணகன்ற துணைக்கை யிருக்கிக்கண்
புனற்சொரிந்தன ளன்பு பொருந்தலால். (29)

அந்த மாரவே ளாக மொழிந்திட
வந்த நீறுகண் டாய்வசந் தாவுடற்
சிந்து தன்மையைச் செப்புதி மாரனே
யுந்து நட்புக் கொளிக்குதன் மேன்மையோ. (30)

எரியுந் தீப மெரிந்துநெய் நீங்கிய
திரியை நேரென யானுளந் தேம்பினே
னுரிய தெய்வ முடலை யிரண்டதாய்ப்
பரிய நல்குமோ வென்சொலிப் பாவமே. (31)

மரமு றிந்திட வாரண மொற்றனும்
பரவு வல்லி பரிந்தென மாய்குவே
னிருவ ருக்குங் கடனளித் தின்பமே
தருதி யன்பு தழைத்த வசந்தனே. (32)

இந்து வீய நிலாநிலை யெய்துமோ
வெந்த வேளுடன் வீக்குவன் கொங்கையிற்
சந்த மூடற் றழலெனக் காட்டிமெய்
சிந்து ருமற் பயின்றுட றேறினேன். (33)

யானுங் கேள்வனு மின்பமோ டெய்துநாள்
பானம் வேண்டல் பரிந்தரு ணன்பனே
கூன லங்கி கொடுத்தியென் கேளுடன்
வானஞ் சேரவென் றேதினள் மங்கையே. (34)

வெளிக்கு மின்னு மிடியும் விழைந்தபின்
றுளிக்கு மாரியவ் வாறெனத் தோகையின்
றளிக்குந் தீமையி னன்மை யழலெனக்
களிப்பில் சொற்றது காயத்து வாணியே. (35)

வற்று மோடை மலரு மரங்களு
முற்ற தீய்மை யொழியப் புயத்துளி
வெற்றி யோடு பொழிந்திட விண்ணிடைப்
பெற்ற வோசையி லாவி மடிந்தனள். (36)

நக்கன் கடகன் ருவவுன் ஞயக
னுக்க வாறு கண்டுளஞ் சலித்திடேன்
மிக்க சந்திரன் வெற்பகத் தெய்திப்பின்
செக்கர் வேண்டல்போற் சேருதி மங்கையே. (37)

என்ன வாணி யிசைத்தவை தன்னுள
மன்ன வங்கியின் மாய்குத னீங்கியே
யின்னு றைந்தனள் வெண்ணில வுண்ணவே
யுன்னு கின்ற சகோர முறைந்தென. (38)

(வேறு)

இமையவேந்தன் விடைகொடு பூவன் மூன்றன்று
னமையு லாங்கிரிப் படாமெ ஊனக்கொடி யந்தேர்
சுமையு லாங்குழ லாய்வெயிற் றெருடையெனத் தவத்திற்
சமைய நாயகி சார்வதே யெனத்துயர் சார்ந்தாள். (39)

மாத வத்தினின் மழைக்கவாஞ் சாதக மற்ற
வாத வத்தவர் நேமிவா னிலவர சகோரத்
தேத மற்றுணர்ந் திடக்கணித் திவள்கருத் துணர்வ
ஞுதி நாயகன் வந்துமா ணவவடி வடைந்தான். (40)

அந்த ணச்சிறு மாணியா யருந்தவ மென்ன
நந்து ருவழற் கொழுந்தென மறைநடந் தென்னச்
சுந்த ரம்புரி தண்டமா னுரிசிகை தொடுநூற்
றந்த முஞ்சியோ டெம்மனை யுறையிடஞ் சார்ந்தாள். (41)

விருந்த ரென்றருஞ் சிறப்பினை யுமைதர விருப்பி
லிருந்திங்கணத்த னுரையிலாங் கொருநிழ லசைஇ
யிருந்த வத்தைநீ யியற்றுத லெளிதல புனற்புற்
பொருந்து ருச்சமித் தெய்துள தொழியெனப் புகன்றான். (42)

(வேறு)

இளமரக் காவிடை யீன்ற மாந்தளிர்
வளமுன தாகத்தின் வனப்பை வாங்கவே
களவுவாட் கண்ணெழில் கபட நட்பென
வுழைவுட னவ்விநீள் புறத்தி லுற்றதே. (43)

வினைக்குவித் தொழிலெனப் புகல்வர் வெய்யவ
ருனக்கெழிற் றவப்பய னுதவ வேய்ந்தது
புனற்பசி ரதிமல ருனது பொற்பினு
முனித்தவ ருவந்திடப் புனித முற்றுமே. (44)

அனைவரு முனைநினைந் தரிய மாதவம்
புனைகுவ ரியாவர்பாற் றவத்தைப் பூண்டனை
யெனதுரைக்கு ரைசொல் லினடப் (?)
பனகரெய் துவரென்ப தறிந்தி லாய்கொலோ. (45)

மலையரை யன்றரு மங்கை செல்வமோ
தொலைவில் பருவமுங் கவினுந் தொக்கனை
யிலகிய தவத்தவர் வென்னை முன்னினும்
பலமது பலித்திடும் பரியு ஞாலமே. (46)

தந்தைபான் முனிவிலை யோகவன் றன்மையிற்
சிந்தையி னிலையார் வாயிற் செங் கைவைத்
துய்ந்தவ னவாவுவன் னுன்னைப் பூணெறீஇச்
சிந்துபு மலர்விடு கொடியிற் சேர்வையே. (47)

இளைத்தனை யுற்றவத் தெவனை யெண்ணிமால்
விளைத்தனை கவின்மத விழைவ தோமிக்க
களைத்தன னுள்விழிக் கணைபட் டாற்றவன்
வளைத்ததொன் மாதவத் தடைவன் மங்கையே. (48)

உந்தைபாற் றுறக்கமுண் டொளிதீ யித்தவ
மந்தியி லுடுப்புல ரியில ணைந்திடாச்
சிந்தைநோய் நெட்டுயிர்ப் புயிர்த்த சேயிழாய்
வந்தனை யுனைச்செய்வ தவநீ வாய்த்ததென். (49)

எனமறை மாணிநின் றிசைக்க நாணிறு
லனகையுந் தோழமீ தருட்கண் சாற்றினள்
புனலளி காலையிற் பொதிமு றுக்குடை
வனசமே லமர்ந்ததே னவ்வள வடித்தனள். (50)

அரும்பசி தன்சுவை யடக்கும் பேரவா
விரும்புநெஞ் சினைத்தவ முதவும் வேதியர்
பொரும்புற நகையினுற் பொருது ளாரருட்
டரும்படி மாதவந் தனையி யற்றினுள். (51)

பனிமலை வெயில்போர்ப் பருவ மாறினு
மினியசொல் லஞ்செழுத் திசைக்க வைகுவா
டுனிபெற வுருவெளி தோன்ற வாதியாம்
புனிதவென் றவாவினிற் புல்லி நாணுவாள். (52)

உயிர்தொறு முளையென வுரைத்த லுண்மையேற்
றுயரெனக் கெய்துமோ தோன்ற லேயென்பள்
பயிர்கரு வுடன்மடி பருவத் தெய்திய
புயலென மரீஇயருள் பொருந்து வாயென்பள். (53)

ஈங்கிவள் கட்புன லிழிய வங்குரித்
தோங்கிய மரங்களுங் கனியு மூங்கெலாம்
பூங்கொடி யவர்முளை பொருந்து சிற்றிடர்
தாங்கல ளுயிர்வினை வழியிற் சாருவாள். (54)

இப்புகற் பாங்கிபாங் கிசைப்பச் செங்கையின்
மெய்ப்படி கத்தினள் விழிபு றங்கொழீஇ
முப்புரத் தரிமணி முடிக்கச் சாருநா
ளொப்பரு நவையொழித் துய்வ னென்றனள். (55)

பதியிலன் குலமிலன் கடையன் பாய்நன்
மதியிலன் மதியினைத் தேயத் தவனக
னதியுட னகல்வையின் வரவு நன்றெனக்
கொதியுமை மயல்பெற வடிவு கொண்டனன். (56)

புண்டர நீறுமுக் கண்ணும் பொற்புறக்
கண்டன ஞுறக் கலர்ப்ப வீதவுந்
தண்டலற் கூயினன் சந்து விட்டனன்
மண்டல நிகருமோ டதியின் மன்னினார். (57)

பொன்னகர் வரவொரீஇப் புரந்தர ராதிய
ரின்னகர் விடாதுற வெழில்ப ரித்ததென்
றன்னகர் வாயிலோர்க் கறைந்து புக்கென
ரின்னறீர் தவந்திரு வெதிர்கொண் டென்னவே. (58)

கலைமதி யெழுகடற் கப்படிந்த கற்பெனக்
குலமுனி வரரடி போற்றிக் கூறலு
மலையளா வுணர்ந்திடர் மலையென் றன்னவ
ரிலகிய வான்மண மிசைக்க வோங்கினான். (59)

அருந்ததி முதலின ரணிகள் சூட்டத்தன்
பெருந்திருங் கடனைக் காட்டப் பிஞ்ஞகன்
வருந்திரு மணிவிழா வரிக்க மாதவர்
பொருந்திய விடைகொடு கயிலைப் போயினார். (60)

வணங்கிமா தவர்புகல் வழிக்கொண் டெந்தையுங்
கணங்களோ டன்மிசைக் கயிலை நீங்கியே
யணங்குடைப் பனிவரை மரசன் போற்றவே
யிணங்கிய முடிவுமை மணமுற்றி யெய்தினான். (61)

எய்திமூ விருமுக னெழுத்தோ ராறுண்டு
தையல்கா ணுதியெனத் தடநுதற் கணிலவே
யய்யதீப் பெறவவள் வெருவிச் சேர்தலுந்
துய்யதீ விழிபொறி துளித்த தென்பவே. (62)

தாங்குறுக் கங்கைசேர் சரவ ணத்திடைப்
பாங்குடை யறுவர்கைப் பால னுதியே
பூங்கம லத்திடைப் பொலியு மாதுட
னேங்கிய விடையினுற் றுமைக்குக் காட்டினன். (63)

ஏந்தினள் வாவியின் மூவி ரண்டென
வாய்ந்த வானன மகக்கொண்டு வந்தனர்
காய்ந்திளங் கதிர்கடாய்க் காய நாப்பணிற்
சேர்ந்தென வளர்த்தனர் தேவ ராக்கவே. (64)

எண்டிசைக் கதிர்களு மொன்றொ டொன்றெதிர்
கொண்டிட வோரகைக் கூர்ங்கொடு நான்குந்தன்
புண்டரீ கக்கரத் தீர்த்துப் போர்விடுத்
தண்டரும் வியப்பவே வைக லாற்றுவான். (65)

தடங்கட னுன்குமொன் றென்றிற் சாரவே
மடங்கலின் கொழுந்தென மருவித் தாளினு
லடங்குற விரைத்துல கனுங்கக் கூட்டியே
திடம்பெற முறைமுறை சேதுச் செய்குவான். (66)

சக்கர வரைக்கா சக்க ரங்கொளா
மிக்கதன் வில்வழிச் சுற்றி விண்ணுட
னெக்கவண் டங்களு நெரிய வைகலுந்
தொக்கய ரோரையி லாடள் சூழுவான். (67)

மந்தரக் கிரிமுதல் வரைக ழங்கொடு
கந்துக மெனவணங் கனையர் காணவே
தந்தமா தவச்சிறார்க் குழுமத் தான்கொடு
சுந்தரத் தாட்டுத றொடங்கிச் சேருவான். (68)

உடைத்தொரு விரலினீ ருமிழ வண்டத்தை
யடைத்தொரு விரலி லப்பு றத்தினும்
படைத்தவண் டங்களப் படிய தாக்கியே
கடைத்தலைத் தந்தைதன் றொழிலைக் காட்டுவான். (69)

மறைவழி நாரதன் வளர்த்த வேள்வியி
னிறைவுடைக் கடனென நேரு மேடத்தை
யறைவரி மருப்புடன் வேம்ப வூர்ந்துல
கிறையினுங் கப்புறந் தின்ப நல்கினன். (70)

குமாரச் சருக்கம் முற்றும்.
ஆக விருத்தம் 1,139.

தாருகன் வதைச் சருக்கம்

போற்றி யோமெனும் பொற்பெழுத் திற்பொருள்
சாற்றி டாமுற் றெழிலந் தலைவனே
மாற்றி வல்லி புணைந்தெந்தை வாய்மையி
லாற்றல் சேர்வி டுத்தரு ணல்கினன். (1)

இந்தி ரன்முதல் எண்டிசைப் பாலரும்
வந்து போர்பொர மற்றவர் தங்களைச்
சிந்தை நல்லரு ளால்வென்றி செய்தருண்
முந்த மேவுசம் மோகத்து வீழ்த்தினன். (2)

வார மேவிய வானவர் தானவர்
சேர வேயுடைந் தோடச் சினத்தலாற்
றாரு கன்வன சாயப் பணிச்சேயேன்
நார தன்றூர்வத் தோருட னண்ணினன். (3)

வந்து போற்றி மலைக்கொடி நல்கிய
நந்த வேள்வியு நான்மறை யாளருஞ்
சிந்து றுவருள் செய்தனை யாமெலா
முய்ந்து ளோம்பவ னென்ன லொருக்கினேம். (4)

தாரு கன்சம ரூர்வழி சார்வதற்
கோரு நெஞ்சந் தெளிய வுடனறிந்தப்
போர டர்ந்தனை போதுமி தேதுவென்
றூர்வ நெஞ்சிற் பரம்மாவிண் ணடைந்தனன். (5)

(வேறு)

விடைகொள் சுரமுனி யமரர் பதிபுக
வெருவி விபுதர்க ளமரர்கோ
னுடைய வானுமை கயிலை மலையய
லணுகி மதவலி யவுணர்கோ
னுடைய வவனுயிர் மறலி நகர்புக
வுதிர நதிகடல் புகுகவே
படையி லவுணர்கண் மடிய வுனதருள்
பரவி யடிமைகொள் பரமனே. (6)

உலகு முலகிடை யுயிரு முயிரிடை
யுணர்வு முணவருள் பயனுமா
யிலகு பரமவு னடியர் படுமிட
ரொழிய தலவிவை யளிகொலோ
நிலைகொண் மதர்வுற நெறிக ளுனதடி
நினைவு நியமம தொருவினே
மலையின் மகளருள் மகவை யெமதொரு
மருவி யமர்பொர விடுதியே. (7)

உனது பதமல தொருவர் துணையிலை
 யுரக வணியணி பரமனீ
புனித நிறையருள் புரிதி யெனவரு
 புரம தெரிபட நகைசெய்தோன்
றனது புதல்வனை வருதி யமரர்க
 டலைவ னுடனம ரர்கள்குழா
முனிவர் துயர்கெட வவுணர் கிளையொடு
 முடிய வமரிடை முனிதியே. (8)

இரத மிதுவயி லிதுகொள் கொடுமர
 மிதுமு னெரிகணை யிவைவிடாப்
பரவு கணமிவர் கரியெ னவுரை
 பரமன் மொழிதலு மொழிவிலா
வரத னுடனுமை யடிக டொழுதவர்
 மகிழ வலமுடன் விடைகொளா
விரத முனிவரர் பரவ வொருவினன்
 விமல னுதவிய வமலனே. (9)

அமரர் மலர்மழை முனிவர் மறைமொழி
 யரச ரறுதியணி மடநலார்
தமர நடதிசை யமுத மெதிர்நிறை
 தரவி னுடனணி புவியெலாங்
குமர குருபர சரண மெனநிமிர்
 குடையி னெடுகொடி துறுமவேம்
பமர நிறைதொடை புரள மணிமுடி
 பருதி யெனவொளி பரவவே. (10)

புலவர் பதிவிறன் மறலி கடலிறை
 பொருவி லளகையர் முதல்வனோ
டலகில் வருதினி யிறுதி யிறைகட
 லனைவ தெனவர வரவுலா
மலையி னிரையென பெரிய திருவிழி
 மலிய வருகண மொலியினு
லலகில் வடகனல் படர்வ தெனவுல
 கதிர நிறைபுவி பொதிரவே. (11)

வரைகள் வரையிழி நதிக ணதியிடை
 மருவி யணைதில மொருவியே
யுரக கணபண நெரிய வுடுநிரை
 யுதிர வதிர்குர லுருமெனக்
கரியி னெடுபரி யிரத நிறையொலி
 கதுவ மதவலி யவுணர்கோன்
புரியின் மலைக ளுரிய தவன்நிகர்
 புதல்வ னடல்கொடு புகுதவே. (12)

(வேறு)

ஓடினர் வயவர்க ளுறுவலி யவுணன
துறைமுறை முறையறவே
நாடினன் வருசெய லெனவடி பரவினர்
நதிமதி பொதிசடையான்
மாடுறை மலைமகள் வரமெனு முருகனி
வழிபுல வர்களுடனே
நீடின னெனவிழி கழல்பொழி தரநிறை
நிலையின னிவைபகர்வான். (13)

முதுகிடு புலவர்கள் பதிசிவ னுதவிய
முருகனை முனைமுனையக்
கதிகொடு பரவின னெனுநகை யெரியொடு
கனல்விழி சொரிதரவே
யிதுபுதி திதுவலி யிதுநல மிதுசம
ரிதுமிரு மதி செயமே
வதிர்குர லிரதம தெதிர்குன ரெனவதி
லணிபெரு மருவினனே. (14)

விடுவிடு கடிதிர தமதனை விபுதர்கள்
விரல்கெட வருசுதனு
நெடுமலை புகவொரு கணமதி லமர்பொர
நினைகுவ னெனமுனியா
வடுதிற லரிகரி குறள்புலி கரமிசை
யவுணர்க ளவர்வரவே
கொடுவழி யெறிகட லெனமிட லுடனடல்
கொடுபடை யொடுவரவே. (15)

இருபடை யணிகமு மெதிரெதிர் முதிரம
ரிகலலு முகிலுடனே
யுருமதி ரகுதென வரிசிலை விடுகணை (?)
யொடுகதை முசலமொளவாட்
பருமித மதகரி யிரதம துறுபடை
படைஞர்க ளமரருடன்
தருநிற வவுணர்க ளிருளொடு கதிர்பொரு
கவினென முடுகினரே. (16)

புலவர்கள் வெருவுற வவுணர்கள் பொருவர்கள்
பொருமவு ணர்கள்கடவே
வலவம ரர்கள்பொர முறைமுறை யமரிடை
வருதிசை யரசரெழாச்
சிலைவிடு கணையொடு முடுகின ரவுணர்க
டிசைதிசை யிரிதனுமே
யுலகமும் வெருவுற வவுணர்க ளதிபதி
யுகமுடி வெனவரவே. (17)

(வேறு)

விடுதிசை யிரதக் காலில்
விபுதர்தண் டோட வாடற்
கொடுமரக் கணையிற் பூதக்
குழாமிருந் தெய்த நாணிற்
படுமொலித் தியக்க ரஞ்ச
விஞ்சையர் பரியச் சென்று
நெடுவலித் திக்கு வேந்தர்
நின்றுளித் தகுவர் கோமான். (18)

இந்திரன் புயத்து வாளி
யாயிரத் திரட்டி தென்பா
லந்தகன் றனக்குப் பாதி
வருணர்க்கவ் வளவும் மற்றச்
சுந்தர வளகை யாழிக்
காயிரங் கோணத் தொல்லோற்
குந்திய கணையஞ் ஞூறைஞ்
ஞூறுவிட் டொறுவச் செய்தான். (19)

(வேறு)

கடுவிசைக் கால்பொரு கறங்கிற் றுருகன்
விடுவிசைத் தேரிற்பார்த் தீண்டு வேலையு
நெடுவிசை திரையுற நிமிர்ந்து நெக்குநெக்
கடுவிசைப் பறந்தலை யமர்மி குந்தவே (20)

எய்தினன் முருகனை யிந்தி ரன்கணஞ்
செய்தபோர் கண்டனை நிறுவ நின்றன
யுய்திற னுணர்ந்திலை யுயிரை நல்கினன்
வைதிகழ் கணிச்சியான் மருவுவா யென்றான். (21)

நின்னுடைத் தந்தையு நேமிக் கண்ணனும்
பொன்னுடை நாடனும் பொருத ஞான்றவர்
முன்னுடற் றுளைபட மூழ்கு வார்கணை
யென்னுடைப் பொதியிடைத் திரைத்தல் காண்டியே. (22)

பொரும்புல வர்களென் தேவல் பூண்பயான்
பெரும்பகை தொலைத்துந் தையிருக மஞ்சவும்
வரும்படை நேமிபூ ணுவ யிங்கவு
மரும்பகல் புரந்ததை யறிந்தி லாய்கொலோ. (23)

பறந்தன பாரிடம் பறந்த லைப்படாத்
துறந்தனர் வானவர் துணையு நீங்கினை
புறந்தரர் நின்றனை போரில் வாளியி
லிறந்தவ ரினும்வலி யாய்கொ லேந்தலே. (24)

நெடுந்தின வொடுபொர நிமிர்ந்த தென்புயங்
கொடுந்தழற் கணைநுதி கூர்மை யாலுயிர்
எடுந்தொழில் நினைந்ததுன் னளவி லாற்றுமோ
படுந்தொழி லின்னறல் பரமன் மைந்தனே. (25)

குறைமதி யானும்பெண் மதியக் கோதையும்
நிறைமதி யுன்னுடை நட்பு நீங்கினர்
கறைமதி யிந்திரன் கலுழ்ந்த திங்களை
மறைமொழி வீணையான் வடித்த தில்லையே. (26)

அருளின னுனதுயிர் சினமு மாறினன்
மருளின ருரையொரீஇ மைந்த வேகுதி
யிருளொடு பணியுடுக் கதிர்மு னெய்துமோ
தெருளிலை குதலைவாய்ச் செல்வ செல்லென்றான். (27)

எனப்புக ழுருகன் றன்னை யெம்பிரான்
வனப்புற நோக்கினாண் மலர்கள் வீழ்ந்தெனப்
பனற்கடற் சுதைமழை பொழிந்த தெய்ப்பவே
நினைத்தொரு திருமொழி நிகழ்த்த லுற்றனன். (28)

மழலைவாய்ச் சிறார்மா வலியு மாட்சியு
முழைவருக் கருமமு முணர்வ ரோவிளக்
கழன்மல ரெனவரி யணந்த போன்றுமெய்
நிழற்றுணை யெனச்செலு நெறியுஞ் சேர்வரே. (29)

ஆயினு மொன்றுகே ளரிய மாதவத்
தேயினை நினைக்கனற் கிளையெ ரித்தெண
மாய்வுருத் திருவுடன் கடும்பு மாயவே
நோயினைப் போன்மதி நுட்ப நொந்தனை. (30)

மங்கைய ருதிர்பொரு மார்பின் வானிறக்
கங்கைவள் ளுதிர்பொரப் பவனிக் காட்சியீ
னங்கையர் விழிக்கணை நாட்டு தொழிலெனப்
புங்கவ நாட்டவோ வமரிற் பொருந்தினை. (31)

குடர்திசை யென்புதோற் குருதி வாருதி
யுடன்மர மலைந்திட வுயிர்கள் வான்புகப்
படர்குற ளெருவைநாய் பருந்து பாரிட
மிடர்கெடப் போர்வலி யிருத்தல் காண்டியே. (32)

என்றிசை முருகவே ளிசைக்க வெய்யவ
னின்றிவை யுரைத்தன னிலே ஞேவெனுத் (?)
றுன்றெயிந் துகதிவான் றுளங்க வாளிகள்
குனறுறழ் கொடுமரங் குழைவில் பூட்டினுன். (33)

தொடுகணை யாயிர கோடி தூங்கிவா
னெடுமழை பொழிந்தென நிறைக்க நாயகன்
கொடுமர மிருதலை குழைக்க வக்கணை
படுகட லிடையுடற் பரிந்து சிந்திற்றே. (34)

விழிவிடு செங்கனல் விசிகச் செங்கனற்
பொழிதனு மமரர்கள் புலம்பி யோடனற்
சுழிபடு கடலுணுத் தொடர்ந்த காரென
வழிதர விறைகணை யலைப்ப தெண்ணினுர். (35)

வானெடு பாரகம் வளைந்த வேலைக
ளூனெடு திரிபவை யொடுங்க வாயிரந்
தூநடு கோல்விடத் துணித்து வீழ்த்தினுன்
ஞானநா யகன்றுள் பரவு நந்தனே. (36)

இருளரி விடவரா விடிகழற் றேகை
மருள்பெறு கணைபல படைவ யங்கவோ
ரருளிக ணைவிட வகில மெங்குமாய்ந்
துருள்படு மென நினைந் தும்ப ரோடினுர். (37)

திசையொடு வடகிரி புதையச் செம்மிய
விசைபெறு கணையொடு வேட மாய்கையி
னிசைபெறு மமரரைக் கட்டி லிட்டதவ்
வசைவிலாக் குருகுவேற் பகடு துன்றவே. (38)

சிலகணை யிறைமகன் றேரைச் சிந்தின
சிலகணை பாரிடஞ் சிரங்க டள்ளின
சிலகணை கொடுவரி சிலைது மித்தன
சிலகணை மூடின திரிந்த திக்கெலாம். (39)

புவிபுன லெரியுருப் பொருந்து ருவிரண்
டவிநிறை முனிவர ரண்டப் பித்திகை
கவியொடு புலவுமோ ரசைவு காட்டில
சவிபடு பதமெலாந் திரிந்து சாய்ந்தவே. (40)

ஈசமா னையணி யுலவை யென்றழ
லாசுக மீப்பொலிந் தடர வெய்யவன்
வீசலு நெருப்பிடை விறகு சேர்ந்தென
வோசைமா தவரெலா முற்றி யோடினார். (41)

காணுறு பொருளெலா மாய்கைக் காட்சியி
னேனுடை மலையுடைத் தெய்த மைந்தனுஞ்
சேணுறு கணையெலாம் வேவிற் றீர்த்தெழா
வூனுறு மியைந்திர விரத முற்றனன். (42)

புரப்பகை யளித்ததேர் பொன்ற வாளிக
டுரப்பதே யெனவுளஞ் சுளிவு தோன்றிட
வரப்பல நன்றெனு மதித்து மைந்தனுங்
கரப்புகர் வேலுறை கழித்து நோக்கினான். (43)

அருக்கிய முதலிய வருளி யன்னையாஞ்
செருக்கிளர் வேலினைத் திரித்து வீசலு
முருக்கினர் மாயையை முகர வெற்பினைப்
பொருக்கென வுடலகந் துலைத்துப் போயிற்றே. (44)

கீண்டது மார்பகங் கிழித்து மீசலோ
மூண்டெழு சினத்தொடு முரித்த வாயொடும்
பூண்டகர் படவிரு புயத்த டித்துவான்
மாண்டிட வுரறியே யவுணன் மாய்ந்தனன். (45)

விழுந்தனன் பணிப்பிட ரதுக்க விண்ணிடை
யெழுந்தன கொழுந்து விட்டிருட் டீயொடு
பொருந்தினன் குருதிகள் புணரி போன்றிடத்
தொழுந்தகை வானவர் மலர்க மேயினார். (46)

பூரியன் மடிதலும் புலவர் நாயகன்
வேரியந் தொடைமலர் வீசிக் கட்புனல்
வாரியி லாட்டிவெண் மலர்ப்ப தத்துளை
நீரியி னட்பினிற் போற்றி நேர்ந்தனன். (47)

புரந்தர னாதியர் போற்ற மாதவர்
சுரந்தய லாசிகள் சுரக்க வண்மினார்
பரந்தனி நடந்தரப் பாணி வீணையி
னிரைந்திசை வானக நிறைக்க வெய்தினான். (48)

போரிடை வென்றியிற் பொங்கு வீரரும்
பாரிட நாதருங் கலிக்கப் பாரிடை
யோரிட மிடமிலை யென்ன வோங்குறச்
சேரிடப் பக்கொடி வானஞ் செம்முற; (49)

கொடியொடு குடைநிழற் குலவ வெங்கரி
பிடியொடு வயின்வயின் பேய வார்ப்பணை
மிடியொடு மாறுகொண் டிரைக்க வெம்பிரான்
றுடியிடை யொடுமுறை யிருக்கை தொக்கனன். (50)

இழிந்தனன் றேரிரு மூன்றி ரட்டிகண்
பொழிந்தநீர்ப் புரளமென் மயிர்பொ டித்திடச்
சுழிந்தெழு நண்பினிற் போற்றச் சோதிமெய்
வழிந்திடு கருணையின் மகவை நோக்கினன். (51)

ஈசனுங் கரந்தழீஇ யேந்தி யுச்சிமோர்ந்
தாசிலா மானகர் தளிர்க்கக் கொங்கையின்
றேசுறு சுவையுணத் தேக்க வூட்டினன்
மாசுறுக் கதிரென மருங்கில் வைத்தனள். (52)

அன்ன செவ்வே ளணியுக் கிரப்பெறு
மன்னெனத் தடாதகை வயிற்றிற் றோன்றியே
வுன்னுடை யிவ்வர சுரிமை தாங்குவ
னென்னனு மேருவெரத் தெழுந்த தோள்களே. (53)

கண்ணுத லுரைத்தசொல் கருத்துட் கொண்டன
னெண்ணுடைச் சொக்கனை யன்பி லேற்றியே
விண்ணிடை யிந்திரன் மனையின் மேயினன்
கண்ணுடை யிமையிற்பார் மங்கை காத்தனள். (54)

மூதுரை மன்னவன் முடிபு னைந்திட
வோதரும் புவிமகள் பரித்த தோதினஞ்
சாதுறங் கத்தொடுத் தரத்திற் சார்ந்துயர்
மாதிரங் கடந்தபோர் வளத்தைக் கூறுவாம். (55)

தாருகன் வதைச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,194.

வனவேட்டைச் சருக்கம்.

நெடுங்கடை யுணங்கி முன்னின்று கைமுகிழ்த்
தடுங்கடைக் கண்ணருள் படைத்த வேந்தர்க
ளிடுங்கட கரிபரி திறைகொண் டண்டிலர்
படுங்கடல் விடவிழிப் பாவை யென்றனர். (1)

உரைத்தசொற் களால்விழி யுருப்பச் சிந்தியே
வரைத்தடந் தேர்கொடு வருக வென்றெழீஇ
யிரைத்தபோர்க் கோலங்கொண் டிரத மேறினு
டிரைத்தடங் கடலெனச் சேனை சூழ்ந்தவே. (2)

கலித்தன கரிபரி கறங்கி னெய்தின
வொலித்தன வளைமுர சோதை வீங்கிள
வலித்தன சிலையை மள்ள ரார்த்தனர்
மெலித்தன வுருமொலி திரிந்த மேகமே. (3)

அதிர்ந்தன பணைமுரு டதிர்ந்த தாரகை
யுதிர்ந்தன வுவரிவா யொடுங்க மால்வரை
பிதிர்ந்தன வொள்ளெரி பிறந்த கண்டொறும்
பொதிந்தன வுடலொடும் புலவர் சென்னியே. (4)

முறுக்குதீ வட்டமு முறிந்த் சூறையு
மிறுக்குகாழ் பாவிழை விசையு மேற்பவே
மறுக்கமுற் றூர்முடி வளைய மால்வரை
நெறுக்கென நேமியி னெரித்த தேர்களே. (5)

பிளிறிவா னுருமினைப் பிழிந்து வாரியைக்
குளிறுகார் புனலென வருந்திக் காமரும்
பொளிருமால் வரையுட லொடியச் சிந்திய
களிறுமா திரப்பெருங் களிறு போனுமே. (6)

இறைதரு கடலொலி யெறியப் பைத்தெழு
திறைதரு விசையென வாவிச் செந்தமி
முறைதரு வீதிமொத் தூரியம் பண்ணுட
னறைதரு புயலென மரீஇய வாசியே. (7)

கடிப்பிடு பணைநிரை கறங்கு வால்வளை
யுடுப்படு விண்ணுடைந் துடைய வார்த்தன
தடுப்படு முனிவினிற் சமரின் வேட்டத்து
நடப்படு கருணை யாண்டுவ தாயினுன். (8)

கட்டிய பஃறெடை வஞ்சி காயமெய்ந்
தட்டிய மாடிய மொளிர வாடலைச்
சுட்டிய சுடற்கொடி துயலப் பூந்துகில்
வட்டிய வுடையினுள் வையை நீத்தனள். (9)

(வேறு)

உருமுரற் றவிருண் முழையிடத் தலரி
யுழுவை யாழ்நிரை வாய்விடக்
கருமலைக் களிறு பிளிறமுட் டோகை
மயிர்ப்பொடித் தருவி கால்பெயர்த்
தருமரத் தடவி யதல முற்றவிருள்
வடிவெ னப்புடை தழைகவித்
துருமமொத் தவலர் வெறியறுத் தனைய
சோலைவெற் பயலி னெய்தினுள். (10)

கோட்டு வில்லுயிர் விடஞ்சகா யநிதி
கோறல் சுற்ற ஞமலிக்குழாம்
வேட்ட மேதொழி லவன மலர்ந்தினி
விழாநரு வுணலில் வெற்பகாம்
நாட்டு சிந்தையுணர் வொரீஇ யோதைமிகு
ஞான நூல்சுர மகத்திலே
யீட்டு மான்குருதிக் கேய்வி டாதசை
தருங்குலப் புளிஞ ரெய்தினர். (11)

நெடியொலிக் கமலை யெதிரொலிக் கவரி
நிரையொலிக் கவரு மெயினர்கைத்
துடியொலிக் கஞும லிகளொலிக் கவிடு
சுடரு டைக்கணை யொலிக்கவா
னிடையொலிக் கவெழு புள்ளொலிக் கவிடு
மிரலை யேனம தொலிக்கவான்
படியொலிக் கவடி படுநடைக் கொடிய
வேட்டு வப்படை பரந்ததே. (12)

நாவி மான்மறிசெந் நாய ரிக்குருளை
யேனமெண் குமத நாகமீன்
றேவிலாக் குருளை மான்வயிற் றிலரி
தாரமா ரமொளி வச்சிரந்
தேவைசெந் தினையில் வெள்ளிடிக் குவைகட்
டேர ராமணி மருப்புடன்
றேவிமுன் பரவு பூதமொப் பனைய
வேடர்கொண் டருகு சேர்ந்தனர். (13)

படுமணிக் கிடுகு நுதிமழுங் குறவே
றிந்தவாட் பலகை ணைப்புதைக்
கொடும ரக்கர முடித்த பித்தையணி
குன்று துன்றுகணி கவடிவார்
விடுமனப் பிணைய லசனன் வீரநிமிர்
வல்லி யத்துகில் வெண்மருப்
பிடுதொ டைத்திடு செருப்புடைப் புளிஞர்
கடறு கூட்டுணமு ளெய்தினர். (14)

கலியி னிற்கிளை கிளைத்துணைத் துவரு
கவினெனக் கதிர வன்பொரப்
பொலிவு துற்றவிரு டுணிவ தொப்பதென
வலிய மாதவர் புகன்றிட
மெலவளித் துவரு சாப மென்னவெழு
நீல வெற்புமறி யென்னவே
யொலியு டைப்புளிஞர் விளையெ னப்பெரி
துருத்து வார்வலை திருத்தினார். (15)

கங்குலிற் புயல்க லந்தெனப் பெருவ
னத்தினிற் புளிஞர் கையரீ
யங்களிற் கையிலு ரைத்துவெண் ணிலவின்
வீரர்வலைக் கரியகாழ் நிரீஇயப்
பொங்க லைக்கட லமர்ந்தெனச் சுவட
கொற்றி வெற்றிபுரி ஞாளியை
பங்குடைத் தொடரி னார்த்து நிற்றலும்
விலங்கு கண்டொலி பரப்பவே. (16)

கடறு கூட்டுண வெழுந்தரு வடாரி
கட்டெடுத் தணிதி ருத்திமைத்
தடருடைச் சுரிகை சுற்றும் வீக்கிடை
யுறும்பலிச் சரும மீதிலே
யுடருணித் தகரு மாவ ளந்தப
லுடுக்குழாத் துநிமிர் பிறையென
வடறுடைத் தபுய மட்ட ளாய்துயி
லாயிரத் தவர்கண் மேவினார். (17)

வாரிடைக் கவடி வட்டி யெனவெண்
மருப்பினிற் சுவடு பட்டநாய்
வீரர் கைத்தொடர் வுத்து ழாவியடி
யிற்க விழ்ந்துதலை மீயெடுத்
தூரிடைக் கதிரின் வட்ட மாய்த்தடி
நுகர்ந்து மிழ்ந்ததென நானமீர்த்
தூரெயிற் றின்முளை யிற்புகுந் தவுடு
மொப்ப வாய்விடுபு வந்தவே. (18)

வலைப்பு றத்து ருவுமென் மானைவிடு
வாளியிற் கடிய ஞாளிபோய்த்
தொலைத்த யானைபுலி யாளி சீயமி
ரலைக்கு லங்கடொலை யட்டதால்
விலைப்ப ரத்தையர் மயக்கி லுற்ற
விடரிற் புயம்புவலை விட்டவார்
நிலைத்த கண்ணியில் விழுந்து ழைத்தசில
நீங்கு வித்தசில கானிலே. (19)

தேர்விடுத் திவுளி மீது கொண்டுசிலை
வட்ட மேற்றிகிரி யொப்பவே
கார்விடுத் தமழை யிற்கடுங் கணைகள்
கைவிசைத் துவிட வொலியின்முன்
னீர்விடுத் துமிழ்வ தொத்தி யானைபட
வெரிபடர்ந் தவன நிகரவே
பார்விடுத் தபக டற்ற பற்றரவ
மதயமொத் துழுவை பட்டதே. (20)

விசைத்தெழுந் திரலை தத்துவெண் புனலில்
வீய்ந்த காய்ந்தசின வெண்சினந்
திசைக் கொடுங் கரியு ரற்றி வாய்விடுபு
சிந்த வாளரி சினங்கடீர்ந்
தசைந்த பாலலை யிடைந்துதிர்க் கொடியில்
விட்ட சோரியோ டவிந்தகால்
வசைப்பெ ருங்குடி யெனக்கு லத்திளெடு
பன்றி யின்றிரண் மடிந்தவே. (21)

தொட்ட வாளியொடு விற்கு னித்தெழு
துரங்க மீப்பத மெடுத்துநல்
வட்ட மேபெற வகைத்து மால்வரையி
னுச்சி சேர்ந்துசிலை மாறுருப்
பட்ட பாவினி னுலாயு மெட்டிளெடு
பதத்த தாய்மருவு சாரிசேர்த்
திட்ட வைங்கதி பரித்து முன்பினிலை
யெற்றும் வாம்பரி யெழுந்தவே. (22)

குடித்தநீ ருமிழ்வ போல வாய்ப்படு
குரத்தை நீட்டிநில் மொன்றியே
துடித்த னமிவ மறைவ தொப்பெனப்
படாதுகட் பரம்பவிரு பாற்றரு
நடப்ப தொக்கவொரு காவ தத்திடைமுன்
னெய்தல் பிற்படவுண் ணூட்டமுந்
தடத்து வெண்புகுத வீதி வீதிகொடு
கொண்டு நன்னெறி தழைந்ததே. (23)

வாசிமெய்ப் பரும மொடுமு ளைத்தென
வறைந்து வாணியென வானுளோர்
பேசுதற் கரிய பெட்பி னிற்பரி
யிறங்க வாளிசிலை யிருபுறத்
தாசையிற் றனிவி டுத்தடுத் துருவ
மன்ன ரஞ்சவரி யேழ்பரி
கூச வெற்றியம ரேசன் வாம்பரி
குலுங்க வாசிவிளை யாடியே. (24)

எழுந்த வேடரொடு கான வேட்டம
திகைந்து வெற்பிறை சாரல்வாய்க்
கொழுந்து சேரனிகம் விட்டு விட்டுவிளை
யாடி வாசிகரி கோடிதேர்
பொழிந்த வாழி யயில்வாள் மாப்படை
புறஞ்செலத் திருவும் வாணியுந்
தொழுந்த கைக்குமரி காவிரிப் புனறு
தைந்த தென்கரையின் மேயினுள். (25)

(வேறு)

பூழி வேந்தன் மாதவம்
பொருந்த வந்த பூங்கொடி
கோழி வேந்த னிஞ்சி
கொண்டு கொண்டறும் மதிப்புறம்
பாழி வேந்தர் செல்வம் வவ்வ
வுத்த ரம்ப டர்ந்துபேர்
யாழி வேந்த னுடொணுத
வம்ப லம்பு குந்தனள். (26)

மன்றுளாடு மெந்தை பாத
வாரி சம்ப ராவியே
தின்றுமானி ழற்ப ணிந்து
சோனை காண்மி யப்பராய்த்
தென்ற மிழ்க்க டற்பெருந்
திரைக்கு வேலை வெற்பொரீஇ
மன்றறும் பருப்பத மரீஇக்
கலிங்க மேவி னுள். (27)

வனவேட்டைச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,221.

கலிங்கச் சருக்கம்.

விருத்த வெய் யவன்க திர்க்கா
    லூன்றியே பயத்த வெற்பி
னிருத்தலு மங்கை வென்றி
    யெய்தலாற் றிங்கட் டோன்றிப்
பொருத்திய கிரண ஞணில்
    வீக்கிச் செஞ் சிறை பொ ருந்த
வருத்து மீக் கூர விட்ட
    செயலினிற் குடபான் மாய்ந்தான். (1)

அருணிறை முனிவ ருள்ளத்
    தறைந்தகோ தாவி ரிப்பாற்
சுருணிறை கமல மாம்பல்
    குவளையந் துறைத்து ருத்தி
யிருணிறைப் பொழிலுட் கன்னி
    கணத்தொடு வனத்தேய்ந் தென்னப்
பொருணிறைச் சேனை யோடு
    மெம்மனை பொருந்தி ஞனே. (2)

வெள்ளிவெற் பெதிர்கொண் டென்ன
    வெண்படாங் கொட்டிச் சுற்றுந்
தள்ளரும் பாலி வேலைத்
    தரங்கத்தின் கண்டங் கோலி
நள்ளிரு ணிலப்போர்ப் பக்கஞ்
    சிசிகை நாற்றி யோவ
ருள்ளினும் வெருவச் செய்யு
    மவைமணிக் கோயி லுய்த்தரர். (3)

நிலவினை யிருள்சூழ்ந் தென்ன
    மினையர ணிறைத்து மின்னிற்
குலவுநரண் முளையி றுக்கி
    வட்டுடைக் கொடுங்கோ ளேக்கி
னலமணி மகளிர் பாரி
    யேறியே மணிநால் விட்டுப்
பலவிருங் கனியின் முட்சேர்
    கப்பணம் பரப்பி ஞரே. (4)

சருகொலித் திடினுந் தாக்கு
    வலியிரை தொடுதோற் றுளர்
பெருகொலி முளக்கால் விற்கு
    வளையேபோற் பிறங்கு கண்ணர்
முருகொலித் தொடலைப் பொற்றேண்
    முறுக்குடை முடலை மெய்யர்
குருகொலித் தனவு யிர்ப்பர்
    கறங்கெனக் குலாவச் சேர்ந்தார். (5)

சாற்றெழு பருதி வட்டச்
    சாணையிற் றுடைத்தீ யாண்டு
மூற்றெழு விடத்தின் றேய்த்து
    வடவைத்தீ யுருவிச் செய்து
கூற்றெழுந் தனைய வாளர்
    குருதிகொப் பளித்த வேலர்
போற்றெழு நாத்தீ யென்ன
    சிலையரைப் புறத்து வைத்தார். (6)

மாருதம் பிணித்த போலப்
    பிரிநிரை மாடி யத்தோ
டேருலாம் படையி னோடும்
    பாகொடு நிறுத்தி யாண்டும்
போருடை மள்ளர் வீக்கும்
    புயலெனக் களிறு சேர்த்து
மேருவி னயல்சூழ் வெற்பில்
    பலபடம் விரைவிற் றந்தார். (7)

காலிடை யதிறல் வெண்பூ
    வலைந்தெனக் கலைமூ தாளர்
நூலிடை வட்ட மொத்த
    நோன்றவல் லியவர் மாதர்
மாலிடைப் படாத வள்வார்
    மடித்தமத் திகையர் நீரிற்
சேலிடை பிறழ்கட் கண்ணித்
    தெரிவையர் வாயில் சேர்த்தார். (8)

விளக்கழ லுறுத்த மாதர்
　　விழிமுகிழ்த் திடாது மூன்று
வளத்தமி ழினர்கள் பாணர்
　　மாகதர் குழாங்கள் சூழ
வளக்கரு மேரு வின்பான்
　　முழைப்பிண வரயொப் பென்னத்
துளக்குறு வினிய கன்னற்
　　றன்னிலெம் மணைதொக் குற்றுள். (9)

காலுடைக் கிடுகு விட்டு
　　நாலொழுக் கென்னக் காட்சிக்
கேலுடைக் கடைகள் காலின்
　　விந்திடாக் கிளர்வி ளத்திட்
டேழுடை யுலகு முற்ற
　　தெனக்கோடை கொழும மிக்கே
பூழுடைப் பாடி முற்று
　　முவர்க்கடல் கடுத்த தன்றே. (10)

பாற்கடல் வளைந்த தேப்பப்
　　பரிநிரைப் பந்தி சேர்த்துக்
கார்க்கட லெறிவ தென்னக்
　　கலித்தவெற் பின்மூ ணகைத்து
நாற்கடல் கடுப்ப மன்னர்
　　நாற்றிசை யுறையத் தம்முன்
மாற்கட றுயில்வுற் றுங்குத்
　　தடாதகை மருவி யுற்றுள். (11)

பாடியிற் சுடரு மாவும்
　　படங்களும் பரவ நிழற்போற்
கூடிய வுடுநி லாவெண்
　　டிங்கள்வான் குலவுக் கெங்க
ரூடிநற் றெழிலர் சேரத்
　　தடாதகை நங்கை பார்க்கு
மாடியிற் கதிரோன் றேன்றப்
　　பள்ளிதீர்ந் தணைய லுற்றுள். (12)

மதியுடன் சுமதி தன்னைக்
　　கலிங்கன்மே லாடல் வாய்த்து
நிதியுடன் திரைகொண் டியாளு
　　முத்தரி நீங்கு வோமென்
றதிர்முர சறையச் செந்தேன்
　　விழமலர்க் கமல நெக்குப்
பொதியவிழ்ந் தென்னக் கூறிப்
　　புலமையி னிருந்த போதின் ; (13)

கடாமலே வழுதி தந்த
　　கன்னிபோர்க் கன்னிவந் தன்ன
தடாதகை மருவு கோதா
　　விரிக்கரை யிருந்தா ளென்று
விடாமொழி யொற்றர் கூற
　　நக்குநக் குருமின் வெஃகப்
படாநுதல் வெயர்வு போர்ப்பக்
　　கலிங்கனும் பரிவிற் சொல்வான். (14)

(வேறு)

திரிந்தசண்ட மாருதஞ் சினத்துருத்து வீசினு
நெரிந்திடாவ னுங்குருது நின்றநேமி வெற்பினைப்
பரிந்தவால வட்டவீடு காலனுக்குப் பான்மையே
விரிந்தசேனை மங்கையென்னை வேறுமென்று கூறவே. (15)

பொங்கரம்பை நாடவாய் பொழிந்தநவ்வி யம்பொரத்
துங்கமேவு வச்சிரப் பொருப்புடற்று ளங்குமே
வெங்கணிந்தி ரன்படைக்கு விள்ளுருத வென்புய
மங்கைசெங்கை வாளிவாய் மழுங்குருது வைகுமே. (16)

வடவையங் கனற்சுழிந்து வானதக்கி மிக்கநாட்
டடமலிந்த வெண்ணெய்வெற்பு நோக்குருது தாங்குமே
திடமிகுந்தி யானபேருஞ் செழுத்தலைக்கண் வானலாற்
புடவிவேந்த ரஞ்சவாத பூவைநின்றெ திர்க்குமே. (17)

என்றுவாய்மை கூறுநா றெரிந்துநுட்ப மெய்திஞேர்
வென்றிவேந்த முப்புரங்கள் வெந்ததேதி லவுணர்கோ
னன்றில்வெற்பு வீழ்ந்ததேதி லாதலால் வரம்புறத்
துன்றுவீர மென்றுளந் துணிந்திடித்து ரைக்கவே. (18)

இத்தலைக்க லிங்கவேந் தமைச்சர்சூழ வெய்துழி
வைத்தலைக்கண் மங்கைசந்து வல்லநால்வர் வம்மென
மெய்த்திறைக்கு வாயிலெவ் வாயிலோர்வி டுத்திடக்
கைத்துளத்து ருத்தழன்று கையெறிந்து நக்கனன். (19)

நக்கவெண்ணி லாவுகுப்ப நக்கமுத்தி நாடுவோ
வுக்குநெக்கு டிஞ்சில்வா யுறுத்தவோங்கு வெண்டிரி
தொக்கவன்னி யின்கணங்கி தூண்டவாள ராவென
புக்கணங்கு ருவிடிக் குரற்பொடித்தி சைத்தனன். (20)

திறையளித்த றன்னினுற்ற பேதை வேந்தர் செய்கையாங்
குறையளித்த மன்னர்நாடு கொண்டுநல்கி மிக்குளோங்
கறையளித்த குடிமையோ கரும்பையுள் விருப்பரா
விறையளிப் பருமணிக் கவாவலொக்கு மின்னதே. (21)

இரைத்துமூச் செறிந்தெறிந் திறைக்குலம் பெருதிவ்வா
ளுரைத்தநெய்யி லுங்கள்சோரி யூட்டியென்கை வாழியே
நிரைத்திடுந் திரைக்குநோது நிறைக்கமேவு தூமெனு
வரைத்தடம் புயத்தனேத வந்ததூதர் முந்தினர். (22)

(வேறு)

தூதர்நீங் கக்க லிங்கன் சுழிந்திடா முரசந் திண்டேர்
போதகம் புரவி தானைப் புறப்படென் றெலிப்பத் திங்கட்
கோதைவார் கடற்கொ தித்தல் போன்மென வுற்றிப் போரின்
காதலின் வாயி னீங்கி நதிக்கரை கலந்த வன்றே. (23)

வட்டுடைச் சுரிகை வீக்கி வரிநுதற் பட்டங் கட்டிப்
புட்டிலுஞ் சிலையுந் தாங்கிக் கரத்தினிற் கோதை போக்கிக்
கட்டிய கழல்நின் றார்ப்பக் கவசமெய் புனைந்து வெற்றி
யுட்டெளிந் திரத்தூண் டிக்க லிங்கன்வெங் களத்தி லுற்றான். (24)

எய்திய தூத ரன்னு னிசைத்தவை யிசைக்க மங்கை
பைதற வெறிகட் கொண்ட கவுட்பிடி பொருவப் பாரிற்
செய்திறம் பூச லென்னச் சிலையுடை முகிழிற் பேழ்வாய்
மைதவழ் களிற்றிற் பொங்கு மடங்கலம் பிணைவிப் புக்காள். (25)

உரங்கிளர் மகர மன்றி லெனக்களத் தியூக மாட்டித்
தரங்கம தொன்றோ டொன்று தாக்குவ போலத் தாக்கித்
துரங்கமா லியானை திண்டேர் துரந்தொலி வயிர்ச்சங் கார்ப்ப
விரங்கிய முரசு பம்ப விருஞ்சமர் விளைத்திட் டாரே. (26)

இருவிழி யங்கி மாறு செவியொலி யிறைக்கக் கையின்
மருவிய முசலங் கொட்டுக் கிம்புரி வயிரஞ் சிந்தக்
கருவியம் பாகர் நூக்கக் கலந்திருட் கலந்த தென்னத்
துருவியங் கூற்றின் வேழம் வேழமேற் சுழிவித் தாரே. (27)

எடுத்தத ரளவான் பொதுப்ப வீர்த்தமா விசையிற் கண்டை
மடுத்தலோல் காட்டத் தூங்கு வாளயின் மழலை சிந்தத்
தொடுத்தகோல் வானஞ் செம்மக் கோதைவேந் துழனி காட்ட
வடுத்தவர் பொலன்பொற் றேரோ டிரதப்போ ரடுத்தா ரன்றே.
(28)

அறுவகைத் தானை வீர ரவரவ ரவர்க்கு நேராய்
மறுவற வறைச்சொற்கூறி வாளயில் விதிர்த்து வல்வி
லிறுகாக் கோதை நாண்டாக் கொலிபெறக் கட்டிச் சிந்தத்
துறைதுணை பொலன்சேர் தும்பை சுடரவா ளரியிற் சேர்ந்தார். (29)

கொடுமரங் கொடும ரத்திற் கொலையயி லயலிற் போர்வாள்
படுமணிப் பலகை மற்றவ் வாளொடு பலகை தன்னி
லெடுமத வெற்பு வெற்பி னிவுளியி னெருங்கு வாசி
விடுமணி வையத் தோர்பால் வையம்விண் ணதிரச் சேர்ந்தார். (30)

வலையென வுடறி றந்து மயிர்தொறு மம்பு சேர்ந்துஞ்
சிலையயில் வாடேர் வாசி சினமலை யிழந்தும் வேறு
கொலையுடை யூர்தி மீண்டுங் கொணர்ந்துதன் சினமும் வென்றி
நிலையுமவ் வாறு நீங்கா நிறைந்தம ருடற்றி நின்றார். (31)

வீசுவா டலைகள் வீழ்த்த விசையுறு விட்டத் தன்னார்
மாசுறுத் தலைகள் வீழ்த்தும் வாளிதன் றலையைத் தள்ள
வாசிலா வாசி தூயு மற்றதஞ் சிரங்கள் வானிற்
றேசுறு வுலம்பி யார்த்தும் பின்வயி னடலிற் சேர்த்தார். (32)

மன்னிய கலிங்கன் சாய மங்கைத னனிகஞ் சாய்ந்துங்
கன்னிதன் படைக ளாகக் கலிங்கன்வெம் படையு டைந்து
மன்னிலை யாசன் றுக்க வின்னைபோ ரொரீஇயு மந்த
மின்னிடை வெள்ள மோத வேந்தன்போர் முறிந்தும் வீய்ந்தார்.
(33)

தேக்கிய கவையிற் றென்னக் கலிங்கன்வெஞ் சேனை வெள்ள
மூக்கிய களிறு மாவு முடைந்திடத் தொடர்ந்து நூழி
லாக்கிய வன்னை சேனை யொளிறுவா ளரசர் திண்டேர்
தாக்கிய தாக்கி னீங்காத் தனித்தனி பொருத வன்றே. (34)

தலைகரம் புயமார் பாகந் தசைநிணங் குருதி சேரச்
சிலையயில் மூறில் நாஞ்சிற் கழுக்கடை சித்தி யார்த்து
மலைவுழிக் கலிங்கன் சீறி வருதினிக் கவைய நல்கிக்
கொலையுடைக் களிறு கோலாற் கொதித்தென மதித்துச் சென்
[றான். (35)

இருதலைப் பொருந்த வல்விற் குழைத்துநா ணிடியி ருக்கிப்
பொருதலைச் சங்க மூதி யுருமென யுரற்றிப் போரின்
வரிதலைப் படைஞ ரோடுந் தோன்றலு மதியை யாதி
யிருதலைப் படுத்த வீர ரெதிர்கொண்டு சமர்வி ளைத்தார். (36)

சுழல்வனிச் சருக ரெய்ப்பத் துரங்கம திரிந்த வாடைத்
தழலுருத் தருந்தல் போலிவ் விரதங்கள் சாய்ந்த வீரக்
கழலவர் காலெ றிந்த கடலென விரிய வோங்கி
நிழல்பொரு வெற்பார் சூழ மந்தர நிகர்த்த தன்றே. (37)

கடகமும் வாளு நீங்க வகில்பல கணைகள் சிந்த
வடகமும் பூணும் வீழ மகுடமுந் தலையுஞ் சாயக்
குடகட லளவுந் தேங்குங் குருதிநீழ்க் கடலின் றேங்கப்
படகமார்த் திட்ட சேனைப் பறந்தலைச் செவ்வா னொத்த. (38)

மண்டல மதியம் பாங்கிற் பொன்னென வதன மோடும்
குண்டல மகுடம் வீழ்ந்த கொடுஞ்சிலைக் கரங்கள் பாம்பார்
துண்டவெண் பிறையிற் றூம தண்டத்திற் றுமிந்த வானோர்
கண்டல மவர்க்க லிங்கன் கன்னிதன் படையிற் சென்றான். (39)

(வேறு)

குழைத்தனள் வயிரவிற் கோதை நாண்பொர
மழைத்திர ளொலித்தென வாங்கி விட்டகோல்
பிழைத்தில முனிவர்தம் மொழியிற் போந்தன
வுழைத்தமர்க் களிறுதேரு ருண்டு வீழ்ந்தவே. (40)

சொரிந்தகோன் மழையெனத் தொடர மன்னன்போ
ரிரிந்தவா ரணம்பரி யிரத நீங்கினர்
சரிந்ததன் சேனையைத் தாங்க கிற்றிலன்
வரிந்தவீ ரக்கழற் கலிங்க மன்னனே. (41)

ஆடின கபந்தமு மலகை யீட்டமும்
பாடின குறட்களும் பருகு மெய்க்குரற்
சூடின பாரிடத் தோகையுங் கண்களா
ளூடின னெட்டுயிர்ப் பெறிந்து நக்கனன். (42)

அயிறிரித் துயிர்விடு மரசர் மெய்யினை
யெயிறிரித் தொருவிவாய்க் கழுகெ டுத்திருங்
கயிறிரித் துரண்முர சொலிப்பக் கண்டனன்
வெயிறிரித் தவையில் கலிங்க வேந்தனே. (43)

அருந்திற லமைச்சர்சொ லாற்ற கிற்றிலம்
பொருந்திறப் படையெலா மடித்த பூங்கொடி
யிருந்திறல் கன்னிவே றல்ல ளென்றுதன்
பெருந்திறல் விதிவலி யிரங்கிப் பேதுற்றான். (44)

வீந்திலாப் படையுடன் வேலை வாய்ப்படு
காய்ந்தசெங் கதிரினிற் கடிகொ ளிஞ்சியுட்
போந்தனன் றொடர்ந்திடு மதியம் பூத்தன
வாய்ந்தபொன் மதிலினை வளைந்து சுற்றினார். (45)

வஞ்சியந் தொடைநறுத் துளிப்ப மாறுரு
விஞ்சிய காஞ்சித்தார் வாட வேந்தனு
மஞ்சிறை சிந்து வார்த்த ளூதினன் ?
பஞ்சவன் படைமுடி புளிஞை பல்கிற்றே. (46)

வாடிய தும்பைத்தார் கலிங்கன் வாக்கையே
சூடிய மங்கைபாற் றூது விட்டன
ளூடிய கரிபரி திறையு நல்கினன்
றேடிய விருந்தயர்ந் தன்னை சென்றனள். (47)

நிறைவலக் கலிங்கனைப் பொருது நேரிழை
நிறைகொடு வடதிசை சேறல் கூறின
முறைதட விசயனு தியரை யுத்தரத்
திறைவிபோர் பொருதசீ ரிசைக்கு வாமரோ. (48)

கலிங்கச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,269.

விசையச் சருக்கம்.

கலிங்க மேழு மடிபடக் கடார னைத்து மித்துவெங்
குலிங்க னூர்க னற்கொழீஇக் குருக்க ளைக்க ளைந்துராய்த்
தெலுங்கர் வங்க ரங்கர் கொடுங்கர் சிந்தவென்று சிந்துவைப்
புலிங்க மட்ட காரெனப் பொடித்த டிப்ப டுத்தினுள். (1)

(வேறு).

குழைத்த வில்லு மிழ்ந்ததீக் கொடுங்கணைக் குடைந்துடைந்
திழைத்த வூழ்நி னைந்துநைந் தெடுத்தபோர் விடுத்துவந்
துழைத்த டங்க ணுள்பதம் பணிந்துமன்ன ரொல்கவே
மழைத்த டங்கு லாவுவெண் பனிப்பொருப்பு மன்னினுள். (2)

பனிப்பொ ருப்பு தன்னையைப் பயந்துயர்ந்து தென்னவன்
முனிப்பெ ருந்த வத்தர்கூற முண்டகக்கை கூப்பியே
துனிப்ப டாவெ ழுந்திரைந்த நீரியாது சொல்லெனத்
தனிப்பு குந்த வீணைமாத வத்தனின்ன ணஞ்சொல்வான். (3)

திறந்த கண்ட மன்றுகுத்த தீம்புனற் பொருப்புரு
நிறைந்த கண்ட மொன்பதும் நிலைப்படாது நான்கதா
யுறைந்த தென்றி சைக்கணுற்ற தொங்கல்வேந்தன் மகளெனச்
சிறந்த தெம்பி ரான்சடாட விச்சுரித்த தீர்த்தமே. (4)

சூரரா விதுஞ்ச மான சுரப்பநெற்றி யங்கணிற்
சேரு மைந்த னுற்றபொய்கை யீதுதென் றிசைப்புறத்
தார வேப கீரதன் கொணர்ந்ததா யிரத்தொகைத்
தூறு மீது சானவிப் பெயர்க்கொ டாழி யுற்றதே. (5)

(வேறு)

நாரண னுந்திக் கொந்தவிழ் நளின
நான்முகன் மகமறை யுலகந்
தாரணி பதிமரி யோகமற் றெவையு
மளித்தவை பரித்திடச் சயம்பரஞ்
சீரணி மனுவை யியற்சத ருமைதனைத்
தாவ வரிடைத் தேவை
வாரணி பிறகூ திக்கொடி யுடனு
குதியிரு மைந்தர்வந் தனரால். (6)

கருத்தும னுரிசி தக்கன பான
கலந்துல கீன்றன ரவரி
லுருத்தவுத் தான பாதன்மா தவத்தி
னுயர்ந்திடு துருவனே யோங்கிப்
பொருத்துயர் பதத்திற் புக்கன னதற்பின்
பிருதுவி முதல்வர்பொற் பாரைத்
திருத்தினர் பிரியா விரதவேந் திற்பன்
மூவரோ டொருகோடி சேனிதான். (7)

இயைந்த வர்க்கி னேய ணீத்தும்
கீசியக் கனவா திரணியரே
துயர்ந்தசொற் திருதப் பிருதுமே தாதி
யோதரும் வீதிதோத் திரனே
நயந்தவேழ் தீவின் வேந்தருத் தமன்று
மதனிரே வதன்மனுச் சவனன்
பயந்தழா வீரன் கவிதவத் தியைந்தா
ரருச்சுகி கவியில்லாய்ப் பயின்றுள். (8)

உவர்களை மது நெய்த் திசுதை நீரே
ழோதநா வற்றரு விரளி
கவர்சினை யில்புகு சங்கிர விஞ்சஞ்
சாகம்புட் கரமெழு தீவு
தவறிலொன் றென்றுங் கிரட்டிச்சக் கரவெற்
பைம்பது கோடியோ சனைத்தா
மிவர்த்திர மதிநாட் கோளெழு முனிவர்
துருவனென் றுயர்ச்சிபெற் றிலகும். (9)

பரதங் கிம்புருட மரிபத்திரா
கேதுமா லமிளர் விரதி
மிரமி யமிரண் மயங்குரு கண்ட
பெயரிமை யம்பொற் கூட
மருவிய விடபங் கந்தமா தனநன்
மாலிய நீலம்பொற் சுவேதந்
தருசிருங் கந்தெண் கிரிநளி னப்பொற்
பொகுட்டென நெடுவரைச் சாரும். (10)

மந்தர மேரு மந்தரஞ் சுபாகுக்
குமுதநால் வரைகண்மா நாவன்
தந்தநீ பந்தா லனந்தனஞ் சயிர்த்திர
மவைப்பிர சஞ்சற்பத் திரமாம்
வந்தநா லோடை யோசனை நாளுண்
காயிர மாழ்ந்தெண்பா னுன்காம
விந்த மேருநான் முகன்பதி நாப்ப
ணெண்டிசைப் பாலஞர் விளங்கும். (11)

காரணி சடர்ந்த தேவ கூடஞ் ,
சொகர்விரங் கயிலைமேற் பவனம்
பாரியாத் திரமுக் கூடமா மகங்கொண்டு
வேற்படுத் துப்பன் ளுறு
சீரணி கும்ப மாதிமேற் கங்கை
செறிந்தநாற் றிசையினும் பரக்குந்
தாரணி யிலக்க மோசனை யென்று
சுரமுனி சாற்றலு மகிழ்ந்தாள். (12)

(வேறு)

நாரத முனிக்குவிடை நல்கிமனர் சூழப்
பாரத மொரீயிடை நிதிப்பதலை மேவிச்
சாரணர்கள் விஞ்சையர் தவத்தர்தமை யேத்தி
நீரணி வடாசல நினைப்பதன்முன்னுற்றாள். (13)

யானைபரி தேரரச ராடவர்கள் சூழத்
தேனையமு தைப்பொருமொத் தெரிவையவள் சென்றே
யேனைய விலாவிரத நீங்கியத ஞேர்பால்
வானையளை விட்டுநிமிர் வார்பொழி லுறைந்தாள். (14)

உறைந்திட வியக்கரு மரக்கர்களு மோதை
நிறைந்தகண நாதரொடு பாரிடமுன் னேர்வேந்
தறைந்தவறை கூவியம ராடமட மங்கை
மறைந்தரு வயிரச்சிலை குழைத்தமரின் வந்தாள். (15)

வடாதிசை யியக்கநெடு வாரிசுவ றற்போற்
றடாதசை யமற்கொடிய செஞ்சர மியங்கிக்
கடாமலை படுத்துவரு கந்துக மறுத்தே
விடாவலி யரக்கரை யியக்கரை விழிக்க. (16)

துணிந்தன கரந்தலை துணிந்தன தடந்தோ
டுணிந்தன பதம்படை துணிந்தன வுரம்போர்
துணிந்தன பெருஞ்சிலை துணிந்தன பொலன்றேர்
துணிந்தன பெருங்கரி துணிந்தனபன் மாவும். (17)

(வேறு)

அற்றன விடுகணை யற்றன வயில்வா
ளற்றன கவசமு மற்றன வுடல
மற்றன தொடைபத மற்றன களமார்
பற்றன விடையுட னற்றன முடியே. (18)

உக்கன குடைநிரை யுக்கன கவரி
யுக்கன நிமிர்கொடி யுக்கன வள்வே
லுக்கன வெயிறுக ளுக்கன விழிநீ
ருக்கன நிணமு முக்கன குருதி. (19)

இரைத்தன கழுகுக ளிரைத்தன பறவை
யிறைத்தன வருநரி யிரைத்தன குறள்க
ளிரைத்தன துடியொலி யிறைத்தன குருதி
யிரைத்தன ரியம்பட ரிரைத்தனர் மட்வார். (20)

ஒருகணை யெதிர்பவ ருரமதி னுழையா
வருகடை மறவர்கண் மறுபுற முருவித்
தருகட லெழுதிரி தமனிய வரைவான்
மருவியு மமைகில மலிதரும் விசையே. (21)

கரிநுத லிடைபுகு கணைகரி நிரையின்
விரிதரும் பரமு முருவியும் விசையா
லரிநிறை மலர்தொறு மணைதரு செயல்போ
லெரியெயி லரசர்க ளிலகுயிர் தெறுமே. (22)

(வேறு)

குடக்கொடு குணக்குநிறை யத்திரை கொடுப்ப
வடக்கர சரிற்றரு நடப்படையை மாறுத்
திடத்தொடுசெவ் வந்திதுணை வன்றிரு விருந்தா
ணடர்த்தசெய லிற்பொரு தடாதகை யடர்ந்தாள். (23)

இயர்கர்க ளியக்கமத ரச்சம ரிடத்தே
வயக்கொலை யரக்கர்கள் வழக்கற முழக்கி
முயக்கிய கணத்திரள் முழக்கற முடித்தே
வயற்பொரு குறட்படி படத்தனி யடர்த்தாள். (24)

விளித்தன ரரற்றினர் மிகக்கினு கினுத்தே
யொளித்தனர் பொரப்பொர வுருத்துயிர் விடுததார்
நெளித்தன மறப்படை யருட்டனை நினைத்தே
களித்தெதிர் நகைத்தனள் கணைக்கொலை மறுத்தாள். (25)

(வேறு)

முரசடி படலினை முனைமுனை நினையா
வரசரு நிருதரு மலகையு மணியிற்
பரசுடை மறவரு மடனுடை படவே
விரைசெறி குழலியு மடுகொலை விடவே. (26)

மருவின ரிருபத மலர்மிசை பணியா
நிருபரு மவுணரு நிசிசரர் குழுவும்
வெருவரு தொழிலினர் மிகுதிறை தரவே
பொருசுர பதியமர் பொரவுளம் நினைவாள். (27)

(வேறு)

இம்பரி னரச ரியாவரு
    மிரிந்தடி யிறைஞ்சிப் போற்ற
வம்பரந் திரிந்து மானத்
    தடல்பொரு செயலி சைத்தா
நம்பனைக் காண்பான் வேண்டித்
    தடாதகை ஞால நீங்கி
யும்பர்கோன் முதலி னோரைப்
    பொருசெய லுவப்பிற் சொல்வாம். (28)

விசையச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,297.

இந்திரச் சருக்கம்.

நலங்கனிந் தனவென் றுன்னி
நம்பனைக் காண்பா னண்ணி
நிலங்கனிந் தடிக்கீ ழாக்கி
வென்றுவென் றியினி றைந்த
பலங்கனிந் தெழுந்து திக்குப்
பாலரைப் பொருவான் சொக்கன்
புலன்கனி யஞ்செ முத்தாற்
றடைப்படாப் பொற்பு மிக்காள். (1)

இந்திர னீக்க மென்னு
மெழுகட லருந்த வானிற்
கந்தரங் குழீஇச்சென் றன்ன
காட்சியி னமரன் மீதிற்
சிந்துரம் பரிதேர் யாவுந்
திரண்டுறக் குணபா லாழி
யந்துட னிரண்டு நீக்கி
யணையக்கண் டொற்றர் சென்றார். (2)

அரம்பைய ராட வெண்மரி
யாழிசை யமையப் பாங்கில்
வரம்பிலா முனிவர் சூழப்
புலவர்கை மலர்க டூவ
நிரம்பியே நளின வோடை
நிமிர்ந்துறைந் தனைய செவ்வி
புரந்தர னுடைய வொற்றர்
பூவைசேர் பூச லிட்டார். (3)

ஒற்றர்வந் துரைக்க நக்கு
மிக்கபே ரும்பர் வேந்தன்
மற்றுளங் கிருதோள் நோக்கி
மாதலி வதன நோக்கி
கொற்றமார் தோத மென்ன
வேறினன் குழாங்கொண் டீண்டி
வெற்றியந் தேவர் சூழ
வடல்பொர விரைவிற் சென்றான். (4)

மாதவ ராசி கூற
வானவர் திரண்டு சூழ
வோதிம மனைய மாதர்
பலாண்டிசை யோதப் பாங்கிற்
கோதின்மங் கலங்க ளேந்தக்
குடைமதி நிழற்றப் போரிற்
காதலா லெழுந்த வுள்ளக்
கடலெழு கடல்க டுப்ப. (5)

கொடிகுடை தழைப டாகை
வெயில்குறைந் திடவான் செம்மப்
பொடிவிடு புகர வெற்போர்
பாற்கரு வரைபோ லொப்ப
விடியொலி முகிலின் வாசி
யிரைக்கவீற் றெழுகா லென்ன
முடிமன ரிரத மார்ப்ப
வமரர்வாய் முழக்கங் காட்ட ; (6)

வளைத்தவிற் புரளு நாண்செவ்
வாய்க்கறை புகைவான் முட்டத்
துளைத்தவெங் கணைப்பு ரத்திற்
றூணிமா டியம்போர் வாள்கள்
விளைத்தவிட் டுடைவீ ரப்பொற்
கழலினர் வெகுளி மீக்கொண்
டுலைத்துலைத் துருமின் வாய்விட்
டிருபுர முலம்பிச் சேர, (7)

நெற்றியங் கண்ணர் கோடி
கடையிட்ட பதுமர் தீண்ட
விற்றிடம் புயத்த ரோர்பால்
விடைமிசைப் பொலிய வீக்குஞ்
சுற்றுடைக் கொடிஞ்சிற் றேரிற்
சுடர்கண்மெய்ச் சுடரிற் போற்றப்
பற்றிய வசுக்கண் மேகம்
பரந்தன வொருபா லெய்த. (8)

சயந்தனு மற்று முள்ள
தனயரு முபேந்தி ரப்பேர்
வயந்தரு கடவு டானும்
வலமிட முன்பின் செல்ல
வியம்பணைத் தடாரி பேரி
கணைகட்டிப் பிராட்டிக் காயத்
துயர்ந்தபொன் வரையிற் கார்போ
லும்பர்கோன் வருதல் கண்டான். (9)

இருகையி லெழுதார் வாரி
வாரிவா னெழுந்து வில்லோ
ருருமுரு மொலித்திட் டாங்கு
வாங்கிவில் லொருபாற் றுங்கி
மறுவில வாளி செங்கை
வலங்கொடு வட்டங் காட்டக்
குறுகினள் விமான மீதிற்
கைதவ னளித்த கோதை. (10)

இடைவிடா முகிலோ ரேழும்
பொழிந்தன வெழுந்து வாளி
தொடையிடா வானும் பாரு
மறைத்திடத் தூவி யார்த்து
நடைவிடாக் களிறு சாய
வாம்பரி வீழ நாகர்
படைவிடா விரியத் தேர்கள்
பரியவோர் கணத்தின் வீழ்த்தாள். (11)

நெற்றியிற் பட்ட வாளி
யுடல்பிளந் தடலி னேர்ந்த
வெற்றியங் கரிய வானத்
தெய்தித்தே ரினத்தை வீட்டிச்
செற்றிய பரியை நீக்கிப்
புலவரைச் சிரங்க டள்ளி
முற்றுறு கால மட்டு
விசைவடா முடுகிச் சென்ற. (12)

துவசமுங் குடையுஞ் சிந்திச்
சாமரைத் துணைகள் வீழ்த்திக்
கவசமு மார்பும் போழ்ந்து
கரிபரி யிரதங் கட்டித்
திவசமே முடிப்ப னென்ன
நிறைந்தபொற் சேனை முற்று
மவசமே யெய்தி வீழ
நொடியொன்றி லட்டாண் மாதோ. (13)

உடைந்தவா னவரை நாடி
ருத்தரு ருத்துப் போரின்
மிடைந்தன ரன்னை செங்கை
வில்லுமிழ் கணைகண் டோர்பா
லடைந்தன ரெயிற தூக்கி
யழல்விழிச் சிதறி வாரிக்
கடைந்தமந் தரம தொப்பச்
சேனையைக் கலங்கக் கண்டார். (14)

கண்டன வன்னை கையிற்
　　கொடுமரம் வட்டங் காட்டி
யண்டமு முலரு மஞ்ச
　　மஞ்சுட ஞறு வாளி
தொண்டன ருருத்தி ரப்பே
　　ரிதமுங் கொடியும் பாகும்
விண்டடி வீழ்த்தி வெண்கண்
　　டருக்கர்மேற் சரத்தை விட்டான். (15)

விட்டவெங் கணையை வெய்யோர்
　　விலக்கினர் விலக்க லோடுங்
கட்டழல் விழியிற் சிந்த
　　வாரிரு கணையிற் பூட்டித்
தொட்டகை விரல்கள் செப்பத்
　　தொடுத்தன விடுத்தோர் தேரை
யட்டது வெய்யோ ரஞ்சிக்
　　காலின்வெவ் கொடுத்த கன்றார். (16)

இருவரோ டெண்மர் பத்து
　　வாளிய ரற்றோர் வில்லிற்று
வெருவரச் சயந்தன் சீறி
　　வில்லுட னிரத நீங்கக்
கருவரை மேரு வெற்பின்
　　கலந்தெனத் தேரைத் தூக்கி
யொருவிரு னரமார் வேந்தன்
　　கருத்தழற் பெறவு ருத்தான். (17)

(வேறு)

உற்றான்சிலை குனித்தான்கணை யுகைத்தான்மிகப் பகைத்தான்
செற்றான்பல படையைச்சம ருடையத்தனி சிதைத்தா
னற்றுபத ருறைவாளியி னடுக்குப்பல பலசொல்
சொற்றானுரு மாவொப்பெனத் துணுகுற்றன படையே. (19)

அரியஞ்சுவ னயனஞ்சவ னவுணத்திர ளடையார்
விரியுஞ்சிலை நிருதத்திரள் விளிவுற்றன ருணரா
யெரியுஞ்சினத் தொடுவந்தம ரெரிந்தாயதிர்ந் தியான்போர்
புரியுஞ்செய லுணர்கின்றிலை புலவோர்களைத் துரந்தாய். (19)

வரையின்சிறை யரியுஞ்சின வயிரப்படை யெடுத்தா
னிரையும்புவி யுடனண்டமு னெரியுஞ்செய லுணராய்
கரைவிண்டிட வருபன்னதி கவருங்கட லெனவுந்
திரைவெங்கட லுன்கரங்கியு மெனச்சேர்வதுந் தெளிவாய். (20)

மண்ணெனப்படு மலையென்படு மலையென்படு மதியா
விண்ணெனப்படு மெனதங்கையில் விடுவாழியி னுனையான்
பெண்ணெனபது நினைந்தீதுனை பொறுத்தேனது பிழைத்தாய்
துண்ணெனபயம் விடுத்தாய்கணை தொடுத்தாயம ரடுத்தாய். (21)

என்றுவுரை புகலாவிக னுறுகோடியம் பெடுத்தே
கைந்நாகம தென்னெஞ்சகங் கழலக்கரம் விசைத்தே
தென்றுடவர் படைசாய்ந்திடத் தொடுத்தான்மிகச் சினத்தான்
மன்றுகவத் துறுமன்னவர் முதுகிட்டனர் மாதோ. (22)

அரிவெங்கணைப் படவோடிய வரசர்க்கபை யமதீந்
தெரியின்சிகை தெறுமப்புய லெனமானமோ டெதிரா
மூரியும்புரு வமுங்கைவிலும் வளைத்தாள்சின முடித்தே
விரியுங்கணை யொடுகட்கனல் விழியைப்புதை செய்தவே. (23)

அண்டம்புதைத் தெழுவாளியை யறுத்தாயிரந் தொகையாய்
விண்டம்பர மெரியக்கணை சொரிந்தானவை விலக்கித்
தண்டம்புரி சரத்தாலவன் றடந்தேரினை யறுத்தாள்
கண்டிந்திரன் கரியேறலுங் கண்டாள்கணை துரந்தாள். (24)

துரக்குஞ்சர மலையுச்சியி னுருமுற்றெனத் துளங்கா
வுரக்குஞ்சர நுதலிற்புகுந் திறைப்பாற்கட லொருபாற்
பரக்குஞ்சரப் பவளக்கொடி குருதிப்புனல் பரக்க
வரக்குஞ்சர விடுத்தோர்புறத் திரதத்தினில் வந்தான். (25)

- அயின்முத்தலை முசலத்திரள் கதைவிற்கணை யகலாப்
பயில்வுற்றது விசைபெற்றது பருதிப்பரு தியதார்
வெயிலிற்கொடி நுகமிக்கது விழியைப்பரு குவதேழ்
புயலிற்பரி நிரைதுற்றதவ் விரதத்திடைப் புகுந்தான். (26)

விட்டான்கணை வயிரப்படை விடவெண்ணின முனிவோ
ரட்டானர சரையென்றர னைகண்டன ளுருத்தாள்
மட்டார்முடிச் சிவனம்பினை நிறைபூசையின் வாங்கித்
தொட்டாள்சிலை நடுநாணிடைச் சுடர்கான்றது நதியே. (27)

இரைக்குஞ்சிகை முடியுற்றுறு மெரிசிந்துரம் விடுத்தேன்
றுரைக்குங்கடை யுகச்செங்கன லுறழப்புவன மேலா
மரைக்கும்படி யெனநெட்டுயிர்ப் பரவிற்றவர் வெருவ
விரைக்கஞ்சனெ டெழுமாதவர் விரைந்தாரவ ணிறைந்தார். (28)

ஒழிவாசவ னமர்கொண்டதை யுமையாளிவ ளிவள்கைப்
பொழிவாளியி னுகம்போடி படுமற்றவள் பொலன்று
வழிவாமதுக் கமலத்தளி யெனக்கண்ணினை வைத்தே
தொழுவாயினிப் பெண்ணென்றசொல் விடுவாயெனச் சொன்னான். (29)

இந்திரச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,326.

தேவிச் சருக்கம்.

பெண்ணென நினையநீ வனத்துட் பேதையாய்
விண்ணென மண்ணென விரண்டும் வேற்றவுந்
துண்ணெனு மவுணரைத் தொலைத்த வாடற்சீர்
கண்ணெனக் கண்டவோர் கதையைக் கேட்டியால். (1)

மாயவன் செவியிடை மதுவு டன்சினங்
காயமுற் கயிடவன் ரேன்றக் கனடியர்
நேயமாய்ப் பரவனு நீலச் செஞ்சுடர்
மீயெழுன் மானவா னிடத்து மேயினுள். (2)

நோக்கின ளனல்விழி நுதற்கண் சேந்தன
ளூக்கமா ரெண்கரத் துரிய வெம்படை
யாக்கமோ டெழுந்தனள் குமரி யாமெனப்
பாக்கியத் திமாசலன் பரிவிற் போற்றினுள். (3)

கங்கையு முலகெலா மளித்த கன்னியர்
மங்கையு மெனவயின் மகளிர் நீயுமென்
பங்குற மகளெனப் பரிக்கு வாயென
வங்கவ ணெடிதுநா ளவனின் மேயினுள். (4)

அருந்தவ மெய்தின ளிறைவற் கன்புறப்
பொருந்தலு மயிடனும் புலவர் கூற்றுவன்
பெருந்தகைப் பிரகலா தன்பின் னேனிடத்
திருந்திய வலியுடன் பிறந்து சேர்ந்தனன். (5)

(வேறு)

மற்றவ னுலக மெல்லாம் வெருவுற மருவி நின்னை
வெற்றிகொ டுலக மோம்ப வறமெலாம் போற்ற மேவிக்
கொற்றவை யரிமே லாகிக் கொடுமரங் குழைத்துச் சென்று
ருற்றபோர் மயிடன் போரி லுருத்துநம் படையு டைத்தான். (6)

அனைவர்க்கு மபய நல்கி மயிடனே டடலிற் சீறித்
துணைவலி யக்கு ரன்போற் சுக்கிர னுதித் தோற்றம்
புனைபடைத் தலைவ ரேற்றுப் பொன்றவே வீட்டிச் சேனை
தனைவடக் கன்னீ ருண்ட தகவையின் வெற்றி கொண்டாள். (7)

மயிடனு முதிர்ந்த போரி லானைவா ளரிய தாகி
யுயிர்விடா வரத்தின் பின்னும் பகடென்ன வுருத்து நீங்காச்
செயிருடன் பொருந்து தாளின் முயலகன் சேர்ந்த போல
பயிலுறு பீட மாகக் கிடந்தன னின்னும் பாராய். (8)

(வேறு)

பின்னு மையையும் பிஞ்ஞகற் பராய்த்தவெம் பெருக்கத்
துன்னி லாதன்சே யழித்திடுஞ் சும்பனே நிசும்பன்-
மன்னு வான்புவி புரந்துமா திரம்பொரா விருவர்
தன்னை யேவின னவருமப் பணிவரைச் சார்ந்தார். (9)

ஆத வச்சுடர் பஞ்சுடா கத்திடை மூழ்க
வோத ருந்தவத் துறைபரை தனையுவ ணணைந்தக்
கோதி லாச்சண்ட முண்டனுங் கண்டுளங் கொண்டே
தீது முற்றிய சும்பன னிசும்பன்பாற் செப்ப. (10)

சுக்கி ரீவனென் றெருருத்தனைக் கூய்த்தொடர்ந் தந்த
மைக்கண் மங்கையைக் கொணரென விசைகொடு மருவி
மிக்க நாயக னவுணர்கோ னுன்றவ மேன்மை
புக்க காதலைக் கரைத்தன னெனப்புகன் றனனே. (11)

(வேறு)

அப்புகல் கேட்டு வேம்பை யடக்கிய தூதத் தெண்மோ
வொப்பரும் படையோ டெய்தி யுருத்தெனை வேறி லஃகுத்
தப்பிலா தென்னைத் தூத னிசும்பன்பாற் சாற்ற வேம்பி
வைப்புகைக் கண்ண பற்றி தம்மென விடுத்தான் மன்னோ. (12)

வந்தனன் றூம தாட்டன் படையுட்டன் மங்கை யென்னே
நந்துரு நடத்தி யென்ன விருணக்கு வெய்யோ னென்னச்
சுந்தர மடங்கற் பற்றிச் சுக்கிர்பட வுகிரிற் போறச்
சிந்தின னெருத்த னந்தத் தீயவற் கீது ரைத்தான். (13)

உரைத்தலு நிசும்ப னேர்பா னேக்கின னுரிமைக் காவ
னிரைத்திடுஞ் சண்ட முண்டர் நூறுவெள் ளத்து நேர்ந்தார்
விரைத்திடுங் குழலி கண்டு மடங்கன்மீப் பொலிந்து விற்போற்
றிரைத்தெழு புருவ மேற்றக் காளிவந் துறுத்துச் சென்றாள். (14)

குனிபுரு வத்துக் காளி யையைதன் னருளாற் கூடி
முனிவுடைச் சேனை முற்று மேற்றியே முண்டன் கண்டன்
பனிபெற வாளி [ல்] வீட்டிப் பரணியிற் றூக்கி யெம்மொய்
நனிமலர்த் தாளி லிட்டுச் சாமுண்டி நாமம் பெற்றாள். (15)

சண்டனு மினையோன் றானு மடிந்தவை சாற்ற வாய்விட்
டண்டமுங் குலுங்க நக்கு நிசும்பன்கண் ணனலைக் கால
விண்டன ரவுணர் கண்டா ரிரத்தவீ சன்வெ குண்டு
மண்டின னுயி ரத்து வெள்ளத்து மாயை தன்பால். (16)

எரியினை மூட்டி வல்லி னியல்விழ செயலில் வந்து
விரிதிரைச் சேனை மீது விற்குழைத் தம்பு தூவ
வுரியகோல் பட்ட வாயி லொழுகிய குருதி துள்ளித்
தெரியவோ ரிரத்த வீச வடிவத்தாய்த் தெழித்த டர்த்தார். (17)

கரந்தனன் குமரி காளி கன்னியைக் கதையின் மோதச்
சிரந்தனில் வாய தாகத் திகிரியி னிரத்த வித்திற்
சுரந்தவர் தலைமீ துமிப் பக் காளியோ துளிவி ழாம
லருந்தின னிரத்த வீசன் வெள்ளமுற் றவிந்த தன்றே. (18)

எய்தின ரசும்ப னோடு நிசும்பனோர் கோடி வெள்ள
மொய்தரு தருவாய் சூழக் கரிபரி யிரத முற்று
வைதரு மயில்வாள் விற்போ ரெழுகடல் வந்த தெய்ப்பச்
செய்தபோ ரெளிதன் றென்னச் சிவனயன் மால்மால் சேர்ந்தார். (19)

பெண்ணிவ டணிய ணின்றாள் பேரிபோ ரென்ன விண்ணோர்
துண்ணெனக் குமரி நோக்கிச் சூழ்வலி மடங்க வுந்தி
விண்ணொடு மண்ணு முட்ட வமர்த்தலை மேவிச் சாபத்
தெண்ணம துணர்ந்து நீங்காச் சிவனைத்து தெனவி டுத்தாள். (20)

வானக வமரர்க் கீய்ந்து மாநிற மனுவுத் தாக்கி
னூனுடல் பெறுவ னன்றே லும்பரார் பெறுவ னென்னே
மேனிம ருரையைக் கூற மறுத்தன னவுணன் விண்ணோ
ரானகொற் றவையை யின்னுஞ் சிவதுதி யென்பா னன்றே. (21)

காலெரி வருணங் காலங் காரூட மயிந்தி ரப்போர்க்
கோலினைச் சிலையின் வாங்கி வறுவர்பாற் கொலைசேர் மாதர்
பாலுற நோக்கிச் சென்று படையினை யடும னென்று
ளாலம தென்ன மேவி யறுவரு மனீகஞ் செற்றார். (22)

பிரமைமா யேந்தி ரப்பேர் குமரிவிண் டுவையை வாங்கா
வரமகே சுரிவ ராகி மாலரன் குமரன் வேதாச்
சிரமதி னிடத்தி லுற்றார் சேனைநீர் சுருக்கப் புன்னீர்
பரவையில் பாவப் பங்கம் படிந்தன பிணவ ரைக்கே. (23)

வற்றிய கடலுண் நின்ற வரைநிக ரிவரைப் பொரவே
சுற்றிய யையை வாளி துணித்தொருத் தனைமுன் னோனைப்
பற்றிய மல்லிற் செற்று நமையெலாம் பரிவிற் காத்த
பொற்றொடி யன்னா ளென்னப் புரந்தரன் சமரை நீத்தான். (24)

அயனுரை கேட்டு வேந்த னைந்தரு தேனு மற்றுப்
பயனிறை பணிய தாதிப் பலவகை நல்கி யன்னை
நயனநன் னருளை வேண்டி நான்முக னுடனும் போனா
னுயரெரி மணிப்பூ ணுடை திறைகொளத் தென்பா லுற்றாள். (25)

தேவிச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,351.

சையமணிச் சருக்கம்.

கண்ட தூதுவர் மறலிபாற் றென்னவன் கன்னி
மண்டு சேனையோ டிந்நகர் மருவின ளெனலுங்
கொண்ட கோலிடு கரியெனக் கொதித்திய மனுந்தன்
றிண்டி றற்படை செல்லென விரதமேற் சென்றான். (1)

கதையும் பாசமுஞ் சிலையும்வெங் கணையும்போர் வாளுஞ்
சிதைவிற் றேர்களுஞ் செம்முகச் சிறுவிழிப் பேரா
வதைசெய் கூரெயிற் றானையும் பரியுமாய் மருவ
விதைய நோக்கின ரரசர்கண் டிறைவியும் நகைத்தாள். (2)

விடுத்த வாளியிற் றண்டத்தில் வேலில்வாள் தன்னி
லடுத்த நாஞ்சிலின் முசலத்திற் பாசத்தி லழிந்து
தொடுத்த சாபமுங் கணைகளுந் துறந்தமா னுடரை
யெடுத்த சொல்லினா லஞ்சரந் தெம்மனை யுடன்றாள். (3)

இடத்து வெஞ்சிலை கொண்டுநா ணெறிந்துவெண் ணுவத்
தடப்பெ ருங்கணை வலங்கொடு நாண்குதை சார
விடத்தை வாய்வழி கான்றசே டனிற்செறல் விட்டா
ளடற்பெ ரும்படைக் கிங்கரக் கடலினை யருந்த, (4)

ஓடு வாளிகிங் கரப்பெருங் கானையுண் டெழுநா
ணீடு மங்கியிற் கோதலும் படைஞர்க ணீங்கிக்
காடு வெற்பிடம் புகுதலுங் காலன்மா காலன்
கோடு வெஞ்சிலை குழைத்தனர் கண்டனள் குமரி. (5)

சிலையொ ரம்பினிற் றேரொன்றிற் பாகொன்றே சிதைப்ப
நிலைய ழிந்தனர் சண்டனுங் காளியு நெருங்கி
யுலைவை யிற்சரு கெனச்செலத் தருமமு வந்து
மலைவு றானுறு மாரவேன் மறலினன் மதியான். (6)

(வேறு)

தென்றிசை யவன்றளர் செயலு மெம்மனை
வன்றிசை மாப்போர் மடங்கற் பேடன
நின்றிசை வலியுங்கண் டுள்கி நேரியா
ளொன்றிசை முனிநடந் துவட்குச் சொல்லுவான். (7)

அன்னைகே ளுன்செய லறிந்தி லாலிவ
ணின்னருள் வழிவழா நடக்கு நீர்மைய
னென்னனு மிவரை சாட்சி யாதென
வன்னவ னகர்நெறி முனிய றைந்தனன். (8)

(வேறு)

அரம்பைய ராடன் மான மரம்பைதார் கமுக மாட்சி
பரம்பயி லிசையி னோசை யன்னநந் தண் ணீரிற் பந்தர்
நிரம்புதோ ரணம்வி ழாவு மங்கல மெட்டு நீர்மை
பரந்தணி தென்றல் மேவு வடதிசை நெறியின் பாண்மை. (9)

தந்தைதாய் குரவர் தன்பான் முனிவிலா வினைத ணந்தோ
ரந்தண ரரச ரான மேயர வையமா லைக்கட்
பைந்தொடி மகளிர்க் காவி பரிந்தவர் சிராத்தஞ் செய்வோர்
வந்தநோன் புடையோர் வேள்வி வளர்த்தருத் தரத்திற் சேர்
[வார். (10)

சத்திர சாலை சோலை கோயினந் தனக்கான் செய்தோர்
மெய்த்தயை பொறையோர் வாய்மை நீதிமெய் யருள்வி ரிந்தோர்
பொய்த்தலை மகளிர் சேரார் புராணத்து வழிந டந்தோ
ருய்த்தவைம் புலத்தோர் நன்றி நடுவனத் தாற்றிச் சேர்வர். (11)

கங்கைய தாதி யாறு புட்கர மாதி தீர்த்தம்
பொங்கிய தலமி தித்தோர் பூவலந் திரிந்தோர் வேலைச்
செங்கதிர் மதிக்கி ராண முவர்விடு வயனந் தாழ்ந்தோர்
மங்குரு விரதத் தோர்கள் வடதிசைப் படர்வ மாதோ. (12)

அரதன மானத் தேறி யட்டமங் கலங்கள் சூழப்
பரதநாட் டியத்த ராட வயின்வயின் பரிவந் தீந்து
சரதமா யமுதந் துய்த்துச் சார்தனுந் தருமஞ் சேர்ந்து
விரதநன் மையினீ ரென்ன வெதிர்கொடு விழைவன் மன்னோ.
(13)

மணிமுடி கண்டி யார மங்கதங் குழைவ யங்க
வணிநகை கோட்டி யின்பத் தளவளாய் விடையை நல்க
பணிசெயப் பதங்கள் சேர்வர் சித்திர னருத்தன் பன்னு
ளிணையில்சான் றோர்கள் சூழ மனுநெறி தரும னெய்வான். (14)

(வேறு)

தென்றிசை நெறியிற் பொறியழற் றுறுகற்
சிலைபா லயில்சில கணைவாள்
வென்றிசேர் மடங்கல் கரிபுலி கரடி
சல்லிய மேதினு யோரி
துன்றியவ் வல்கை பாரிடங் குறள்வே
தாளஞ்சுழி யாதுதா னவர்கள்
வன்றிச் லரக்க ரியக்கரற் சுரநோ
யரும்பல வாதமல் குறுமே. (15)

பாசத்து விசித்துப் பரவாமனே பணியாத்
தலைபர வாதவாய் தொழாக்கை
வாசத்தி னடவாத் தாள்பணி யாமெய்
கதைகே ளாச்செவி முனைமட்டித்
தாசுற்ற குளரி முடவயி றெட்டி
யங்குசங் கோத்தலைத் தாற்ற
வீசுற்ற கதையிற் கதையினிற் புடைத்துக்
கப்பண மேல்செல விடுப்பார். (16)

சுற்றமுந் தனமு மனைவியுந் துணையுஞ்
சுதருமீ மத்துற மெய்யாய்ப்
பெற்றதும் பொய்யா யெரிபட வணுங்கி
யாதனை மெய்யெனப் பிறழ
வெற்றவீழ்ந் தலறி யெழுந்துயிர் விடாம
லியாளிபாம் பரிகரி ஞாளி
வெற்றவாய் விள்ளப் பிணியிடைப் பிணிக்க
வெருவிச்சை யமனியிற் புகுவார். (17)

தருதிரீண் டெறிதி ரெற்றுதி ரொளித்திர்
தாக்குதிர் வீக்குதிர் புடைத்திர்
வருதிர்நீ ரென்னக் காலனே சண்டன்
மறலிமா காலனை முதலோர்
பொருதலும் பகட்டி விழிவிழி தழலைப்
பொழியவேற் றுருவொடுந் தருமன்
வெருவரு நோக்கி ஞலெழு கோடி
நரகிடை யிடருடன் மெலிவார். (18)

கொலையர்வச் சிரத்துப் பிறர்மனை நினைந்தோ
ரெரியிருப் பழுவிற்கோ ளுரைத்தோர்
நிலையெரி வாயிற் சிறைவைத் தோரந்தக்
கூபத்து ளடைந்தவர் நீத்தோர்
நிலைகொள்கூ லத்தந் தணர்க்கிட ரிழைத்தோர்
வராகத்துக் கள்ளுணை வியைந்தோர்
குலையிருப் பெழுதா ணத்தினு லிசழ்ந்தோர்க்
கழுக்குறை யுழைக்கவே விடுப்பார். (19)

மறைமறந் தோரவை தரணியி னீதி
மனுநெறி விடுத்தவ ரூசி
முறைமுறை தழலிற் பெரியவர் பிழைத்தோர்
பொய்யர்தீ முழங்குவர் வேற்பிடித்து
நிறைகுட ரென்பு தசைபிண மேதை
நிணமுட லொருகுழம் பாகி
யிறையினி லுருவாய் மணுவினுட் கிடப்ப
வில்வழி யிருமையி னடப்பின். (20)

ஆங்கவன் றனைநீ முனியலுன் னருளி
லறநெறி நடாத்தின னென்ன
வீங்கியாழ் முனிவன் புகன்றிட வன்னை
வெகுளிநீத் தவனருள் திரைகன்
வாங்கிமற் றவன்பாற் சிறப்பினை யுதவி
மறலியோ டியாழ்முனி தனையே
யோங்கருள் விழியால் விடையளித் தரச
ருடன்செலு மானத்தி லுற்றாள். (21)

சையமணிச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,372.

வருணச் சருக்கம்

நிருதியை முனிந்து போரி
    னிருதி தனீகஞ் சிந்திக்
கருதிய திருவ னைத்துங்
    கவர்ந்துமெய்க் கருணை தன்னாற்
சுருதிமா தவர்கள் வேண்டிடவ்
    வளித்தலை கோனைச் சுற்றிப்
பொருதனள் கரிக்கு மாத்தைப்
    பிணவரி பொருவ தொத்தே. (1)

வருணனுங் காருஞ் சேனை
    மன்னருங் குழீஇ வெய்யோனை
யிருணிறை வளைத்திட் டாங்கு
    வாங்குவில் லேற்றி யன்னை
யருணிறை யனீகத் தோடு
    மமர்பொரு துடைப்பக் கண்டாள்
பொருணிறை சிலையு மற்றப்
    புருவமுங் குனியச் சென்றாள். (2)

எறிந்தநா ஞேசை கோதை
    யறப்பட விருபாற் சங்க
நிறைந்தபே ரோதை காட்ட
    நீண்டகோல் சிகையில் வெந்தீ
செறிந்திட வருதல் கண்டு
    சிந்தினர் சிலர்மற் றுள்ளோர்
மறிந்தன ரென்ன வீழ்ந்தார்
    வருணன் மைந்தர்களோ டேற்றான். (3)

பிறைமுக வாளி பல்லம்
    பிளந்தவாய் தலைமூன் றைந்து
நிறைமுகக் கணைகள் வீசிச்
    சேணலர் நிரப்பி யார்த்திட்
டறைமுகச் சங்கம் பேரி
    படகமே ரமலை காட்டிக்
கறைமுக மயில்வேன் மன்னர்
    வென்னிடக் களங்கொண் டார்த்தார். (4)

கண்டனன் மயிடற் காய்ந்த
கன்னிபொற் கண்கள் சேப்பக்
கொண்டனள் வருணன் விட்ட
கணையெலா மிமைப்பிற் கொய்து
முண்டக னுரையிற் றப்பா
முரட்கணை நூறு கோத்தா
ளண்டமும் புகையச் செல்ல
விமையவ ரலக்க ணுற்றார். (5)

சிலகணை தேரும் பாகும்
புரவியுஞ் சிதைத்த வப்பாற்
சிலகணை வில்லுங் கோலுங்
கவசமுந் தீர்த்த வெற்றிச்
சிலகணை யன்னான் மைந்தர்
தம்மையவ் வாறு செற்ற
சிலகணை யிருளை நக்குங்
கதிரெனச் சேனை வீந்த. (6)

கரிநிறை யெருத்தம் வாசி
பருமந்தேர்த் தடகே கையற்
றெறிதிரை யரசர் நீங்கி
வந்துற விபங்க ளெல்லாம்
விரியொலி யடங்க வீழ்க்க
வரிவெண் குடைப தாகை
யரிபட வடவை யந்தீ
யருந்துநீர் போலச் செற்ற. (7)

சேனையந் தலைவர் சிந்தச்
சேனைகங் கிருத்த வாற்றில்
கூனலங் கனல்வென் பாய
விரிதனுங் குமர ரோடு
மானையம் புரவி தேர்விட்
டுடைந்துபோ யரணம் புக்கா
னீனிறக் கடற்கோ னன்னை
முனிவொரீஇ நகைத்து நின்றாள். (8)

விலையுணர் வரிய முத்து
மணிகளும் பொன்னு மேவுங்
கொலையுணர் வரிய யானை
குரகதத் துரக தங்க
ணிலையுணர் வரிய பொற்றேர்
நிலைதந்து நிமலை பாங்கிற்
றலையுணர் வரிய செல்வக்
கடற்கிறை சரணன் றுய்ந்தான். (9)

உன்னைநீ யுணரா யாரே
வுணர்குவ னுலக மீன்ற
வன்னைநீ யடியேஞ் செய்த
பிழைபொறுத் தருள்வா யென்னப்
பொன்னையேர் மேனி யம்மை
தணிந்தனள் முனிவு போந்தே
னன்னையே வென்ன வன்னான்
சிறப்புறுந் திமைப்பிற் சென்றான். (10)

வருணச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,382.

குபேரச் சருக்கம்.

வாயுவை முனிந்து கந்த
மலரவன் வாச நானஞ்
சேயநன் மணியின் மாலை
திறைகொடு வடாதி சைக்க
ணயகன் றன்னைத் தூதாற்
றிறைதர நவிற்றந் நக்குத்
தோய்சினப் படையி னோடுங்
காலெறி கடலிற் றெக்காள். (1)

சூரியன் பானு கோபன்
றெடநள கூப ரப்பேர்
போரியன் மணிமான் மானு
பத்திரன் புயங்க கேது
வாரிநெறி யோக கண்ட
னியக்கரிவ் வலனை யாதி
பேரிகலி யரக்கர் சூழ
வயிரச்சிர வண்ணன் போந்தான். (2)

வான்றரு வாரி வாரி
மறுகணை வீசி வீசி
நான்றகை முசலம் பற்றி
நாகத்தி னுக மெய்த
தோன்றிய திறையின் வாசிக்
குரத்தச துகளெ ழுப்ப
மூன்றுல கின்றே மாளு
மெனமுனி வரர்பு கன்றார். (3)

மங்கல மெட்டு மேந்த
மண்டலந் தழைசே ருடித்
தொங்கலம் பாம்பு தைக்க
வறுவகைப் படைஞர் சூழ்ப்பி
லங்கல னியக்க ரோடும்
பெருங்கடல் கிழித்துச் செல்லும்
வெங்கலத் தெய்த வன்னை
கண்டிவை விரிக்க லுற்றாள். (4)

வெருவலிர் புலிங்கஞ் சேர்ந்த
　　வெண்ணிறப் பூழை யென்னப்
பருவர லியக்கர் வீயப்
　　படுப்பமோர் கணத்தி லென்னுக்
கருவரை திருவி லோடு
　　கலந்தன சிலைகு ழைத்து
மருவலர் சேனைக் காட்டுள்
　　வடவையங் கனலிற் சென்ருள். (5)

(வேறு)

தொடையொன்றினி லோராயிரஞ் சுடுவெங்கணை தூக்க
விடையென்றொரு விரலெல்லையு மில்லாதுவெண் ணிறையக்
கடையொன்றிய சிவன்முக்கணிற் கனலாமெனப் பாய்ந்தே
தடையொன்றில யுலகத்தெனச் சரம்பாரெங்கு நிறைத்தாள். (6)

ஒடுங்கணை மதவெற்புழி நுதலிற்றுட லோடி
நீடும்பரி யுரமுற்றுய ரிரதத்தொகை நெரித்துக்
கூடும்பல வனிகந்தனைக் குரைத்தேதடை கொள்ளா
நாடும்பல திசைவெற்பினைப் பிளந்தேபடி நடக்கும். (7)

தேராயிரம் பரியாயிரஞ் சிறுகட்புகர் முகவெங்
காராயிரம் படைமன்னவர் பதினுயிரர் கரங்கா
னேராயபொற் புயமாயிரம் படையாயிரம் நெடியோர்
பேராயிர மொருகோறொலைத் தமையாதுவிண் புகுமே. (8)

தலையற்றன கரமற்றன தாளற்றன வாளின்
கொலையற்றன வுடலற்றன குடரற்றன நெடுவே
லிலையற்றன வுடலிற்றன வெதிரற்றன நடைசேர்
மலையற்றன பரியற்றன வயவாளியொன் றினிலே. (9)

வலத்தேர்சிலை யிடத்தேர்நிலை வானோர்நடு நிலையோ
நிலத்தேர்தொடை கரத்தேர்விரு பதத்தோவிட னெடுவிட்
புலத்தோதிய மொழியோர்விழி புதைத்தோர்கில மெனவான்
குலத்தோருளத் துணர்வற்றிடக் கொதித்தே கணைவிடுத்தாள். (10)

அங்கைக்கணை தொடையொன்றினி லாகாயமு நிலமும்
பங்கப்படத் திகழுந்துகள் படமேருவுங் குலுங்கத்
துங்கக்கொடி குடிவானிலுந் துரகங்கரி யிடையும்
வெங்கட்பத மியம்பாரிலும் விழக்கண்டுசென் றதுவே. (11)

(வேறு)

இத்துணை மங்கை செங்கை
யம்புவிட் டிரங்கி நக்கு
மொய்த்துணைச் சமர மாற
வேளைகண் டுருமின் முன்னிக்
கைத்துணைக் கணைகள் வீசித்
தலைவர்கள் கனலக் கண்டாண்
மைத்துணை விழிகள் சேந்து
வாங்கிவில் லாளி தூர்த்தாள். (12)

மானுபத் திரன்றேள் சிந்தச்
சூரியன் பானு மார்பிற்
காணிபெற் றிடநூ றம்பு
விடுத்தியோ கக்கண் டப்போ
சேணிடைப் புலிக மடித்து
வலிமணி மாணைச் சிந்தி
யேனுடைப் புயங்கத் தேதோ
டயக்கிரி வணைப்பா ரிட்டாள். (13)

வருநள கூப ரன்ற
னுரம்வெளி யாக்கி மற்றப்
பெருவலித் தனதன் மானத்
தாயிரம் கணையைப் பெய்து
பொருமுனை கண்டு வில்லிற்
புங்கம துரைக்க வாளி
யிருபுயம் பேர விட்டான்
வானெரி பரந்த தன்றே. (14)

மேவிய கணைய வாளி
யொன்றினில் வீட்டி யொன்றிற்
றேவியுந் தனதன் பாகை
யிவுளியைச் சிந்தி மாதர்
காவியங் கண்ணே ரம்பி
னகலங்கா லதரத் தாக்கத்
தீவிய வாளி கொண்டா
னுத்தரத் திசையாள் வேந்தன். (15)

சுரமுனி யெய்தி ஞால
　　மீன்றருு டோகை நின்பால
வரமுனி வதனுர் கண்ணை
　　மறைத்தவ ஞணராய் கொல்லென்
றரமுனி யியலி னுன்போ
　　ரகற்றிப்பன் னிதியு மீந்து
திரமுனி வரரும் போற்ற
　　வடகுண திசையிற் சென்ருள். (16)

குபேரச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,398.

காட்சிச் சருக்கம்.

குடவயிற் றகல்வாய்ச் செங்கட்
குறும்பதப் பூத வெள்ளம்
புடைநிறை யாண மைந்திற்
பொன்வரை கிளர்வ தெய்ப்ப
மிடலுறு மிருப்பு நோக்கி
விமானத்தை யதன்மேல் விட்டா
ணடலுறு நந்தி யாதி
பூதர்வந் தமரி லேற்றூர். (1)

ஒருமுக மாதி கோடி
முகத்தின ரொருகை யாதி
மருவிரு கோடி கையர்
விலங்குபுள் வதனச் சீரர்
வெருவரு தொழிலர் பாவே
றூற்றி யரவிற் கோலான் (?)
செருமலி படைய ரந்தப்
பெருங்கடல் கடப்பச் சென்றூர். (2)

(வேறு)

விழிக்குந்தொறு மெரிசிந்தினர் விரிவானுல கறுங்கத்
தெழிக்குந்தொறும் புகைக்குந்திரை திரண்டெண்ணில படையிற்
கொழிக்குஞ்சுடர் சுடரப்படர் பணிமாதெனக் கொண்டார்
பழிக்கும்பல புகலிற்சிறு நகைவண்டிவை பகர்ந்தார். (3)

அரிவந்தில னயன்வந்தில னமரர்க்கிறை யலனே
தெரிவெஞ்சிலை கொடுமெல்லியல் சிறுமானிய ருடனே
யெரியுஞ்சுடர் படுவிட்டனி லிவணெய்தினன் மரும
புரியுஞ்சின முடையாளிது போலில்லெனப் புகன்றூர். (4)

புகலுஞ்செய லினைகண்டனள் புயற்றெண்டிரை நீங்கார்
விகலின்குர லுறுமுற்றென வலிநாணொலி யெறிந்தா
ளகலுங்கரம் பெயரப்பிரு கடாகும்பரன் மழையோன்
றுகலுங்கணை நிரைகண்டபி னுடைந்தாரம ரடைந்தார். (5)

தடைகொண்டிரு கரங்காற்றலை யுடல்சந்துகண் வதனம்
புடைகொண்டவிற் கணைவாளயில் கதைநாஞ்சில்பொற் பேழுக (?)
மிடையும்பரி கரிதேர்பரி கரிவிண்கொடி குடைவா
னடையுங்கவ ரிகளற்றன வதுகண்டனர் கணத்தார். (6)

மற்றும்படை கொடுபூதர்கள் வாய்வெள்ளெயி றழுத்தா
சற்றுங்கனல் நீராமெனத் தொடர்ந்தாரம ரடைந்தார்
பற்றும்படை யொடுபாணிகள் படியிற்படி தரவே
பொற்றுங்கணை யொருகோடியிற் பொருதாள்சமர் கருதாள். (7)

உடையுங்கண நிரைநோக்கினர் வலியுத்திரன் வீரன்
மிடையுங்கன லின்றுடகன் கூண்மாண்டன்மெய்ப் பிருங்கிப்
படையுஞ்சமர் பொரதாளின ரதுகண்டன னந்திப்
படைகொண்டெதிர் மருவாவெரு வாவுள்ளகம் பனித்தான். (8)

(வேறு)

நந்தியுள் வெருவர வாண னண்ணலு
மெந்தையுந் தடாதகை பின்ன ரெய்தினேன்
முந்தியவ் வாணத்து முன்னைப் போற்றினன்
சிந்திய நந்தியோ டிறைவன் சேர்ந்தனன். (9)

கிடங்கொடி தானமு மொருவிக் கீழ்த்திசைப்
படர்ந்தன டடாதகை பாடி நாட்டியே
யடர்ந்தெழு முனிவரைத் தூத னுப்பவே
தொடர்ந்தன ரன்னபா லருடொ டங்கவே. (10)

வந்துறு முனிவரை மங்கை நோக்கியே
தந்தன ளிருக்கைமற் றவருந் தானுவா
யெந்தைதன் வலியெலா மெடுத்துக் கூறியே
புந்தியிற் கொள்ளவோர் புகலுங் கூறினர். (11)

வரத்துய ரிரணியன் மரபு வீழ்ந்தநாள்
புரத்தினை மயனமைத் தவுணர் பொற்புற
வுரத்தமர் மாயனை யுவற்க மைச்செனத்
திரத்தரு ளின்னெறி காலிற் சேர்ந்தென; (12)

செம்புபொன் வெள்ளியஞ் சிலம்பி னுற்றிரிந்
தும்பரு மிம்பரு மொறுக்க நான்முகன்
சம்புவைப் போற்றப்பா ரிரதந் தம்மென
நம்பனு மிகுமமர்க் கோலம் நண்ணினன். (13)

இயங்குறு வையமே வைய மேந்துவில்
வயங்கெழு தலைவிரி செம்பொன் மால்வரை
புயங்கநாண் கணையரி புண்ட ரீகன்பர்
கயங்கு லாமறைக் கதிரழி யாக்கினன். (14)

பூண்டன நெடுஞ்சமர் கோலப் பூதரு
மீண்டினர் விற்குழைத் தெரிவெங் கோலினத்
தூண்டுவான் றுள்பெயர்த் தெந்தை சுந்தர
னுண்டொரா யிரமுறைந் தருளு மெல்லையே. (15)

உகைத்தகால் விசையிவந் துழுந்து கண்ணடித்
தகைத்திடாக் கணக்குழீஇத் தணத்த லுள்ளியே
நகைத்தன கைக்கொடித் தப்ப நண்ணுறப்
புகைத்தொகை யுடன்கனற் புகுந்து லாயதே. (16)

பற்றிய தழற்கொடி பருத்த முத்தலை
முற்றிய வேழுநா முழக்க மிக்கன
வெற்றிமும் மதிலுருக் கரத்தில் வீழ்ந்தழல்
வற்றிய வடவியுண் கனலை மானவே. (17)

குணமெனுங் குன்றுறை யிறைவர் கோபமோர்
கணமெனி னும்பரிப் பரிது காரிகை
மணமலி கைத்தழ லனிக வாரியை
யுணவென வடலையா யூழின் வீசித்தே. (18)

இத்திற மெம்பிரான் முனிவிகற் சமரண
மத்திற லங்கணுய் மனத்துக் கோடியே
நெய்த்திறல் வேள்வியந் தக்க னின்னையீன்
றத்திற லவர்க்களித் ததனைக் கேட்டியால். (19)

சயம்புவேந் திற்சத ரூபை தந்தமா
தியைந்தநன் மணம்புரி தக்க னீன்றநீ
நயந்தனை யெம்பிரா னயந்து முன்புபோ
லுயந்தவில் லறம்பரித் துலக மீன்றனை. (20)

தந்தைவேள் விப்புறஞ் சார்ந்து நீங்குநாள்
சுந்தர னேவலின் வீரன் றோன்றியே
கொந்தழன் மகம்பொர வெற்பிற் கோமக
னந்தையாய் வதுவையு நண்பின் மேவினை. (21)

தக்கனிற் கவுரிவெற் பகத்திற் சார்ந்தநாள்
மிக்கதோர் பாற்பதி மதுரை வேந்தனுற்
புக்கதோர் தடாதகை பூவை நீயினுண்
முக்கணன் வதுவையே முற்றுவா யென்றார். (22)

விரிகட லரவுமிழ் விடங்கண் டோலிட
வரியயன் முதலின ரபைய மென்றநாள்
பரிவுட னருந்திய பரமன் பாலமர்
புரிதியே யுலகமும் பூத்த பூவையே. (23)

நந்தி மார்க்கண்ட ஞசி கேதுவை
யந்தகன் பற்றுநா ளயிற்க ணிச்சிகா
லுந்திமற் றவனுயி ருண்டு காத்தரு
ளெந்தைநன் மணமுனக் கியைந்த தென்றனர். (24)

ஆங்கவர் மொழியினி லழலிற் பொங்குபாற்
றேங்கிய புனற்றுளிக் கடங்குஞ் செவ்வியி
னீங்கினண் முனிவுபி னில்லேன் பாரிடம்
பாங்குறப் பறந்தலைப் பிரிவி னெய்தினள். (25)

மதிநதிச் சடிலமும் மத்த கக்கணும்
பொதியருள் விழியும்பொற் புயமு மார்பமு
நுதியழற் கணிச்சியு நூலுந் தோலுந்தா
ளதிர்பரி புரமுங்கண் டார்வ மெய்தினள். (26)

விலக்கறு மயலுளம் வீங்க வோங்கிய
நிலக்கறு மலையினு ணின்று நின்றுநைந்
துலக்கறு மெனப்புய வுலக்கு வட்டினுற்
குலக்கதி ருருக்குநெய்க் குன்ற மொத்தனள். (27)

வம்பர் நிமிர்ந்திரு வடிவுற் றெய்திய
கொம்பர் முகைத்தெனத் குமிழ்த்த கொங்கையு
மம்புறக் கூந்தன்முத் தவிழ்ந்து சிந்தல்போற்
றும்பரு நுதல்வெயர் துளித்த தென்பவே. (28)

நாணிடைக் குனிசிறு புறத்து நங்கைபொற்
பூணிடைக் கருமணிப் பருமம் பூட்டுவ
சேணிடை மருங்குநைந் தூஞ்ச சேரவே
வாணிற வட்டுடை வழியிற் றென்பவே. (29)

நடம்புரி பொருனரோர் கோல நண்ணல்போன்
றிடம்புரி சிலைவய வீரர் வேந்திழை
மடம்புரி யச்சமு மருவி யாடியப்
படம்புரி மேனியும் பசலை மூயதே (30)

ஊட்டரக் கெனவுள முருகித் தன்னுழை
வாட்டரு விழிமினு ரமைச்சர் மன்னர்க்கு
வேட்டசொல் விரித்திடாள் விளர்ப்ப மெய்குழைந்
தோட்டைநெஞ் சரற்றிலள் துறையி லெய்தினள். (31)

ஒருவிய பெருமையு முரனும் வீரமு
மருவிய நாணமு மடனு மச்சமும்
பொருவிலா வரியரண் புணர மோகினிப்
பருவமே யெனநிரைப் பருவ மேயினள். (32)

மலையர சுதவிய மடங்க லூர்ந்துவா
னிலைகெடப் பொருவரு நிசும்ப னசும்பனோ
டலைநிகர் மயிடன் தனிக நீக்கிப்போர்
தொலையரற் காஞ்சிவ தாதி போன்றனள். (33)

நல்வினை கையுறீ நடக்கத் திங்கெனப்
பல்வினை வழிப்பவம் பலித்த பண்பென
வல்வினை விழிக்கொடி மடப்பம் பேதைமை
தொல்வினைப் பயம்பெறத் தொடர்ந்த தென்பவே. (34)

அத்திரு முனிவா ரமைச்சர் கூறியிவ்
வுத்தர மதுசெறி யுத்த ரத்தினின்
மெத்திரு மஞ்சன முழுத்த மேதக
மித்திர கணிதர்கள் விதிர்த்துக் கூறினூர். (35)

ஊறிய காதல ருரகப் பூணினைக்
கூறிய முழுத்தத்திற் கூடற் றம்மென
வாறிய முனிவர்க ளருளிச் சேனையோ
டீறிலா நெறியொரீஇ மதுரை யெய்தினாள். (36)

காட்சிச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,434.

நகரணிச் சருக்கம்

அன்னையை வணங்கியீ தறைந்து நாளையா
முன்னியா முழுத்தமென் றுரைத்து மொய்குழற்
றன்னில முரசஞ்சாற் றென்னச் சாற்றினார்
கன்னிநா டனைத்துமெய்க் கம்ப முற்றதே. (1)

கதிரவ னிளங்கதிர்க் கற்றை நான்றென
முதிரொளி பவளக்கா ணூட்டி முத்தமே
பொதுளிய விதானமீ வயிரப் பூட்டுறீப்
பதிநிறைத் ததுவிண்ணோர் பருவ மொத்ததே. (2)

துணையுறக் கொய்தலைத் தொடலை நாலவிட்
டணைசவ ரங்கள்சேர்த் தருவி நித்திலப்
பிணையல்வெற் புச்சியிற் பிறங்க லொப்பவே
யிணையிலாக் கம்பர்நூற் கணிகொண் டீட்டினார். (3)

மணிக்கலம் பரப்பினர் தரள வான்முளை
யணிப்பொலன் கொடியனூர் முத்தத் தட்டினர்
கணிக்கருங் கதலியுங் கனையும் பூகமுந்
தணிப்பரு மணியினிற் சமைத்து நாட்டினார். (4)

விளங்கிய பளிக்குவே திகைய வெண்ணிலாத்
துளங்கிய வூருடைச் சூலுப் பாளைகள்
மணங்கமழ் பொற்குட மலிய வேந்தின
ரிளங்கதிர் நிலாவிரித் தெழுந்த தொப்பவே. (5)

வயிரமிட் டிழைத்தபொன் மறுகி லாடலில்
பயினுறு மடநலார் பரிந்த பூண்மணி
குயிலினார் கற்பக வல்லி கொண்டுகொண்
டயறெறுந் துராலென வகலச் சீத்தனர். (6)

பிறைதனில் வெடித்தவெண் ணிலவில் பேதையர்
துறைதுறை யிமசலத் துகள டக்கினார்
முறைமுறை நிதியமு முத்து மாலையுந்
திறைதிறை யெனமணி வாயிற் சேர்த்தினார். (7)

திரண்டசெம் பொற்கனி வாழைத் தீங்கனி
முரண்டரு முட்பலா மூப்பு டைக்கனி
யரண்டரும் புரங்கனி யாதி வெற்பெனப்
புரண்டமா லையர்தெருப் புதைய வீட்டினார். (8)

தொடலையும் பிணையலுஞ் சூட்டி லம்பமும்
படலையும் பிரசமும் பளித முஞ்செறி
விடலையர் நானமு விரையுஞ் சுண்ணமுங்
கடலையுந் திரையையுங் கடுப்ப வீட்டினார். (9)

சுண்ணமுங் குங்குமத் தோகையும் தூபமும்
வெண்ணவெண் கலவையு மலரும் பூண்களுந்
தண்ணமர் முத்தமுங் குழையுந் தார்களும்
வண்ணமும் நிரைநிரை மறுகி னுய்த்தனர். (10)

செம்பழுக் காயும்வெள் ளிலையுந் தேனகளுந்
தும்பிலக் காரமுந் தோரை யாதியுங்
கொம்பிடை கரிகளிற் கொண்டு கொண்டுசென்
றிம்பருக் கமுதெ னக்கலத் தேற்றினூர். (11)

பொன்னிற முதிரையம் புழுக்கல் பாற்சுவை
யன்னநெய் யடிசிலக் கார மூரல்க
ளுன்னுவா லரியுணத் ததியி னோதனன்
றுன்னுபன் மலையெனத் துறுமக் கூப்பினூர். (12)

சங்குடை யளறுமீத் தழுக்கு வாரணம்
பொங்கிய பன்மையிற் புரவி யூட்டுடைக்
கொங்குடைக் கற்பகந் தொகளக் கொண்டுகொண்
டெங்குள திசைகளு நெருங்க வீட்டினூர். (13)

தாருவுஞ் சுரபியு மணியுஞ் சங்கமும்
வேரியங் கமலமும் விண்ணிற் கொண்டவை
நாரித னேவலான் கரத்தி யாண்டையு
மாரமு தணிநிதி யடைய வுய்த்ததே. (14)

நகரணிச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,448.

திருக்கலியாணச் சருக்கம்.

எந்தைநா லிருதின மூகமோ ரெட்டதாய்ச்
சிந்தையி னீக்கிவான் றேவர் மாதவர்
நந்துடை மாலயன் புறத்து நண்ணவே
கொந்துலா மலர்புனை கோல மெய்தினன். (1)

சூட்டிய கங்கைநீர் துளும்பி கையனை
யாட்டிய திளம்பிறைச் சடைக்கட் டார்ந்தது
நீட்டிய மதன்விழ வெரித்த நெற்றிக்கண்
மூட்டிய சிந்துரத் திலத மானதே. (2)

தூங்கிய வாளராச் சுருதிக் காதிடை
வீங்கிய குண்டலக் குழையின் மேவின
வோங்கிய வுயிர்க்குயி ருதவு தாழ்விடந்
தாங்கிய கருமணிச் சரனி கர்த்ததே. (3)

மைபத்தலை யொளிமணிப் பத்தி மார்பினில்
மெத்திய பலவணி போல்வி ளங்கின
கைத்தலப் பணிமணிக் கரத்த ணிந்தபூ
ணைத்தன வுய்த்தரா வலையத் தோங்கிற்றே. (4)

ஆனையி னுரியணி யகல மண்ணிய
பானிற நீறுவெண் பட்டினை மெல்லிய
மேனிறை புலியத ணீவி மேவுதல்
வானிறத் தெழுதுபொன் வடக மொத்ததே. (5)

ஆயிர வாய்க்கருங் கச்சை பீதசைந்
தேயதூன் மடகைசே ரெல்லை காட்டிய
தூயபன் மணிக்கடி சூத்தி ரங்கதிர்
நாயிறு மலைவ ணண்ணல் போன்றதே. (6)

கருநிற முயலகன் கான்ற சோரியோ
டுருமுரற் புயற்செக்க ரொப்ப வூன்றிய
பொருவிரு நூபுரப் பொலிவு நான்மறை
தெருமறீர்ந் தனைத்தெனச் செவ்வி மிக்கவே. (7)

இத்துணைப் பூணணிந் தெந்தை யிந்துநேர்
பத்திசேர் திண்ணடி நோக்கிப் பாங்குறை
வித்தக வியன்வரத் தரங்க மேவியே
மொய்த்த வரசொலியொடும் வாயின் முன்னினன். (8)

(வேறு)

அதிரு நான்மறை யோதி யருந்தவர்
வெதிரது கோல்பொர மெய்ம்மயிர் போர்த்திட
வுதிருங் கட்புனன் மார்பகத் தொழுகவே
பொதிரு நெஞ்சிற் புலம்பற மொய்த்தனர். (9)

புள்ளு லாவயி ராபதம் பொற்படி
தள்ளு ராவிரி யானொரு தத்திடை
வெள்ளி மால்வரை மேற்றுகிர் வெற்பென
வள்ள லன்பின் மலர்ச்சரண் சாத்தினான். (10)

வேத வோசையு மேத்தவ ராசியு
மோது பேரி முழக்கமும் வானவர்
போது தூய்ப்பணி பொம்மலுங் கங்கைநீ
ரோத முற்றன போற்கிளர்ந் தோங்கவே. (11)

மாயனா னின்முக னிந்திரன் வானவர்
ஆய பூதர் புறஞ்செல வாலவாய்
வாயி லெய்தினன் மாநகர் சேனையுந்
தூய மாதரு மெங்குந் துவன்றினர். (12)

தெற்றி யிஞ்சிபொற் கோபுரஞ் செய்வரை
தெற்றி மாளிகைப் பந்தர் நெருங்கினார்
சுற்றி வெற்பு மதித்தநீர்த் தோன்றிமீ
துற்ற கற்பக வல்லியை யொத்தனர். (13)

நீறு மெய்யு நிலாவுஞ் சடிலமு
மூறு கண்ணு முடையும் நடைவிடை
யேறு தாளும் வடிவுங்கண் டிவ்வுறு
மாறு ருது மனத்து ளழுத்தினார். (14)

சுற்று மேகலை தாட்டுணை சூழ்ந்திட
வற்ற முத்த முரைக்க வாற்றல்போற்
பொற்சி லம்பு புலம்பவெம் மானைவந்
துற்று வாடக னுகுத்தனர் முத்தமே. (15)

ஊட்ட ரத்தகஞ் சேரொரு தாளினர்
மூட்டு கச்சை முலைத்துணை நீங்குற
வேட்ட மானை வென்றவர் காட்டுமென்
றேட்டை யீர்க்கநாண் டள்ளவந் தெய்தினார். (16)

விண்டு சென்றத நெஞ்சை விழித்திலை
ரண்டர் நாய னடித்துணை யன்பினாற்
கண்ட கண்பறி யாரக வார்துலாங்
கொண்ட மாதின் றொடர்ந்தனர் கோதையார். (17)

விண்டுங் கண்ணு முயிர்ப்பு மனத்துடன்
றண்ட லிர்ப்பதஞ் சாறுமுன் சார்த்துமா
லுண்டலுண் டென்ன வுரைப்பதிற் சேரவே
கொண்ட மைஞ்ஞைக் குழாத்திற் குழீயினார். (18)

ஒருத்தி யயத்தலை மேற்கொண் டொருத்தியை
யிருத்து பாகம் வரிதுற வெய்துநீர்
பொருத்து மாதை வலம்புறம் போற்றிய
வருத்தி மாதர்க் கருளுமென் றேதுவாய். (19)

மன்ன னேநக ரநகர் மங்கையோ
முன்னே மாதவ முற்றினர் யாமெலா
மின்ன நீர்ந்தமை சேணல விம்மையிற்
றுன்னு தீமை யெனுத்தொகுத் தோதுவார். (20)

(வேறு)

இத்துணை மாதர் போற்ற
வெந்தையின் கார்கா லத்தின்
றொத்துரு புயலை நீங்கிச்
சூரிய னிழிந்த தென்னத்
தத்துவெள் ளுடையிற் றங்கிச்
சததள மலர்க்கை தாங்க
நித்தில விமான மாடத்
தரியணை யுச்சி நேர்ந்தான். (21)

அண்டங்க ளீன்ற கன்னி
யன்னத்தைக் கொணர்தி ரென்ன
வெண்டவர் முனிவர் கூற
வாணிபொன் முதலா மேழை
யொண்டொடி யார்கள் சூழ்ந்தார்
வயிர்மிட றுத்தி நெற்றிக்
கொண்டபா சிழையின் மல்கு
மன்னையைக் கோலஞ் செய்தார். (22)

தகரமட் டித்து நானங்
கோதிச்சந் தந்தி மிர்ந்து
முகரவா னதிநீ ராடிச்
சூழிகை யுச்சி முச்சி
பகர்தலைக் கோலஞ் சேர்த்துக்
கலாமதி யுலாவும் பக்க
நிகரிலா நிலவுற் றென்ன
நீவிவெண் பட்டு டுத்தார். (23)

பளிக்குநாற் கோண வேதி
நாப்பண்சேர் பாவை தன்னைத்
துளித்திடு நறவ மாலை
நித்திலத் தொடைவெய் யோன்போய்க்
குளித்தபாற் கடலிற் பூட்டிக்
குங்கும மெழுதி மாதர்
களிப்புடன் றொய்யில் வெய்யில்
வரையெனக் கவினிற் சேர்த்தார். (24)

அஞ்சனம் விழியிற் றீட்டி
யரத்தகந் தாளி லூட்டிக்
கஞ்சமா துடனே வாணிக்
கண்ணென்ற துணர்த்தி நின்றார்
பஞ்சரக் கிளியி னாளும்
பல்லவ மலரி சைத்த
வஞ்சியி லாடி நோக்கி
யலகிலான் மருங்கில் வந்தாள். (25)

எருத்தொசி செக்க ரெம்மா
யிறையவன் மேனி பார்க்க
பொருட்புர பொதுநோக் கத்திற்
பூவையை யிறைவ னோக்கி
கருத்தினுட் கலவி துய்த்தார்
காரனங் கமலங் கானத்
தருத்தியோ டுறைந்த தென்ன
வுறைந்தன ளமலன் பாங்கில். (26)

வந்தனள் கமலை பாலாற்
கழியினள் மலர்த்தா ளண்ணல்
சுந்தரக் கருணை தந்தான்
சுடருடைச் சிவந்த வங்கி
முந்துவெண் பொரிகள் வீச
மும்முறை சுழன்று தூம
நந்தமுத் தலைமி னேழு
நாவினெய் கவர்ந்த தன்றே. (27)

மறைவழி தருப்பை யின்பாற்
கோளொடு நாள்வ யக்கி
யிறையவன் மலர்க்கை மீதி
லெம்மனைச் செங்கை வைத்து
நிறையயன் சடங்கின் மாய
னீர்தரச் சுடரி ரண்டு
முறையுவர் வுதிப்ப தென்ன
முகத்தொடு முகத்தைப் பார்த்தார். (28)

தொல்லற நெறிவ ழாம
    லன்னையுந் தேரன் ருனு
மில்லறம் புவிந டத்த
    வடவுடு நாடி யேய்ந்த
நல்லறத் தங்கி சூழ்ந்தும்
    பிறைமண நாறு கஞ்சம்
புல்லற முறையி லம்மி
    பொருத்திப்பல் லாண்டு பூத்தார். (29)

மத்தக விளிய னெந்தை
    யன்புடன் மணுளக் கோலத்
தத்தக வழுதிப் போலச்
    சடைமிசை முடிய ணிந்து
கொத்தல ரிதழி நீக்கி
    நிம்பமே சூடி யேற்று
வித்தகத் துவச நீக்கிக்
    கயற்கொடி விழிப்பிற் கொண்டான். (30)

மங்கையோ டரசி ளுட்சி
    மலிந்துவான் சுதைமை போள்ற
துங்கமண் டபத்து மாய
    னயன்றவர் சுரரா நோக்கிப்
பொங்கிய வுரையி னந்தி
    வேத்திரப் படையி னீக்கிச்
செங்கணு ளுதி தேயர்
    சிறப்பெலாம் விரித்துச் சொல்வான். (31)

இரணிய னிரணி யக்கட்
    டகுவனே யாதி யாறு
முரன்றவி லங்கை சிந்தப்
    பாரத முடியச் செற்ரு
னரனுடைப் பிரக லாத
    ளுதிபா கவத ரன்பன்
சரணடைந் தவர்க்கு நல்குந்
    தாமரைக் கண்ண னென்ருன். (32)

ஆதிய ரன்ருெழுந் தொன்னூ
    லாதிபன் கலைமான் கேள்வன்
வேதிய னுலகின் ருதை
    விதிகமண் டலனுநாண் பெற்ருே
ஞேதிம நெடுமா லுந்தி
    யுறைபவன் நறைம லர்ப்பொற்
போதின ளுன்முக னெண்கண்
    புராதன னிவனே யென்ருன். (33

விருத்திரன் முசிசம் பன்வல
　　ஞவிற்ற பாக ஞதி
செருத்தகு வரையே வென்று
　　செம்பொ னுலகினை யாட்சிசெய்வோ
னற்குல நிதியச் செல்வ
　　னச்சிக் கொடி .. .. வெள்ளானை
யுருத்துபொற் குலிச நாத
　　னும்பர்கோ னிவனே யென்றான். (34)

அறமற முணர்ந்து சைய
　　மனியிடத் தடிக ளேவற்
றிறனொடு பதினு லான
　　சாலி......ளந் தெருட்டிச் சேர்ந்து
நிறைவினை யிரண்டுங் காட்டுந்
　　தென்றிசைக் கிழவ னீதி
முறையுணர் தரும தேவ
　　னிவனென்பர் முக்க ணெந்தாய். (35)

கடற்கிறை பச்சி மத்தின்
　　காவலன் பாசக் கைய
னடற்புரி வருண வைய்ய
　　னளகையர் தலைவன் மானத்
திடத்தின னதிக்கோன் வென்றி
　　யியக்கனுத் தாதிக் காள்வோன்
றடப்புயக் குபேரன் வென்றித்
　　தனதன்மற் றிவன்பே ராமே. (36)

முத்தலை யெழுநா நீட்டி
　　யவிநுகர் முதல்வன் வெம்போர்
வித்தக நிருதி வாயு
　　விளங்குமீ சான நான்கு
மத்திகைக் காவ லாள
　　ரெனவுரைத் தொருபா னின்ற
கொத்துடைக் கடவு ளோர்தங்
　　குழாத்தையு மன்பிற் சொன்னான். (37)

அரியமர் விவைச்சு வான்பூ
　　டரப்பகன் சபிதாத் தாதா
வுரியமித் திரனே தொட்டாச்
　　சக்கிர னுக்கி ரப்பேர்
வரியிசை வருணன் மற்ற
　　விதாவிதா வாங்கதிர் களிறு
ரிரிவுறுச் சேனை யோடு
　　மேவின ரெந்தா யென்றான். (38)

துரோணனே வசுச்சு ரோடன்
றுருவன்பே ராங்கி யற்கன்
யிராணனே விபாவ சுப்பே
ரெண்மராம் வசுக்கள் பெம்மா
யராதனத் துருவ மேற்ற
பூணரா வினராய்க் கூவம்
பராவுருத் திராம ருத்துப்
பெயரிவர் பரம வென்றூர். (39)

ஆடகன் வீர னுக்கி
ரன்பகன் கூர்மாண் டப்பேர்
நாடுருத் திரிகா லங்கி
சாத்தன்பி ஞகு ஞடற்
கோடுறுப் பிருங்கி ரும்பேர்
தான்முதல் குலவு பூதர்
வீடருங் குறள்வே தாளக்
குழுவிவர் விமல வென்றூர். (40)

கங்கைகா ளிந்தி வாணி
காவிரி பொருநை வையை
துங்கசந் திரைநீல வேணி
நருமதை சோனை பாலி
யெங்குள நதிகள் வேலை
புட்கர முதலா யற்றந்
தங்கிய தீர்த்த மற்றச்
சரசிவை யைய வென்றுன். (41)

மேருமந் தரமு விந்தம்
மேமம் பரியாத் திரமே
காருலா வியதூ யத்த
முதையங் கோகனன் பாலஞ்
சேருமெட் டேமு வெற்புத்
திகிரிவெற் புருவிற் போற்றச்
சாருமீ தென்று நந்திப்
பிரம்பெடுத் துரையே தந்தான். (42)

அனந்தனே யாதி நாகம்
வெண்கிரி யாதி நாக
நினைந்தவண் டத்தி னுள்ளோர்
நிருதர்தா னவரி யக்கர்
துனைந்திடு மவுணர் விஞ்ஞை
யாளர்மற் றுள்ளோர் சூழ்ந்தார்
முனைந்தவே லன்பத் தாறு
தேயத்தர் முதல்வ னென்றுன். (43)

இத்துணை நந்தி காட்ட
விறைவனு மவர வர்க்கு
மத்தவெங் களிறு வாசி
பூணிதி யாடை மற்று
முய்த்தனன் விடையு நல்கித்
தடாதகை யுடனு முற்றுன்
வித்தகத் தாண்ட வஞ்செய்
நடத்திறன் விரித்துச் சொல்வாம். (44)

திருக்கலியாணச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம், 1492.

உக்கிர காண்டம்.

தாண்டவச் சருக்கம்.

எழுத்தோ ரைம்பத்தா ரிதழ்க்கம லங்களோ ரெழுத்தின்
விழித்த விந்து நாதஞ் சத்திசிவ மொரீஇ வெளியிற்
பழுத்த சோதியந் துவாதசாந் தப்பதி சொக்கனதே
சுழித்த தாட்டுணைப் புனைபவக் கடற்றெறப் பணிவாம். (1)

மனுகு லத்தவர் மதிகுல வரசர் மாநகர்
முனிவ ராதியோர் பொன்மரைத் தடாகநீர் மூழ்கி
யினிதி னைங்கரன் மீன்வழி யெம்பிராற் போற்றிக்
கனியு ளத்தமு தருந்துவான் சாலையிற் கலந்தார். (2)

நெட்டி லைக்கத லிக்களிப் புலிப்பத னிகமம்
பட்ட சொற்பதஞ் சலிமுனி பரம்பர வடியா
ருட்டெ ழுந்தநண் புடையப் பொதுவினி லுனது
நட்டங் கண்டபின் னருந்துவ மமுதென நவின்றார். (3)

பதஞ்ச லிப்பிரான் வியாக்கிரன் பணித்தவித் தலத்திற்
பதம்ப ரித்ததொன் றிலையிதிற் றிருநடம் புரிவோம்
விதம்ப ரித்ததாண் டவத்தினைப் போற்றினும் விரதத்
திதம்பெ றச்சுவை யருந்துதி ரெனப்பர னிசைத்தான். (4)

அண்ட மேயக வாணுதி தாணுறுப் பதலாதி
மண்டலத் தோடே மூலகரை வயின்மற்ற வுறுப்பாய்க்
கொண்ட நாயகன் மூலவ தாரமாய்க் குலவும்
புண்ட ரீகவா ரூர்செறி தியாகனாய்ப் பொலிவேம். (5)

சுவாதிட் டானநா ளத்தக கமலத்தோ டதனிற்
றவாதுற் றாரெழுத்தாய்ச் சம்புநா தப்பெயர் தரிப்போ
மவாவிற் பத்தெழுத் தவ்விதம் மரைமணி பூரத்
துவாவைச் செற்றசோ ணாசலத் திறையென வுறைவோம். (6)

ஆறி ரண்டெழுத் துவ்விதழ் நாகத னளினங்
கூறு மம்பலத் தானந்தக் குனிப்பினைக் குளிப்போ
மேறு மெண்ணிரண் டிதழிலவ் வெழுத்துயர் விசுற்றி
யூறில் காளத்தி யீசனென் றன்புட னுறைவோம். (7)

இரண்டெ ழுத்திதழ் ரிண்டிலாய்க் கிணையெனுங் காசி
முரண்ட ரித்தருள் விச்சுவ நாதனென் றமர்வே
முரண்ட ரும்பிர மரந்தக் கயிலைமொய் வரையிற்
புரந்தசீ கண்டப் பரமனாய்ப் பொலிவினி லுறைவேம். (8)

அவ்வி யத்துவாத சாந்தமா மாலவா யிதனிற்
செவ்வி பெற்றசுந் தரனெனச் சொல்வவீ டருள்வம்
பவ்வ முற்றபார் தோன்றுமுன் றோன்றுமிப் பதிக்கே
யெவ்வ மற்றநந் தாண்டவம் போற்றுதி ரென்றான். (9)

தலத்தி லித்தல மிலிங்கத் திலியாஞ் சகளத்தர்
நலத்தி னிட்கள சகளத்தின் நடத்தினை நோக்கன்
றிலத்த மற்றருள் வெள்ளிமன் றிரத்தின் வீடத்
துலைப்பொ ரிக்கனூ முயலகன் முதுகிற்று ளுறைத்தான். (10)

உறைத்த தாமரைப் பதமு மீதோங் கனுக்கிரக
நிறைத்த வாமத்தா ளும்பரி புரத்தொலி நிரப்ப
நிறைத்த டக்கம லக்கண்ணன் கமலனுன் முகத்தன்
மறைக்கு லம்பணிந் தேத்தநாட் டியத்தினை வலித்தான். (11)

கடைநி மிர்ந்துமெய்க் கதிரெனத் தடந்திசை யளக்கப்
புடையி ளம்பிறை வட்டமே பொருந்தவா ளரவந்
தொடையெ னும்படி நீண்டுநா நீட்டமெய்ச் சுடர்விட்
டடையுங் கொன்றைபொற் றகடுவிண் டகனிலஞ் சொரிய ; (12)

அங்கை யீரைந்திற் படையுஞ்செந் தழலுமிழ்ந் தருக்கன்
றுங்க மெய்வலந் திரிவபோற் சுடரொளி பொலிய
மங்கை மெய்யொளி வாய்ப்புறத் தழலொளி வயங்கிப்
பொங்கு வாடையுந் தழலுடன் புகையெனப் பொற்ப; (13)

செக்க ரந்திமின் னிகருநூற் றெரிவைக்கு வாம
பக்க மிவ்வள வமையுமென் னுதல்பொற் பாக்கத்
தொக்க நீறுமேற் கங்கைநீர் துளிம்பிச்சுற் றிறைப்பத்
தொக்க மிக்கவா ளப்பொருப் பளவொளி யுலவ; (14)

புனைந்த வெங்கரித் தோலிடைப் புலியுரி யிறுக
வனைந்த வாளராக் கச்சையி னுதரவந் தனமே
துணைந்த மாதுட னேருட லாகவே தொடர்பி
னிணைந்து கட்டிய பாசத்தி லொளிமிக நெருங்க. (15)

துடிசு ரஞ்சுடர் வாள்மழு வாதஞ்சூழ் வலமும்
நெடிய சத்திவிற் றோர்கதை யபயக்கை நெறியு
முடியு முக்கணுந் தோளுமுந் நூலும்புண் டரமும்
படியி லானந்தத் தாண்டவ ணடித்தனன் பரமன். (16)

முருகு லாம்பொழில் வயந்தனுன் முகைமதுத் துளித்தாங்
குருகி நெக்குநெக் குலைநெழு கெனக்கணீ ருறைப்பப்
பெருகு மன்பினிற் பதஞ்சலி பெட்புடன் போற்றிப்
பருகு வன்னநோக் கிடைவிடான் பணிந்திவை பகர்ந்தான். (17)

(வேறு)

பொற்று மரைக்கரை பொருந்திய விமானத்
துற்றுய் பொருந்தரி யுளத்திடை யமர்ந்தாய்
மற்றுய் சுடர்க்கதிர்மெ யாயுறை மணுள
நற்றுள் தாண்டவ நடத்துணைகள் போற்றி. (18)

பம்புநதி திங்கள்படி யுரு சடில மூன்றுய்
வெம்புசுடர் முக்கண வர்க்குழைய வேரி
யம்புய னுணர்ந்துமறை யாற்பணிய வெய்து
நம்பநிறை தாண்டவ நடத்துணைகள் போற்றி. (19)

பாதியரி பாதியுமை யானபர மாநற்
போதவிழை நாண்மதி பொருந்துநகை யாள
வாதியறு பத்துநான் காடலம கேச
நாதமுறை தாண்டவ நடத்துணைகள் போற்றி. (20)

மிக்கவிழி யைப்பத மலர்க்கணியு மிக்கோன்
சக்கர மதைப்பெற வளித்தவ தடந்தேர்
தொக்கநில மேருவி லெனத்தொடர் புரத்தை
நக்கழல்செய் தாண்டவ நடத்துணைகள் போற்றி. (21)

வெற்றிபெறு வீரனிலவ் வேள்வியொடு தக்க
ஞெற்றைமுடி சிந்தியய ஞேடமர ரேஞேர்
பற்றெடு ருகிப்பத மலர்த்துணைகள் போதுற்று
நற்றுரம தாண்டவ நடத்துணைகள் போற்றி. (22)

பாலனை முனிந்துகதை பாசமொடு சேருங்
காலனை முனிந்த கருணகர விடஞ்சேர்
நீலமணி கண்டசிவ நித்திய மகேச
ஞாலமணி தாண்டவ நடத்துணைகள் போற்றி. (23)

இன்பநிறை போகமதி யின்பமொழி யும்பே
ரன்புநிறை ஞானவரு ளாகியரி வேதன்
றுன்பமொழிப் பரவுநீ மைகளோ டைக்கு
நன்பரம தாண்டவ நடத்துணைகள் போற்றி. (24)

(வேறு)

என்று சுந்தரன் ருண்டவப் பதமல ரிசைத்துத்
துன்ற ருங்கணீர் சொரியவாய் வெரியுளந் துடியா
நின்று போற்றலு நிமலனின் றுதியிணைப் படிக்கோ
மன்ற நம்பதஞ் சேர்வர்மெய் வரங்கொளென் றுரைத்தான். (25)

பணிந்தெ ழுந்துபொற் பொதுவினிற் சிவகங்கை படிந்துள்
ளணிந்த தாண்டவம் பணிகல னடைந்தனன் யாரும்
பணிந்து சேர்ந்துனைப் பராவிப்பொற் ருமரைப் படிந்து
துணிந்து போற்றவித் தாண்டவங் காட்டெனச் சொன்னுன். (26)

பிரமன் மாலு ருத்திரன் மகேசன் விழிப்பிரியாப்
பரசதா சிவரவி மதுநா தம்பரா சத்தி
வரமி கும்பர சிவனவ தத்துவ மரீஇய
தரமிகுந் துவாத சாந்தமித் தாண்டவ மேநாம். (27)

அஞ்செ ழுத்துடை பிரணவத் தகாரமே வகாரம்
விஞ்சு நன்மகா ரத்துடன் றெழிலைந்தும் விளங்கத்
தஞ்ச மாகுநந் துவாதசாந் தத்திற்சார் நடங்கண்
டுஞ்சு புத்தியும் முத்தியும் பெறுவரென் றுரைத்தான். (28)

வைக லாடக மரைப்படிந் தெமையுமை மயிலைத்
துய்ய நண்பிற் ருழ்ந்தா யிரத்தெட்டுஞ் சோதி
செய்ய வைஞ்செழுத் தோதின்மெய்ப் பவத்தினைத் தீர்க்கும்
வெய்ய பாதக மஞ்சுநீங் குறுமென விரித்தான். (29)

தனுவி னுதிரை யாதியோ ராண்டிற்ருழ்ந் தெழுந்தெம்
மினிய தாண்டவம் போற்றவேண் டியதெலா மெய்தும்.
புனித ரேயெனப் பொன்மரைப் படிந்தரற் போற்றி
முனிவ ரியாவரு மருள்வழி யமுதுண்பான் முயன்ருர். (30)

அனைய நாயக ருண்டவ நடத்தினை யார்வப்
புனித மார்பதஞ் சலிதொழு துயர்ந்தசீர் புகன்ரும்
வனையு நாண்மலர்க் கூந்தலந் தடாதகை மணத்தின்
புனையுஞ் சொன்றியங் கிரிகுற ளுண்டது புகல்வாம். (31)

தாண்டவச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,523.

குண்டோதரச் சருக்கம்.

பரிவி ருலறு சுவைபடா தயின்றின ரியாரு
முரிய தாம்புலம் பளிதம்போற் றுயர்சிறப் பெய்த
வரிய நாயகி வாலுவ ரன்னையிவ் வன்னஞ்
சொரியு நெய்தயிர்ச் சுவைகளார்ந் துய்ப்பரென் றிசைத்தார். (1)

இசைத்த வாலுவக் குழாத்தினை யெம்மனை நோக்கி
யசைத்த கால்பொரு வல்லியிற் சென்றிடு மடிசில்
விசைத்த பார்வையி ருடிமீண் டநந்தையின் விமல
னிசைப்ப தம்பணிந் தேக்கழுத் துடனிவை நவில்வாள். (2)

அடிக ளெய்துதற் கமைத்தவை யனைவரு மயின்று
நெடிய வெற்பெனக் கிடந்ததென் றுரைத்திட நிமலன்
கொடியை நோக்கினன் முறுவலித் தெம்முடைக் குறள்கள்
படியில் வந்தில ரியாருண்ப ரெனமொழி பகர்ந்தே ; (3)

ஆட லங்கிகுண் டோதரன் கட்டுரை யமைக்க
வாடி யெய்த்தனன் பசியின் மணிப்பரி வுடனீ
கோடு சேர்பரி நடத்திய விசைக்குடை தாங்கி
யோடி வந்தி தனேவென வணங்கிநின் றுரைத்தான். (4)

அருந்து றும்பசி யகுரிற்குண் டோதர னறையப்
பெருந்த டங்குற ளுணர்ந்தில்ம் பேதைநங் கவிகை
பொருந்து மிச்சிறார்க் கருளெனப் பூவையே வலிஞ
லருந்த வட்டலிற் குடவயிற் றவன்புகுந் தனனே. (5)

கிளர்வ யிற்றினன் சானுவிற் கீழ்ப்படு மெய்யன்
வளையெயிற் றினன்றீ விழியவோர் புகைநிகர் வடிவ
னுளைவு றும்புரு வத்தின னண்டங்க ளுடைத்த
பிளைவதே னெனவன் னதகிரி பிறழ்வயி னிட்டான். (6)

முதிரை யோதனந் ததிசுவை முதலவேள் வியினி
லதிரு நெய்விடக் கிளர்ந்தன வுண்டுசற் றடங்காப்
பொதிரு ளத்தின னடாதபல் வளங்களும் பொசித்துக்
கதிர வன்கடைக் காலத்தெய் தெனப்பசிக் கனன்றான். (7)

கண்ட மங்கையாந் தடாதகைப் பதிக்கெதிர் கவிழ்ந்த
முண்ட கத்திரு முகத்துட னுறையமுக் கண்ணன்
மண்டு பூதங்கள் கொணர்ந்தில மதிக்குடை பிடித்தா
னுண்ட னன்கொலென் றுரைத்திட மங்கையீ துரைப்பாள். (8)

வட்ட வெண்குடை தாங்குமிக் குளவலி கண்டால்
விட்ட வெள்ளெயிற் றின்றிவண் மேவிற்சங் கரனென்
றிட்ட பேருமக் கென்னையென் றிறைவிகூ றுதலு
மட்ட வெம்பசி யென்றுகுண் டோதர னழுதான். (9)

வடவை யங்கனற் பூளையின் வயினிடு மனைத்து
மடவி யங்கன லடவிசெற் றெனவே யழித்த
துடைய நீபுரந் தருளென வோதனக் குளிநான்
இடமு றைந்தரு ளன்னபூ ரணியிற்றந் தீய்ந்தான். (10)

ஈய்ந்த வன்னத்தி குழிகளுன் கையுமுன்னீ ரிரண்டாய்
வாய்ந்த நெட்டரை மலைமுளை வெண்முகின் மதியி
னுய்ந்த னகையாற் சேதுவை யடைத்தநாண் மலைபோற்
றேய்ந்த னன்வயிற் றீட்டுநீர் வேட்கையின் றொடர்ந்தான். (11)

நீரின் வேட்கையின் மடுக்குளந் தடாகநீ ரோடை
சேரி லஞ்சிகூ வற்கய முதலவுந் தேக்கி
வாரி வார்நதி யுண்டென நீர்நசை மலிய
நாரி பாகனுஞ் சடைப்படர் நதியினை நினைந்தான். (12)

மேரு வெற்பினுங் கண்டமுன் றுருவிவெற் பரையன்
சீரு லாமக ளாயினன் பகீரதன் செயலா
லோரு ஞாலத்த வினைதெறக் காசிவந் துருத்தே
னேரு டைப்பிரா னுலவாய்ப் படர்வனென் றிசைத்தான். (13)

கங்கை யாயிர முகமுமோர் முகங்கொடு கடுப்பிற்
பொங்கு தென்றிசை வினையெலாம் போக்கவுங் காசித்
தங்கி யெம்பிரான் வடிவுதந் தருளினன் வீட்டை
யெங்க ளுயகன் வையையாய்த் தருவனென் றெழுந்தான். (14)

அயனை யாதியா படிந்துதம் பவமறு வருதே
முயரு ஞானமு நல்கமீ துயர்கதி யளிக்க
நயன நாடுமுன் வினைவிட நண்ணியா டினற்கே
யியல நற்பொரு ளியான்றர வினிதுட னளிப்பாய். (15)

என்ன நம்பனுங் காசியிற் பலித்தினு மின்பந்
துன்னி நின்பெயர் கேட்பக் காணற கத்தோய்
நன்னர் நாற்கதி சகலதீத் தங்கணீ நகரந்
துன்னு வாயெனக் களிப்பினிற் றொடர்ந்துவந் ததுவே. (16)

கரும ணித்திர ளருனிழற் கலப்பக்கா ளிந்தி
குரும ணித்திரள் பொற்குவை குவித்துச்சா ரகியாய்ப்
பெரும ணித்தர ளத்துவெண் கங்கையாய்ப் பின்னி
வருபு னற்றிரி வேணிசங் கத்துவந் ததுவே. (17)

(வேறு)

இருகரை நிரைமாச் செம்ம லெங்கணு
மருவுதா ரகைகளாய் வானம் போன்றது
பொருவிலைந் திணைதுறைப் பொருந்திப் பொற்பினைத்
தருதலாற் பொருளுடைத் தமிழு மொக்குமே. (18)

(வேறு)

இரைத்து வெண்டிரை யெதிர்ந்து மால்வரை யெடுத்துத்
திரைக்க ரித்தரித் தர்தரு தருக்கரை தேக்கி
யுரைத்தி டற்கொணு வலியுடன் வையையுற் றதனு
ணிரைத்த மாநகர் வெருமனத் தன்புடை நிறைந்தார். (19)

பூத காரணப் புராந்தக புராத னபராய்
வேத காரண வேதமா லுணர்ந்திட ஓவிமல்
நாத காரண வமையமென் றடைதலு நக்க
ஞேத காரண வயின்குற ளினையுழை விடுத்தான். (20)

அண்டம் விண்டிட நகைத்திரு காமனை யாக
விண்ட நீர்புறஞ் செலாநடு வாயினை விரித்துக்
கண்ட பேர்வயி றெற்றியங் கைத்துணை நெரிக்க
வுண்ட தார்கங்கை யெம்பிரான் சடையிலுற் றெனவே. (21)

பரந்த வெண்முகில் முழையிடைப் படுவபோற் பலவாய்ப்
புரிந்த வெண்ணில சமையமெம் பிரான்பதம் புகல்போல்
விரைந்த வையைநீ ரொருதுளி புறம்படா விரிவாய்க்
கரந்த தந்தியக் கடற்படு நதியெனக் காட்ட. (22)

எழுந்து சன்னுவி னுதரத்தீப் பட்டென வெழுநாக்
கொழுந்து லாவயன் மகத்திடைப் பட்டெனக் கொடிதாய்
விழுந்தி டுஞ்சக ரற்றலிப் பட்டென விரைவி
லழுந்து காவிரி வலஞ்சுழிப் பட்டென வடங்க. (23)

உண்டு தேக்கறிந் துமையொரு பாகவென் னுடையா
யண்டர் நாதவென் றடிக்குண் டோதர னனைய
புண்ட ரீகக்கை தலைமிசை வைத்தனன் புறத்திற்
கண்ட மங்கைநாண் பெறக்கண நாதனுந் துதித்தான். (24)

(வேறு)

பொருந்தவே தாந்தனே பொருப்பு மின்புது
விருந்தெனக் கழிப்பிருள் விமல நாதனே
வருங்கலா நீதனே மறலி காலவென்
னரும்பசி யொழித்தனை யால வாயனே. (25)

நாரண நான்முக னயந்து காணுணுக்
காரண வென்ப சிக்கனல் விக்கருட்
பாரண நல்கிய பரம யேற்றரு
மாரண நாதனே யால வாயனே. (26)

கங்கையுந் தங்குளங் கனற்கட் பாந்தளும்
பொங்கிய சடிலபோர் மதனைப் போர்செய்த
வெங்கணு யகமீன்விழி வீசிய தாமல
ரங்கையார் பாகனே யால வாயனே. (27)

பூண்டிபாம் பொழிமணிக் கதிரிற் பொற்புற
நீண்டகண் டத்தொளி யிருள் நீணிலாக்
காண்டகு நீற்றொளி காட்ட வேயெனை
யாண்டநா யகனிறை யால வாயனே. (28)

வால சூரிய ரொருகோடி வாய்த்தபொன்
மேலுயர் விமானத்துள் மேவி யாரையு
ஞாலமேற் காத்தரு ணல்கு மெந்தையே
யாலமுண் டருளிய வால வாயனே. (29)

பொங்குபா ராதியைம் பூதம் பொற்சுடர்
தங்கிய மானிலெட் டுருவந் தாங்கியே
பங்கயன் மாலுண ராமற் பாங்குறை
யங்கியோ னிமிர்ந்தெழு மால வாயனே. (30)

தருவொரு முதல்பல கிளைத மைத்தபோற்
பொருவிலைந் தொழிலையும் நடாத்து போதனே
வெருவுமென் பசிபிணி வெருவ நல்கிய
யருவமே யுருவமே யால வாயனே. (31)

செய்யனே வொருபுறங் கரிய னேசெழுந்
துய்யனே சோமசுந் தரமெய்த் தோன்றலே
மெய்யனே யரியயன் விபுதர் போற்றிய
யையனே சொக்கனே யால வாயனே. (32)

(வேறு)

எனப்ப ணிந்தகுண் டோதரன் றனையெம் மானோக்கி
வனப்பு லாவலக் கரம்வன் றலைமிசை வைத்துப்
புனப்பக் கடவெனப் பொருபுலி போற்பொரு கணங்க
டனக்கு நீவலி யாயென வையனுஞ் சாற்றி. (33)

உன்பொ ருட்டெழுந் தெய்தலா லுன்பெயர் வையை
யன்பு வேக வதிப்புனல் விளம்பிகை யாற்றி
லின்ப மூர்சிவ கங்கையே யியற்சிவ ஞான
நம்பு றன்பொரு கிரிதமா லைப்பெயர் நவில்வ. (34)

என்று சுந்தரன் வேய்த்தலைக் கவிகையேந் தினன்பாற்
றன்றி ருக்கணூர்ப் புரிந்துனை நிலைத்தபோ தாகந்
துன்று வெம்பசி நீங்குமிங் குறையெனச் சொல்லிக்
குன்ற ளித்த வடவகையு மச்சமுங் கொடுத்தான். (35)

மணத்தை மத்தநெல் லடிசிலன் னக்குழி வையைக்
கணத்த ருந்திக் குண்டோதர னளித்தமை யிசைத்தாங்
குணத்த டாதகை யன்னைதன் கொழுனனோ டாட
விணர்த்து வெண்டிரை யணைந்தெழு கடல்வர விசைப்பாம். (36)

குண்டோதரச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,559.

எழுகடல் சருக்கம்

சடையெனக் கிரீடமே தயங்கக் கொன்றையந்
தொடையென வேப்பலர் சூழச் சூழ்கொடி
விடையெனக் கயற்கொடி விளங்க வேதத்தி
னடையெனப் பராவா னரசி னண்ணினன். (1)

விருப்புட னுதிநாள் விடஞ்சு வைத்தபின்
திருப்பணச் சுந்தரந் தரித்த வெள்ளியம்
பெருப்பத னிம்மையி னன்மை பாலிக்குந்
தருப்பெய ரிலிங்கத்தைப் பூசை செய்தனன். (2)

சூத்திரப் பொறிபிலேந் தொழின டாத்தியே
யேத்தரும் பரம்பர னுன வெம்பிரான்
பார்த்திப னெனப்புவி பரித்து வைகினுற்
சேர்த்தநீ தியிலிறை திறம்பு மேகொலாம். (3)

செருக்குடை வாண்மனர் திரைக ளீட்டப்பா
ரொருகுடை நீழலி லோம்பிக் காத்தனன்
முருகுடை மலர்க்குழல் வாழ்க்கை முற்றின
னருகுடை யில்லற மவனி செய்யவே. (4)

மாரியும் வேலையுங் காலும் வன்னியு
மாரிய மறைவழி யமைந்த வைம்புல
னுரியற் கற்பென நிலேத்த ஞானமும்
வேரிய மணங்களும் விழாவு மிக்கவே. (5)

அந்தணர் மகத்துட னுர ணப்பொரு
ணந்துரு தியாண்டையும் நலமிக் கோங்கின
கந்தர மாரியைக் கான்ற வம்பர
முந்துமஞ் செழுத்துடன் னறவ மோங்கிற்றே. (6)

(வேறு)

அன்னே யைத்தரு மன்னேயு மாதரும்
பின்னு நூற்கதை கேட்டுப் பரிவுடன்
றுன்னு நாட்கரு திக்குழாந் தொக்கென
மன்னு மாதவக் கோதமன் வந்தனன். (7)

வந்து சுந்தர போற்றி மடந்தையைத்
தந்த காஞ்சனே பாலவர்த் தாழ்ந்தெழீச்
சிந்தை கூர்ந்தனே நல்கனுஞ் சேர்ந்தன
னிந்த வாய்மை யிருடி யிசைத்தனன். (8)

உலக மீன்றவ ளுன்னுழைச் சேர்தலா
லலகி னூலறிந் தாயதி லொன்றுள
விலகு வாக்கு மனமெய் யிடத்தினுற்
குலவு நல்லற மோதுவன் கோதையே. (9)

சத்தி யப்பொறை சாரத் தியானமே
மெய்த்த மஞ்சமி யாவின் மிகுந்தயை
யுய்த்த வோசை யவாவிட லோங்கறஞ்
சுத்த வஞ்செழுத் தும்மனஞ் சூழ்ச்சியே. (10)

உருத்தி ரஞ்சகப் பஞ்சக மோதிய
திருச்சு வன்ன மெய்ப்பஞ்ச சாந்திப்
பொருத்து குத்துபஞ்சப் பிரம்பிடித் தந்திரம்
பொருத்தம் பார்துதி வாக்கிற் பொலிந்தவே. (11)

அரன ருச்சனை யாலயஞ் சூழ்தனீர்
விரைமலர்த் தால சீத்தல் விளக்கிடன்
மருவு கோத்திரந் தீர்த்த மதித்தலே
விரவு காயத் தருளில் விளங்குமே. (12)

இன்ன தாற்பல தீர்த்தத்து மெய்தியே
முன்னி யாட வெழுந்து சிவன்வடி
வன்ன தேந்தி யரவ மடைக்கலாற்
றுன்னு வேலையிற் றேய்ந்திட வேண்டுமே. (13)

ஆய தாற்சென் றுவர்க்கட லாடியுன்
னைய கன்றனைக் கூடியந் நாட்டினு
நேய மோடுறை வாயென நேரிழை
போய்வி னுன்மூலை யாக கொ[வொ]த்தனள். (14)

துன்று நான்மறைக் கோதமன் சொல்லினுன்
மன்ற லார்சிறப் பீந்துளை மாழ்கியே
வெற்றி வேல்விழிக் காஞ்சனை மேவுநா
ளொன்று வர்க்கட லாடுநா ளுற்றதே. (15)

அன்னை தன்னை யழித்திடு மன்னைதன்
மின்னை நோக்கி யுவர்க்கடன் மேவுவர்
வென்னை வேட்டதென லன்னைகொ லன்னை
பொன்னை யேர்சடை யாற்குப் புகன்றனள். (16)

ஆயு வர்க்கட லாட வடிகளே
நேய மிக்கன ளென்ன நிரஞ்சனன்
றூய வேட்கட லுந்தரு தூமென்று
னேய வன்னைபா லெம்மனை யோதினுள். (17)

மாறன் றேவி யாடற்கெழு வாரியுஞ்
சேறி யாதி திருவரு ளென்னவே
யீறிப் பூத மிசைக்க வெழுகடல்
கூற ருந்தமிழ்க் கூடலைச் சூழ்ந்தவே. (18)

எழுந்து தாழ்ந்திரைத் துத்தினர் யாண்டுஞ்சேர்
கொழுந்து லாங்கடற் றேண்டக் குழாங்கணீர்
பொழிந்து நீறு பொலிந்திடப் பாரிடை
விழுந்தெ ழுந்து துதித்தனன் மேவின. (19)

சுழித்த வேணி துறந்தலை வாய்முறு
டழித்த நகைத்தி வலைபோன்ற மேருவைப்
பழித்த மெய்யிறை பாற்செலு மாறுபோல்
விழித்த வேலை யரவத்து மெய்த்ததே. (20)

வீசு தெண்டிரை வெண்டர ளத்தொகை
மூசு செந்துகிர்க் கரளின முயக்குத
லோசை வெத்த தொலியெரி வேள்விவாய்த்
தேசி லாம்பொரி சிந்துவ போன்றவே. (21)

அருளிப் பாடென வாசைகன மீக்கொளத்
தெருளுற் றெய்து சிறப்பினர் மானவே
சுருளிற் றெண்டிரைத் தேக்கநீ தொடர்ந்துள
மிருளிற் கண்டனை போற்றவந் தேய்ந்ததே. (22)

(வேறு)

நெய்தலுங் குவளையு நிறையு மாதர்கள்
பொய்தலும் புலவுநீர் போதில்வெண் டாழையு
மைதவழ் நாகமே லிடம்பும் வான்றெடு
மொய்தவழ் புளினமு முழக்கு மிக்கதே. (23)

விண்டொடு கழாயரிற் கூம்பின் மேவியே
தண்டெழு மயினிரை நடிக்குந் தன்மையுங்
கொண்டல் வந்திரங்கி யாதலைக் கூட்டமும்
வண்டல மரும்பெரு வனப்பு முற்றதே. (24)

ஓதமோ ரெழுமவந் தொலைக்க வானவர்
மாதவர் மரீஇயினர் மறுவு றும்பல
தீதிரு பத்திறை யத்தைச் சிந்தவே
யாதிதந் தன்னென வால வாயினே. (25)

இற்றதா யத்தவத் தோரிறைத் தெய்தலும்
பொற்ற மாளிகை புக்குத் தடாதகை
மற்ற வன்னையை வாருதி யேழும்வந்
துற்ற தென்ன வுவகைமீக் கொண்டனள். (26)

மறைஞர் காஞ்சன மாலையை மாதுகே
ளிறைவ கேள்வரி லாப்புன லாதென
முறைகொ லென்ன முதல்வியோ டோதிஞ
ளுறையு நாயகற் கன்னை யுரைத்தனள். (27)

மணந்த கேள்வரி லாமனை யாட்டிய
ரணைந்து வர்க்கட லாட்டய ரார்களீ
துணர்ந்து வேதிய ரோதின ரென்னவே
யிணைந்த வேல்விழி யெம்மனை யோதினள். (28)

தூரம வார்க்குழல் போற்றனுஞ் சுந்தரன்
மாம ணுமலை யத்துவ சத்தனைக்
காமர் நோக்கிற் கரைத்தனு மானத்தி
ஞன விந்திரன் நாட்டிலும் நண்ணினன். (29)

வந்து சுந்தரன் ருண்மரு விப்பணிந்
தெந்தை நின்னரு ளித்துணைத் தோவெனச்
சிந்தை கூர்ந்து ரோமஞ் சிலிர்த்துத்தரு
தந்தை யுச்சிமோந் தில்லக நண்ணினள். (30)

நண்ணிக் காஞ்சன மாலை நலங்கனிக்
கண்ணிற் பார்வை யென்க்களி மேவியே
பண்ணிற் பாடலி யாழ்பரந் தாலென
வெண்ணுற் ருடு முவர்க்கட லின்புற்றன். (31)

ஏற்ற பொற்கலஞ் சுண்ண மிழைத்தசாந்
தாற்றி மங்கலந் தாங்கி யருந்தவ
நோற்ற கொங்கை நுடங்கிடைக் கொல்களி
சாற்று மோதையிற் றையலர் சூழ்ந்தனர். (32)

கடைய டைத்த கமலத் தரிவயிற்
புடைய டைத்த சிவிகையிற் பூவையுந்
தொடைய டைத்தவெற் புச்சியிற் றேன்றனும்
படைய டைத்த புரத்திற் பரவினர். (33)

விரித்த கம்பல முத்து விதானமும்
பரித்த கஞ்சிகைப் பட்டியல் கண்டமுந்
தெரித்த சாந்தும்பூ ணைப்பொற் செம்புங்கொண்
டுரைத்த சேடியர் சூழவுற் ருர்களே. (34)

யானை தேர்பரி யத்திரி வையமுந்
தேனை யேயுமிழ் மாலைச் சிவிகையு
மானை யேவிழி மாதரு மாநகர்
மீனை யேகடற் போல விரைந்தனர். (35)

கொம்பு வங்கியங் கோடு கறங்கின
பம்பை பேரி பணைமுரு டார்த்தன
செம்பு நேர்சிறு கட்பெருங் கைம்மலைத்
தும்பி ருப்பரி யொட்டகஞ் சூழ்ந்தவே. (36)

வல்லி விட்டு மணிப்பரு மத்தொகை
யெல்லி விட்ட கதிரெறித் தென்னவே
புல்லி விட்ட புகர்மலை யுச்சிமீச்
சொல்லி விட்டசொற் சுந்தரன் றேன்றினன். (37)

தோன்று நாளிமை யத்தலர் தொட்டலி
னேன்ற பொற்பின் சிவிகை யிடத்தினின்
மூன்று லோகந் தருகன்னி மொய்த்தய
லான்ற சின்னத் தொடையன்பி னேகினள். (38)

ஏந்து பன்மணிப் பேழை யவனத்தர்
காந்து பல்லணிப் பெட்டகங் காழ்மதஞ்
சாந்து லாவணிச் செம்புத்தண் டாமங்கள்
பூந்த ளிப்பிட கைத்திரள் போந்தவே. (39)

இறைத்த மாசனத் தோடுமெம் மான்றிரை
திறைத்த மீவலைக் கரையிடைச் சேர்ந்தனர்
நிரைத்த விஞ்சி நெடுந்திரை கோட்டியே
வரத்துரு வந்தர வயின்வயி னெய்தினர். (40)

வாய்ந்த தேவி மலயத் துவசனும்
வேந்த னோடு முவர்க்கடல் மெய்ப்படிந்
தாய்ந்த சுந்தரன் றளருச் சித்தருட்
சேர்ந்து தேவியொடு மெய்திச் சென்றனன். (41)

ஓதை மல்கு முவர்க்கட லாடிய
மாதர் யாவரும் மைந்தரு மெம்பிரான்
பாத மாமலர்ப் பாடிப்பின் சேரவே
யாதி யுஞ்சகு ணத்தர செய்தினன். (42)

அண்ட கோடி யொளியி லமைத்தளித்
துண்டு மிழ்ந்தரு ளொண்சுட ரில்லறங்
கொண்டு தென்னவன் கோதையோ டாற்றிய
மண்ட லத்தவப் பேறு மலிந்தவே. (43)

அன்னை தந்தை விமானத்தி னுதிசேர்ந்
துன்ன ரும்பிர மாண்டத்தி னுச்சியி
லென்னை வீட்டினி லெய்தத் தடாதகைப்
பொன்னை யேர்சடைப் போதனைப் போற்றினள். (44)

இந்து சேகரா யெனது நாயகர்
சுந்த ரத்தனே தோன்று சச்சிதா
னந்த ரூபனே ஞால நாதனே
யந்த மில்லவா வால வாயனே. (45)

தக்கன் வேள்வியந் தழலொ ழித்துவா
நெக்க வென்னுளத் துறையு நின்மலா
சொக்க லிங்கமே தோலு டைப்பரா
வக்க ணிந்தவா வால வாயனே. (46)

வேத வல்லிமீ தேறு கொம்பெனும்
பாத பங்கயப் பரம னேதொழில்
பேத மூன்றுமாய்ப் பிறவு மாய்ச்செறி
யாதி நாதனே யால வாயனே. (47)

ஏன மன்னமா யிருவர் தேடவே
மேனி மிர்ந்தெழற் படவ மிக்குளாய்
ஞான நாயகா நாக பூடணு
வானை தாங்குசீ ரால வாயனே. (48)

புரந்த ரன்பதம் போற்றி மானமே
நிறைந்த நண்புடன் சாத்த நேயமாய்ப்
பரந்த தீமை யறவும் தொடைத்தவ
னரந்தை நீக்கிய வால வாயனே (49)

பரவு நான்மறைப் பயன தாக்கியே
யிரவி போனுளத் திருளொ ருக்கியே
விரவு நண்பர்பால் வீடு நல்குவாய்
யரவ மேந்துதா ளால வாயனே. (50)

நாத மாகிவிஞ் ஞான ரூபமாய்
வேத மாகிநுட் பொருள்வி ளக்கமாய்ப்
பூத மாயுயிர்ப் பொலிவ தாயென
தாத ரத்துளா ரால வாயனே. (51)

சீவன் முத்தமா நகரினிற் செறிந்தி
யாவ ருக்கும்வீ டெளிதி னிற்றருந்
தேவ தேவனே தேவர் யாருமுன்
னுவ ணத்தரு வால வாயனே. (52)

(வேறு)

என்றுசொற் றடாதகை யேற்ற வெம்பிரான்
வென்றிவேந் தற்குவீ டளித்த தோதினங்
குன்றெறி குமரனோர் குமர னாகியே
மன்றலார் புவியிடை வருதல் கூறுவாம். (53)

எழுகடல் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,612.

உக்கிர னவதாரச் சருக்கம்.

இன்னணங் கடவுளு மெண்குணத் தெய்துநாட்
பொன்னணங் குறுமெழிற் பூவை தன்வயின்
மின்னணங் கவிரொளி வேலன் போலவே
கொன்னணங் கியநிறக் குமரன் றோன்றினான். (1)

ஆதிரை சோமநா ளரசன் கேந்திசுர
மீதுற வுலகெலாம் விளங்க வேற்குக
ணோதறு முகமுமோர் முகத்தோ டுற்றனன்
தீதின்முக் குணத்துடன் செல்வன் மேவினான். (2)

அதிர்ந்தது தேவதுந் துமியம் மாதவர்
முதிர்ந்தநான் மறையொலி முழங்கிற் றியாண்டையு
மெதிர்ந்தன வியலிசை நீடங்க ளெங்கணு
முதிர்ந்தன தருமல ரொளிவிண் முற்றுமே. (3)

மகமறை தழைத்தன வான்சு ரந்தன
புகலரு கயருடைப் பொழிற ளிர்த்தன
பகலொளி சிறந்தன பலரண் டெழுந்தன
நகிலமென் கொம்பனார் நலமி குந்ததே. (4)

வானவ ரரம்பையர் மாத வத்தர்யாழ்க்
கானவ ரியாணர்புட் காலரி யாவரு
மேனிறைந் தனமெம் மான மிக்க
தானங்க டளித்தன் றுலகந் தழைக்கவே. (5)

சுந்தர னருளினாற் சுரரோ டிந்திர
னந்தணர் மாதவ ரரச ரீண்டினார்
மைந்தனை விசயனே வந்து ளானென
நந்துரு துவசையி னவிறல் மேயினார். (6)

உதித்தசேய் கொக்கொடி யென்று மெண்புவி
மதித்தவுக் கிரனென் றும்பெயர் வழங்கினார்
கதித்தவா லிலைச்செறி கண்ண னேரெனத்
துதித்திடுங் கதிர்மணித் தொட்டி லேற்றினார். (7)

உளங்கனி கருணையி னாசன்பொன் மேனி
விளங்கிய செவித்துளை நாற்றி வேதநூல்
விளங்கெழு வியனு மகத்திற் பாலன
மிளங்குருந் தருந்தவே யினிதி னூட்டினார். (8)

கண்டவெற் புச்சியங் கங்கை மிக்கதிர்
கொண்டகை கையால் கடுப்பக் கொங்கைப்பா
லுண்டன னிளம்பிறை வளர்வ தொக்கவே
மண்டலம் புரக்குவான் வடிவின் மேயினான். (9)

வெண்பளிங் கிடைநிழன் மேவிக் கையளாய்க்
கண்பனித் திரங்குரு தருதுங் கைதருந்
தண்புக லிராவிரற் பிடித்துந் தாய்க்கோள்
விண்படர்ந் தெழுந்தென வெழுந்து மேயினான். (10)

தளர்நடை பகைபெறத் தளர்ந டைக்கொடு
வளர்சுடர் நடந்தென நடந்து மாறிலா
வுளர்விர லியாழினி னுரைத்து மங்கையர்
விளர்தரு சிற்றிலைக் காலின் வீட்டினான். 11)

புழுதிமெய் யணைந்திடப் புவிய டங்கலந்
தெழுகறிக் கன்றுகொண் டிருந்த காற்புறத்
தொழுதெரிக் கடவுளி னுலாயும் நூல்வள
முழுதுண ரிறையனான் முற் றுங் கற்றனன். (12)

சிகையுமுந் நூலுமே துவள நான்மறைத்
தொகைபல வாகமந் தோன்று வில்லுடை
விகமம்வா ளியிற்படை நிலையுஞ் சுந்தரப்
பகவனி னுணர்ந்தெழு பருவ மேவினான். (13)

பண்ணமைத் திரதமே தூண்டி டாய்பரி
விண்ணமைத் தெழவெடுத் துயர்ந் த வேழமே
வெண்ணமைத் திடாவிரீஇ யேறி யுக்கிரன்
கண்ணமை மணியெனக் கவினிற் சேருநாள். (14)

(வேறு)

சிரநுத லிரண்டு மகன்றுரை நாபி
    வயினோ ரறுமூன்று மேற்சிறந்து
பரவுநாக் கோசம் பின்கணைக் கரனான்
    கடங்கிப் பலவரை மயிர்நகந்தோல்
விரவுமிவ் வஞ்சு மெய்மையாய்க் கைதோ
    ளனுத்துண்ட மார்பஞ்சும் விஞ்சிப்
பொருவயி னெற்றிக் களமுக முறும்பா
    லாறுமோங் குதன்மிகப் பொலிவே. (15)

அகங்கைகா லங்கட் கடைநக நாவுண்
    ணாயித ழேழாத் தம்போன்
றிகழ்ந்திடா வெண்ணான் குறும்புமிக் கனவாற்
    புவிப்பர மிவன்புயத் தடங்கு
மகம்பல செல்வ னீதியும் பொறையு
    மருவவ னுக்கிர வழுதி
நகங்கொடு புரமூன் றட்டநா யகவென்
    றுடகன் பணிந்துரை நவின்றான். (16)

தாருகர் பொருத சரவணக் குமரன்
மூவிரு முகந்தனி முகமாய்
மேருவைக் குனித்த சோமசுந் தரன்பாற்
றடாதகை மூருவிழி விழும்பா
லாருமெய்க் களிப்பில் வளர்ந்தவை புகன்றுங்
கல்லியா ணத்துறை யரச
னீருபைங் குமரி யானகாந் திமதி
மணத்துப ணிறைந்தது மொழிவாம். (17)

உக்கிர னவதாரச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,629.

அறம்படுச் சருக்கம்

திகிரி வெற்பினிற் றிகிரி சுற்றுறத்
துகிரி குடைப்பொருஞ் சுடர்து ளும்புறப்
பகர மைச்சர்சொற் பரிவி னிற்கொளா
வகிர பிறைச்சடைப் பரமன் வைகினன். (1)

தொகையு டைப்பிஞ்சு சுடர்க்குச் சுடரச்
சிகைபி ணைத்தெழத் தெரிவை தன்னொடும்
பகலெ ழிற்றரும் பருமணிச் சுடரத்
தகையொ ளிப்பெருஞ் சபையின் மேயினன். (2)

அணிப ழுத்த பொற்றகட் கட்டுறக்
கணிப ழுத்தழற் கதிர்வி டுத்தசெம்
மணிப ழுத்தின் வயிர மிட்டுறீஇப்
பணிப ழுத்திடப் பலகை தைத்துமே. (3)

மரக தச்சுடர் கனல மட்டியாப்
பொரவ ரிந்திரட் புதைய வூன்றிவா
னிரவி வெற்பினிற் படுவ தெய்ப்பவே
பரவ ணைப்புறம் பரமன் வைகினன். (4)

உலக ளித்தமா தொருபு றத்துறத்
திலக னுற்றதான் மணிதெ ரிந்ததூண்
பலம மணிப்பரண் சுடர்ப ரித்தபா
ரிலகு யிர்க்குயி ரெனவி சைக்கவே. (5)

வணங்கு செம்பொன்மால் வரையி னனெனப்
புணர்த்த வங்கதப் புயம தோங்கவே
குணக்கெ ழுங்கதிர்க் குலமி ரண்டுசூழ்ந்
திணக்கு பொற்குல முடியி லங்கவே. (6)

இருஞ்சு டர்கணர் நிழலெ னப்புறத்
துருகு பெற்ற குண்டல முலாவரப்
பருகு வப்பினிற் பகீர திப்புனற்
பெருக லொப்பெனத் தோள்பி றங்கவே. (7)

தொட்ட வாளியஞ் சுடரெ னப்பறித்
திட்ட பைம்மணிக் கடக மின்னவே
விட்ட செம்மணிச் சுடரின் வெய்யிலார்
நெட்டி ருஞ்சுடர்த் திசைநி லாவவே. (8)

சூதர் மாகதத் தோகைய ரேத்தவே
மாதர் நாடகத் தொழில்வ ளர்க்கவே
யோதை வீணையங் கோலு றுத்தவே
யேதிர் கஞ்சுகத் திரளி சைக்கவே. (9)

வயவ மைச்சர் சொன் மருவி சந்திஞேர்
வியவ ரேற்றர சேர்முதிய வேந்தர்க
ளியலி சைத்தபோ பழைய ரோணிய
புயநி ழற்பொரப் புடையி னிற்கவே. (10)

வெள்ளி மால்வரைச் சிகர மேவியே
கள்ளு லாங்குழற் கண்ணி பாலுறும்
வள்ளல் கூடனுற் றந்த வண்ணமே
யெள்ளு றுவெனைப் புறமி ருந்தனன். (11)

நாலு தோளுடை நந்தி யெத்திறங்
கோலி னிற்புறங் குறும யிற்பெற
வாலு நீரவிழ்த் தவிழ்ந்து போற்றியே
மாலு மைந்தனும் பிறரும் வைகவே. (12)

ஆறு சேர்கடைப் பத்தி னைந்தெனக்
கூறு தேயமன் னவர்கு ழாங்கொடு
நீறு கண்டிவா னிலவ வுச்சிமீ
தேறு கையர நின்றெதிர் வழுத்தவே. (13)

விரிந்த செங்கதிர்க் கெதிர்வி ரித்தெனச்
சொரிந்த தாமரைக் கோதையின் மன்னவர்
புரிந்த நண்பினீர் விழிகள் பூப்பவே
வரிந்த நண்பிஞன் மலர்க்கண் சாத்தியே. (14)

மைந்த னில்லறம் பரவ மன்றைவாழ்
செந்த மிழ்த்தொடைத் திருவி ருந்தவன்
புந்தி நேர்மதிப் புலவர் மன்னரை
யெந்தை நட்பிஞ லினிது நோக்கிஞன். (15)

(வேறு)

நிலத்தினிற் புலவர் தம்மை
நிருபரைப் பொருவில் வானப்
புலத்தினிற் புலவர் தம்மைப்
புரந்தர ஞதி யோரை
வலத்தினி நோக்கி யெந்தை
யுக்கிர வழுதி மாறு
விலத்தறம் படுப்ப வோர்மா
தியாண்டைய னொன்று கேட்டான். (16)

அவ்வழி யமரர் யாரு
மாடகன் முகத்தை நோக்கச்
செவ்வழித் தென்றல் வாயத்
தேனிறைத் தெழுந்த தெய்ப்பக்
கைவழி யுச்சி யேற
வெதிர்நின்று கனிவாய் போற்றி
மெய்வழி யுரோமம் போர்ப்ப
வின்னணம் விரித்துச் சொல்வான். (17)

அருந்தநாள் வேலை மேற்றிக்
களந்தன வொழுக்க நீட்டந்
திருந்திய விரேவைத் தென்பாற்
றிசைமுக னெடுநா ளுள்ளம்
வருந்தியாங் கமைத்த நாடு
விதர்மன் ருட்டின் மாட்சி
பொருந்து கல்லியாண மென்றோர்
பெரும்பதி பொலிவ தாமே. (18)

இரும்பினை வேகதி யாங்கு
வன்கர மள்ள ரெங்கும்
பெரும்பக ரேர்ந்த கோட்டுச்
செந்நெலிற் பொருப்பு னீட்டி
விரும்புபால் நீக்கிப் பாண்டில்
வையங்கண் மிடைந்த வீசித்
தரும்பதி யமைச்சாய் வேந்த
னிகரெனத் தழைக்கு மவ்வூர். (19)

வரியுடை வாளை சூர்கார்
வயிற்கலந் தணிநீ ரோடு
விரிசுரு நளினக் கானில்
வீழ்தனு மிடங்கர் வாயிற்
சொரியொளி யெயிறி றற்ற
வடங்குரு தொரீச்சு ருங்கைத்
தெரிபுனல் விழிபோய் மீளா
நிலன்கடி கிடங்கு சேரும் (20)

காலொடு புயனுங் கட்டுங்
கதலியிற் றடைப்பட் டெய்து
வேலொடு குந்த மொள்வாள்
விரிதல யாணங் கம்பர்
நூலொடு வழுவர் மேவார்
நுணித்திடா விளங்கி வேந்தன்
கோலொடு தொடர்ந்து றுப்பிற்
குறையடர்ந் துஸறயு மாதோ. (21)

நிலைபெறு நூலொ ழுக்கி
 னீண்டுவான் பூண்டு வீசு
மூலவெயி லவியா நான
 வெய்யணு வோகார் விளக்கப்
பலபணி யாவ ணங்கள்
 பாவல ருவமைக் கெட்டா
தில்வலர் பூத்த தென்ன
 வயின்வயி னியங்கு மன்றே. (22)

மழைமருண் மாட வுச்சி
 யரமிய மருங்கு நின்று
கழைமரு ணெடுந்தோள் வீச
 கந்துகம் புடைக்கச் சுரியா
திழைமருண் மயக்கி ஞெல்கிப்
 பற்றனு மெழுந்து வானத்
துழைமருண் மதியம் பந்தென்
 றவாவுறு தொழில தோங்கும். (23)

மறையவ ராதி நாலு
 வருணமு மரபிற் றூங்கி
நிறைபல மறுகு மன்ன
 ரமைச்சர் நீடேரு பாடற்
றுறையரங் கத்து மின்னார்
 சும்மையு நிறைந்து வானோ
ரிறையவன் வெஃகிச் சேரு
 மெழிலினைப் பரவு மன்றே. (24)

(வேறு.)

இனைய மாநகர் வேந்த ரியாரினு
முனையி ரும்படை வெற்றியை முற்றினன்
மனுவின் சீர்த்தி மரபினன் மாதவம்
புனையுஞ் சோமப் பெயருடைப் புங்கவன். (25)

மாத வத்தில ளித்தருண் மங்கையாங்
காதன் முற்றுசீர்க் காந்தி மதியினைப்
போது டைத்திருப் போல வளர்த்த
.... வெரிசிறப் பேணும் வேலையில். (26)

கனவிற் சோமனுங் காவலன் றன்னிடை
நனவிற் கண்டபொன் சென்று நீணங்கையை
மணவ ணித்தலை வைத்தென வுக்கிரற்
கனக நல்கென வாணி யறைந்ததே. (27)

காலை மெல்லனைக் காவலர் சற்றுமெய்
நூலின் மந்திரத் தோர்கணுப் பத்திஞ
லாலைவாய்ச் செல்வ மென்றணி மானமேற்
சீலற மாதுட னித்தலைச் சேர்ந்தனன். (28)

தானை யாறுடன் சார்ந்தன னென்னலு
மீனை யார்விழி பாகனுள் வெஃகிவேய்
மான ஞெளொடு தம்மென வந்தவர்
ஞான நாத னருளை நவிற்றினர். (29)

ஆதி தேவன் கண்டித னும்பரஞ்
சோதி சச்சிதா னந்தத் தொடைக்குழல்
பாதி யான பராபரன் வேந்தென
மாதி னேடுற வந்தடி போற்றினன். (30)

அருந்த வத்துமா லார ஞதியா
திருந்து பொன்முடி கோத்தமும் பூறுதாட்
பெருந்த கைப்பிரான் றுள்விழி நீர்பெய்யத்
தருஞ்சு டர்ப்பொன் னம்மணி சாத்தினன். (31)

படைத்தளிர்ப் பொரபெற் றகருப் பாவையிற்
கடைக்க ணித்துச் சிறப்புக் கவினணித்
துடைத்த வத்தின் னேரிட முற்றபின்
விடைக்கொ டிப்பிரான் யார்க்கும் விடைதந்தான். (32)

(வேறு.)

உக்கிர வழுதி மண்மேன் முடங்க
லரசர்பால் விடுத்திட வுற்றார்
மைக்கடல் புரையச் சக்கர வரையை
வளைகட லெனப்புறம் வளைந்தார்
மிக்க மேருவினிற் சார்தலும் புயனு
முடுவும்போல் விதித்தனர் பந்தர்
தக்கபொன் ஞடை யணியரி பலங்கண்டு
திரைநெய் யறுசுவை தந்தார். (33)

மணிமுடி கண்டி குண்டலம் வாகு
வலையத்தோ டரசர்க டிரண்டா
ரணிவளை யிலம்பசும் பொன்னி ஞடை
பலவொடு மரிவையர் சிறந்தார்
கணிவலர் நடனர் காயகர் கழாயர்
தடாரியர் பேரியர் கலந்தார்
தணிவிலா முழுத்த மெனமுர சறைந்தா
ராடகன் றறையில்சீ ரறைந்தான். (34)

மானமா மயிரின் குளிர்ந்துநீண் டொழுங்கி
    வார்ந்துகண் கவர்ந்தபூங் குழலு
மேணிமிர் பிறையின் மூவிர னுதலுங்
    கருகுவிற் புருவமும் நானத்
தானவங் குலமூ வரித்திரள் காது
    மதர நித்திலக் கோவை
மானவா லெயிறு மொழுங்குநா சியுஞ்செவ்
    வரிக்கணு மகிழ்நாக் கின்புறுமே. (35)

ஒன்பதிற் றிரட்டி விரற்றட மார்பு
    மீரிரு விரலுறு களமு
மின்பமார் நரம்பின் றித்தசைந் தருளுந்
    தோளுமெல் லிரேகையுங் கையு
நன்பெறக் குழைந்து சேர்ந்துநீண் டிடையில்
    வெளியிலா விரலுறு னடுவின்
மன்படர்த் திரண்டு நிமிர்ந்தொளி வயங்கு
    கொங்கையுந் திறுமலி வுறுமே. (36)

வடதளிர் புரையு முந்திமூ வரியும்
    வலம்படு சுழியுமெற் றியநா
ணிடைபுகுந் தனன்வுரோம முணரா விடையு
    மொப்பிலா நிதம்பமுஞ் சேர
நடமலைக் கரத்திற் பிணரிலா வொளிசேர்
    கவான ரம்புடன் மயிரி
றடமுழந் தாளுங் கூர்மமும் பந்துஞ்
    சுழியுநே ரெழுந்தே சுறுமே. (37)

நெருங்கிய பவளங் கடைந்துவான் மதிய
    நிரைத்தன விரலுஞ்செம் பஞ்சும்
பொருந்துமுள் ளடியுங் கசிந்திமிர் நளின
    மாழிசங் கணிந்தபொற் பதமுந்
திருந்துபா திரிசண் பகமரை நீல
    மருவணமெய்யுஞ் செவ்வியாழ் கோலக்
கருங்குயில் பூவை கிளிமொழி யுருக்கு
    பொன்மேயுங் கான்முளை மிகுமே. (38)

என்றுபொன் னவன்சுந் தரனடி பரவி
    யிசைத்திந்த மங்கைக்கீ தனைத்து
மொன்றிய தென்ன நறைப்புன லாட்டி
    யணங்குருத் தெனப்பணி பூட்டிக்
குன்றிள வெயிலின் வல்லியே கொட்டிக்
    கோதையைக் கவுரிபூ சையினை
மன்றலார் மகத்தை நோக்கிவித் தனையி
    லுக்கிர வழுதி[illegible]ால் வைத்தார். (39)

பாலியு முளையும் விரித்துமுன் னுரிமை
பணிசமர் விருத்தமு நீக்கிக்
கோலயோ டிருந்த குமரனை நோக்கி
யெதிர்விழி கொண்டுவேள் வியைக்கா
ணேலவார் குழலைப் பாணியோ டேந்து
காவல னேர்புரி யிறையை
மூலலிங் கத்தை மீன்விழிக் கொடியைப்
பணிவித்துக் கோயின்முன் னின்றே. (40)

மறைவழி கங்கை யாதிநீ ராடி
மங்கல மெட்டுட னேந்த
நிறைபலாண் டொலிக்க வரியினைப் புறத்து
வானவர் மானமே நெருங்கக்
குறைவிலாக் கிரீடந் தரித்துவே லவன்செண்
டிரைதரக் குமரனுங் கொண்டா
னறைமறை தேவ துந்துமி கலித்த
தண்ணனு மிறைவன்றுள் பணிந்தான். (41)

பணிந்தமைந் தனைக்கை யாலெடுத் துச்சி
மோந்துசே டனிற்புவிப் பார
மணிந்தபொற் புயத்திற் வரித்தியென் றுரைத்துத்
தேவியோ டியாவரு மகிழத்
தணிந்திடா மூல லிங்கத்து ளுறைந்தே
தரணியைப் பரித்தனன் றிவரற்
றுணிந்தவிச் சரிதங் கேட்டவர் பகர்ந்தோ
ருக்கிர நிகரெனத் தொடர்வார். (4.)

கடையிலா ரணியா றயுதலாண் டெந்தை
கயற்கொடி யோங்கவா னீங்கச்
சடையோரீ யிந்தியு மதியுமுள் ளடங்கக்
கிரீடமே தரித்தித மியம்புந்
தொடையுடை நிம்பத் தொங்கலே புனைந்து
சுந்தர பாண்டிய னென்னத்
தடையிலெவ் வுலகும் புறந்தமை யறைந்தா
முக்கிரன் சரிதத்தை விரிப்பாம். (43)

அறம்படுச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1672.

வேல்விடுத்த சருக்கம்.

ஆதியரு ளாளுரிமை யானபுவி யேழுநிறை
யாண்மை யுடனுள
வீதியால் வேதநெறி வேள்விமலிவான் நிரையாகம்
மேயான்றிரு நீறுசைவமே
போதவனு பூதிமிகு நீதிபொலி வானவரு
பூசுரர்கள் வீதியுலகிற்
சாதிடர் போதுநெறி யோடுசெறி வானவரு
டாலம்விளை வான்மலியவே. (1)

வந்துபல மன்னர்திறை தந்துதட மேகமாட
நெடுமுன்றில் நிறையச்
சுந்தர முடித்திரள் சொரிந்த கனகத்தொடு
சுடர்க்குரு மணித்திரடவிழ்ந்
திந்திரவி வலிட்டுமக வானுலகு பொற்பவரு
கஞ்சுகரி சைப்பவிருகட
மந்தவரு ளாற்கதிர் நெறிக்கமல மொக்கவிரு
தாண்மலர் பணிந்துறையவே. (2)

கும்பமுனி சொற்படி வடித்தவயில் வேலா
ரன்பொடு கொணர்ந்தநிதியா
லம்புலியன் வானவரு நாமகளப் பிலவ மைத்த
மறையோர்கள் வறியோர்
வெம்புமிக மிடிநீக்கி மறைமாதவர் களாசியில்
விளங்கிய மேதநெறியா
லும்பர்பணி சுந்தர னருட்பணியி னுற்கிருத
மாலைநதி யுட்பரியவே. (3,

விட்டபரி கீழ்த்திசை யொரீஇமலை வெற்பினயன்
மேவவுயிர் தேவரிறைவன்
கட்டினன் தன்னைபின்னை மன்னர்விடு தூதர்கழல்
கடிதெழுந்து நெடுவில்
வட்டமுற வாங்கிவிடு வெங்கணை துரந்திட
வருங்கணைக ளாலமரராய்ப்
பட்டவனி கத்தரை யுணராது பரிவிட்டு
பண்ணவ னகன்றனரோ. (4)

ஓடிய புரந்தரனு முக்கிய னுடன்சம
    ருடற்றமுடி யாதெனவுளங்
கோடிய படைத்தலைவர் சூழ்வயனு டுகுறுகிப்
    பரவுகூட னகர்வா
ழாடிய பதச்சிவ னளித்தசுதன் வேள்வியை
    யமைத்தன னெனப்பிரமனு
நாடிமுனி வோருட னுரைக்கவவர் கேள்வியுரை
    மன்னனுட னேநவில்வார். (5)

விருத்திரனை வென்றுநமுசிப் பெயரை வட்டுவலனைப்
    பெருவிறற் கெடமுனிந்
துருத்துவஞ் சம்பரனை யாவிபரு கிக்கிரியுறுஞ்
    சிறைதுணித்து வயிரச்
செருத்தலை மிகுந்தவரி யெய்த்தனனிவ் வெள்வியொடழி
    யெனவவர்கள் செய்யுவுணராக்
கருத்தனிறை யைப்பணித லிற்கதி கொலோமக
    மிழைப்பவை யெனக்கழறினன். (6)

சுந்தர னருட்கட றுளைந்துயர் தடாதகை
    வயிற்றினிடை தோன்றியழியாச்
சந்திர குலத்தரசி யற்றவில் வளங்கோ
    னுயர் . . . . . மெனவே
மைந்தனுமவ் வேள்வியினை மாற்றிமுனி வோர்களுட
    னுடகமரைப் புனல்படிந்
தோதையுடன் மீன்விழி தனைப்பரவி யோங்குதன
    தாலயம தெய்தினனரோ. (7)

இந்திரனை வென்றய மகத்தினை நடத்திம
    யுக்கிர னிருப்பவொருநாட்
சிந்திய புரந்தர னிருங்கடலை நாடுகோ
    ளெனச்செல விடுத்தவளவே
யந்திய மெழுந்தென விழுந்திரை யறைந்துல
    கனுங்கவல வானையடையா
விந்தமெழு கின்றதென வேழுலகு மொன்றநிறை
    வென்றியொடு துன்றிவரவே. (8)

சங்குலி னுறங்கர சனைக்கன வினிற்கடி
தெழுப்பியுல கங்கவரவே
பொங்குகடல் சென்றதொளி வேல்விடுதி யென்றுதிரு
நீறதுபுனைந் திறைசெலத்
தங்கிய வமைச்சரொடு கூறியிறை யாலயந்
தண்பொடு சார்ந்துபரவித்
துங்கநிறை யுக்கிரனு மிக்குகுண திக்கடை
கொடாந்தம ரடர்ந்துவரவே. (9)

தெண்டிரை விடும்பரிக டுங்கரி யிடங்கரடு
வேற்கயல்க டோமகரமாய்க்
கொண்டவொலி பேரிகைனை விட்டதுளி மேவலர்
குலப்படை யுலப்பிலவெழுந்
தெண்டிசை யனுங்கவரு கின்றதென மேவலர்
சேனையுட னெய்தியிறைவன்
முண்டக மலர்ப்பத நினைந்திடவோர் சித்தனென
முத்தனொரு பான்மருவினன். (10)

இழைத்தமணி யாடக மணித்திரள் கவித்தவிறு
திக்கன லெனச்சிகைபுகுந்
துழைப்டெரி நெறிச்சுட ரயிற்றிடறு விட்டருளோ
டுற்றபல பூசைபுரியா
மழைத்தடமி ேனக்கவெறி யக்கடல் விலங்கியிரு
தாட்பாடு மட்டமாவே
தழைத்தசடி லப்பரனு ளக்களிதி னைக்கவிரு
சங்கமவை தந்தனனரோ. (11)

உற்றவிரு சங்கமுத விச்சுரநதிக் கரையிலொன்
றருன்று மென்றுதமிழின்
வெற்றியை வளர்த்திடு கெனப்பரனி லிங்கமதின்
மேவவர சன்புலவரோ
டற்றமக லத்தரு பரம்பரவெ னப்பரமனு
லயமதுற் றனிமைசேர்
கொற்றவ ருடன்பரவி வாளரி யணைப்புவி
பரித்தியல்பு கொண்டனனரோ. (12)

வாசவன ரும்பழிவிடுத் தருள்சவுந் தரநின்மா
　　நிலமெலா மினிதுற்ற
தேசுபுரி வெண்குடை யகட்டுயிர் களிப்பொடு
　　தெவிட்டபதிக் காசர்மேற்
பூசலிடை நீங்கிநிதி யந்திரை தரப்புலவர்
　　வேள்வியவி போற்றபினவில்
வாசின்மறை யோங்கநிறை நீதிபொரறை விச்சையிசை
　　யன்பினோடு மல்கியவரோ. (13)

(வேறு)

வேலை வேலை விடுத்திசை யுக்ர
ஞாலை வாய்ப்பிராற் போற்ற லறைந்தனங்
கோல வாசவன் போரிற் குலமுடி
தால வேயதப் பொருசெயல் சாற்றுவாம். (14)

வேல்விடுத்த சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1686.

வளைவிடுத்த சருக்கம்.

பனிபொரு தாம ரைக்கண்
பனிபெறப் பனிசேர் வெற்பை
நனிபொரு குவனென் றெண்ணி
ஞாயறோர் திகரி தூக்கி
முனிபொடு வடபாற் செல்ல
வூறுசெங் கதிரி ஞாலந்
துனிபடச் செல்வி துட்க
வேனலுந் தொடர்ந்த மாதோ. (1)

புறவு கூவிளி விளிக்க
வண்டினம் பொருந்தி யாண்டு
நறவு மிளமல்லி கைச்சங்
கூதநா தச்சிள் வீடு
முறையிய மிரட்டக் கான
முருக்கலர் கழலைகாற் சுற்றி
நிறையவே யயனி யேந்த
வேனில வென்பின் னேர்ந்தான். (2)

இருட்பொரு தலைக வலைகாப்
பகன்மிக வகலுந் தீமை
மருட்பெறப் புனல்வி ருப்ப
மலிவுற வயந்த னைச்செற்
றருட்பரிந் தவன்சே யான
விளம்பொழில் வளர்ந்த டைந்த
தெருட்சியி னீர்க டேக்கி
முடிபெறச் செய்வித் தானே. (3)

வாவுதல் வட்டம் வீதி
சுழன்றகால் வாசிக் காட்ட
மேவிய வேனில் வேந்தன்
வயந்தனை வென்று காரைக்
கூவிய மகன்றிவ் வாயி
லெரிகொளீக் கான்றிப் பற்ற
வாவியஞ் சுருங்கப் பாலை
யெனுநில மமைந்துற் றனே. (4)

வீக்குதண் ணுமையில் வாசக
நெற்றொளி விளங்க வேயின்
றுக்குகால் வீணை பாடச்
சருக்கெழுந் தெழினி காட்ட
வூக்குமார் பிரம ரத்தி
னுடல்வழி நடிக்க நாடி
யாக்கமார் வேனில் வேந்த
னரசுட னுறைந்தா னன்றே. (5)

இரவியன் கதிர்க்காந் தஞ்சுடர்த்
தரணித்தீ யியக்கப் பாந்தட்
பரவிய சமித்தி லால
நெய்கொளீப் பன்றிச் சாலிப்
பொரியிறைத் தடும்ப சுஞ்சங்
குருதிபோ லாரப் பூவி
விரவிய செம்ம ருழ
வெள்வியை யமைத்திட் டானே. (6)

ஆடவர் சுதைக்கார் வெற்பில்
லாங்கதேன் வணையி னண்பாக்
கூடிய மகளிர் கொங்கை
வெண்டளக் கலவை கொண்ட
வூடிய மகளிர் விட்ட
கலத்திலை யக்க வல்லி
நாடிய ததிருந் தெண்ணீர்
நசைப்புன லுண்ட தன்றே. (7)

சுழல்வளி மரத்தி லண்டம்
வீழ்த்தியத் தொடர்ந்த காலி
னுழல்சருக் கெய்ப்பக் காலை
யுடன்றமர் பொருவ போற
நிழனில மறைப்ப நீங்காத்
திசையெலா . . . . தூற்றிக்
குழமற முருது புள்ளின்
குலமெலாந் திரியு மன்றே. (8)

எழுங்கன ளேடருந் தூமமே
　　மிலிமின்ற னென்னப் பாவாய்க்
கிழிந்தெனக் கமர்வி டுத்துக்
　　கெழீயுறை தன்மை நோக்கிக்
கொழுந்தெழு பரிவி னெஃகிக்
　　குறையவெள் ளருவி மேகம்
பொழிந்துநீர் பெயலை நீக்கி
　　யுடல்வெளுத் திளைத்த மன்னே. (9)

தருப்புழை நுழைத்து மிச்செல்
　　கொழுந்துடைத் தயிரி ளேங்கி
விருப்புறு தழறிக் கெல்லாங்
　　காலினில் விரிந்த தன்மை
யுருப்பவி ரமுது வேனிற்
　　புகழிறு லுலகை யாட்சி
புரப்பது போன்ற தென்னில்
　　தன்வலி புகலற் பாற்றே. (10)

திருமலி வேந்தன் பாங்கிற்
　　சிறியனை வரிசை நோக்க
மருவுறி லடைந்தோர் தம்மை
　　வருத்திய செய்கை போலப்
பொருவிலக் கதிரோன் பாரி
　　லயிற்கதிர் பொருத்த யாருந்
தருமடி யிடாத வண்ணஞ்
　　சாத்தழல் சார்ந்த தன்றே. (11)

(வேறு)

கருகுவான் மடியவெங் கதிர்சி னங்கடா
யுருகுசெம் பெனவிடா நிலந்தந் தோங்கிமேற்
றிருகுசெங் கதிர்ச்சினை தீந்து நெற்குலவ
சருகுறத் தண்பணை தளர்ந்த தென்பவே. (12)

நிழல்பரு கியமர் நெடிய வெற்பெலாந்
தழல்ப ருகியவரு கித்த டஞ்சிலை
யுழல்சிறைப் பறவைமா வொருவி வெஞ்சுரத்
தழல்படு நிலத்திடை யவிந்த தென்பவே. (13)

அருந்தமிழ் நாடுடை யரசர் மூவரும்
வருந்தினர் குறுமுனிக் கிவைவ டித்தனர்
திருந்திது வாதசாந் தத்துச் செவ்வியே
பொருந்திய பராபரற் போற்று மென்றனன். (14)

பருகுவக் கிரித்துமுன் பெயர்ந்து சூரியன்
மருவுசேய் நடத்தலான் வருட மாதிரண்
டொருவுமார் சுந்தர னுபையத் தாளிணை
யிருமையும் நீக்கிநீர் பணிதி ரென்றனன். (15)

வனையிடை மறலிபொற் பவத்தை வீட்டுவான்
முனிவர்வா னவரெல்லாம் பலத்தை முன்னினு
ரனைய சோமவா ரத்தி லாதியை
நினைவுடன் பசித்துமா தவநி ரப்புதிர். (16)

என்றுமா தவன்சொல வரச ரெய்தியே
பொன்றுச் தாமரைப் புனலி லாடியேற்
றுன்றிய செஞ்சடைச் சோம சுந்தரன்
வென்றியஞ் சோமனுள் விரத நோற்றனர். (17)

வாணியொன் றத்தலை வாச வன்றனைச்
சேணிடைக் கண்டுவா னுடிச் சேருமென்
றேணுற வுரைத்திட வெய்தி யிந்திரற்
காணுபு மடங்கலற் சனத்திற் கண்ணுற்றூர். (18)

இட்டவா ளரியணைப் புறத்தி லன்புருக்
குட்டுவன் சென்னிசேர்ந் துறைய கோச்சடை
விட்டவுக் கிரனெனு வன்னையின் மேவினன்
பட்டவென் றயன்மதி படிந்த வெற்பனே. (19)

கண்டன னுயிரங் கண்ணுஞ் செப்பவுட்
கொண்டனன் முனிவொன்றுங் கூற கிற்றிலன்
மண்டல வரசர் வான்மடிந்த தென்னனுங்
கொண்டலைக் கூய்விடை கொடுத்திட் டானரோ. (20)

கைதவன் மீதமுக் காறு காழ்த்திட
மைதனை விடுத்திலன் மற்ற வேந்தர்க்குச்
செய்தபூ ணளித்தனன் றென்ன வன்கொள
மொய்தவழ் பணியிடத் தாங்கி முற்றினுன். (21)

இந்திர னூரம்பூண் டரவென் றிப்பெயர்
முந்துற வெனவிவ னேடு மூவரைத்
தந்தமூர் செலவிடை தந்து மோர்ந்ததை
வந்தவர் பாண்டியிற் பெயர்மாற்றங் கூறினுன். (22)

பொன்னி கொளத்திடைப் பொழிந்த வான்முகிற்
கன்னி நாட்டினிற் பெயர்க்கால் நோக்கினன்
றுன்னிய வுக்கிரன் வேட்டை சூழ்ந்தனுள்
மன்னியவ் வணேழு முகினும் வாய்ப்பவே. (23)

பற்றினன் வுட்கல முதரப் போதர
வெற்றியைக் கடாம்பொழி வேழ நேரெனச்
சுற்றிய தோடரில் தொடுக்கத் துண்ணெண்ணு
வுற்றன னமரரோ டும்பர் நாயகன். (24)

(வேறு)

வெள்ளிக்கிரி மிசையிற்கரும் புயல்சேர்ந்தென விபுதன்
புள்ளிப்புக ரணவெங்கரி யெருத்திற்றணி பொருந்தச்
சுள்ளிற்சமர் போராண்டிடை யுருத்தெய்தின னிருளை
யள்ளிக்கர நிமிர்வெண்மதி நிகரொத்தர சடர்ந்தான். (25)

ஆகாயமு முலகும்பொடி படுமின்றென வதிரா
மாகாயமு துணைவானவர் சிலைகோலின வரவே
யேகாதெதிர் பலமன்னரு மிரதம்பரி கரியோற்
பாகார்படை யொய்போர்செயப் பகலோன்மறைந் தனனே. (26)

முக்கோடியுந் தியமுப்பது முதல்வோர்களை களிறுற்
றிக்கோடின வாசன்படை யதுகண்டுயர் தென்னன்
புக்கோடியப் படையைக்கட லுடையைப்புடை யணைபோ
னக்கோடிய விழியான்றடுத் தடர்ந்தேயமர் நடந்தான். (27)

இடைந்தார்தமை முனிந்தஞ்சலென் றிடையேவிடை யுடையா
னடைந்தார்துணை பெருஞ்சொக்கனை நினைத்தார்த்துவில் வளைத்தா
னுடைந்தாரவ ருடையக்கய லுடையான்மிடை படையாள்
கடைந்தான்மலை யெனவானவர்க் கிறைசேனையங் கடலே. (28)

மீனக்கொடி புதையத்திசை விசைவெங்கணை மறையக்
கானக்கொடு வரியாதிறைக் கரந்தாலெனப் பொரவே
தானக்கொலை மலையுந்தினன் சரமாவிரத் தனவாய்
வானக்கிள துருமேர்ப்பன வலிமிக்கென விடுத்தான். (29)

அழல்வெங்கணை தனைவாருணத் தவ்வாளியை யொலியா
லுழலும்பவ னெனச்சேடனிற் சேடன்றனை யுவண
னிழலும்படை யினிலன்னதை வாடுநானிலன் ஞானை (?)
சுழல்வெங்கரி யினிலன்னதைச் சிங்கத்திலுந் தொலைத்தான். (30)

விடுவெங்கணை தடுக்கின்றதை விடுதாக்கிறை கண்டான்
றெடுவெஞ்சிலை யிருவோர்களுந் துறந்தார்பறந் தலைச்சென்
றடுவெங்கதை முசலம்விடுத் தணிமுட்டியிற் பொரவே
வடுவென்றிடச் செழியன்புறத் துடைந்தான்மன மிடைந்தான். (31)

மலையின்சிறை யரியுங்கொடு வயிரத்தினை யெரிந்தா
னலையும்பல நிலமும்பொடி படவேவரு மதனைச்
சிலையென்றுயர் மலைகொண்டர னருளாற்செறி வளைகொண்
டுலையும்படி விடவச்சிரம் வலையிற்றெலி வியசேர். (32)

வயிரப்படை தனைத்தள்ளிவெற் பினைமட்டிய வொலியோ
வயர்வுற்றிடச் சுரநாயகன் மகுடத்தினை யகலம்
பயிலப்புரட் டலும்வெள்ளெயி றிழந்தோடிய பணியின்
புயலிற்பரி யுகைத்தெய்தினன் புலவர்க்கொரு தலைவன். (33)

(வேறு)

வளைவி டுத்துயர் வாசவன் றனைமுடி
முளைவி டுத்தென நீத்தன் மொழிந்தனந்
துளைவி டுத்த பெயற்சொரி யப்புயற்
றளைவி டுத்த கதையினிச் சாற்றுவாம். (34)

வளைவிடுத்த சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,720.

மேகம் தளைவிடுத்த சருக்கம்.

இரிந்தான் புலவோரொடு மிந்திரன் வென்றிகொண்டான்
விரிந்தார் கொடிமீனம் விளங்க விளங்கிமீண்டு
வரிந்தாரலங் கற்புயமன் னவர்சூழ வான்பூச்
சொரிந்தானுயர் சுந்தரன்று லிற்றுதிக்க லுற்றுன். (1)

எந்தாயெனை யாளுடையா யெனக்கீந்த வென்றி
தந்தாயெனப் போற்றினன்மன் னவர்சூழச் சார்ந்தார்
நந்தாவொளி கோயிலி னுகரோ டெண்ணிவானேன்
முந்தாதர வாலோர் முடங்கல்விடுத் துளானே. (2)

வருதூதனை வாயிலோன் செல்லென வந்துதாழ்ந்து
பொருதூதியங் கொண்டனைநின் புகழ்போது மென்றென்
றொருதூதினை முற்றென நீட்டுமுன் னோலைநோக்கி
விருதூது குயிற்செறி வேனிலி னன்புமிக்கான். (3)

பொன்னாடு புரந்த புரந்தர னோலைஞானத்
தென்னாடவன் காண்கத்தென் னாட்டினிற்றிங் கண்மூன்று
மின்னாடுநாண் யழாப்பினை வேண்டி னேனின் (?)
றென்னாப்புகல் வாசகத்திற் களியெய்தி னானே. (4)

(வேறு)

மன்னவ னுக்கிர வழுதி மன்றைவாழ்
தென்னவன் செவ்வந்தி திருவி ருந்வன்
றன்னுடைப் பிணையிற் கணைதனை விடுக்கவே
மின்னொடு கருக்கொடு விசும்பு மேயதே. (5)

அருந்திய புயற்றே டர்ந்த டர்த்தெழுங்
கருங்கட லெண்டிசை கரந்தி ரைத்தபோ
னெருங்கிய வானத்திற் விழுங்கி நீண்டகா
ரொருங்கெழு கங்குலி லொழுநக மொத்ததே. (6)

திருகு வெண்கதிர் முதல்வனில் சேருநாட்
பருகு தன்புன லெலாமுமிழ்ப் பாங்கினி
னுருகுபொற் சபைநா னாத்தின் வீக்கியே
கருகுதண் புயல்சிறைக் காவல் வைத்ததே. (7)

கடலொடு யடவை . . . . யாசையி
னடல்கொடு மேய்ந்துகார் கட்டின் றீச்சுட
வுடறுடித் துமிழ்ந்ததீ யொப்ப தென்னவே
. . . . . . டுதிசையெல்லா மின்னி ரைந்தவே. (8)

ஒருகளத் திருபெரு வேந்த ரூர்ந்தமா
பெருவு . . . . வேந்த ரைவர்கள்
பொருதுயிர் விடப்பொரு போரி றென்னவன்
றெருவ்வுருவ . . . . வே. (9)

மெய்த்தடம் புதைந்துற வீழ்ந்த பாவனைத்
துய்த்தநீர்க் கான்றிடச் . . . .
. . . . . . டம் புயலுடல் வளைந்து சாயவே
யொத்தகால் சுற்றுநீ ருமிழத் தந்ததே. (10)

விரிதரு முருமி . . . . டைச்
சொரிதரும் பெரும்பெயற் சுந்த ரன்கடை
முரிதரு முழக்கினின் முகடு விண்டதிற்
றெரிதரு . . . . செறித்த போன்றதே. (11)

வண்டுபாண் செயமயி லாட வார்கொடி
தண்டள் வேந்தர்பொற் . . . . க்
கொண்டெதிர் தரச்சுடர்க் கோட லேந்தவே
யெண்டிசை போர்ப்பக்கா ரரச னெய்தினன். (12)

. . . . ணர்த்திடப் பாவை மாருடன்
புகலருங் கேள்வரும் பொருந்து மாறென
வ . . . . ளு மஞ்சிறை
யிகலுருப் பெடையுடன் றுடர்பை யேய்ந்தவே. (13)

வரைபொரு . . . .
கரைபொருந் தெழுந்தெனக் கமழ்ந்த வோடைக
னிரைபொரு மலர்ப்புகை பட . . . .
. . . ரைபொரு கருங்கடல் றேக்க மிக்கதே. (14)

ஒடுங்கின் விரையுண தோங்கு மாவெலாந்
. . . . , த் தரின்றுறு கண்ணியே
யடுங்கர டிக்குலம் மாந்த வத்துணை
யிடும்பைகூர் கவிகளு மிகுந்த வென்பவே. (15)

. . . . நெற்கதிர் பிறக்க மிக்கன
வாளுறு வட்டமுந் றேளின் மறந்தனுத்
. . . .
. . . . புகைக் கொழுந்து சேர்ந்ததே. (16)

இத்துணைக் கார்ம்பாழிந் தியாண்டும் பொ . . . .
. . . . சொக்கனைக்
கைத்துணை நெல்லியிற் கண்டு பாரிடை
மொய்த்துணைப் புயத்தொடு மு . . . . (17)

உக்கிர வழுதிவிண் ணேங்கு காரினை
மிக்க வல் லியை விடுசெயல் விரித்தனஞ்
சொ . . . . சோம வாரத்திற்
புக்கதோர் சிறப்பினைப் புகலு வாமரோ. (18)

மேகம் தளைவிடுத்த சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,738.

சோமவாரச் சருக்கம்.

சோம நாட்சிவன் பொற்கதி தருமிடிநோய்
பகைதெறு மிகம்பரந் தொடரு
நாம மாரமர் . . . . கொடியதா
மப்பலன் கோடிநன் மதுரை
யேமமார் சோம சுந்தரன் பாங்கி
லனுட்டனே யேக புத் தம்பின்
வாம மார்ந்ததம் பசித்தன மூவகைத்தே
நியமத்தவ் விரதமாண் புடைத்தே. (1)

விரிச்சிக மதியி னிறைமுத லறசோம
நாளிடைச் சொக்கன் மீன்விழியை
யருச்சனே நித்தி யக்கட னீக்கி
யான்மயங் குரைதில் வில்ல(?)
மிரித்தகை தரித்துப் பவுத்திர விரலின்
விளங்கப்பொற் ருமரை யாடி
நிருத்தனே முடிகார் கடல்வயிறு . . . . . .
. . . . தவனருள்வ மாதே. (2)

பொன்மரை படிந்து நீறுகண் டிகைமெய்
புனைந்து வாரணமு . . . .
. . . . மூல லிங்கமீன் விழியைப்
பணிந்துகை நாலிரண் டிலக
வின்மணிப் படைசே . . . .
பன்னிரண் டளவையாய் விரும்பித்
தன்மன நெக்குத் தியானமே செய்து
புனிதனு . . . . (3)

தொடர்ந்த காமாதி நீதருத் திரநன்
மனுவில் வெண்பூத் தொடரரியெட்
படர்ந்த . . . . சோமசுந்தர
னென்னப் பராயப் பூசை
யடர்ந்து வில்வத்தை யணிந்தே . . . . . .
. . . .
. . . . . . டன் பிரணவத்தி னனந்தமாய்ச் செபித்மெ...
ணிரண்டுப சாரநல் குவதே. (4)

ஆறிறு நாள்வில் லுபநிழற் செபிக்க
வந்தணர்க் கொலைவிடு மதன்கீழ்க்
கூறுமஞ் செழுத்தி லக்கமே செபிக்க
நீங்குறு மிக்கவெக் குலையு
மேறுறும் புருணக் கதியும் வல்ல
விதழ்சரு குதிர்ந்தன பழைய
தூறுவண் டுண்டல் சிலம்பிநூல் வளைத
லென்றிடா சாத்தவீ டுறுமோ. (5)

வில்லவத் தளத்தஞ் சலிசெய்து வரத்தை
வேண்டின் மெய்த்திருவுடன் வீடு
புல்லுவ ரேக புத்தந் தத்திற்
பசித்திடல் விழியிமை பொருந்தா
தல்லிடை யிருத்த லிவ்வவி ரதத்தா
லஞ்சுபா தகம்விடுந் திருவா
மெல்லையில் வீடு தருமொராண் டீராண்
டியற்,றியுத் தியாபனந் தருவார். (6)

வெள்ளிபொன் வடிவால் விமலனைப் பந்தர்
வேதிகைக் குணதிசை யமைத்து
வள்ளிய மனுவிற் பூசித்து நெய்சர்க்
கரைதிலம் பாயச மருவா
துள்ளிய வோமஞ் செய்துநான் மறையோற்
குதவிப்பன் மூன்றுகும் பத்தி
னெள்ளுருப் பிரசிம நெய்ப்பதி மூன்று
பசுவுடன் மறைசூர்பா லீய்வான். (7)

உலகமுன் றேன்றுஞ் சோமசுந் தரனிவ்
வுலகுளோற் பவக்கடற் புணையா
மிலகுதன் வடிவில் விரதமென் றமைத்தர
னிருவினைக் கான்றெற வெரீஇ
யலகிலா மாகமா தேலனந்த மயம
கந்தமங் கையரைக் கரையிற்
றிலகநீ ராடிய னட்டுவான் கபிலையா
யிரப்பல ஞேர்நாட் சேரும். (8)

வானக வாகும் விண்மண் விதாரையை
நாண்மதி மரீப்பெற்ற சாபத்தின்
மேனிதேய்ந் தொருவர்க் கயப்பிணி மருவி
வனத்திடை நெடுந்தவம் வனைய
ஞானநூல் வாம தேவனிவ் விரதம்
விதிவழி நவிற்றநோற் றதன்பின்
மேனிவ ரிறைவன் வேணியி னுறைந்து
பிணியொரீ யமுதுடன் விளைந்தான். (9)

ஆதிநாட் சிவநோன் பிவனனுட் டிக்கச்
சோமவா ரப்பெய ரான
மாதநான் கெய்தப் பகைவரென் செய்வர்
மிடிபிணி யென்செயு மற்றோ
ரேதமார் நோன்பே னிகழ்தரு நல்கும்
பரகதிக் கிறையிவை யிவ்விரத
மோதுகார்த் திகைமித் தினம்பசித் துப்பா
லுத்திர மதயிற் றெழுழிவார். (10)

நாலிரண் டாண்டு முதலதெண் பத்து
நான்கியாண் டளவனுட் டிக்கச்
சீலமோ டென்னுள் வலியிலா பதிமூன்
றுண்டிலுத் தியாபனஞ் செய்து
கோலமார் சித்தி ராங்கத வேந்தன்
புவியுஞ்செங் கோலும்போய்க் குறையா
ஞாலமெய் துதற்கிவ் விரதங் கோதமனு
லியற்றிப்பார் பெற்றுவா னடைந்தான். (11)

தருமனு நளனுஞ் சந்திர வேந்து
மிராமனுஞ் சோமசுந் தரன்றுண்
மருவியிவ் விரதம் போற்றிப்பா ராட்சி
மலிந்தன சோமவா ரத்திற்
கருதிலொன் றனந்த மதுரையிற் சோம
சுந்தரன் றிருமுகன் கதையைப்
பொருவினி லுரைத்தா முக்கிரன் மேரு
வரைக்கயல் பொறித்த புகல்வாம். (12)

சோமவாரச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,750.

கயல் பொறித்த சருக்கம்.

வந்தவந் தணரை நோக்கி
யுக்கிர் வழுதி நும்பா
லந்தநான் மறைதீ வேள்வி
வலிதுகொ லென்ன வாதி
சுந்தர னருளாற் செவ்வி
தென்றுபின் சுடர்க்கோன் மாறுய்ச்
சிந்துரு முகில்கள் சிந்து
மெனவுரை செப்பிப் போனார். (1)

ஆயசொல் லதனி னம்பி
யயர்வுறக் கனவிற் கூட
னாயகன் சென்றின் மேருப்
புடைத்துப்பொன் னனிகொண் டெய்தென்
றேயநல் லுரைய மைச்சர்க்
கிசைத்துத்தேர் கரிமாச் சேனை
காய்கடல் கடுப்பச் செல்ல
வடதிசைக் கனன்று சென்றான். (2)

அரன்றரு செண்டு கொண்டு
வடவரை யறைய நேர்ந்து
விரைந்தொரு விடிவிற் கூடன்
மெய்ப்பரன் குமரி நீயே
புரந்திலை முனியி லென்னும்
பிணைநின் மலப்பொற் புற்றே
னிரைந்தபொன் றுருவன் கோடி
யெனநிதி யீந்த தன்றே (3)

அரும்பொனெண் ணிலகொண் டாங்கே
கயற்கொடி யமைத்துப் பாங்கிற்
பெரும்படைத் தலைவர் போற்றக்
கூடலிற் பின்னு கன்றாள்
விரும்பியே போற்றி வேட்டோர்
வரவிட விரும்பி னல்கி
நெருங்கிய நண்பு மேவுஞ்
சுதரொடு நெடுநா ளுற்றான். (4)

பகைவலி தொலைத்து ஞாலம்
பாலனிற் பார னீக்கி
நகைவலி புரத்திற் காட்டு
நாயகன் றுளிற் சேர்ந்தான்
முகைவலி யகுறர் சூடு
முருகனு முருகு நெஞ்சிற்
புகைவலி தொடாதீ யென்னப்
பகையொரீஇப் புவிபு ரந்தான்.

விண்ணொடு மண்ணும் போற்ற
வுக்கிர வழுதி வேந்தன்
கண்ணுறு மிமையிற் பாரைக்
காத்தவை யிசைத்து நீதி
யெண்ணுறு கண்ணு வர்க்கு
மறைநெறி யிசைத்துச் சொக்கன்
பண்ணுறு முலகிற் றந்த
செயலினைப் பகரு வாமே.

கயல் பொறித்த சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம்.1,753.

கண்ணுவரதிய ருபதேசச் சருக்கம்.

ஆதியிற் சிருட்டி காலத் தாதிநாட் பிரண வத்தார்
வேதவத் தீயோர் நீங்கிக் கண்ணுவர் விதிச்சாண் டில்லி
போதமற் றுறையச் செவ்வி யரபத்தப் பெயரோன் போந்தான்
யாதுகை கருத்தன் றேத வனைவரு மிசைவுசொற்றார். (1)

தருமமே யோக ஞான மாலைவாய்ச் சாந்த மாகி
வருவட நீழ லெந்தை யுணர்த்துவன் வருதி ரென்று
பொருவில்போற் றறிவ ரைப்புக் காடிச்சுந் தரனைப் பொற்பார்
கருணையங் கயற்கண் மாதைப் பணியத்தென் றிசைக்க லந்தார். (2)

அரபத்த னுரைத்த மேதை விஞ்சையைப் பவம கற்று
மிருபத்தி ரண்டெ ழுத்தை யோதிமுக் கால மேத்திப்
பொருவற்ற வோம மற்றத் தருப்பண மறையோர் பூசை
விரதத்து முற்றி யாண்டொன் றுறைந்தனர் தவத்து மேலோர். (3)

விருச்சிக மதியு வாச்சேர்ந் தாண்டொன்று மெய்த்த வத்த
ரருச்சனை யுவந்து நெற்றிப் புண்டர மணிப்புன் மூரல்
பொருட்சடை மகுடஞ் செங்கைப் படிகந்தா மரைப்பொற் பாரத்
திருத்துமுத் திரையி னோடு சேர்தனு முனிவர் கண்டார். (4)

தொழுந்தெழு மன்பிற் கண்ணீர் கொழிந்துளந் தேம்பிப் பாரில்
விழுந்தெழுந் தாடிப் பாடி விம்மலர் வேதந் தன்னிற்
செழுந் தகை யாய்ந்த நுட்பஞ் சொல்லுதி ரென்னு மிந்தச்
செழுந்தெரு விலிங்க மாகு மென்றிவை தெளியச் சொல்வார். (5)

உண்மையா யேக மாகி யத்துவி தத்தா யோங்கி
வண்மைசேர் பரவ யாதி பராபர வடிவாய் ஞானத்
திண்மையாய் ஞான னந்த நிரப்பமாய் திகழ்வே தத்து
வெண்மையிற் பொருளாஞ் சொக்க னருளினுல் விளங்கு மாதோ. (6)

பிரமனை யன்று னல்கி வேதத்தின் பொருளைப் பெட்பார்
வரமுறக் கீழே யான மதத்துத்தத் துவத்தை வாய்மை
விரவுறு மந்தி யத்து வித்தியா தத்து வத்தை
நிரைசிவ தத்து வத்தை மீதுரு நெறியிற் றந்தான். (7)

அயன்முத லைவ ரையைந்து தத்துவத் திறையா மென்று
நயன்மறை யுரைக்கு நான்கு தத்துவக் கருமத் தாலே
யியல்புரி யகார மற்ற வுகாரமே மகார மென்றும்
பயனுமா ஞதம் விந்து காயத்திரி பண்ப தாமே. (8)

எந்தையா ணையினுல் வேத மனுவிசை யாக மங்கண்
முந்தியே யவனைத் துற்ற விருக்கு மூவேழா நூற்றென்
றந்தையச் சுசுவாய் சாம மாயிரத் தொகையாய் மற்ற
துந்திய வொன்ப தாதி யுதித்துப்பின் வருண மாமே. (9)

மறையிரு காண்ட மூன்னே சிவனருச் சனையா மற்றத்
தறையுஞா னத்தின் சீராம் விண்டுவை யாதி யாக
விறையவன் கதையே மூல மிவரெலாம் பொருளுங் கொண்டு
முறைமுறை தருவர் வேள்வி முற்றுமற் றிவர்பே ராமே. (10)

நித்திய னைமித் தியம காமிக நுகரும் நீண்டே
யுய்த்தபூ சனையி வற்கே யுருவருப் பிரமம் வேறு
சத்துடன் சித்தா னந்த நிட்கள நிமலந் தாயாச்
சுத்தவே தத்தி னாதிச் சூக்குமஞ் சிவம தாமே. (11)

உருத்திரன் விசுவா தீதன் சருவஞன் சருவ சத்தாக்
கருத்தின னாதி யந்த மிலாதவன் கார ணத்தின்
வரப்பர மான்மாச் சீவன் முத்தமா புரன்சீர் வாய்ப்பார்
நிருத்தன்ரு ளூற்று மீளா நெறிப்பலன் பெறுவா னன்றே. (12)

வேதநன் னெறியை யிந்த விலிங்கபூ சையிலே வெஃகு
மாதியந் தியானம் வேதாந் தப்பலன் கருமத் தாலே
நாதமார் சித்தி சாந்தி ஞானமீ ளாத வீட்டின்
போதமாஞ் சிவலிங் கத்திற் பூசையாற் கதிபொற் பாமே. (13)

சிவபத்தர் போற்றக் கண்ட முரங்காஞ் சிரத்திற் கேற
கவவுருத் திராக்கம் பூண்டு திரிபுண்ட ரத்தை நண்பா
லிவர்நுத லணிய வாசாற் பணியயீ தனைத்து ஞானந்
தவநிறை கரும மாகு முத்தியும் பலிக்குந் தானே. (14)

கருதிய மார்க்கந் தன்னில் சமாத்தமாங் கதிவை தீகஞ்
சுருதியு மிருதி தானுஞ் சிவனடித் தொழும்பைக் கூறும்
பருதிநேர் சிவஞா னத்துக் கிணையில்லை யெனப்ப ணித்து
வருதவ ரிதயந் தொட்டி லிங்கத்துள் மறைந்தா னன்றே. (15)

அங்கையா மலக மென்னக் கண்ணுவ ராதி யோர்க
டுங்கவே தாந்த சித்தாந் தத்துவை திகச்சொற் சைவத்
தெங்கணா யகன்றருள் போற்றி யிருந்தன னிதனைச் சொற்ருந்
தங்கிய வீர பாண்டி யன்கதை சாற்று கிற்பாம். (16)

கண்ணுவராதிய ருபதேசச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,772.

வீரபாண்டியச் சருக்கம்.

வீர பாண்டியன் மேதினி தாங்குநாள்
வாரி காலமழ்ல் கர்ணியின் வாய்த்தன
பார்வி ளைந்தசை வாகமம் பல்கின
நாரிமார் கற்பு நாளு மிகுந்தவே. (1)

வேள்வி வேத நிறைந்தன மெய்ப்புவி
தாழ்வி லாவரு ணங்க டழைத்தன
வாழு மன்னவற் கேனை மகளிர்பா
லாள்வி னைப்பல்கு மாரருண் டாயிற்றே. (2)

குலமிக் காரிற் குமரரில் லாமையா
லிலகு மீன்விழி யெந்தைதாள் போற்றியே
நிலைகொள் சோமவா ரம்பசித் தேநிறை
புலமி குந்தொரு புத்திரற் போற்றினன். (3)

கரு .... மதி போல்வளர்த்
தருள்ப ரிக்குநா ளாடற் புலியினுற்
பொருவில் வேட்டையிற் பொன்றினன் வேந்தன்சூ
ழருளின் மற்ற .... தீண்டினுர். (4)

தோன்றி ளம்பிறை முற்றுமுன் சூழக்கண்
மூன்று மெய்யொளி யுற்றென் வில்லித்
தான்ற செல்வ மனைத்து .... கானடே
ரீன்ற மைந்தன் சிறுவனென் றெய்தலால். (5)

முருக னுக்கு முடிபுனை வான்மணி
தருதல் வேண்டிய சுந்தரன் றாழ்ந்தருண்
மருவு வோமெனு முன்வணி கக்குலத்
தொருவ னுகவெம் மான்கடை யுற்றனன். (6)

நெற்றி நீறு நிலாதரக் குஞ்சியிற்
சுற்று வெண்டுகின் லிந்துவிற் றேன்றவே
யுற்ற பையணிப் பையணி யாவுள
முற்ற வேந்தன்முன் னேகினன் முன்னவன். (7)

(வேறு).

தடங்கலன் முடிக்குநன் மணிக டந்தன
மிடங்குல நிறங்குணங் குறையி தன்விலை
படர்ந்திட வுணர்ந்திறுப் பத்தி யானல்வே
திடம்புரி யமைச்சர்பா லையன் செப்பினன். (8)

வலன்கயி லேயினரீஇ வரங்கொ டெய்தனும்
விலங்கலம் புகைவெரீஇ யிரந்து வேள்வியி
னலங்கிளர் பசுவென வலனை நானவீர்த்
தலம்பெறப் படுக்கநன் மணிக ளான்றவே. (9)

அன்புவச் சிரம்பண் முதறத்தம் பறம்மே
நன்பவ ளந்தசை நீலம் நாட்டமை
வன்புரு டம்வயி டூரிய மயிர
மின்பசு மணிபிந்த மெத்த மைதமே. (10)

மறைவெண் முத்துவச் சிரமன் மாணிக்க
மறைதுகிர் வணிகனே புருட ராகமா
நிறைவயி டூரியம் பச்சை நீலமாந்
துறையுங்கோ மேதகஞ் சூத்திரனென் றேதுமே. (11)

சத்துவம் படிகமு தத்திற்சார் வேந்தனும்
வித்துருு மஞ்செய்ய மணிகோ மேதக
மொத்தது புருடம் வயிடூரியம் வச்சிர
மெய்த்தம்ம நீலமுன் வேந்தொடாம் பச்சை. (12)

செம்மணி நாப்பணெண் டிசைமுத் தாதிவைத்
தம்மணி யருச்சிப்பா ருக்க ளுதிய
மெய்ம்மணி முன்னுவர் வயிர மேதகு
மின்மணி பிறக்கு............டென் பார்களே. (13)

கோசலங் காலிங்க மகதங் கோவரை,
யேசில மராட்டஞ் சவுபிரம யூண்டிரம்பொன்
..........ரகைபொன் வெள்ளை மைமிசை
பேசிரத் தப் மனல் காவி பிங்கலம். (14)

வாகைவே யிரம்பைம......வெள்ளை வாகவ
னே..........யமன்பா விரைவு கிஞ்சுக
மாகிய கோங்க கீர்கோ மங்கிபொற்
றுகினீ ரொன்னதிக் கதிர்தீய்த் தெய்வமே. (15)

..................ள்ளை வேந்தணி முயற்கண்பின்
வந்தவா ரம்பைவா ணிறமற........வச்சிர
........மிறைத்தரிப் பிரிந்திறை...............
. . . . . முடிக்கொளில் திறல்சிறப் பினனன்றே. (16)

மங்கையர் மங்கலம்..........காணனு
வங்கண மேற்றரிக்கிற்..........ண்ணுருரு
ரிங்கிது வயிரச்சீர் முத்த மென்பது
பொங்கு நீர்புவி போற்றுதும் போற்றுமே. (17)

வலினே . . . . .முன்றிடன் மரீஇயசங்
இலகுமின் கார்மிஞர் கணமெ னப்பற . . .
. . . . வரை கரிகழை சுத்திநெல் கோக்கு
மல . . . . வி யிடத்ததின் வருணங் கோட்டிரால். (18)

புறவுடை யண்டத்தைப் பொருவச் சங்கின்வா
யுறைமணி யுத்தம மிப்பி யுற்றமுத்
திறையவ ருவப்பதா மெனைமுத் திதம்மெய்
நிறைவை யீன்றதாஞ் சிறப்பு நீங்குமே. (19)

மாலரிந வென்கால் வருணன் றிக்குச்செப்
பாலுறு மீதங் காரருண் மலாலெரி
போலுமின் புற்றுருண் டொளிபொ ரீஇக்கணத்
தேலுறு படிகநேர் முத்த மோதரம். (20)

(வேறு)

களபுர கந்தும் பாஞ்சிங்
கனத்தவாங் கஞ்சங் கல்லார
மளவுமின் மீதாரகை யெரிவேள்வி
சகமாதுள மருக்கன் கோபம்போல்
விளைவுறு பதுமரா கனகதனில்
வேதிய ராதிநால் வருண
முளவில் கரதுரங்கங் குருவிந்தஞ்
சவுகந்திகங் கவாங்கப் பெயருறுமே. (21)

சாதரங் கத்தவொளி மறைகளார்ந்
தடித்தனல் குயில்விழி விளக்க
மாதுள மல்லித் தருக்கனே
கோப மற்றக் குருவிந்த
மோதிலோத் திரஞ்சுகந் திலதஞ்செவ்
வரத்தஞ்சிந் துரங்குன்றி முயல்மெய்ப்
போதுறுஞ் சொரிகாய்போ னெண்குணமாஞ்
சவுந்திக மறுகுணம் பொருந்தும். (22)

அரத்தங் குயிற்கணி லயுபொன்
செந்தம் பஞ்சவனத் தலரா
நிறைத்தவரங் கத்துநாற் குணங்கும்பங்
கோவேயே தகாநீர்ச் செங்க
லுரைக்கு மிருபாற் கிழொளி
குணமூன்று தனில்சா தரங்கமே
தரிக்கில் விரித்தபஃ றுனங்குரு விந்தம்வெந்
தரஞ்சயுக . . . . . விசைக்கவாண் மிகுஞ்சீர். (23)

அடல்வலன் பித்த மருந்துற்க புட்கான்று
மருவண்டங்க ளுழன்று பாலாயும்
மட நல்ல . . . . ரிந்துமீசன் விரியத்து
வாயத்துங் காருடம் பச்சைப்போர்ந்
தட . . . . . . குதுழாய் பயிர மூன்றுஞ்சகு
தொடையா மிரண்டி
லிடைமுதல் சருண மூவிரு குணனுந்
தொடை . . . . டனியங்கும். (24)

காடமுல் லகிதம் . . . . . பித்தல்முத்
தமே பிரது நற்கவின்பு
லாடிலக்கண் நெற்பயிர் கினி . . . . .
ழாய் நளினத் திலையமை
. . . . . சாளைந்துட்ட முற்சிதமவ் விவேச
மந்தத் துடன துடரைந்
தேடெனு மிச்சை யலரிசெங் கழுநீர்
பனியரை யிலைமயி லிறகே. (25)

இத்துணைப் பச்சை தரித்திடப் பகைபோந்
திருவரும் நிலநாலி தடத்தர்
மைத்திருக் கண்டம் பலனவில் வலாரி
யிணைப்பிரி விடலையில் லவட்காய்
மொய்த்துணைக் கதிரோன் விட்டவீ ரியத்திடை
யந்தணர் முதல்நால் வருண
மத்துணை வெண்மை சேய்மைசா மங்கா
முனியத்தீங் கருந்திரு வாமே. (26)

சுடர்மிசைத் தோன்றி லிந்திர நீலஞ்
சுவையினா றெளிமகா நீலந்
தடன்மணி யைந்துந் திருவுறு மற்ற
நான்குமே சிலப்பல தரியரா
யடல்வலன் மேனக மேதக மெழுகுண
மதுவிந் தோடா நீர்நெய்
படர்பொன் மெய்க்குரு நின்மலன் தனகவென்
பணிந்திடத் தீவினை பரியும். (27)

இரணியக் கண்ணீர்த் தெறுமரி யையின
வலங்கத் தெய்துமைக் குணனு
முரணில்பொன் சோதி மழலின்பந் தசைவாம்
பாரியாத் திரமுடி வருண
னரனுடைச் சபைமந் தரம்புரந் தரனூர்
மைத்ததம் பிணியினு லணிந்தான்
மரணநீத் தருஞ்சயத் தொழின்மரு வும்புருட
மீர்த்தது மாண்பு மிதுவே (28)

மகத்திடைப் படுத்த வலனுரோ மங்கார்
தரும்வயி டூரியம் மகதம்
பகுத்தகோத் தருணஞ் சிங்கன் மலேயிடங்
. . . சிகங்கட திரிகூட
மிகுத்ததீ பத்தாம் வெயில் பூசை
விழிமயிர்க் கழுத்தென விளங்கு
மகத்தொனீள் வலமற் றிடம்பின் முன்மறை
ஞாதியீ தணியப்பொன் னுறுமே. (29)

பொருவலன் றசையில் பிரிதிலாச் சந்திப்
பொருத்திய னளித்ததன் பிலேயை
வரிச்சிறை யறிபி னருணனண் டத்தின்
மதுகயிட வன்குரு தியிலாம்
பருவமார் கொவ்வைச் செம்மாந் தட்பூம்
பசுங்கிளி முக்கொளி படைக்குந்
தருபவ ளனத்தின் வடிவிரு சுடரிற்
காந்ததீ யமுதுந்தந் திடுமே. (30)

(வேறு)

என்று வே. . . டுகீவிடத் திசையொ ரெட்டினுந்
மன்றமுத் தாதிவைத் திடையின் மாணிக்கம்
வென்றிவெங் கதிரென விரித்த ரிச்சித்து
நின்றமந் திரத்தாயி னிமலன் நல்கினன். (31)

அமுத்தின ரைய்வகை முடியி னன்புடன்
முழு . . . நன்குணர்ந் தணிமுடி புனைந்தனர்
தொழத்தரு வணிகனைச் சுடர்மணிக் குப்பொன்
கொழித்தரு ளத்திருக் குமரன் மேவினன். (32)

சிறப்பொடு விலைதர நகைத்துத் தென்னன்பா
லறப்பய னுணர்த்துவா னாலயத் துற்றா
னுறப்பணிந் தெழுந்துநெக் குருகிப் போற்றியே
நிறப்பணி தத்தினை நிறையச் சாற்றினான். (33)

கருமணி மாலையன் காணரு ருப்பரன்
றிருமணி முடிக்கருள் செயற்கை கூறினம்
பருமணிக் கருங்கடற் பாவை நாயக
னருமணிக் கூடல்வா யதனைக் கூறுவாம். (34)

வீரபாண்டியச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,806.

நான்மாடக்கூடல் சருக்கம்.

கருப்புரச் சுந்தர னுமங் காணவே
விருப்புடன் பாண்டியன் பரவ வேளையுற்
றுருப்புவிர் கதிரென வும்பர் நாயகன்
றிருத்துசித் திரையுவர்த் தரிசித் தெய்தினன். (1)

இந்திரன் றனைக்கட லிறைவன் போற்றியே
சுந்தர முகமொளிச் சுடர்வி டுக்கவே
வந்தனை யகத்துறை மகிழ்ச்சி யோதென
வந்தர முகனு மறைதன் மேயினன். (2)

ஆதிநா ளென்பழி யகற்றி யாண்டருள்
சோதியைந் தொழிலுடைச் சோம சுந்தர
ஞேதிநான் மறையுண ராத மீன்வழிப்
பாதி யைப்பாய் வருபரி விக்குமே. (3)

அரசரிற் பா . . . . ன்றலத்தி லாலவாய்
யரசெறி யிலிங்கத்தவ் விலிங்க மோங்கிய
தரையிலைத் தீர்த்தத்துங் கரந்த தாமரை
நிரைபலந் தருமென நேமி கூறினன். (4)

நெறிநன் னிமித்தமே நிகழ்ந்த தாற்பரத்
திறையவர் தருபல னெளிதிற் கேட்டனன்
பொறியுடற் பிணிபவம் பிணியும் போக்குவான்
செறிவனென் னுளங் கொள வருணன் சென்றனன் (5)

வருணனு புட்கல மாதி வான்விட
விருணிறை தலமுந்துரு மேறு சிந்தியே
சுருணிறை பெரும்பெயல் பனிக்குத் தூணெனப்
பொருணிறை கூடலிற் பொழிந்த வென்பவே. (6)

மதுரைமா சனமெலா மாழ்கி வெந்துட
னதிரொலி பரப்பிவா யரற்றிப் போற்றியே
விதிர்விதிர்த் தெம்பிரான் கோயின் மேவலுங்
கதிர்முடி துளக்கியெங் கடவு ளேக்கினன். (7)

விரிசடை நதியினு மேகத் தைப்படைத்
தெரியுமிழ் நாநிமிர்த் தெழிலி நான்கையு
மரியகூ டற்றுளி யுரும லார்கென
வுரிய நாயக னருளொடுங் கூறினன். (8)

எழுந்ததார் நான்குமிப் பந்த ரேய்ப்பமுன்
பொழிந்தகா ரோர்துளி பொருந ருப்புரந்
தழிந்தபல் லுயிரெலாங் கட்டுட் கொண்டதாற்
கொழுந்துசேர் சடிலத்துக் குலவு மேகமே. (9)

யோசனை யிரண்டகட் டொருக்கு நான்கதாய்
வீசொலி முதிர்கடல் வேந்தன் காரினை
யாசறப் பருகலும் வெள்கி யம்முகின்
மாசுடன் வரைதொறு மறுவிற் றென்பவே. (10)

கடலிறை வெறியியற் கடல்கங்கை தானுந்தி
யடனதி பலவுமில் வாடகக் கஞ்ச
மிடைவிடை நிரைத்துச்சேர்ந் திருக்கை மீச்சுமந்
துடனிறை கணத்துட னுவந்து மேவினன். (11)

(வேறு)

தலைவி ரிந்தகற் சரபமத் தன்மைநா
ணிலமி சைந்திடாத் தேர்நெடு மால்கணை
குலவு முப்புரங் கொன்றது மூரலாந்
தொலைவி லாவலிச் சுந்தர நாதனே. (12)

அன்ப ரின்ப தலாத்தரு ணுதனீ
யென்ப ரத்தற மென்வயிற் கண்டனன்
பொன்பொரு சடிலப் பூத நாயகன்
றுன்ப நீக்கிய சுந்தர நாதனே. (13)

ஆதி யேனமு மன்னமு மாயடிப்
போது மேற்சடைக் காடுந்தேர் போதினி
லோது தம்முடைப் பரனே ரோர்ந்திலாச்
சோதி யேயெனுஞ் சுந்தர நாதனே. (14)

மாலை நீபவ னத்த வார்ப்பணி
யால வாயகா லாந்த மீன்விழிப்
பாலு றைந்தபார் சுகரு ணுகரா
தூல சூக்கும சுந்தர நாதனே. (15)

ஏற்ற விச்சுவா தீகமே வித்தையா
யாற்றல் சேர்பவ வாற்றும தத்துவ
நோற்று ணர்ந்து நுணங்கறி விற்கெதிர்
தோற்று நிற்கள சுந்தர நாதனே. (16)

மறையி னிச்சி மலர்ப்பதம் வைத்துவை
யறைய னெண்ணிலா தாதி யநாதியாய்
நிறையுஞ் செல்வ நிறைத்திடர் நீக்கியத்
துறையு மாகிய சுந்தர நாதனே. (17)

கங்கை திங்கள் கவுணிய செஞ்சடை
யெங்க ணுத விமையவர் நாயக
வங்கயற் கண்ணி யங்கணோ சைசெறி
துங்க வாலவாய் சுந்தர நாதனே. (13)

சத்த சத்திலாச் சற்சத் சித்தெனச்
சித்தரி டைப்படா சித்தர்தஞ் சித்தனே
வித்தி டைத்திரு வொத்துவித் தாய்வளைச்
சுத்த னேமருட் சுந்தர நாதனே. (19)

(வேறு)

என்று போற்றி யிருக்கை சுமந்துளந்
துன்று நண்பிற் றுருமயிர் தோற்றவே
மன்றி லாரு பிறப்பிற் கண்கள்வார்
புன்றலொன் றநீர்க்கிறை போற்றி யுவப்புற்றான். (20)

ஆல வாயனு மாது டன்னெருத்
தேவ வெள்ளிவோர் பெற்றபொன் வெற்பெனக்
கோல மான மமுக்கூர் பையக்காஞ்
சீல மார்வர தத்தொடு சேர்ந்தனன். (21)

உள்ளத் துற்ற படிவெளி யோங்கலும்
வெள்ளத் தார்களி வேலையின் றென்றலான்
வள்ளற் போற்றி வருணனு மோரதாம்
விள்ளத் தந்தரு ளென்று விரித்தனன். (22)

இன்னும் வேண்டும் வரங்கொளென் றெம்பிரான்
றுன்னு மாய்மலர்த் துன்னு நோயுடன்
மன்னு மென்சென் னரர்பிணி மாற்றென
வென்னை யாளுடை யான்களி தீர்ந்தனன். (23)

........சொற் போற்றினர் நேயமிக்
கோது வேதப் பலனுறு தீர்த்தசீர்
மேத கப்பெறு வாரென்று மீன்விழிக்
கோதை யோடு கோயில்புக் கானரோ. (24)

வருந்து மோதரத் தால்வரு ணன்பணிந்
தருந்த வத்திது சொற்றத றைந்தனந்
திருந்த சொக்கனவ் வீதியிற் சித்தனுய்ப்
பொருந்து நன்கதை யைப்புகல் வாமரோ. (25)

நான்மாடக்கூடல் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,831.

சித்தச் சருக்கம்

நீதிசே ரபிடேக பாண்டிய
　　னீணி லப்பொறை யாற்றுநாள்
பூதலப் பவநீங்க மன்னர்
　　பொலிந்து செல்வ மலிந்திட
வாதி யாகிய சித்தனுங்
　　கொருசித்த வேடம தாகிய
வீதிமாரவ மெய்த நான்மறை
　　தேடு தாளுற மேவினன். (1)

கெட்ட மேருவை வட்டவெஞ்சிலை
　　யாய்வ ளைத்து நிமிர்ந்துவெற்
பெட்டு மட்டம தாக்கிவிட்டெறி
　　முச்சு டர்க்க ணிமைக்குளே
பட்டொ டுங்க வொளித்து மிவ்வுள
　　வோபு விப்பல னுயிர்க்கெலா
முட்டெ ளிந்திட வுயிருமாயத
　　னுணர்வு மாயின் னுற்றனன். (2)

அண்ட மோரணு வாக்கி யவ்வணு
　　வண்ட மாக்கியு முத்தொழில்
கண்டபே ருளரோ விதோவிழி
　　காணு மென்றெதிர் காட்டியு
முண்ட ஞான மளித்த ளித்து
　　மொடுக்கி நல்கி மறைத்திடக்
கொண்ட வல்வினை யாட லானிறை
　　கூடல் வீதி புகுந்தனன். (3)

நிவந்த செஞ்சடை சுற்றவிட்ட
　　வார்நி லாமதி நீங்கவே
சிவந்த கண்ணிழ லொக்க
　　மத்தக நீற்றிடைச் சுடர்கோவே
நவந்தரும் படிகச்செ வித்துணை
　　நாட்ட நீளணி காக்கவே
யுவந்த வெண்பிறை யாடவர்நில
　　வொக்க நீறு குலாவவே. (4)

வல்லியத் துரிகடக நூபுர
மாத்தி ரக்கதை யாசனஞ்
சொல்லி டத்தமை யாமுந் நூலணி
யோக பட்டிகை யுலாவவே
வலனிழைத் திடுமிரலே நாதம்
விளங்கு கோவணம் வேத்திரம்
புல்லு பொக்கண நீறுசெம்மிய
கோயில் விஞ்சொளி பொங்கவே. (5)

சுந்தரன் தனிபுரு வெடுத்தன
சுந்த ரன்புகல் சித்தனு
மெந்தை புன்முறு வற்சிறப்பொடு
கேட்ட மெய்வர மீந்துமே
சொந்த பங்குவர வெதிராமுகர்
பல்வினை யகன்றிட வலகை
சிந்தை வந்தநன் மகவுறப்பிணி
தீர நீறு தரித்தனன். (6)

விருத்த ரைச்சிறு மைந்தராக்கி
விருத்த ராகவம் மைந்தரை
பொருத்த வெற் பனு வாக்கியவ்வனு
வெற்ப தாக்கியோர் போதிலே
திருத்து ளப்பகர்ந் துசேண
மனுறச் செறிந்த வியூகமே
யிருத்தி வட்ட மதாய்நடித்
துமிடற் கிரும்பைகை யீந்தனன். (7)

விலங்கை வீதி விளித்துவேற்
றுருவாக்கி வெள்ளி யராவெனக்
கலந்து பஞ்சி கரம்போர்த்
தருசித்தன் மேவுதல் கண்டுகண்
டிலங்கு வான்மழை பெய்தசோலை
தளிர்த்த யாண்டையு மெய்திலே
புலங்கிளர்ந்தடி கண்டு தொண்டொடு
போற்றி வல்வினை மாற்றினர். (8)

ஆதி யானவ ராகமூன்று
வராக மூன்றன் னீரொலி
பேதி யாதுறை தம்பமுஞ்செய்து
பெயப்பொ ருந்துடல் குறுகியுங்
கோதி லாவறு பத்துநாற்கலை
பலர்கொ ளத்தெளி வாக்கியுஞ்
சோதி யாய்வரு சித்தனைப் பலர்
துன்னி நண்பொடு மன்னினர். (9)

ஊர்வி ழாவென வந்துநாடி
யுரைத்த வாய்மையை வெஃகியே
சீர்வி ழாவணி சொக்கனே
யிவனென் றுளார்சில ரிவன்வரப்
பார்வி ழாவொலி பொலியு
மென்றனர் சிலர்ப ணிந்தனர்
கார்வி ழாநிமிர் மானவேழமு
ணண்பி னோடு கலந்தனர் (10)

வலப்பதத் திடையோக பட்டிகை
சுற்ற வாம நலற்புத
நலத்த மூலமதிற் போர்ச்சடை
நாட்ட நீறொளி மிக்கவே
வுலப்புயத் துடை படிக முத்திரை
யொளிர வேத்திர மொருகைகொண்
டலக்க ணீக்கிய சித்தனும்புவி
பரியு ணண்பி லமர்ந்தனன். (11)

(வேறு)

இன்னணஞ் சித்தர் சேர
வரசனு மிளையர் தம்மை
வைந்நுதி வேலிர் தம்மி
னமதுழை யெனவ முத்த
வன்னவ ரய்யன் செய்கைக்
குழையரா யணைகி லாமற்
றுன்னலு மமைச்சர் தம்மை
விடுத்தன னவருந் தொக்கார். (12)

சித்தனே வடிக டன்னைச்
செழியவேந் தருளைப் பாடென்
னொத்தசொல் லுரைக்கு நக்கு
வேந்தரோ டுரிமை நட்பு
மெய்த்தவர்க் கென்னை யென்று
னமைச்சரும் வேந்தர்க் கோதப்
பத்தபாம் புளங்கொள் வெம்மைப்
படவர சுறைந்தா னன்றே. (13)

(வேறு)

சித்த னாகி விழிப்புறஞ் செவ்வியை
மெய்த்த வத்து விரித்தனன் வேந்தனான்
மத்த வெஞ்சிலை வாரணங் கன்னலந்
துய்த்த காதை தொகுத்துரை செய்குவாம். (14)

சித்தச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம், 1,845.

கல்லானைச் சருக்கம்.

அதிரும் பார்புய வானடு ரசனுல்படைத்
தெதிரும் வெண்பனிக் காலம்வந் தெய்திய
முதிரு நல்வினை முந்திவந் தூட்டுநாட்
பொதிர்வு றுது புகுந்தது போலவே. (1)

உடன டுக்க வுடன்றெழு வெண்பனி
கடலி றைத்துத் திவலைகள் கான்றெழுந்
தடல்ப டைத்த புயற்பொர வார்ந்தென
மடல்ப டைத்துயிர் விண்புதைந் திட்டவே. (2)

சலித்தி டாவரை வெண்முகிற் றூனைபோர்த்
தொலித்தி டாவிழை வேய்நெருப் பூடுலாப்
பலித்த காரகிற் றூமம் படிந்ததான்
மெலித்தி டாமலுய் வார்கொள்மெய் வேந்தரே. (3)

உத்த ராயணஞ் சேர்ந்தும்விண் ணூர்த்திர
னுய்த்து வெண்பனிச் சூழலை நீக்குறு
மெத்த வங்கித் திசைவிழைந் தானெனி
லுய்த்த மாந்தர்சீ ரோதுறுந் தன்மைத்தே. (4)

திருதி வேந்தர் சினத்தெதிர் மன்னரைப்
பொருதி டாதெளி யோரைப் புகைந்தெனப்
பருதி நாயகி யென்று பணிக்குழாங்
கருதி வாரிசக் கான்முற் றுஞ் சுட்டவே. (5)

வாச வன்கர வான்கதி நீரனுகந்
தாசை தோறுங் கலுழிகொ டார்த்தன
மூசு வெண்பனி வெண்முகிற் கைகளால்
வீசி யுண்ட வெளிபுதைத் திட்டவே. (6)

வள்ளி யோர்வரை யாநல் குரவினு
முள்ளு வந்தரு ளீவென வோங்குகா
றெள்ளி கால்திரண் டீனு நீர்பொழிந்
துள்ளு வெண்பனி தூய்விரைந் தார்த்தவே. (7)

சுற்று வெண்புகை நெய்ச்சுட ரொப்பென
வுற்று வெண்பனிச் சூழல்விண் ணோங்கிய
வெற்றி வெங்கதிர் மாய்ந்தது வேந்தர்க்கு
மற்ற தீர்வலி நீத்தென யாண்டுமே. (8)

பெருமை யல்புயன் மாறப் பிறிதுநீ
ரரும்பு வெண்பனி யாய்ச்சொரிந் திட்டவை
விரும்பு வேந்தர் வலிகெட வெவ்வினை
பொருந்து வேளிர் புகுந்தன வொத்தவே. (9)

சுருள்வி ரிந்த பனிக்குளிர் தோன்றவூண்
மருள்பு குந்திடத் தீமை வழங்குகவ்
வருள்பு குந்தவர் பொன்மொழிந் தாவிகொள்
பொருள்வி ரும்பு பொதுமின்னார் போன்றவே. (10)

உடந்தை காற்குரு தாய்வட வானலத்
தடர்ந்துற் றூர்வ திற்புகை பாய்ந்தென
விடந்தொக் கரவென வெண்பனிச் சூழல்கள்
படர்ந்தெ திர்க்கும் பரந்து நிறைந்தவே. (11)

பட்ட வெண்பனி வாரிசப் பண்ணையைக்
கட்ட போது கதிர்க்கம லத்துடன்
மட்டு லாவ்யன் வாரிச நீங்கில
வட்ட காலத்தி லாதிகைக் கஞ்சுதே. (12)

கதிரின் கற்றைப் பனிமதிக் கற்றையென்
றதிரு மவர்கஞ்ச மொய்ம்ம லர்க்கணார்
வெதிர வெண்பனிச் சூழலி யாண்டுஞ்சேர்ந்
துதிர்வு றுவுள மஞ்சவா னுய்த்தவே. (13)

கூதிர் வெம்பனிச் சூழலிற் கோதைய
ரோது கால்தர செய்மிவிண் ணோங்கிய
தீதின் மாடத் தகில்புகை தேக்கவே
யோதி மக்குழா முற்றன போன்றனர். (14)

மாட முற்று முயரத்தென் மாடமீ
தாடு பொற்பணி யாதவன் வெம்மையை
வீட முற்றி வசிக்குங் கொடியெனச்
சேட கத்து மீஇத்தசை யோங்கிற்றே. (15)

காலை மாலை யளத்தில் கன்னற்செறிந்
தாலு நீர்க்குறு மைக்கருள் வாய்ந்தன்றியே
மேலு ணர்ந்திடா யோகரின் வேட்கைதீர்ந்
தேல வெண்பனிச் சூழ லெதிர்ந்தவே. (16)

பொருப்பு மாடம் புதின்மர மீதெலாம்
விருப்பி னித்திலக் கஞ்சுகம் வேய்ந்தென
மருப்பொ ரும்பனி வார்ந்தன வார்மலர்
நெருப்பெ னப்புள் விலங்கின நேரவே. (17)

இன்ன தோர்பணி மெய்புதைத் தென்னவே
துன்னு நீற்றுடன் சுந்தரச் சித்தனு
மன்னி யாலவா யுத்தர சர்க்கறி
வன்ன யல்பரி வோடு தழீஇயுற்ருன். (18)

(வேறு)

மகரவெய் யவன்சேர் காலைச்
சொக்கனை வணங்கி வேந்த
னிகரில் பொன்வதைத் தாடி
நீற்றொளி புகைத்த மெய்யன்
பகர்வரு மானஞ் சூழ
வாயுவின் றிசைப்ப ரித்த
புகர்மத வெற்பி னேர்பாற்
சித்தனைப் புறத்தோர் கண்டார். (19)

மறியுடை மடிவார் மொய்ப்பை
வலிய போர்த்த னூர்கள்
சிறிகறி நீயகறி யென்னச்
சித்தனு மிருகண் மூடி
யெறியொலி யனுகர்த் தீப
மென்னவே யுறைய வேந்து
நறிய பூவார் சேரும்
வண்டென நண்பி னுற்ருன். (20)

கண்டனன் சித்தன் றன்னை
வழுதிய ரென்னக் கங்கைத்
தெண்டிரைப் பொருந்தக் காசிப்
பதியெலாம் வல்ல சித்தன்
மண்டலச் சிவலிங் கத்தை
மதுரைநா யகனைப் போற்றி
திண்டிறல் விஞ்சை காட்டித்
திருநல்கச் சேர்ந்தோ மென்ருன். (21)

அத்தலை யொருவன் கன்னல்
கொடுசெல வரசன் வாங்க
வத்தலக் கல்வே ழத்தை
யருந்துவி யேது வேண்டி
லொத்தியாந் தருவ மென்ன
வெமக்கெலாம் பொருளு முண்டென்
றத்தனக் கல்வே ழத்தைக்
கழைத்தருளென் றருளிச் சொன்னுன். (22)

எனவிழி வன்னி காலப்
பின்னிறீஇத் தடங்கை நீட்டிப்
புனையொலித் திசையின் வேழம்
பூமியின் வெருவ நின்று
அனையவன் முத்திறோ
அருந்து றத்தார் மன்னர்
முனையவே தென்ன னீக்கி
முதலவன் றிருத்தாள் பூண்டான். (23)

சுந்தர னென்ன வுள்ளந்
துணுக்குடன் ருன்வினைய மிக்கு
வந்தயாஞ் சித்த வேட
மற்றுநின் வடிவே போற்றி
யுய்ந்தன னடியர் தீமை
போற்றலுன் கடனே யோர்சேய்
தந்தரு ளென்னக் கூடற்
சித்தனு மகவைத் தந்தான். (24)

(வேறு)

அன்புசே ரபிடேக பாண்டியன் பணிந்தார்வத்
தின்பவேழங் கழைதனை நுகர்கதை யிசைத்தா
மின்பொருந்திரு கொட்டொரு கரமலை வெற்பாய்
மன்பொருந்து மட்டாலை வீரன்செயல் மொழிவாம். (25)

கல்லானைச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,870.

லீலா காண்டம்:

அட்டாலைச் சருக்கம்

மெய்ய ணைந்தணை யாப்பொருள் பரைக்குமீ யறிவு
வைய பெக்கு மரமுழு முதனுள் சுடர்வழுத்துஞ்
செய்யர் தொண்டர்சிந் தாமணி மனுதியுந் தெளியாப்
பொய்யி லாமெனச் சொக்கனை மனவெளிப் புணர்ப்பாம். (1)

மற்ற மன்னவன் விக்கிர பாண்டியன் மனுநூன்
முற்ற வேயர சாட்சியி னுறையுநாண் முனையில்
வெற்றி கொண்டிலாச் சென்னியந் தண்டக மேவிச்
சுற்று தீவினை யமணர்பாற் சரணெனத் தொடர்ந்தான். (2)

சைய மேதிரி கூடங்கோ வர்த்தனங் கரிஞ்சந்
துய்ய வஞ்சமே விந்தமம் பொற்சுரும்பு குஞ்சரஞ்சேர்
வெய்ய நான்கிரண் டாயிர மமணரை விளித்து
நெய்யு லாந்தழல் செறியபி சாரமே நிறைத்தான். (3)

பாயு டைப்பறி தலையினர் பாலியங் கடையின்மெய்
யோச னையிரண் டுடைச்சா லையின்விடை கவாய
வோச னைக்குழியிற் காஞ்சிரச் சவித்த..........
........னுப்புண் மாநெடுங் குருதிதேக் கினரால். (4)

நிம்ப மெட்டயி லத்தனல் வளர்த்திட நிமிர்ந்து
கொம்பு டன்கர நிமிர்மலை யெரிவிழி கொள்ள
வம்ப ரஞ்செவி டாகவாய் விட்டெதிர்ந் தெழலும்
வெம்பு நெஞ்சி னருட்களி திளைத்திட விழைந்தார். (5)

கண்ட சென்னியுங் களித்தனன் மன்னரைக் கருத்துட்
கொண்டு போற்றிவென் றனமெனச் சேனையுங் கூட்டித்
தண்ட கத்தினு முறந்தையிற் சார்ந்து பாண்டியன்
விண்டி டப்பொரு கெனவிட நடத்தவவ் வேழம். (6)

(வேறு)

உறந்தைவள வன்செழிய வுன்னபரி வோடி
யுயிருண்ண நினையா மனுவிறு
லறைந்தைசம ணர்க்கடி தழைத்தழ லிடத்தி
லபிரா மதியற் றியதிலே
பிறந்ததொரு வெங்களிறு கட்டழல் பிறக்க
நிமிர்மூச்சொடு பிறங்கல் சருகிற்
கறங்கவடி யிற்பணி நெடிக்க விடவால
மெனவந்த தெனமுன் கழறினர். (7)

வந்தகரி விட்டவிழி யிற்றழ லிறைக்க
விருவரா செவியசைத் துலகெலாந்
தந்தவழு திப்பெயரை நாடிவர மன்ன
னுடைநாக மொடுசேனை முறியச்
சிந்துபு நிழற்பொரு துழக்கியம ரோர்தருவை
வெம்மையொடு தீர்த்து ராவே
யிந்துகுல மன்னன் வெருவிப் பொருவிலா
மதுரை நாதவென வேத்தினரோ. (8)

ஆயவுரை கூறுமுன மஞ்சலென வாணி
மதவானையை யடர்க்க முகிரும்
கோயிலர ணக்குணம் திசைக்கண் ணொருமண்
டபமமைத் திரேலெனக் குறுகியே
தூயகணி நூல்வழி யெண்ணிரு தடக்கரிய
தூணினி ளமைக்க யதின்மே
லுயகனும் வேடனென விற்கணை யுடன்கரி
தனக்கெதிரி னண்ணி னனரோ. (9)

தழைத்ததழை யிற்சிகைய தயங்கவுரி மீதுபுலி
வாளுகிர் தரித்து மிருபா
லிழைத்தமணி முத்திரு புயத்திலக வில்லிட
னேந்தி நரசிங்க மெனுமம்
புழைப்புதை யிடத்தது தொடுத்துமத வோங்கலி
னிடத்து விடவொள் ளெரிவழாப்
புழைக்கைமத வெற்புமறி வுற்றுமலை யொப்ப
விழாநின் றதுபோர் புகலவே. (10)

(வேறு)

அதுகணத் தரசன் போற்றி
யையவட் டாலைச் சொக்க
விதுமுடிப் பரம விந்த
மண்டப மேவி யார்க்குங்
கதியினைத் தருதி யென்று
வேண்டலுங் கருணை கூரத்
தியினல் வரமுந் தந்து
சுந்தரன் கோயில் புக்கான். (11)

அயனுளத் தெழுந்த நால்வர்
சாபத்தி லவுண ராகி
வயனிறை ககனக் கண்ண
னுட்கன வானு டைக்கப்
பயனிறை யேன மாகி
முன்னவர்ப் படுத்த மாயோ
னுயர்புரி யொன்று மேல்பால்
வராகவெற் பென்ன வோங்கும். (12)

ஆடக னுலகங் காவல்
மைந்தனுண் மைந்தன் றேன்றி
யூடக லாத நண்பிற்
போற்றமா றுணத் தோங்கி
நாடக நிலம்பு தைக்க
நரசிங்க மென்ன வீய்த்துப்
பாடக லாவம் பாயச்
சொக்கன்பர ணியிற்சேர்ந் துற்றுன். (13)

அக்கணை கோத்து வாங்கி
யட்டாலைச் சொக்க னுமந்
தொக்குவெவ் வினைசேர் வேழம்
படுத்திற் றேற்ற நல்கி
நெக்கடி போற்றுங் கோலர்
நாரசிங் கத்தை நேரே
யிக்கிரி யுறைதி யென்னக்
களிப்புட னினிதிற் சேர்ந்தான். (14)

அம்மலை மேவிச் சொக்க
னடித்துணை நாளும் போற்றி
மைம்மலை வண்ண நார
சிங்கமாய் மருவு நாளில்
விம்மலை யொழித்த வாட்க
ணன்சுதன் மேவிக் கூடச்
செம்மலை போற்றி யேந்த
லேவவச் சிகரஞ் சேர்ந்தான். (15)

குண்டர்தீ வினையாற் சேருங்
குஞ்சர வெற்பி னேறி
யண்டர்கள் சூழ நீதிப்
பிரகலா தனுமன் பாகி
தண்டவம் புரிந்து நார
சிங்கத்தைத் தறியி லன்னுட்
கண்டதோர் விடிவிற் கண்டு
போற்றிக்கூ டற்க லந்தான். (16)

கூடனு யகனைப் போற்றிச்
சீவன்முத் தப்பேர் கொண்டு
நாடலார் பராச ரப்பேர்
நற்றவ னன்பி னோடு
மாடல்சேர் கவுரிப் பாத
மன்புற வணங்கி யுற்றுன்
நோடலார் கரத்திற் றேன்றுங்
குஞ்சர வெற்பின் மாதோ. (17)

பறிதலைப் பிண்டி நீழற்
பாயுடைப் பள்ளிப் பாழிச்
செறிதிரட் குண்டர் சென்னி
பணியினல் விட்ட சீற்றத்
தறுகணப் பதலை வெற்பாய்
மாயனுஞ் சாரல் சொற்றும்
மறுகிய கவுரி யென்னும்
பார்ப்பனிக் கதைவ டிப்பாம். (18)

அட்டாலைச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,888.

கவுரிச் சருக்கம்

நான்மறை யொலிவழா நண்ணி வேள்வியை
நூன்மறை யியற்றிய நுணுக்க நுண்பதி
பான்முறை நீற்றுடல் பனவர் வாழ்பதி
வான்மறை யவிநுகர் புல்லை மாணகர். (1)

வேள்வியஞ் சாலையு வேத வோதையுந்
தாழ்விலாக் கூவிளந் தறியி னீட்டமும்
வாழ்வுடை வையசுவ் வொலியும் வாய்த்தது
சூழ்வரு மங்கல வூக ரெுக்கது. (2)

சுப்பிர மணியன்வட் காரத் தின்சார
மொப்பி லாதப்பதங் கிரமத்தோ டொண்சடை
மெய்ப்படு நீற்றெடு வீ று மாண்டது
தப்பிலா கமத்தொலி நெறியிற் சார்வதே. (3)

அப்பதி வாழ்விருப் பாக வந்தண
ஞெப்பருஞ் சுவிருதை மனைவி யோடுயர்
துப்புடைச் சுந்தரற் போற்றித் தூய்வுடை
மெய்ப்புதல் வியைப்பெற்றுக் களிப்பு மேயினன். (4)

கண்டியி னீறுமெய்க் கவின வஞ்செழுத்
தென்புடை வோதிய மறைகு னீன்றரு
ளொண்டொடி நாமமுங் கவுரி யென்றுரைத்
தண்டவான் பிறையென வளர்வ தாயினள். (5)

ஆண்டோரைந் திறந்கபி னரிவை நல்வினை
தூண்டவே தந்தைபாற் றெடர்ந்த நல்லற
மீண்டிய மனுவினை யிசைத்தி யென்னலு
மூண்டவண் டழற்றழீஇச் சுழியினை மோந்தனன். (6)

மாயையாய் சச்சிதா னந்த மாய்மலர்
சேயிழை கலைாகள் விழியிற் செவ்வியாய்த்
தூயவீ டளித்திடுங் கவுரித் தோகைதன்
னேயமாய் மனுவினை நினைந்து போற்றென்றான். (7)

இருடியே தெக்கணு மூர்த்தி யின்பமார்
கருணைசேர் சந்தசு நிறைகா யத்திரி
யருணிறை தேவியே தெய்வ மாயருள்
பொருநிறை மனுவினைப் பூவை போற்றுவாய். (8)

(வேறு)

சுதைக்கடன் மணித்தீ வத்த
மண்டலந் துலங்க வெய்யோ
னுதித்தபத் திரபீ டத்தெம்
பிரான்மறை யடியுறைந்து பாங்கின்
மதக்கரி விசர்கற் பாத்துத்
தாமரை மலர்க்கை யேந்தி
விதித்தசெவ் வாடைச் சாத்துந்
தியானமே விருப்பிற் கொள்வாய். (9)

இம்மனுக் கேட்க வெய்துந்
திருக்கவி லக்கஞ் செபித்தா
மைம்மலி களன்சா லோக
மிரண்டிலத் தத்தின் மூன்றிற்
செம்மைசேர் நாலி னுலாம்
பதந்தரு செபத்திற் பத்தென்
றம்முறை யிருக்கி யஞ்சே
ரோமமந் தனரு ளுமே. (10)

எனவிருப் பாக்க னென்னு
மறையவன் மகட்கி சைப்ப
வனிதையம் மனுவைப் போற்று
நாள்வரு வயதோ ரெட்டாய்ப்
புனிதன் மணத்து வேறோர்
பிரமசா ரிக்குப் பொற்பின்
மனையறம் படுத்தி னீட்டு
புண்டரத் துளர மர்ந்தாள். (11)

மற்றவ டன்னை யந்த
மாணிகொண் டில்ல மேவ
வுற்றதாய் கனன்று நீறு
புனைபவர் மகளென் றோதிப்
பெற்றசேய் தன்னை நீக்கிச்
சிறிதுநா ளிறந்த பின்றைச்
சுற்றமோ டிவனை யன்றி
வேறோரூர் தொடர்ந்தா ரன்றே. (12)

விருத்தமோ ருறுதிக்கொண் டென்ன
வில்லின்மெய் வளைந்து மீதார்
திருத்திரைக் கங்கை முற்றும்
புதைத்தென நரையல் சேர்ந்து
பொருத்துதண் டத்தை யூன்றி
நீறுடல் கண்டி போர்ப்ப
வருத்தமோ டெந்தை யந்த
மனையினில் வினையிற் சென்றான். (13)

கண்டனன் கவுரி சொக்க
நாதனே யெனக்க ளிப்ப
யொண்டொடி பசித்தே மென்ன
வுள்கியிற் சேர லோடும்
விண்டதாட் பூட்டு நீக்கி
முதிரைவெள் ளரிய னந்தந்
துண்டிடு மென்ன வுண்டு
மதனிலோர் வடிவத் துற்றார். (14)

நெரித்தனள் நங்கை யுள்ளம்
வெரீநிற்ப மாமி மேவிப்
பரித்ததாட் தடையை நீக்கப்
பரனொரு பால னாக
வரித்தவிம் மகவே தென்னச்
சீதேவி மகவெ னத்தீப்
புரித்தெனக் கண்சேர்ந் தில்லப்
புறத்திற்சே யுடனீத் திட்டாள். (15)

பொருமதிக் குமுதத் தேனிற்
புலம்புமுத்து பிறப்பக் கண்சேர்ந்
தருமதிக் குழவி யோடுங்
கவுரிமெய் யலம்வந் தெக்க
திருமதிச் சடிலச் சொக்கன்
விடையினிற் சேர்ந்து மீளாப்
பெருமதி வியப்ப வந்த
பெண்ணுடன் கோயிற் சேர்ந்தான். (16)

அரியயன் முதலோ ரெந்தை
திருவிளை யாட லந்தேர்
வுரியவோர் தினத்து மூன்று
பருவமுற்றும் வந்தா னென்ன
விரியொலி மறையிற் போற்றி
விமலனுங் கவுரி தன்னை
வுரிமைசேர் கவுரி யென்னக்
கொண்டுநண்பு வந்தா னன்றே. (17)

கனங்குழை கவுரி தன்னைக்
  கவுரிபோற் கொண்டு சொக்க
னனங்குழைந் தெய்து மாட்சி
  வடித்தனம் வழுதி காணச்
சினங்கது வாவக் கட்டுச்
  செஞ்சடை நிமிரக் கண்ண
லனங்கனைப் பொருதோன் மாறி
  யாடிய காதை சொல்வாம். (18)

கவுரிச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,906.

மாறியாடுஞ் சருக்கம்.

விக்கிரம பாண்டியன் இரும்புவி பரித்தே
சொக்கனடி சேரவிரு தோன்றலெனும் வேந்தன்
மிக்கிராச சேகரனா மெய்க்கலைக டேர்ந்தா
னக்கனடம் பயில்வுறா வேரிய நண்பால். (1)

காவிரி யிரிந்துகய வாயினை நெரிக்கும்
பூவிரி புகார்நகர் பொருந்துகரி கால
னாவிரி தரச்செறி வெண்ணாவ னிழலார்தந்
தூவிரி நடக்கலை மணர்ந்திரு டொடர்ந்தான். (2)

அந்தவள வன்புடையோர் கூத்த னணிகூடல்
வந்துசெழி யனகல கணமற்று முணர்வுற்றே
யிந்தநட நீவலைகொ லெங்களிறை யல்லாற்
சுந்தர னடம்புரிவ னென்னவுரை செற்றான். (3)

நடத்தொழில் பயின்றில மெனாவுள முரக்கு
லடற்செழிய னுங்குலவு கூத்தனுள மாரத்
தடக்கரி பரித்திர ளளித்துவிடை தந்தே
படத்திடை நடத்தொழில் பயின்றுநல மிக்கான். (4)

சென்னிவிடு சென்னியி னடத்தொழில் றெளிந்தே
னென்னவிறை கோயிலிடை யெய்தியொரு தோளின்
மன்னுநட முள்ளினன் வருந்தியிது மாறித்
துன்னிநடி யென்றுநிறை நண்பொடு துதித்தான். (5)

நெடுந்தின நிருத்தமுட னின்றபத நோவத்
தடுங்கணுத லாயமறு பதத்துநட மாறென்
றடன்கைவடி வாளுருவி யூட்டியிடை பூட்டப்
படுந்துடியன் மாறிநட மன்பொடு பயின்றான். (6)

வீசுசடை திக்களவ வெண்டிறை யகங்கை
பூசலிடை வெண்பிறை புயங்கமித மித்தா
ராசையினு கஞ்சநிறை வட்டமுட னையன்
மாசறு மெய்யர்தம் மனத்தினு நடித்தான். (7)

கண்டசெழி யன்விழி கலுழ்ந்துமறை காணப்
புண்டரிக பாதநிறை பூரண மகேச
தொண்டனுறை கொண்டனை யெனத்தொழுது போற்றி
விண்டவுள நண்பினொடு நின்றிவை விரித்தான். (8)

இந்தநட நாளுமொழி யாமலரு ளெய்தி
வந்தவடி யார்கதி பெறத்தனி வழங்க
வந்தரியோ டெய்தவரம் வேண்டியல் வேந்த
னெந்தைசிவ ராத்திரியி னயந்துதுதி செய்தான். (9)

மாறனுள மன்புபெற மாறி நடஞ்சேர்ந்
தாறுபுனை வேணியருண் மேவிய தறைந்தா
மூறுபல தீவினை யொரிப்பவ மெனும்பைஞ்
சேறுபொறுக் கின்றசிவ ராத்திரியி னிசைப்பாம். (10)

மாறியாடுஞ் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1,916.

சிவராத்திரிச் ச்ருக்கம்.

ஆரணக் கடவுளு மவனை யீன்றரு
ணாரணக் கடவு நிகழ நாதனுங்
காரணக் கடவு ளென்னுமற் கைக்கவச
சீரணத் தம்மிற்றா முயற்சி செப்பினார். (1)

இருவரும் புகல்வுறு மெல்லை நான்மறை
வெருவருத் தோன்றியைந் தொழிற்கும் வித்தென
வுருவரு வாயுறை யொருவ னன்றிநீர்
பருவர லூறின மிகும்பழியின் றென்னவே. (2)

கொண்டிலா கந்தையிற் சுருதி கூறுசொற்
கண்டுயர் பிரணவ மெழுந்து காதலால்
விண்டசொல் விடுமென வேமுனி மீக்கொள
வெண்டவத் திவ்வுரை யிசைத்த தென்பவே. (3)

ஆதியு மநாதியு மான நாதனைச்
சோதியை யடிமுடி தொடர்ந்து கண்டபே
ரோதிய வுயர்ச்சியி னுரிமை யோரெனு
வேதிய னன்னமா லரியின் மேவுற்றார். (4)

சுடர்விடு தழற்பிழம் பொழியிற் றோன்றியொப்
படர்தலைப் பகுதிமேல் விகுதிப் பாலுற
வடரடிப் பாதலங் கடப்ப வண்டமு
முடைபடச் சொக்கனோ ருருவிற் றோன்றினான். (5)

இடந்திடந் தெயிருமு கொழுவொற்றி யாண்டையு
நடந்திடு வராகமு நாடிக் கண்டில
படர்ந்தவெள் ளெகினமும் பறந்து கண்டில
வுடைந்துள நெக்கிநின் றுருகி யோலிட்ட. (6)

பிறந்திறந் தாய்ப்படும் பீழை யெண்ணிலா
நிறைந்ததன் பெருமையைத் தேடித் தீமையை
யுறைந்தயாங் காணவு முனையெண் ணாமனஞ்
சிறந்தருள் படைப்பவுந் திறத்தை நல்கென. (7)

கழலிடைச் சிலம்பொலி கடுப்பத் தாணுவு
முழல்பவை யொழியுமெவ் வுருவந் தோன்றுமிவ்
வழலுறு நாளினன் பர்க்குத் தீமையைச்
சுழல்வழிப் பஞ்செனத் தொலைத்து வீக்குமே. (8)

மாகநன் மதிக்குறை மதிச்ச துர்த்தசி
யாகுமிவ் விரதநீ ரனுட்டித் தும்முளப்
போகமே பெறுதிரிப் புவன மூன்றிற்கு
மோகநெஞ் சொழித்துயர் முத்தி மல்குமே. (9)

ஆயிர மயம கநிரு பயரே
ராயிர வாச மெய்தி ளுயிர
மாயிர விச்சு வசித்த மைக்கினு
ருயிரத் தொன்றிந்த விரதத் தாற்றுமே. (10)

கங்கையுட் கரமுதற் றீர்த்தங் கண்ணுறீப்
பொங்கிநா ருண்டுபோ யாடி னும்புறத்
துங்கமா தலமெலாந் தோயினு மேம
தங்கண ளேன்பிணி லனந்தத் தொன்றுண்டே. (11)

வினையொரு கங்கைமூ வேணிச் சங்கமத்
தனகமா யர்ச்சித்து நூறுண் டார்க்கதி
முனையுநாட் படிப்புவி முழுது மந்தணற்
கினிதுற நல்கவோ ரியாமப் பூசையேய். (12)

மகரவெய் யவன்செறி யமரவில் வாரநாட்
புகலி யோகம் பொருந்துதைப் பொற்பிரண்
டிகல்பெரு கங்கைசா கரக்க ணீந்திடப்
பகருமா தானமா யிரத்தோர் பாற்பெற. (13)

கதிர்பொரு மிருளெனக் கலாப மாயுர
மெதிர்பொரு பணியென வெரீயெ ழப்படு
முதிர்முனி கானென மொழியொ ளுவினை
யுதிர்படு மிந்தநோன் பெதிரென் றேதுமே. (14)

எழுத்தினிற் பிரணவ மனுவி லஞ்செழுத்
தழுத்தி நூலி ளுகம மார்வினிற்
கொழித்தநன் பணமுடி யனந்தன் கொட்பென
வழுத்துறு விரதத்திவ் விரத மானவே. (15)

இணங்கியிவ் விரத நாயகன்வந் தெய்துநா
ளணங்குறு பாதக மமைந்து மோலிடும்
வணங்கிதான் புறநினைத் தவரை மாமறை
குணங்கொடு வழிபடுங் கருணை கூறவே. (16)

இவ்விர தத்தெமை யருச்சித்தி யாமநான்
கவ்விய மற்றுச் சாகரத் தமைந்திடில்
வெவ்வினை மடிபவம் வேறுமென வேயுந்தி
லவ்வியச் சிவநிசி யென்று செப்பியே. (17)

விரதகற் பத்தொடு பூசை மேதகச்
சரதமாய்ப் புகலெனப் பிரண வந்தனை
யுரைதரு பரன்றழ லுருவ டங்கமால்
தரதல முகிழ்த்த தவநெடுங் கண்ணினன். (18)

கண்ணிய மாலயன் காண வாங்கவர்
புண்ணிய மெனப்பிர ணவமும் பொற்புரு
நண்ணிய சங்கற்பம் பூசை நன்கெலாந்
திண்ணிதி னருளந் தெருளக் கூறிற்றே. (19)

அவ்வழி யரியயன் பூசை யாற்றியே
செவ்வழி யெம்பிரா னிருப்ப தம்பராய்
வெவ்வழி வினையொரீஇப் பதியின் மேவினு
ரிவ்வழி விரத கற்ப மிசைக்குவாம். (20)

(வேறு)

மாக நாண்மதிக் குறைமதி வரும்பதின்
மூன்றெ னுந்திதி மாருந்
தாக மந்தெளி சிவநிசி மதுகின
மருவு மென்றன் னுளி
லோகை யாயிருள் பரித்து நற்கதை
வினயக் கல்விநீத் துறைந்தப்
பாத சீகரக் கடக்கதி ரெழி வெழி
யமத்தொ டுஞ்சிறப் பாகி. (21)

நியம முற்றநீ ராடிநன் மலரொடு
நிமல னாலயத் தெய்தி
நயமு லாவுகோ மயத்தினிற் றமுக்கி
மேல்விதா னித்துநனி போற்றி
பயனுலாம் பகண்ண கதைவினு யப்புனற்
படிந்து நீறணிந் தெய்தி
யுயருமீ சனைப்பார்த் தமான மார்த்த
மேல்விதிப் படியுவப் பாகி. (22)

உத்த ரத்திலா வான மாசனம்
பாத்தி யம்முள நீங்கா
வைத்த வாச மனம ருக்கிய
நானம்வத் திரநூல் பூணசந்
தத்தொ டக்கதை மலரச கத்திரப்
பெயரருச் சினைபுகை தீபம்
பத்தியு னடிதாம் பூலம் பிரதக்
கணமுறை வழாப்பணி செய்வான். (23)

சர்வ வுக்கிர வீமச் சங்கர
மிருட்டி சமர கொக்கினன்
வருமகா நமாநமா வெனப்பிரண வத்தினும்
மாந்த மன்னுறப் பூசை
விரவு சொக்கனை மீன்விழி யைப்பராய்
மூவி தழ்வில் லத்தாற்
பரவி யாம நான்கினும் விழித்தாதி
முன்னடங் கதைபல நோக்கி ; (24)

அறுகுநீர் பலமலர்க் கந்தங் கடுகு
பாத்திரத் தருக்கியஞ் சொத்து
மறைநவச் சிவாயச் சோம முன்னி
யாமத்து மாகிருதி யென்ன
முறையி ரண்டிலேய் மிடிபோர் மூன்றி
னிற்சிறு நிசிமுதல் வாவென்
றறைக நான்கியா மத்து வில்லம்
பணித்தருக் கியமளித் தப்பால். (25)

எழுந்து காலையி னியம நீத்தந்
தணர்போ சனமியற் றுனம்
பொழிந்து மற்றவ ரேவலிற் பாரணம்
பொசித்து நற்கதை கேட்டு
வழிந்த நற்கரு ணைக்கடல் சொக்கனை
யங்க யற்கண் மாதைத்
தொழுந்த கைத்தவாய்க் கதியி னிற்பெற
நிறைவித மொடுதொடர் விப்பான். (26)

விதியு ணர்ந்திடான் பசித்தெழுந் தஞ்சுடன்
பூசை யேவிழை வாகி
மதிதெ ருண்டு கண்விழித் திடவப்
பலன்வருஞ் சிறுர்மட மாதர்
முதிய வாலிபர் மங்கல மிழந்தவ
ராயினு முன்னூற் போற்றக்
கதியுஞ் சேணலத் திருவு மெய்சித
லக்கர் நெல்லி நிகராமே. (27)

பஞ்ச பாதகம் புருகண வத்தி
கோவதை பாதா ரஞ்சேர்
வஞ்சு ருவுப் பாதக மந்தணர்
சிவ நிந்தை யனையனை தந்தை
துஞ்ச மோத றேவாலே யப்பொருள்
கொளென்மற மகத்தொகை நீக்கப்
விஞ்சு பத்தரை யிகழ்தல் வேறுள
வினைவிழுத் திருந்திட வீயும். (28)

விழித்த பேர்க்கான கடவு ளருடன்
மரீஇவேண் டியபொரு ளீவன்
தெழித்த தான மாதவ மகம்பூ
சனைசெபந் தருசிறர் கன்னி
பழித்தி டாத்துணை பெறுகுவர் வந்த
நன்மகப் பெறும்படித் தோர்க
ளெழுத்தி னுல்வரை பவர்வி னுவின
ரயலிருந் தவர்கதி சேர்வர். (29)

அரந்தை நோய்மிடிப் பகைவினை விடயரா
வலகை நீங்குறு நீங்காப்
புரந்த ரன்றிரு மருவு மிகம்பர
மீள லாநிறை போகம்
பரந்த ருங்கன லிம்முறை பொருந்த
லிற்படா யுமகங் கோடி
நிறைந்த நற்பலம் விழித்த வர்சிவ
நிசிப்பெறு தனிச்செய மாகும். (30)

(வேறு)

துவாத சாந்தத்துறை மதுரைச் சொக்கன்பரற்
றவாநிறை சிவநிசி விரதத் தன்மையை
யவாவுட னமைத்துச் சாகரத் தமைந்தவர்
பவாடவிப் பாசனப் பயில்வ ருண்மையே. (31)

பொன்பிறழ் சடைமுடி விமலர் பொற்புட
னன்புசே ரன்பரிவ் விரத மாற்றியே
நன்பத மனந்தம் பேர்நண்ணி னுரதிற்
புன்பவக் கிராதன்சீர்ப் புகல்செய் வாமரோ. (32)

பொருந்திய மகமறை பொதுளி வானவர்
மருந்தென நிறைந்த சாகிலத்து மாறிலாத்
திருந்தியவ் வொலிப்பு றஞ்செறி யின்றிகழ்ந்
தருந்தவப் புளினர்வாழ் பதியொன் றுருமே. (33)

நெட்டரை யுவறிய நிழலு நாய்ப்புடைப்
பட்டகொட் டத்துறை பரையைப் போற்றியே
வட்டவெஞ் சிலையுடன் வளைத்துண் டாட்டயர்
விட்டசொற் புளினர்வாய் வீளை துற்றதே. (34)

புறப்புல மலைக்குவான் பரையைப் போற்றிய
மறப்புடை யணங்கு ருக்கலை மரீஇவுறச்
சிறப்புடைச் சாற்றமாயாந் தியாண்டுஞ் செம்மியே
டுறைக்களி யாட்டத்து நாலை மிக்கதே. (35)

அரிநிறை பற்குழீஇ யரவ வெட்கியர்
புரிநிறை விருச்சியில வெயிற்பொய்க் கொளசப்
பரிநிறை வராப்பரை வீளை பம்பமீ
வரிநிறை விற்புடை மலிய மிக்கவே. (36)

கூரிமழுங் கெஃகமேற் கொட்டு தோலுறக்
கார்மழுங் கியசினை விளவிற் கைம்மலை
போர்மழுங் கரிப்புறழ் புலிப்ப றழ்பிணித்
தேர்மழுங் குறவலி யினையர் சேர்வதே. (37)

தழையுடை யெயிற்றியர் புலிப்பன் றலியர்
கழையுடை முத்திரை கவடி குன்றிய
ருழையுடைத் தராச்சிந் துரத்த ருள்கிய
பிழையுடை யிடையர்வா ழரிப்பி றுவினர். (38)

குழிபடு மார்புடைக் கோடு மாதகர்ப்
பழிபடு களைக்குரு விந்தம் பைத்தழை
வழிபடு பித்தையா மறவ ரோடுசேர்ந்
துழிபடு கடறுகூட் டுணவு மிக்கதே. (39)

கொலைத்தொழில் வேட்டுவர் குடிலபை வேணுதி
யிலைத்தொழில் வேய்ப்புல வேந்திபக் கொம்பிற்கடை
நிலைத்தொழின் முன்றிலி னெடிய வராமும்
வலைத்தொழில் புயலொலி மருட்ட வைகுமே. (40)

முருகியந் தொண்டக மிளைமுள் வேலிக்காழ்
செருகியத் தலையுறத் தூங்கிச் செங்கையாற்
பருகிய நறுக்களிப் பகையின மேய்வுற
வுருகிய வுளத்தணி யோதை மிக்கதே. (41)

முனைன்மறி வராகமா னம்பக்கு வாட்கொய்
யயர்புய லுறக்குடிற் புறம்பொலிந்த தோரணத்
தயலுறை புள்விழா விதானித் தட்டிய
செயல்வலை யிலையுதிர் தருவிற் சேர்வதே. (42)

கற்குழி யுரலிடைக் காலு முக்கையி
லெற்குழி வளையிரும் பொளியி லங்கவே
முற்குழி யவைத்துலை முயக்கிக் கல்லுடை
நற்குழிப் புனலுனைப் பேய்ந லத்ததே. (43)

இன்னதோர் பதியிலங் கிலென்னென் ரேர்பெயர்
துன்னியச் சுவரன்பாற் சுதருஞ் சுத்தமும்
பன்னியு மூன்றசை பருகிச் சேந்திலப்
பொன்னுடைக் கொழுவென வெயிறு போர்த்துளான். (44)

விலங்கு வேட்டையிற் றனிமேவி ஞாளியின்
குலங்க ளுங்குரைத் திடத்தொடர் கொளிப்பல
வலங்க வார்வலை வலைக்காமெக் கண்ணியே
வலங்கிளர் வேட்ட மேகுநா மல்குவான். (45)

(வேறு.)

நாடிச்சுவ டனைநாலடி புதையுந்தட நடந்தே
யோடித்திரி ஞாளித்திர டொடரிற்பட வொலியாத்
தேடிக்கரு வனமுற்றுற விருளிற்செறி நிலவிற்
கோடிச்செறி வலைவாரெதிர் கொட்டித்தனி திரிவான். (46)

புருவச்சிலை யுருவச்சிலை குனியப்பொரு கணையால்
வெருவச்சிலை மலையிற்கவர் நெறியிற்செறி வினைவா
லுருவிற்கரு விழிநோக்கியு முளநோக்கியு மிருபான்
மருவிச்செறி ஞமலித்திரள் கடும்போடெதிர் வருவான். (47)

மறிமானிறை யுரிமுற்றுடன் மறையானுழை வனமுட்
செறிமானிறை தொடர்ந்தேகரி புலியாளியைச் சினவா
பொறிமான்முய லரிதாமரை புதையுஞ்சுவட் டேனம்
கறைமால்வரை நடந்தாலெனக் கறங்காமெனத் திரிந்தான். (48)

திரிகின்றவங் கிலனல்வினை திறத்தால்விலங் கணையர்
விரிகின்றவல் லிருள்வந்தது விழிதோன்றிலன் வெருண்டே
யரிகின்றவெவ் வயின்பட்டென வஞரால்பசி யுடனே
தெரிகின்றபன் னிமைந்தருந் திகைப்பாரெனத் திகைத்தான். (49)

இருளுந்தட வனமும்பெறு மகவொப்பெனு மிருண்மெய்
சுருள்குஞ்சியன் முகில்விஞ்சிய சிலையொப்பெனச் சுடர்வின்
மருளின்பிடித் தொருதோளுறக் கணைவாங்கிக் கண்மாறு
வருளுஞ்சுரத் துணைத்தாள்வளைத் திலஞ்சிப்புறத் தணைந்தான். (50)

விலங்குந்தில விமையாத்துணே விழியைப்புற மறையா
விலங்கிப்படர் சிலேவல்லுநர்த் தழையாண்டையு முருவி
